வெளியீடு 17-8-2002

Issued 17-8-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 7, 2001 – தொகுதி 11 – எண் 1

**Friday the 7th September, 2001 – Volume XI – No. 1**

...மன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...e Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

## 7-9-2001

## உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v - ix |
| Governor and Council of Ministers | xi - xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv - xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix - xxix |
| **1. வினாக்கள்-விடைகள்-** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1 - 33 |
| (ஆ) குறுகிய கால வினா | 33 - 36 |
| **2. விதி 110-ன்கீழ் அறிக்கை-** | |
| குறுவைப் பயிரைப் பாதுகாக்க காவிரி நீரை கர்நாடக மாநில அரசு திறந்துவிட வேண்டியது பற்றி விவாதிக்க அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற இருப்பது குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் அறிக்கை | 36 - 38 |
| **3. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்**-தொடர்ச்சி | |
| **(அ) கோரிக்கை எண் *30* -- பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்** | 38 - 117<br>118 - 239 |
| **(ஆ) கோரிக்கை எண் *31* பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிர் மரபினர் நலன்** | |
| *மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன் | 39, 44, 51 - 53,<br>140, 219 - 233 |

பக்கங்கள்

3. **மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி


(அ) கோரிக்கை எண் 30 – பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்

(ஆ) கோரிக்கை எண் 31 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன்—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ் | 45, 50, 111, 112, 124, 196-217 |
| திரு. அ. அசோகன் | 50-54, 67-71 |
| * திரு. அ. அருணாசலம் | 73-79 |
| * திரு. க. பாரமலை | 42, 48, 79-89 |
| * திரு. க. முருகவேல் ராஜன் | 40-41, 90-101 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 102-110 |
| திரு. கே.வி. முரளிதரன் | 112-117 |
| திரு. டி.பி.எம். மைதீன்கான் | 118-12 |
| * திரு. சொ. கருப்பசாமி | 125-1 |
| திரு. செ.கு. தமிழரசன் | 133-148, 172, 234, 23 |
| * திரு. கு. ஜெயக்குமார் | 148, 149-15 |
| திரு. ஜி.கே. மணி | 39-40, 46, 155-156, 169-181, 234, 23 |




பக்கங்கள்

3. **மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி


(அ) கோரிக்கை எண் 30 – பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்

(ஆ) கோரிக்கை எண் 31 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன்—தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. கே. மகேந்திரன் | 159-164 |
| * திருமதி வி. அழகம்மாள் | 165-169 |
| * திரு. க. பதினெட்டாம்படியான் | 181-186 |
| * திரு. வே. கிருஷ்ணமூர்த்தி | 187-193 |
| * திரு. கே.எஸ். பழனிசாமி | 193-196 |

. **அறிவிப்பு—**

| | |
|---|---|
| உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல் | 117-118 |

. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 239-240

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – டாக்டர் சி. ரங்கராஜன்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, இலஞ்ச ஒழிப்பு, சிறுபான்மையினர் நலன் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

2. நிதி மற்றும் சட்ட அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

   நிதி, திட்டமிடல், தேர்தல், சட்டமன்றம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், சட்டமியற்றல், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

3. கல்வி அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

   கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

4. மின் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

   மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224479.
சென்னை-600 008
நூலகம்

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

7. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

குடிசைத் தொழில்கள் உள்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர்-கிராமத் தொழில் வாரியம்.

10. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. தனபால்:**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.



11. வருவாய்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம், கடவுச் சீட்டு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு.

12. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு பாசனம் உள்பட பாசனம்.

13. செய்தி—விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, வனம், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

14. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

15. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

**16. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு, அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**17. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**19. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மீன் வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு.

**20. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

தொழிற்சாலைகள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.

**21. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

வணிக வரிகள்.



**23. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்பு திட்டமிடல், குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**24. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

**25. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்.

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – Dr. C. RANGARAJAN

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| **1. Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police, Prevention of Corruption, Minorities Welfare and Information Technology. |
| **2. Minister for Finance and Law** | .. | **The Hon. Thiru C. Ponnaiyyan:** Finance, Planning, Elections and Legislature, Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| **3. Minister for Education** | .. | **The Hon. Dr. M. Thambidurai:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians overseas, Refugees and Evacuees. |
| **4. Minister for Electricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Electricity, Non-conventional Energy Development. |

6. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

7. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

8. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Anwer Rhazza:**

Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes, Census and Wakfs.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

10. **Minister for Co-operation, Food, Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics.

11. **Minister for Revenue** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan, Passport, Prohibition and Excise, Molasses.



12. **Minister for Public Works** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Public Works, Highways, Irrigation including Minor Irrigation.

13. **Minister for Information and Publicity and Forests and Environment** .. **The Hon. Thiru S.S. Thirunavukkarasu:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Forests, Environment and Pollution Control.

14. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanandham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.

15. **Minister for Tourism** .. **The Hon. Tmt. R. Saroja:**

Tourism and Tourism Development Corporation.

16. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru V. Subramanian:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

18. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru S.P. Shanmuganathan:**

Handlooms and Textiles.

19. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P. Rajendra Prasad:**
Fisheries and Animal Husbandry.

20. **Minister for Industries** .. **The Hon. Thiru R. Vaithilingam:**
Industries, Iron and Steel Control, Mines and Minerals.

21. **Minister for Milk and Dairy Development** .. **The Hon. Thiru C. Shanmugavelu:**
Milk and Dairy Development.

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**
Commercial Taxes.

23. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru A.K. Selvaraj:**
Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority.

24. **Minister for Transport** .. **The Hon. Thiru Nainar Nagendran:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

25. **Minister for Backward Classes** .. **The Hon. Tmt. Valarmathi Jebaraj:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities.



# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. பி.ஆர். சுந்தரம்

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ப. இராஜ[illegible]

திரு. சோ. பாலகிருஷ்ணன்

திருமதி டி. யசோதா

திரு. லா. சந்தானம்

## முதன்மைச் செயலாளர்

திரு. செ.சு. ஜானகிராமன்

## செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

# 20—8—2001 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட்., | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம்., | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 8. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 9. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 10. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 11 | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 12. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 13. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. | பெரணமல்லூர் |
| 14. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 15. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 16. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 17. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 18. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி—2 |
| 19. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 20. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |

21. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
22. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
23. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
24. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
25. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
26. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
27. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
28. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
29. இராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி
30. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
33. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
34. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
35. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
36. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
37. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
38. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
39. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
40. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
41. இளவழகன், திரு. ப. - அரியலூர்
42. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
43. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்



44. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
45. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
47. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
48. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
49. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
50. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
51. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
52. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
53. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
54. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
55. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
56. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
57. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
58. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ)
59. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
60. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
61. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
62. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
63. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
64. காசாம்பு பூமாலை, திருமதி பூ. - சங்கராபுரம்
65. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
66. கார்த்தி, திரு. மு. - சேலம்—2

67. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
68. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
69. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
70. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
71. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
72. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
73. கோபிநாத், திரு. தே. - ஓசூர்
74. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
75. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
76. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
77. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
78. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
79. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
80. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
81. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
82. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
83. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
84. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
85. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
86. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
87. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
88. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
89. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
90. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)



91. சாமி, திரு. ஆர். - மேலூர்
92. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
93. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
94. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
95. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
96. சிவசாமி, திரு. செ. - திருப்பூர்
97. சிவசுப்பிரமணியன், திரு. டி.என் - கரூர்
98. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
99. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
100. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
101. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
102. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
103. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
104. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
105. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
106. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
107. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
108. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
109. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
110. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
111. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
112. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
113. செல்வராஜ், திரு. ஆ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
114. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்

115. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
116. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
117. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
118. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
119. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
120. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
121. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
122. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. - ஆண்டிப்பட்டி
123. தமிழ்மொழி ராஜதத்தன் திருமதி - மேல்மலையனூர்
124. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
125. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
126. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
128. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
129. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
130. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
131. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
132. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ்.. - காஞ்சிபுரம்
133. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
134. துரைமுருகன், திரு. - காட்பாடி
135. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
136. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
137. நடராஜன், திரு. அ. - குத்தாலம்



138. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
139. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
140. நடராஜன், திரு. வது. - இளையான்குடி
141. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
142. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
143. நளினி மனோகரன், திருமதி - போளூர்
144. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
145. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
146. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
147. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
148. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
149. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி—1
150. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
151. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
152. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
153. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
154. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
155. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
156. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
157. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
158. பாப்பா சுந்தரம், திரு. அ. - குளித்தலை
159. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
160. பாரிமோகன், திரு. கி. - தர்மபுரி
161. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி

162. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர் .. தொண்டாமுத்தூர்
163. பாலசுப்பிரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
164. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
165. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
166. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
167. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
168. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
169. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
170. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திக்குளம்
171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
172. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
173. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
174. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
175. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
176. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
177. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
178. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
179. மணி, திரு. டி. .. விளவங்கோடு
180. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
181. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
182. மல்லையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
183. மல்லிகா, திருமதி சி. .. முசிறி
184. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி



185. மில்லர், திரு. அ. .. கூடலூர்
186. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
187. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
188. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
189. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
190. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
191. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
192. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
193. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
194. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
195. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிச்செட்டிப்பாளையம்
196. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
197. ராமச்சந்திரன், திரு. கே. .. ஆரணி
198. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
199. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
200. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
201. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
202. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
203. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
204. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
205. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
206. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.பு. .. பேரூர்
207. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

| | | |
|---|---|---|
| 208. வியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 209. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 210. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 211. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 212. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 213. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 214. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 215. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்கா நகர் |
| 216. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 217. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 218. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்—I |
| 221. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 222. வேலுசாமி, திரு. செ.மா. | .. | பல்லடம் |
| 223. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 224. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 225. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 226. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 227. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 228. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 229. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 230. ஜெயராமன், திரு. வி. | .. | பொள்ளாச்சி |



| | | |
|---|---|---|
| 231. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 232. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 234. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |
| 235. (வெற்றிடம்) | .. | சைதாப்பேட்டை |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 22, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 செப்டம்பர் 7, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்."*

*பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்.*

### 1. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 53, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க முன்னால் எடுத்துக்கொள்ளப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**53–**

**மானியம்**

***496–திரு. ஐ. கணேசன்:**

*மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–*

*(அ) மாநில அரசு நீர் இறைக்கும் காற்றாலைக்கு வழங்கப்படும் மானியத்தை ரூ.20,000/–லிருந்து ரூ.50,000/–க்கு உயர்த்த முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

[2001 செப்டம்பர் 7

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நீர் இறைக்கும் காற்றாலைக்கு தமிழக அரசு மானியமாக ரூபாய் 30,000/– முதல் ரூபாய் 32,000/– வரை வழங்கி உள்ளது. இது தவிர, மத்திய அரசு மானியம் ரூ.30,000 (கியர்) பம்புக்கும், ரூ.45,000/– (ஏவி 1.55) பம்புக்கும் கூடுதலாக வழங்கியுள்ளது. இரண்டு மானியங்களும் சேர்த்து ரூ.50,000/–க்கும் கூடுதலாக உள்ளது.

(ஆ) மத்திய அரசு மற்றும் மாநில அரசு இரண்டும் சேர்த்து 1.55 ஏவி ரகம் நீரிறைக்கும் காற்றாலையின் விலை ரூ.1,20,000/–ல் (தோராயமாக) ரூ.77,000/– மானியமும், கியர் ரக காற்றாலையின் விலை ரூ.82,000/–ல் ரூ.62,000/– மானியமும் வழங்கி வருகிறது. இது மொத்த விலையில் 64 முதல் 75 சதவிகிதமாக உள்ளது. தமிழக அரசின் மானியம் ரூ.50,000/– ஆக அதிகரிக்கப்பட்டால், மொத்த மானியம் 80 முதல் 100 சதவிகிதமாக உயரும்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நீர் இறைக்கும் காற்றாலைகள் எத்தனை உள்ளன? அதனால் எவ்வளவு பேர் பயனடைகிறார்கள்? குறிப்பாக இந்த மாபு சாரா எரிசக்தி மூலம்–நேற்றே நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் நாடு பூராவும் தண்ணீர்ப் பற்றாக்குறை, எங்கு பார்த்தாலும் குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதாக அறிவித்தார்கள். இதுபோல காற்றாலை மூலம்–தண்ணீர் எடுக்கக்கூடிய ஒரு சாதனத்திற்கு முதல் கட்டமாகத் தமிழக அரசு ஒரு தொகையை மானியமாக அளிக்கலாம்; ரூ.50,000/–அளிக்கலாம். காற்றாலை வைப்பதற்கு, மாண்புமிகு தலைவர் அவர்களே, 1,20,000/– ரூபாய் ஆகும் என்று அமைச்சர் சொல்கிறார். அது கிட்டத்தட்ட 1–1/2 இலட்சம் ரூபாய்க்கு மேலாகிறது. எனவே, அதற்கு மானியத்தை அதிகப்படுத்திக் கொடுக்க தமிழக அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மொத்தம் 871 நீர் இறைக்கும் காற்றாலைகள் இருக்கின்றன. எப்போதெல்லாம் நம்முடைய பயனீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்படுகின்றனவோ, அந்த விண்ணப்பங்களுக்கு மாநில அரசு மானியம் வழங்குகின்றது. மத்திய அரசினுடைய மானியம் பெறுவதற்கு மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டு, மானியம் பெற்றுத் தரப்படுகிறது. மானியத்தை அதிகரிப்பது குறித்து உறுப்பினர்



2001 செப்டம்பர் 7]

அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். ஏற்கெனவே மின் வாரியத்தைப் பொறுத்தவரையிலே கிட்டத்தட்ட 4938 கோடி ரூபாய் நஷ்டத்தில் இருக்கிற சூழ்நிலையை நான் இந்த மாமன்றத்திற்கு எடுத்து வைத்திருக்கிறேன். 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று சொல்வார்கள். அதைப்போல் இன்றைக்கு நான் கலங்கிக் கொண்டிருக்கிறேன். National Thermal Power Corporation–க்கு மட்டும் 502 கோடியே 47 இலட்சம் ரூபாய்; Neyveli Lignite Corporation–க்கு 1221 கோடியே 59 இலட்சம் ரூபாய்; Nuclear Power Corporation–க்கு 61 கோடியே 50 இலட்சம் ரூபாய்; Power Corporation of India Limited–க்கு 22 கோடியே 89 இலட்சம் ரூபாய்; Coal India Limited–க்கு 180 இலட்சம் ரூபாய். இப்படி ஏறக்குறைய 1988 கோடி ரூபாய் நாம் கடன் கொடுக்கவேண்டிய சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம்.

இன்னொரு கேள்வியை நம்முடைய உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதாவது இதை அதிகப்படுத்துவதற்கு என்ன திட்டங்கள் இருக்கின்றன என்ற கருத்தைச் சொன்னார்கள். மாவட்டந்தோறும் விழிப்புணர்வு பெறுகின்ற வகையிலே கருத்தரங்கங்கள் நடைபெற உள்ளன. இந்த மாதம்கூட திருநெல்வேலி மாவட்டத்திலே TEDA மூலமாக ஒரு கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த காலத்திலே இதை ஊக்கப்படுத்துவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை நான் இப்பொழுது சொன்னால் கோபித்துக்கொள்வார்கள். இப்பொழுது மத்தியிலே B.J.P. கூட்டணியில் அங்கம் வகித்துக் கொண்டிருக்கிற ம.தி.மு.க. அமைச்சர் திரு. கண்ணப்பனுடைய குற்றச்சாட்டு 25–2–2001 அன்று தினமலர் பத்திரிகையிலே வெளி வந்திருக்கிறது. அதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதியோடு ஒரு நிமிடம் நான் படிக்க விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதிலே கேள்விக்கு பதில் மட்டும் சொன்னால் போதும். மற்ற பிரச்சினைகளை மற்ற நேரத்திலே வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ஒரே ஒரு paragraph மட்டும். மத்திய அரசின் மரபுசாரா...(குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** அவர் கேட்டதற்கு நான் பதில் சொல்ல வேண்டுமல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கேள்வி நேரத்தில் பதில் மட்டும் போதும். மற்றவற்றை மற்ற நேரத்தில் சொல்லலாம்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மற்ற நேரங்களில் நீங்கள் அதை அறிக்கையாகத் தரலாம். கேள்வி நேரத்தில் பதில் மட்டும் சொல்ல வேண்டும். *(குறுக்கீடுகள்)* திரு. துரைமுருகன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மத்திய அரசு மரபுசாரா எரிசக்தித் துறை மூலம் கொண்டு வரும் புதிய திட்டத்திற்குத் தமிழ்நாடு மின் வாரியத் தலைவர் ஒத்துழைப்புத் தர மறுப்பதோடு முட்டுக்கட்டையாக உள்ளார்; போதிய மின்சாரம் உள்ளது. எனவே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதில்தான் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இந்த முறை மூலம் தயாரிக்கும் மின்சாரத்தைப் பெற மறுக்கின்ற காரணத்தால் தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய 90 மெகாவாட் மின்சாரம் மகாராஷ்டிர மாநிலத்திற்கு மாற்றப்பட்டது; இதை நான் சொல்லவில்லை. அன்றைக்கே, 25-2-2001 அன்று மத்திய அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கம் அளித்தார். இந்த ஆண்டு மின்சாரம் உற்பத்தி செய்ய எத்தனை காற்றாலைகள் வழங்கப்படும்? எத்தனை விண்ணப்பங்கள் பெண்டிங்கில் இருக்கின்றன? இதற்காக எவ்வளவு தொகை அரசு ஒதுக்குவதாகத் திட்டம் தீட்டி இருக்கிறது? ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று சொன்னார். கடன் வாங்கியவர்களுக்கு எப்படியாவது கடனைக் கட்ட வேண்டும் என்ற ஒரு நல்ல இதயம் இருக்கிறது. அதற்காக நான் பாராட்டுகிறேன். இருப்பினும், இதில் ஒரு முறை செலவு செய்து விட்டால் தொடர்ந்து இந்த அரசுக்கு எந்த வகையிலும் செலவு ஏற்படாது. ஆகையால் இந்தத் திட்டத்தை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் புரிந்து கொள்ளவில்லை. Power purchase செய்ததன் காரணமாக நாம் N.L.C., N.P.C., N.T.P.C. ஆகிய இந்த நிறுவனங்களுக்குக் கொடுக்க வேண்டிய அந்தக் கடனைச் சொன்னேன். நீர் இறைக்கும் காற்றாலை வாங்கியவர்களுடைய கடனை நான் சொல்லவில்லை. இப்போது இதுவரையில் 8 விண்ணப்பங்கள், அதுவும் மத்திய அரசினால் அங்கீகாரம் பெற்ற காற்றாலை உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்டு, மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டு—அதற்கு ஏற்ற வகையில் மாநில அரசு subsidy கொடுக்கின்றது—மத்திய அரசிடமிருந்து subsidy பெற்று பயனீட்டாளருக்குக் கொடுக்கின்றது. எனவே, நம்முடைய உறுப்பினர் அதிகமான அளவிற்கு விண்ணப்பங்கள் பெற்றுத் தந்தால், உறுப்பினருக்கும் உதவி செய்வதற்கு வேண்டிய வழிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன், கேளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறியதை அமைச்சர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கின்றேன். என்னுடைய கேள்வியே, முதல் முறையாக இந்த மானியத்தைக் கொடுத்துவிட்டால் பிறகு அரசாங்கத்துக்குச் செலவு வராது என்பதுதான். அதுபோல, மின்சாரத் துறைக்கு இவ்வளவு கடன் இருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டு, அதைக் கட்டுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்ததற்குப் பாராட்டையும் தெரிவித்து இருக்கிறேன். அதைத் தெரிந்தும் அமைச்சர், புரியவில்லை என்று ஓர் உறுப்பினரைப் பார்த்துச் சொல்வது முறைதானா, நியாயம்தானா, நீதிதானா என்பதைச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எதிரெதிரே இருக்கிறீர்கள்; பேசிக்கொள்ளுங்கள்.

[2001 செப்டம்பர் 7

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேரடியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று சொல்லவில்லை. புரிந்துகொள்ளவில்லை என்றுதான் சொன்னேனேயொழிய, தவறாக அந்தக் கருத்தை நான் சொல்லவில்லை. இந்த ஆண்டுக்கு மட்டும் 8 விண்ணப்பங்கள் இதுவரை பெறப்பட்டு இருக்கின்றன. ஏறக்குறைய 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் tentative ஆக subsidy கொடுப்பதற்கு நம்முடைய அம்மா புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். எனவே, நம்முடைய உறுப்பினர் அதிகமான அளவிற்கு மாவட்டங்களிலிருந்து வந்த, நீர் இறைக்கும் நிலையங்களுக்குக் காற்றாலை போட வேண்டுமென்கின்ற அந்தக் கருத்துருவை என்னிடத்திலே கொடுத்தார்கள் என்றால், மாநில அரசினுடைய மானியம் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்; மத்திய அரசினுடைய மானியத்தைப் பெற்றுத் தருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்று பல இடங்களில் மின்சாரம் இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. குறிப்பாக மலைப் பகுதிகளில் நாம் மின் கம்பங்களை எடுத்துச் செல்வதற்கு வன இலாகா அனுமதி கொடுக்காத காரணத்தால், உதாரணமாக கொல்லிமலை, ஊட்டி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், இது நீர் இறைக்கும் காற்றாலை சம்பந்தப்பட்டது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதுபற்றியதுதான். அங்கே மரபுசாரா எரிசக்தி மூலமாகத்தான் மின்சாரம் தர முடியும் என்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அந்த மரபுசாரா எரிசக்தி மூலமாகத்தான், சூரிய ஒளி மூலமாக, இன்றைக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே நீர் இறைக்கும் காற்றாலைகளை எல்லாம் பயன்படுத்தினால்தான், அங்கு இருக்கின்ற பழங்குடி மக்கள் எல்லாம் பயன் பெறமுடியும். அங்கேயுள்ள பழங்குடியினர் எல்லாம் பயன்பெறும் விதத்திலே மின்சாரம் இல்லாத பகுதிகளில் இந்த நீர் இறைக்கும் காற்றாலைகள் அமைப்பதற்கு எவ்வளவு செலவாகின்றதோ, அவ்வளவு செலவையும் மானியமாகக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 7]

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் இந்தப் பயனைப் பெறவேண்டுமென்பதற்காக மலைவாழ் பகுதியிலே மின்சாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று இருந்தாலும்கூட, ecology, அதாவது சூழ்நிலை, environment—சுற்றுச்சூழல் பாதிக்கப்படக்கூடாது என்கிற அடிப்படையிலே வனத் துறையினுடைய அனுமதியைப் பெறுவதற்கு சிரமமாக இருக்கின்ற சூழ்நிலையிலே cable போடமுடியாத நிலைமை மற்றும் இந்த transmission line கொண்டு போக முடியாத நிலைமை இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட கிராமங்கள் தமிழகத்திலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 11 மாவட்டங்களில் கிட்டத்தட்ட 64 கிராமங்கள் இருக்கின்றன. இந்த 64 கிராமங்களிலும் அனைவரும் மின்சாரம் பெறவேண்டுமென்று, நம்முடைய மாண்புமிகு கழகப் பொதுச் செயலாளர், தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவின்பேரில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு—மத்தியிலே IREDA என்ற ஒன்று இருக்கிறது. அந்த IREDA—விற்கு ஒரு கருத்துரு அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்து, அந்தக் கருத்துரு செயல்வடிவம் பெற்று நமக்கு வந்தவுடனே விரைவிலே அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 52, திரு. கி. பாரிமோகன், மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**52—**

## மாவட்ட அமர்வு நீதிமன்றம்

***531-திரு. கி. பாரிமோகன்:**

மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2001 செப்டம்பர் 7

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரியில் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் ஒன்றை அமைக்க, சென்னை உயர் நீதிமன்றத்துடன் கலந்து அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்தினுடைய நீதிமன்றங்கள் மாவட்டத்தினுடைய தலைநகரிலே இருப்பதுதான் வழக்கமாக இருக்கிறது. 1965-லே இந்த மாவட்டத்தைப் பிரித்தபோது, மாவட்ட நீதிமன்றங்கள், இன்னும் சில அலுவலகங்கள் கிருஷ்ணகிரியிலேயே இருக்க விடப்பட்டன. அந்தச் சூழ்நிலையிலே தருமபுரி மாவட்ட அமர்வு நீதிமன்றம், தருமபுரியிலிருந்து 45 கி.மீ. தொலைவில் இருக்கிற கிருஷ்ணகிரியில் உள்ளது. தருமபுரியிலும், அரூரிலும், மொரப்பூரிலும், பெண்ணாகரத்திலிருந்தும், எல்லைப் பகுதியிலிருந்தும் நீதிமன்றங்களுக்கு வழக்குகளுக்காகப் பொதுமக்களும், வழக்கறிஞர்களும் செல்ல வேண்டுமென்றால் மூன்று பேருந்துகள் பிடித்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதனால் பொதுமக்களும், வழக்கறிஞர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகி, மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் வேண்டுமென்று கடந்த காலங்களில் மிகப் பெரிய போராட்டமே நடந்தது. வழக்கறிஞர்கள் ஆறு மாதம், ஒரு வருடமெல்லாம் நீதிமன்றத்தைப் புறக்கணித்துப் போராட்டத்தை நடத்தினார்கள். உயர் நீதிமன்றம் பரிந்துரைத்தும் கடந்த கால அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்குப் பின்னால் வழக்கறிஞர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தருமபுரியில் நடத்தியபோது, கடந்த கால அரசின் இறுதிக் கட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக எழுத்துப்பூர்வமாக இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடந்த கால அரசு அறிவித்தது. கிருஷ்ணகிரியில்—தருமபுரி மாவட்டத்தினுடைய மாவட்ட அமர்வு நீதிமன்றமும், இரண்டு மாவட்ட கூடுதல் நீதிமன்றங்களும் இருக்கின்றன. அதிலே ஒன்றை மட்டும்—ஒரு மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தை மட்டும் தருமபுரிக்கு வழங்க வேண்டுமென்று உயர் நீதிமன்றம் பரிந்துரைத்தது. ஆகவே, கடந்த கால அரசும் அதற்கு நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லி, நடவடிக்கை எடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாரிமோகன், கேள்விக்கு வாருங்கள்.

**திரு. கி. பாரிமோகன்:** ஆகவே, இந்த அரசு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். எல்லா



2001 செப்டம்பர் 7]

மாவட்ட நீதிமன்றங்களும் எங்கள் தருமபுரி மாவட்டத்திற்கு வரும். ஆனால் அதற்குக் காலம் ஆகும். ஆகவே, உடனே ஒரு கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தை வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களும், உயர் நீதிமன்றமும் அரசுக்குத் தந்திருக்கிற பரிந்துரை ஏற்கப்படாத நிலை சென்ற ஆண்டு ஏற்பட்டது. தற்போது மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டன. தருமபுரி மாவட்டத்திற்கு என கூடுதல் நீதிமன்றத்தை உடனடியாகத் தருவதா அல்லது தனி நீதிமன்றத்தை விரைந்து தந்திடுவதா என்று வெகு விரைவிலே ஒரு முடிவு எடுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணக் கிடக்கை ஈடேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மாவட்டங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகியும், இன்னும் மாவட்ட நீதிமன்றங்கள் சில இடங்களில் தொடங்கப்படாமல் உள்ளன. உதாரணத்திற்கு, திருவள்ளூர் மாவட்டத்திலே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. மக்கள் நலனில் அக்கறை செலுத்தி வருகிற நம்முடைய இதய தெய்வம், தானைத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இதனைக் கருத்தில் கொண்டு இவ்வாண்டே திருவள்ளூர் மாவட்டத்தில் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தை அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம் மட்டுமல்ல, தமிழகத்திலே புதிதாக உருவாக்கப்பட்ட பல மாவட்டங்களுக்கு தனித் தலைமை நீதிமன்றம் ஆங்காங்கே தரவேண்டுமென்ற பரிந்துரையை உயர் நீதிமன்றம் அவ்வப்போது அரசுக்குத் தந்துகொண்டுதான் இருக்கிறது. கடந்த மூன்றாண்டு காலமாக பல கோரிக்கைகள் வழக்குரைஞர்களால் எழுப்பப்பட்டு உயர் நீதிமன்றம் பரிந்துரைத்தபோதிலும்கூட, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, நிதிப் பற்றாக்குறை காரணமாக அவையெல்லாம் நிலுவையில் இருந்து வருகின்றன. விரைவிலே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக நீதிமன்றம் அமைக்க அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 செப்டம்பர் 7

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு. இது தருமபுரி பற்றிய கேள்வி, திருவண்ணாமலை பற்றி இல்லை.

**திரு. எ.வ. வேலு:** பொதுவானதுதான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களிலே இப்பொழுது எப்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போல பழைய மாவட்டங்களில்கூட—இந்த நீதிமன்றங்கள் பல இடங்களில் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் பக்கத்திலேயே, மக்கள் நன்மையைக் கருதி, ஒன்றிணைந்த நீதிமன்றங்களைக் கட்டுகின்ற திட்டம் இந்த அரசிடம் உள்ளதா? அப்படி உள்ளது என்றால், நீதிமன்ற வளாகம் என்கிற அடிப்படையில் உடனே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மாவட்டங்களிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு அவற்றை நிறைவேற்றுவது என்பது சாத்தியக்கூறான ஒன்றல்ல. எந்தெந்த மாவட்டங்களில் ஒரே வளாகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கின்ற அந்தப் பகுதிக்கு அருகிலேயே அவற்றைக் கொண்டுவர முடியுமோ, அதை அரசு தற்போது ஆய்ந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு ஒரு பெருமையைச் சேர்த்திருக்கிறார்கள். அதே வேளையில் தருமபுரி மாவட்ட மக்களுடைய அத்தியாவசியத் தேவையான அந்த அமர்வு நீதிமன்றம் வேண்டும் என்று நீண்ட காலமாக அந்த மக்கள் போராடி வருகிறார்கள். எவ்வளவோ கடுமையான நிதிச்சுமைகள் இருந்தாலும்கூட, எங்களுடைய மாவட்ட மக்கள்மீது அக்கறை கொண்டு இன்று நம்முடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நிதியாண்டிலே இந்த அமர்வு நீதிமன்றத்தை ஏற்படுத்திக் கொடுக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 7]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு தருமபுரி மாவட்டத்தின்மீது அக்கறையுள்ள காரணத்தால்தான் இந்த நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற முறைகேடுகள், குறிப்பாக கொப்பரைத் தேங்காய்க் கொள்முதல் ஊழல், சேலத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மனோஜ் பாண்டியன், இது தருமபுரி மாவட்ட நீதிமன்றத்தைப் பற்றியது. திரு. மில்லர்.

**திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் வட்டத்தைப் பிரித்து பந்தலூர் வட்டத்தில் தனியாக ரெவின்யூ வட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இங்கே அமர்வு நீதிமன்றம் வாரத்தில் ஒரு நாள்தான் நடைபெறுகிறது. அதற்குப் பதிலாக, வாரத்தில் 5 நாட்கள் அமர்வு நீதிமன்றம் நடைபெற அரசிடம் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் பகுதியைப் பொறுத்தவரைக்கும் குறைவான எண்ணிக்கையிலே வழக்குகள் இருக்கிற காரணத்தினால் அது தேவையில்லை என்ற ஒரு கருத்தை உயர் நீதிமன்றம் கொண்டிருக்கிறது. பிறகு அது ஆயப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தருமபுரி மாவட்டத்தைக் குறித்த கேள்வியாகும். இருந்தாலும், நீதிமன்றங்கள் தொடங்கப்படுகிற, கூடுதல் நீதிமன்றங்கள் ஏற்படுத்துகின்ற இந்த விஷயத்தில் பொதுவான சில கொள்கைகளை அரசு கடைப்பிடிக்கும், கடைப்பிடிக்க வேண்டும். நிதிப் பற்றாக்குறை என்பதைத் தவிர்த்து, வேறு என்னென்ன அளவுகோல்களை அரசு வைத்திருக்கிறது, எந்த அடிப்படையில் நீதிமன்றங்கள்

உருவாக்கப்படுகின்றன, கூடுதல் நீதிமன்றங்கள் கூடுதல் சௌகரியங்களை ஏற்படுத்தியிருக்கின்றனவா என்பதை அரசு அறிவிக்க வேண்டும். அதே நேரத்தில் பல இடங்களில் இன்றைக்குப் போராட்டங்களை வழக்கறிஞர்கள் தொடங்கியிருக்கிறார்கள். 10 தினங்களாக—நேற்றைய முன்தினம்கூட—வாணியம்பாடியில் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தினுடைய கட்டடமே இடிந்து விழுந்தது. நல்லவேளையாக அந்த நேரத்தில் வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் இல்லாத காரணத்தினால் ஆபத்து தவிர்க்கப்பட்டது. இப்பொழுது வராண்டாவிலேதான் நீதிமன்றங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இரண்டாண்டுகளுக்கு முந்தியே வாக்குறுதி தரப்பட்டது. அதனுடைய தரம் உயர்த்தப்படும், கட்டடம் கட்டப்படும் என்று. இந்தச் சூழ்நிலையில் பொதுவான சில அறிவிப்புகளை அரசு அறிவித்தால் இத்தகைய போராட்டங்களைத் தவிர்க்கலாம். இத்தகைய விபத்துகள் நடந்தால் உடனடி நடவடிக்கை எடுக்கலாம். எனவே, அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுவான அளவுகோல் என்ன என்பதை அறிவிப்பாரா? வாணியம்பாடியைக் குறித்து அரசினுடைய நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான அளவுகோல் என்பது ஒன்று. ஆனால் அடிப்படை அளவுகோல் நிதி ஒன்றுதான். நிதிப் பிரச்சினை இருக்கிற காரணத்தால்தான் நாம் தேவையான அளவிற்கு நீதிமன்றங்களைத் தொடங்க முடியாத நிலையில் இருக்கிறோம். மைய அரசு ஒதுக்குகிற நிதி ஒதுக்கீட்டில்கூட—ஏனோ தெரியவில்லை—நீதித் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் போதிய கவனம் செலுத்தாத ஒரு அணுகுமுறையை மைய அரசு கடைப்பிடித்து வருகிறது. இதுகுறித்துக்கூட அண்மையிலே நாங்கள் மைய அரசிடம் வலியுறுத்தியிருக்கிறோம். அணுகுமுறையிலே முக்கியமான ஒன்று, வழக்குகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறபோது கூடுதல் நீதிமன்றங்கள் அங்கு கொணரப்பட வேண்டும் என்பது ஓர் அணுகுமுறை. இரண்டாவது, நான் ஏற்கெனவே அவையிலே சொல்லியிருக்கிறேன். கிட்டத்தட்ட 8, 10 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் வழக்குகள் இருக்கிற காரணத்தால், 9 இலட்சம், 10 இலட்சத்திற்கு மேல் இருக்கிற காரணத்தால், நிலுவையில் இருக்கிற வழக்குகளைத் துரிதமாக முடிப்பதற்கு உடனடியாகப் பல நீதிமன்றங்களை நாம் தொடங்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் அண்மையில்கூட 30 கூடுதல் நீதிமன்றங்களை உருவாக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தாலுகா தலைநகரத்திலும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பதையும், எனது சீர்காழி தொகுதியிலுள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீர்காழிக்குத் தனியாகக் கேள்வி போடுங்கள். பொதுவான அந்தக் கேள்விக்கு மட்டும் அமைச்சர் பதில் சொல்வார், உட்காருங்கள்.

**திரு. நா. சந்திரமோகன்:** இன்னொன்றைக் கேட்டுவிடுகிறேன். மேலும், பழைய நீதிமன்றங்கள் பழைய கட்டடத்திலே இயங்கி வருகின்றன. அந்தக் கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கேட்டதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். அவசியத் தேவையின் அடிப்படையில் பழைய கட்டடத்தைப் புதுப்பிக்க பிரத்யேக நடவடிக்கைகள் கட்டாயம் எடுக்கப்படும். ஒவ்வொரு வட்டத்திற்கும் நீதிமன்றம் என்ற கொள்கை அரசிடம் இருக்கிறது. நிதித் தட்டுப்பாடுதான் இதற்குத் தடையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 32 மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் செய்யப்படாமல் காலம் கடத்தி இருப்பது ஏன்? அதேநேரத்தில் தேர்வு செய்யப்பட்ட பிறகும் ஏன் இந்த காலதாமதம் என்பது புரியாத ஒரு புதிராக இருக்கிறது. இதை அறிந்து உயர் நீதிமன்றம் இதில் தலையீடு செய்துள்ளதா? அப்படித் தலையீடு செய்த பிறகும் அரசு பாராமுகமாக இருப்பது ஏன் என்று தெரியவில்லை. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உயர் நீதிமன்றத்தினுடைய பணி. இந்தப் பணி துரிதப்படுத்தப்பட வேண்டும் என்பதில் அரசும் அக்கறையோடு இருக்கிறது.

[2001 செப்டம்பர் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் இருக்கிற நீதிமன்றம், சித்தூர் ஜில்லா போர்டினுடைய கன்ட்ரோலில் இருக்கும் போது 100 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டு, இன்றைக்கு சிதிலமடைந்து, மழை நீரால் அங்கே கோப்புகள் வீணாகி, இதையொட்டி வழக்கறிஞர்கள் ஒரு மாத காலமாகப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, சாலை மறியல் செய்த 52 வழக்கறிஞர்கள் கைதாகி இருக்கிறார்கள். கடந்த ஆட்சியிலே 4 கோடி ரூபாய் ஒதுக்கியும் நிலம் ஆர்ஜிதம் செய்யாததால் அந்தக் கோர்ட்டினைக் கட்ட முடியாமல் போய்விட்டது. எனவே, இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற இடத்திலே, அந்தக் கோர்ட்டைக் கட்டித் தர இந்த அரசு முன்வருமா? ஏனென்றால் அங்கே 7 கோர்ட்டுகள் நடக்கின்றன. சந்தனக் கட்டை வழக்கிற்கு என்று தனி கோர்ட்டு இருக்கின்றபடியால் உடனடியாகக் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைநீரால், கோப்புகள் பாதிக்கக்கூடிய அளவிற்குக் கட்டடம் பழுதடைந்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதைப் பழுதுபார்க்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகத்தின் மீதான மானியக் கோரிக்கையின்போது நான் 3 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்தேன். நிதிச் சுமை அதிகமாக இருக்கிற காரணத்தாலோ என்னவோ, ஒரு வெட்டுத் தீர்மானம் வெட்டப்பட்டுவிட்டது. கோவையைப் பொறுத்தமட்டிலும் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்பட வேண்டும் என்ற நீண்ட நாளைய கோரிக்கை எங்களுக்கு நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதன் அடிப்படை நோக்கம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஏனென்றால், இந்தப் புதிய நீதிமன்றக் கட்டட வளாகத்திலே கிட்டத்தட்ட மூன்று தளங்கள் உள்ளன. இந்த மூன்று தளங்களிலும் நீதிமன்றக் கூடங்கள் உள்ளன. நாங்கள் படிக்கட்டுகளில் ஏறித்தான் இந்த மூன்று தளங்களுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, தினமும் மூச்சிரைக்க நாங்கள் வழக்குகள் நடத்திக் கொண்டிருக்கிறோம். Lift வசதி இருக்கின்றது. ஆனால் Lift



2001 செப்டம்பர் 7]

Operator இல்லை. அதேபோன்று, சட்டம் ஓர் இருட்டறை என்கின்ற காரணத்தினாலோ என்னவோ, எங்கள் நீதிமன்ற வளாகத்திலே அடிக்கடி மின் தடை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இருட்டிலே வழக்குகள் நடத்திக் கொண்டிருக்கிறோம். பல இலட்சம் ரூபாய் பொருட்செலவில் Generator நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது...

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மகேஸ்வரி, எல்லாக் கோரிக்கைகளையும் சொல்வதற்கு வாய்ப்பு இல்லை.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** ஆனால் அதை இயக்க Generator Operator நியமிக்கப்படவில்லை. நீதிமன்ற வளாகத்திற்கான சொத்து வரி கட்டப்படாத காரணத்தால் நாங்கள் இன்னும் கூடுதலாக குடிநீர்க் குழாய் இணைப்பைக்கூடப் பெற இயலாமல் இருக்கின்றோம். ஆகவே, நீதித் துறை எங்களுக்குச் சொத்து வரியைக் கட்டவும், Lift Operator, Generator Operator நியமிக்கவும் வழிவகை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்து வரி கூடுதலாக இருக்கிற காரணத்தினால் இதை முழுமையாகச் செலுத்த இன்னும் சற்றுக் காலம் தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த Lift Operator இல்லை என்ற கோரிக்கை உடனடியாக ஈடேற்றப்படும். மின் தடை இல்லாத ஒரு நிலையை உருவாக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சிவசாமி.

**திரு. செ. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது கடந்த கால தி.மு.க. அரசு உண்மைக்குப் புறம்பான வழக்குகளைப் போட்டு, அவற்றை விசாரிப்பதற்காகத் தனி நீதிமன்றங்களை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி, உட்காருங்கள்.

வினா எண் 54, திரு. இரா.தா. இன்பத் தமிழன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் (குறுக்கீடு) திரு. எச்.எம். ராஜு, உட்காருங்கள். நீங்கள் நாளைக்குக் கேட்கலாம். நிதி அமைச்சரிடம் எப்போது வேண்டுமானாலும் கேட்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எச்.எம். ராஜு, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**54—**

## நிவாரணத் தொகை

***1907—திரு. இரா.தா. இன்பத் தமிழன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் தொகுதியில் காலரா நோயினால் பாதிக்கப்பட்டு இறந்த ஒன்பது நபர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகை வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காலரா நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகை வழங்கும் முன்மாதிரி எதுவும் வழக்கத்தில் இல்லை.

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் நகராட்சியின் நிர்வாகச் சீர்கேட்டினால் இங்குள்ள மக்களுக்கு நகராட்சி குழாய் மூலமாகத் தண்ணீர் செல்லும்போது அந்தக் குழாய் துண்டிக்கப்பட்டு, சாக்கடை நீர் அதில் கலந்து அதன் மூலமாகத்தான் காலரா அங்கு வந்தது. அது இப்போது என்ன நிலையில் இருக்கிறது? அந்தச் சீர்கேட்டைத் தடுக்க முடியுமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நகராட்சி ஆணையரிடம் சொல்லி இதற்கு நடவடிக்கை எடுக்கச் சொல்லலாமே!

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மே மாதத்திலே ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் ஏற்பட்ட இந்த இறப்புகள் காலரா வியாதியால் வந்ததல்ல, வெறும் வயிற்றுப்போக்கினால் மட்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னதைப்போல அந்த நிலைமைக்குக் காரணம் குடிநீர்—pipe line—ல் உடைப்பு ஏற்பட்டு, அதிலே மாசு கலந்ததால் குடிதண்ணீர் அசுத்தமாகி, அதை உட்கொண்ட அந்தப் பகுதி மக்களுக்கு அதுபோன்ற வயிற்றுப்போக்கு ஏற்பட்டு, அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உரிய காலத்திற்குள் சிகிச்சையை முறையாகப் பெறாததாலே அந்த நிலைமை



ஏற்பட்டுவிட்டது. இருந்தாலும் உடனடியாக அந்தக் குடிநீர்—pipe line—சரி செய்யப்பட்டு தடுப்பு நடவடிக்கை நகராட்சியினரால் மேற்கொள்ளப்பட்டது. சுகாதாரத் துறையும் அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, ஏற்பட்ட அந்தக் குறைபாடுகளை எல்லாம் போக்கி அங்கே நல்ல ஒரு சூழ்நிலை உருவாவதற்கு இந்த இரண்டு துறைகளும் இணைந்து செயல்பட்டன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதும் நகராட்சியோ அல்லது உள்ளாட்சியோ காலரா நோயால் ஏற்படும் இறப்புகள் மற்றும் விபத்துகளை, காலரா நோயால் ஏற்பட்டதாக ஏற்றுக்கொள்வதில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் வயிற்றுப் போக்கு என்று சொன்னார்கள். வயிற்றுப் போக்கு என்றால் என்ன? காலரா நோய் என்று சொன்னால் என்ன என்பதை விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** காலரா என்பது காலராதான். (சிரிப்பு) வயிற்றுப் போக்கு என்பது வயிற்றுப் போக்குதான். எனவே, அதற்கும் இதற்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன் என்றால் ஞானசேகரன்தான். (சிரிப்பு)

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இதுபோன்ற வயிற்றுப் போக்கு ஏற்படுகிறபோது மக்கள் உடனடியாக அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தால் இந்தக் குறைபாடுகள், இந்த இறப்புகளைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. கிராமப் பகுதியிலே இதுபோன்ற வயிற்றுப் போக்கு ஏற்படுகிறபோது, மக்கள், வயிற்றுப் போக்கு ஏற்படுகின்றவர்கள் தண்ணீரைக் குடித்தால் இன்னும் அதிகமாக வயிற்றுப் போக்கு ஏற்படும் என்ற ஒரு தவறான எண்ணத்தின் அடிப்படையில் தண்ணீரைக் குடிக்காமல் இருந்து விடுகிறார்கள். ஆனால் அப்படி இருக்கக்கூடாது. வயிற்றுப் போக்கு வந்தவுடனே—First Aid—முதல் உதவி செய்கிற வகையில் அவர்கள் தண்ணீரை அதிகமாகக் குடிக்க வேண்டும். காரணம் வயிற்றுப் போக்கினால் ஏற்படுகிற தண்ணீர் இழப்பை ஈடுகட்டுவதற்கு தண்ணீரைக் குடிப்பதிலே தவறில்லை. அதே சமயத்திலே அங்கேயிருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களில்கூட இந்த Oral

Rehydration Solution வைத்திருக்கிறார்கள். அதுவும் அதிக விலை உள்ளதல்ல. வீட்டிலேயேகூட ஒரு டம்ளர் தண்ணீரிலே ஒரு சிட்டிகை உப்பு ஒரு சிட்டிகை சர்க்கரையைப் போட்டு முதல் உதவியாக அதை எடுத்துக் குடித்துவிட்டு பிறகு பக்கத்திலேயிருக்கிற மருத்துவமனைகளுக்கோ அல்லது ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கோ சென்று அந்த வியாதிக்கு வைத்தியம் செய்துகொள்ளலாம். இவற்றையெல்லாம் ஒரு முன்னெச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதுபோல இதுபோன்ற சூழ்நிலையிலே அந்தப் பகுதியிலே இருக்கிற பொதுமக்கள் தண்ணீரை நன்றாகக் காய்ச்சி வெந்நீராகப் பயன்படுத்த வேண்டும். இதெல்லாம் ஒரு தடுப்பு நடவடிக்கை. அதுபோல சுகாதாரக் கேடு விளைவிக்கும் உணவுப் பண்டங்களைச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதனாலே இதுபோன்ற வியாதிகள், இதுபோன்ற நிலைமைகள் வராமல் நாம் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலரா நோய் தடுப்பதைப் பற்றி இங்கே பேசப்பட்டது. ஆனால் அந்த நோய் இல்லை என்ற செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கிராமப்புறத்திலே காலரா நோய் என்ற பெயராலேதான் வயிற்றுப் போக்கைக் குறிப்பிட்டு மக்கள் சொல்கிற சூழ்நிலை இன்றைக்கும் நிலவுகிறது. சென்ற ஆண்டுகூட என்னுடைய தொகுதியிலே அப்படிப்பட்ட பாதிப்பின் காரணத்தினாலே கிட்டத்தட்ட 6 பேர்கள் மரணமுற்றுவிட்டார்கள். இப்படித் தொடர்ந்து இந்த பாதிப்புகள் இருக்கிற காரணத்தினாலே மீண்டும் நம்முடைய சுகாதாரத் துறையின் மூலமாக அந்த நோயைக் கண்டறிவதற்கான சிறப்பு முகாம்களையோ அல்லது சிறப்பு ஏற்பாடுகளையோ செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா? இந்தக் காலரா நோய்களைக் கண்டுபிடிப்பது மட்டுமல்லாமல், அந்த நோயாளிகளுக்கு உதவி செய்வதற்காக என்றே காலரா மஸ்தூர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் 25, 30 ஆண்டுகாலமாகப் பணியாற்றியவர்கள், சென்ற ஆட்சிக் காலத்திலே பணி நீக்கம் செய்யப்பட்டுவிட்டார்கள். காலரா நோய் இல்லை என்ற காரணத்தினாலே அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுவிட்டார்கள். ஆனால் இப்போதும் அந்த நோய் இருக்கிற காரணத்தினாலே - 15 ஆண்டுகாலம், 20 ஆண்டுகாலம் பணியாற்றியவர்கள் வேலையிழந்து நிற்கிறார்கள் -- அவர்களைப் பயன்படுத்தி இந்த நோயைக் கண்டறிவதற்கு அல்லது நோயாளிகளுக்கு உதவுவதற்கான முயற்சிகளைக்கூட எடுக்கலாம்.





அந்தத் திட்டத்தைக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் உறுப்பினர் சொல்வதுபோன்ற நிலைமை இல்லை. தமிழ்நாட்டிலே காலரா வியாதி கிட்டத்தட்ட முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. 2000 ஆம் ஆண்டிலும், 2001 ஆம் ஆண்டிலும் ஒரேயொரு இறப்புத்தான் காலரா மூலமாக ஏற்பட்டிருக்கிறது. அதற்கும் முன்னெச்சரிக்கையாக சுகாதாரத் துறை தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. எனவே அந்த நோயை முழுமையாகக் கட்டுப்படுத்திவிட்ட நிலையில் மீண்டும் அதுபோன்ற மஸ்தூர்களை நியமிக்க வேண்டிய அவசியமில்லை என்கிற காரணத்தினால்தான் அவர்களை மீண்டும் அந்தப் பணியைச் செய்வதற்கு அனுமதிக்கவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று ஆங்காங்கே இதுபோன்ற நோய்களுக்கான அறிகுறிகள் தென்படுகிறபோது அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இந்தத் துறை நிச்சயமாக எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் தந்தை பெரியாரின் பெயரால் ஒரு மிகப் பெரிய மாவட்ட மருத்துவமனை இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே 50 இலட்சம் ரூபாய் செலவில் சலவை செய்கிற மெஷின் போடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தென்னரசு, இது காலராவைப் பற்றிய கேள்வி. அடுத்து திரு. கருணாகரன்.

*முற்பகல் 10-35*

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலரா போன்று இருக்கக்கூடிய இந்த தொற்று வியாதி வேகமாகப் பரவுகிற முக்கியமான சில பகுதிகளைக் கண்டறிந்து அதுபோன்ற பகுதிகளிலே வாழ்கிற சாதாரண மக்களுக்குக் காலரா போன்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கிற தடுப்பு ஊசியைப் போடுகிற ஏற்பாட்டை நம்முடைய அரசு செய்யுமா? அதேபோல, டைபாய்டு, மலேரியா போன்ற நோய்கள் வராமல் முன்னெச்சரிக்கையாக நிரந்தரமாகத் தடுக்கும் தடுப்பு ஊசிகளைப் போடுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயிற்றுப் போக்கு என்கிறபோது, வயிற்றுப் போக்கால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு வெறும் வயிற்றுப் போக்குதான் வரும். ஆனால், காலரா நோய் ஏற்படுகிறவர்களுக்கு வயிற்றுப் போக்கும் ஏற்படும்; வாந்தியும் ஏற்படும். அதுதான் காலராவிற்கு அறிகுறி. எனவே, அப்படிப்பட்ட நிலைமை வருகிறபோது அதற்கு நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, சுகாதாரத் துறை மூலம் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பகுதியிலே அப்படிப்பட்ட வியாதிகள் அல்லது அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிற அறிகுறி தெரியுமேயானால் இந்தத் துறை மூலம் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்க வேண்டும், தூய்மையான சுற்றுப் புறச்சூழலை உருவாக்கிக் கொள்ள வேண்டும். சுகாதாரக் கேடான உணவுப் பண்டங்களைச் சாப்பிடக் கூடாது என்பதுபோன்ற முன்னெச்சரிக்கைகள் செய்யப்படுகின்றன. அதேபோல, குடிதண்ணீரிலே குளோரின், கிருமிநாசினிகள் கலந்து அந்தப் பகுதி மக்களுக்குச் சுத்தமான குடிநீரை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதிகமான பாதிப்பு ஏற்படுகிறபோது அந்தப் பகுதி மக்களுக்கு முன்னேற்பாடாக, முன்னெச்சரிக்கையாக தடுப்பூசிகள் போடுவதற்கும் இந்தத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலரா நோயினால் இறக்கின்றவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை அளிப்பதில் முன்னுதாரணம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு பகுதியிலே காலரா நோய் ஏற்படுகிறது என்று சொன்னால், அந்தப் பகுதியில் துப்புரவுப் பணிகள் சரியாக மேற்கொள்ளப்படவில்லை என்று அர்த்தம். அதுமட்டுமல்லாமல், சுகாதாரத் துறை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று சொன்னால் காலரா நோய் ஏற்படும். முன்னுதாரணம் இல்லாவிட்டாலும்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கந்தசாமி, அமைச்சர் காலராவே இல்லை என்கிறார்.

**திரு. கா. கந்தசாமி:** தொட்டில் குழந்தைகள் திட்டத்தை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். அதேபோன்று, தொட்டில் குழந்தைகள் திட்டத்தை ஏற்படுத்தியதுபோன்று காலரா நோயினால்





இறக்கின்றவர்களுக்கு நிவாரணத் தொகை அளிக்க அமைச்சர் அவர்கள் முன்னுதாரணத்தை ஏற்படுத்துவாரா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிவாரணத் தொகையைக் கொடுத்து அரசுக்குக் கூடுதலான செலவை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இந்த நோய் அல்லது இந்த நிலைமைகள் வருவதற்கு முன்பே அதைக் கண்டறிந்து தக்க முறையிலே தடுப்பு நடவடிக்கை எடுத்துவிட்டால் இந்தப் பிரச்சினையே இருக்காது. அதற்காக சுகாதாரத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் உஷார்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் பிரசவம் பார்ப்பதற்கு பெண் டாக்டர்கள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவை தங்கம், இது காலரா பிரச்சினை. வினா எண் 55, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**55**—

### மீன் சந்தை

***1062—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சி மீன் சந்தையை நகரின் மையப் பகுதியில் உள்ளதை, ஒதுக்குப்புறமான இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) மீன் சந்தைக் கழிவுகளைக் கழிவுநீர்ப் பண்ணையில் கொட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வேலூர் நகராட்சி மீன் சந்தையை, மையப் பகுதியில் உள்ளதை, ஒதுக்குப்புறமான இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதும் இல்லை.

[2001 செப்டம்பர் 7

(ஆ) தற்சமயம் இயங்கிவரும் மீன் மார்க்கெட்டில் சேர்க்கப்படும் கழிவுகளை அகற்றி கழிவுநீர்ப் பண்ணைக்குக் கொண்டு செல்லும் பணி Exnora என்ற அமைப்பு வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்குத் தகவலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய பொன்மொழியைப் போன்று கருவாடு மீனாகாது. மீனாகிவிட்டாலாவது நாற்றம் இல்லாமல் இருக்கும். இப்போது ஓரளவிற்கு எங்களுடைய வேலூர் பகுதிக்கு வரக்கூடிய மீன்கள் எல்லாம் செத்துப்போன மீன்கள்தான்; உயிரோடு இருக்கும் மீன்கள் விற்கப்படவில்லை, அந்த மீன் மார்க்கெட்டில். ஆகவே, இறந்துபோன மீன்கள் Ice–ல் வருகின்றபோது அது கொஞ்ச நேரம் ஆன.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், மீனைக் கொன்றால்தான் சாப்பிட முடியும். உயிரோடு சாப்பிட முடியாது.

**திரு. சி. ஞானசேகரன்:** நகரத்தினுடைய மையப் பகுதியிலே எங்களுடைய வேலூரில் அந்த மீன் மார்க்கெட் பல ஆண்டு காலமாக இயங்கிக் கொண்டிருப்பதற்கு பொதுமக்கள் மிகவும் அதிகமாக எதிர்ப்புகளைத் தெரிவித்து பல போராட்டங்களை நடத்தினார்கள். அதுபோல, நீதிமன்றத்திலே வழக்குகள் எல்லாம்கூடத் தொடுக்கப்பட்டன. ஆகவே, அதை ஒரு முறை மாற்றுவதற்கான ஆணைகூடப் பிறப்பிக்கப்பட்டுவிட்டது. இருந்தாலும்கூட, இந்த மீன் மார்க்கெட்டை மாற்றாமல் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. நகரப் பகுதியில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய பகுதியில், வேலூரில் மெயின் ரோட்டிலே, ஆபிசர்ஸ் லைன் என்கிற மெயின் ரோட்டில் அந்த மீன் மார்க்கெட் அமைந்திருக்கிறது. ஆகவே, அங்கேயிருந்து அந்த மீன் மார்க்கெட் மாற்றப்படுமேயானால் நிச்சயமாக அது பொதுமக்களுக்கு ஏற்புடைய ஒன்றாக இருக்கும் என்ற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் இதைப் பரிசீலனை செய்து அந்த மீன் மார்க்கெட்டை வேறு பகுதிக்கு மாற்றுவதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

அதைப்போல அடுத்த கேள்விக்கு ஒரு பதில் சொன்னார்கள். Exnora அமைப்பு மூலம் அந்தக் கழிவுகளை எல்லாம் கொண்டுபோய் கழிவுநீர்ப் பண்ணையில் போடுவதாகச் சொன்னார்கள். முழுக்க முழுக்க அமைச்சருக்குத் தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. Exnora அமைப்பு என்பது வேலூரின் மையப் பகுதியிலே லாரிகளை எல்லாம்



ரிப்பேர் செய்கிற ஓரிடத்தில் நகராட்சியே ஒரு கொட்டகை அமைத்துத் தந்து அங்கே கொண்டுபோய்த்தான் அதை எருவாக மாற்றுகிறோம் என்று சொல்லி மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கழிவுநீர்ப் பண்ணைக்கு அது கொண்டு செல்லப்படவில்லை. ஆகவே, கழிவுநீர்ப் பண்ணைக்கு அதை எடுத்துச் சென்று ஊருக்கு வெளியே கொண்டுபோய் அதைத் தள்ளுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சிக்குச் சொந்தமாக, வேலூர் நகரின் அருகிலேயே வேறு இடம் இல்லாத காரணத்தினால் அந்தக் கழிவுகளை அகற்றுவதற்கு, அதே இடத்தில் ரூ. 85 இலட்சம் மதிப்பீட்டில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டு நகராட்சி கடன் பெற்று அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்குப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று சொல்லிக்கொள்கிறேன். மேலும், மாவட்ட நிர்வாகமும், நகராட்சி நிர்வாகமும் இணைந்துதான் Exnora அமைப்பு மூலம் கழிவுகளை அகற்றி கழிவுநீர்ப் பண்ணைக்குக் கொண்டு செல்கிறார்கள் என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்தக் கேள்வியைப் போட்ட பிறகுதான் ஒரு கூட்டம் போட்டு அந்த Proposal, முன்மொழிவு என்ற அளவிலேதான், 85 இலட்சம் ரூபாய் செலவில் குளிர்சாதன வசதியை அங்கே அமைக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நகராட்சிக்குச் சொந்தமான 45 ஏக்கர் இடம் மற்றவர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டு ரூ. 2 இலட்சம்தான் ஆண்டுக்கு அதிலே வருமானம் வருகிறது. 45 ஏக்கர் நிலத்தைக் கொண்டுபோய் குத்தகைதாரர்களுக்குக் கொடுத்துவிட்டு, 2 இலட்சம் ரூபாய் வருவாயாகப் பெற்றுக் கொண்டிருக்கின்ற நகராட்சி, ஏனோ அந்த இடத்தை விட்டுவிட்டு குப்பையைக் கொட்டுவதற்கு இடமே இல்லையென்று சொல்லிக் கொண்டு காலத்தைக் கடத்திக்கொண்டு வந்துகொண்டிருக்கிறது. இப்போது குப்பை கொட்டக்கூடிய இடத்தில், சதுப்பேரி மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் நிறைய பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள், இங்கே லாரியிலே கொண்டு வந்து குப்பை கொட்டக் கூடாது என்றுகூறி சாலை மறியல் எல்லாம் செய்து, அவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

[2001 செப்டம்பர் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், அமைச்சர் பரிசீலிக்கலாம் என்று சொல்லிவிட்டார்.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிடுகிறேன். ஆகவே, அந்தக் குத்தகைதாரர்களின் குத்தகையை cancel செய்துவிட்டு, மீண்டும் நகராட்சியே எடுத்து, அந்த இடத்தில் கொண்டுபோய் குப்பைகளை எல்லாம் கொட்டுவதற்கு நகராட்சி ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அமைச்சரைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குறைகளைப் போக்குவதற்கும்; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையைச் செயல்படுத்துவதற்கும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தகவலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதன வசதி என்ற ஒரு முறையை அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அது என்ன முறை என்பதைத் தயவுசெய்து விளக்குவாரா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்பதன இருப்பறையுடன் மீன் மார்க்கெட் என்று சொல்கிறார்கள். அதாவது கழிவுகளையெல்லாம் அந்த அறையிலேயே வைப்பது. கழிவுகளை எல்லாம் வெளியே துர்நாற்றம் ஏற்படாத அளவிற்கு அங்கே வைக்க வசதி செய்வதைத்தான் குளிர்பதன இருப்பறை என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 56, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**56–**

## ஊரகத் தொழில்கள்

***174–திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–



2001 செப்டம்பர் 7]

(அ) மன்னார்குடி பகுதியில் ஊரகத் தொழில்கள் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்த செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி பகுதியிலே ஊரகத் தொழில்கள் தொடங்க வேண்டுமென்று கேள்வி கேட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் தந்திருக்கிறார்கள். மிகவும் வருத்தமாக இருக்கிறது. இருந்தாலும், உண்மையைச் சொல்லியிருப்பாரோ? இருந்தாலும் பரவாயில்லை. அந்த மாவட்டம் முற்றிலும் விவசாயத்தையே நம்பியிருக்கிற மாவட்டம். வேறு தொழில்கள் என்பதே இல்லாத காரணத்தினாலும் விவசாயத்தையே மூலப்பொருளாகக் கொண்டு தொழிலைத் தொடங்குவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்ற காரணத்தினாலும் மீண்டும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அந்தப் பகுதியிலே அரசின் சார்பில் தொழில்கள் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே அரசின் சார்பாகத் தொழில்கள் தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும்கூட தனி நபர்களோ அல்லது நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவோ தொழில்கள் தொடங்க முன்வந்தால் அதற்கான தனி நபர்களுக்காக விளிம்புத் தொகைத் திட்டம் என்ற ஒரு திட்டத்தின் மூலமாக 10 இலட்சம் ரூபாயும், சங்கங்கள் என்றால் ஏறக்குறைய 2.5 இலட்சம் ரூபாயும் கடன் உதவி வழங்கி வருகிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, திரு. ப. அரசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

[2001 செப்டம்பர் 7

**57**–

## கட்டட வசதி

***3931–திரு. ப. அரசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடங்கப்பட்ட மணமேல்குடி, இலுப்பூர் ஆகிய வட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *58*, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**58**–

## சாலைகள்

***1779–திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

*(அ)* ஒட்டன்சத்திரம் தொகுதி, நெடுஞ்சாலைத் துறைக்குட்பட்ட மாவட்டத்தின் பிற சாலைகள் (O.D.R.) புதுப்பிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அந்தச் சாலைகளைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)* ஒட்டன்சத்திரம் தொகுதியில் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் மொத்தம் *240* கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் உள்ளன. இவற்றில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் *61.60* கிலோ மீட்டர் சாலைகள் ரூ.*354.50* இலட்சம் செலவில் சீர் செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் குண்டு குழிகளில், தார் நொடிகள் போட்டு நிரப்பி, சீர் செய்து, சாலைகள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.



2001 செப்டம்பர் 7]

*முற்பகல் 10-45*

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் *240* கிலோ மீட்டர் சாலையில் *60* கிலோமீட்டர் சாலை, கடந்த காலத்தில் சீர் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மீதமுள்ள சாலைகளைப் பழுதுபார்க்கிற நேரத்தில், புதுப்பிக்கிற சமயத்தில் தினந்தோறும் செல்கின்ற வாகனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலே–அந்தச் சாலைகள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டுமென்று சட்டத்திலே விதி இருந்தாலும், அதற்கு–மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து–எனது தொகுதிக்குட்பட்ட தாழையூத்து - கள்ளிமந்தயம் சாலையானது, மிகவும் முக்கியமான சாலை. ஏனென்றால், பழனியில் நடைபெறுகிற பங்குனி உத்திரம், தைப்பூசம் போன்ற திருவிழா சமயத்திலே பேருந்துகளை அந்த வழியாகத்தான் திருப்பி விடுகின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்–தாழையூத்து–கள்ளிமந்தயம் சாலையைப் புதுப்பிக்கின்ற சமயத்திலே அதை அகலப்படுத்துவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் O.D.R. சாலைகள் *40,880* கிலோ மீட்டர்கள் உள்ளன. அதாவது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்களுடைய கோரிக்கையின் அடிப்படையிலே, மேலும் இதர மாவட்டச் சாலைகள் மேம்பாட்டு ஒதுக்கீட்டுப் பகுதி மூன்றின் திட்டத்தின்கீழ், *30.10* கிலோ மீட்டர் நீளத்திற்கு சுமார் *119* இலட்சம் மதிப்பீட்டில் அரசுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைகள், தார் ரோடுகளாக இருந்தாலும், உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசம் உள்ளது. மேலும், தமிழகத்தில் உள்ள குறிப்பிட்ட சாலைகளை அதாவது, Other District Roads – என்ற சாலைகளை எடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *59*, திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

[2001 செப்டம்பர் 7

59

## கால்நடை மருத்துவமனை

***2678-திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா -

(அ) ஆண்டிப்பட்டி ஒன்றியம், கடமலைக்குண்டில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் அழைத்து, நிதிநிலையைப் பற்றி ஒரு பாடம் நடத்தினார்கள். அந்தக் கூட்டம் முடிந்து வெளியே வருகிறபோது, ஒரு சோகப் படம் பார்த்துவிட்டு வருகிறபோது எவ்வளவு அமைதியாக இருக்குமோ அவ்வளவு அமைதியுடன் நாங்கள் வெளியே வந்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடமலைக்குண்டுக்கு வாருங்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** அதற்காகத்தான் வருகிறேன். கடமலைக்குண்டுக்கே வந்துவிடுகிறேன். காரணம், கடந்த ஐந்து ஆண்டுகாலத்தில் நிர்வாகத் திறமையின்மை காரணமாக நிதிநிலைமை இவ்வளவு மோசமாக இருக்கிறது. இருந்தபோதிலும்கூட, என்னுடைய தொகுதி என்ற முறையில் நான் கால்நடை மருத்துவமனை வேண்டுமென்ற ஒரு கருத்தை இங்கே வைக்கிறேன். ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் மூலம் 234 தொகுதிகளுக்கும் வேண்டிய நல்ல திட்டங்களைச் செய்து நல்ல அரசை நடத்திக் கொண்டிருக்கிற இந்த அரசு இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதற்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.



2001 செப்டம்பர் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60, திரு. வது. நடராஜன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

60–

## கால்நடை மருந்தகம்

***3740-திரு. வ.து. நடராஜன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியம், திருப்பாலைக்குடியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. வது. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதன்முதலிலே என்னுடைய தொகுதிக்கு ஒரு கோரிக்கை வைத்திருக்கிற காரணத்தாலே, எங்களுடைய இதய தெய்வம் அம்மா மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு செய்வார்கள் என்று சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 61, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

61–

## குடியிருப்புகளைச் சீரமைத்தல்

***88-திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சென்னையில் பழுதடைந்துள்ள குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளைச் சீரமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ், வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளைச் சீரமைப்பதற்கு, ரூபாய் 25 இலட்சம், Part-II திட்டத்திலே செலவிடப்படவுள்ளது. மேலும், இந்த ஆண்டு HUDCO போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று குடியிருப்புகளைச் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து, மாண்புமிகு உறுப்பினர்கள் விருப்பத்தின்பேரில் குடியிருப்புகளைச் சீரமைப்பு செய்ய வேண்டும் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினுடைய குடியிருப்புகள், சுமார் 80000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இருக்கின்றன. பயனாளிகள் 80000 பேர் அங்கே குடியிருந்து வருகிறார்கள். அந்த 80000 குடியிருப்புகளும் 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட குடியிருப்புகள், 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட குடியிருப்புகள். அவற்றிலே சுமார் 50000 குடியிருப்புகள் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள். 20 ஆண்டுகளுக்கு முன்பு, 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அந்தக் கட்டடங்கள் எல்லாம் இப்போது இடியும் தருவாயில் இருக்கின்றன. ஆகவே, அந்த இடிபாடுகளைச் சரிசெய்து, அந்தக் கட்டடங்களைப் புதுப்பித்துக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை நகரில் 30 ஆண்டுகளுக்கு மேலாக M.U.D.P., T.N.U.D.P. Scheme மூலமாக ஒதுக்கீடு பெற்ற பயனாளிகள் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டத்தின் மூலமாக ஒதுக்கீடு பெற்றுள்ளார்கள். அந்தக் குடியிருப்புகளிலே ஒதுக்கீடு பெறுகின்றபோது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக 2000 ரூபாய், 3000 ரூபாய் கடன் வழங்கியுள்ளார்கள். அந்த 2000 ரூபாய், 3000 ரூபாய் கடன்களுக்கு வட்டியும், அசலுமாகச் சேர்ந்து இப்போது 30000 ரூபாய் அளவிற்கு





வந்திருக்கிறது. அதைத் தள்ளுபடி செய்து, வட்டியையும், தண்ட வட்டியையும் தள்ளுபடி செய்து, தன்னிறைவு வீட்டுமனைத் திட்டத்தின் மூலமாக ஒதுக்கீடு பெற்ற பயனாளிகளுக்குப் பத்திரம் பதிவு செய்து கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமாக குடிசை மாற்று வாரியத்தினுடைய குடியிருப்புகள் 68,310 இருக்கின்றன. அவற்றிலே, சென்னை மாநகரிலே மட்டும் 60,580 குடியிருப்புகள் இருக்கின்றன. கடந்த 1996 ஆம் ஆண்டிலேயிருந்து 2001 ஆம் ஆண்டு வரைக்கும் கிட்டத்தட்ட 47,078 குடியிருப்புகள் பழுதுபார்க்கப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கிற குடியிருப்புகளுக்கு இந்த ஆண்டு, ஏற்கெனவே நான் குறிப்பிட்டதுபோல், HUDCO நிதி நிறுவனத்தின் மூலமாகக் கடனைப் பெற்று, பழுது பார்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது, ஏற்கெனவே பரிசீலனையில் இருக்கிறது. இதுசம்பந்தமான விளக்கத்தை வருகிற 11 ஆம் தேதி நடைபெறவிருக்கின்ற மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது விளக்கமளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றிலேயே அவர் 3 கேள்விகள் கேட்டார். பிறகு கூப்பிடுகிறேன். திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் இருக்கின்ற குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளில் தேங்கியிருக்கின்ற குப்பைகளை அகற்றுவதற்காகக் கடந்த காலங்களில் போதிய பணியாளர்கள் நியமிக்கப்படாததால், சென்னை மாநகரிலே இருக்கின்ற குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் குடியிருப்புகளில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவி வருவதால், அந்தக் குப்பைகளை அகற்றுவதற்குப் போதிய பணியாளர்கள் நியமிக்கப்படுவார்களா அல்லது அந்தக் குப்பைகளை அகற்றுவதற்கு சென்னை மாநகராட்சியிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதி மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு நிதிநிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. இருப்பினும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கையைப் பரிசீலனை செய்து, அதற்குண்டான நடவடிக்கையை எடுக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் 2.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகக் கூறினார்கள். HUDCO நிதியுதவியுடன் பழுதுபார்க்கும் பணியை மேற்கொள்ளலாம் என்றும் ஓர் ஆலோசனையைக் கூறியுள்ளார்கள். HUDCO-விடமிருந்து பழுதுபார்க்கின்ற பணிக்கு நிதியுதவி கடந்த காலங்களில் வாங்கப்படுவதில்லை. அதை நிறுத்திவிட்டார்கள். அரசுதான் நிதியுதவி வழங்கி...

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுசம்பந்தமாக மானியக் கோரிக்கையிலே பேசலாம் என்று சொல்லிவிட்டார். (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, HUDCO நிதியுதவி வழங்குவது இயலாத காரியம் என்று நான் அறிகிறேன். தமிழக அரசு நிதியுதவி அளித்து உடனடியாக இந்த பழுதடைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்புக்களை அவசியம் கட்டித் தருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நம்முடைய துறையை ஆய்வு செய்தபோது, குடிசை மாற்று வாரியத்திலே இருக்கிற குடியிருப்புகளையெல்லாம் பழுதுபார்க்க வேண்டுமென்ற நல்ல ஆலோசனைகளை எல்லாம், அறிவுரைகளை எல்லாம் எங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். நம்முடைய நிதிநிலைமை மிகவும் மோசமாக இருக்கிற காரணத்தினாலே, கடந்த 2, 3 நாட்களுக்கு முன்னாலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைச் சந்தித்து இதுசம்பந்தமாக



விவரமான அளவிலே பேசியிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் HUDCO மூலமாகக் கடன் வழங்குவது இல்லை என்கிறார். நான் இதுசம்பந்தமாக HUDCO-வினுடைய அலுவலகத்திலே பேசிவிட்டுத்தான் இந்தத் தகவலை அவைக்குக் கூறியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலே, இந்தக் குடிசைமாற்று வாரியத்திலே குடியிருக்கின்றவர்களுக்கு, ஒதுக்கீட்டிலே வசித்து வருகின்றவர்களுக்கு, அந்தந்த வீடுகள் அவர்களுக்கே சொந்தம் என்கிற நிலையில், அந்தத் தொகையை அவர்கள் சிறிது சிறிதாகக் கட்டி உரிமையாக்கிக் கொள்ளலாம் என்ற அந்தத் திட்டம், இன்றைக்கும் நடைமுறையில் இருக்கிறதா; இல்லை, அதற்கும் மூடுவிழா நடந்துவிட்டதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் இன்னும் நடைமுறையிலே இருந்துகொண்டிருக்கிறது. அதைத் தாராளமாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் குடிசைப் பகுதியிலே வாழ்கின்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்கள் அதனை உரிமையாக்கிக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) குறுகிய கால வினா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய கால வினா எண் 1, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**1–**

## பெண் மருத்துவர்கள்

***9423—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு எத்தனை பிரசவம் நடைபெறுகிறது?

*(ஆ) அங்கு பிரசவம் பார்க்க பெண் மருத்துவர்கள் இல்லை என்பதை அரசு அறியுமா?*

*(இ) ஆம் எனில், போதிய பெண் மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சராசரியாக மாதம் ஒன்றுக்கு 54 பிரசவம் நடைபெறுகிறது.

(ஆ) அறியும்.

(இ) இம்மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மருத்துவர்கள் 5 பேர். தற்போது 4 ஆண் மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர். ஒரு பெண் மருத்துவர், பணி மாறுதல் மூலம் நியமனம் செய்யப்பட்டும், அவர் இன்னும் பணியில் சேரவில்லை. அந்தக் குறையைப் போக்கும்வகையில் வாரம் இருமுறை அதாவது செவ்வாய், வெள்ளி ஆகிய இரு தினங்களில் அருகிலுள்ள ஜலகண்டபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து பெண் மருத்துவர், இந்த மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை அளித்து வருகிறார்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி அரசு மருத்துவமனையிலே கிட்டத்தட்ட 3 ஆண்டுகாலம் பெண் மருத்துவர் நியமிக்கப்படவில்லை. தற்போது ஒரு பெண் டாக்டர் 6 மாதத்திற்கு முன்னாள் நியமிக்கப்பட்டு, அவர் நீண்ட விடுப்பிலே சென்றுவிட்டார். அங்கு பெண் டாக்டர் இல்லை. அங்கே சராசரியாக மாதம் ஒன்றுக்கு 54 பிரசவம் நடைபெறுகிறது என்று அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். எடப்பாடி தொகுதி, அமைச்சர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அங்கு மிகமிகப் பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், ஏழை எளிய தாய்மார்களும் நிறைந்திருக்கிறார்கள். அங்கே ஆண் டாக்டர்கள் பிரசவம் பார்ப்பதால், பெண்கள் சற்று மனக்குறைப்படுகிறார்கள். அந்தக் குமுறலையெல்லாம் நான் இந்த மாமன்றத்திலே வைக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரசவத்திற்குப் பின்னால், பெண்களுக்கு இரத்தப் போக்கு, கருப்பையிலே புண் முதலியவற்றைப்பற்றி ஆண் டாக்டர்களிடம் சொல்ல சில பெண்கள் கூச்சப்படுகிறார்கள். ஆகவே, உடனடியாக தாலுகா மருத்துவமனையாகிய எடப்பாடி அரசு மருத்துவமனையிலே பெண் டாக்டரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக பெண்கள், குழந்தைகள் ஆகியவர்களின் மருத்துவத் தேவைக்கு ஒவ்வொரு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பெண் டாக்டர்கள் நியமிக்கப்பட வேண்டிய அவசியத்தை இந்த அரசும் உணர்ந்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் பெண் டாக்டர்களை நியமிப்பதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்து, இப்போது அந்தப் பணி நடந்து வருகிறது. T.N.P.S.C. மூலமாக 350 பெண் டாக்டர்களை நியமனம் செய்வதற்கு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அந்த நியமனங்களிலே எடப்பாடி மருத்துவமனைக்கு முன்னுரிமை அளித்து அங்கே உடனடியாக பெண் டாக்டர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே பெண் டாக்டர் நியமிக்கப்படுவார் என்று சொன்னார். அதற்காக அமைச்சருக்கு நன்றி. அங்கு இருக்கக்கூடிய உள் நோயாளிகளுக்கு உணவு கொடுக்கப் படுவதில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? ஆம் எனில், அங்கு இருக்கக்கூடிய உள் நோயாளிகளுக்கு உணவு வழங்க இந்த அரசு எவ்வகையிலே திட்டம் தீட்டியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்ட படுக்கைகள் 50. ஒரு நாளைக்கு சராசரியாக 15 முதல் 20 வரை உள் நோயாளிகள் அங்கே இருந்து வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல, அந்த மருத்துவமனையில் உள் நோயாளிகளுக்கு – சாப்பாடு வசதி இருந்தும் நீண்ட நாட்களாக இன்னும் சொல்லப்போனால் நீண்ட வருடங்களாக – சாப்பாடு கொடுப்பதில்லை என்பது உண்மைதான். ஆனால், அதற்கான முறையீடு அரசுக்கு வந்தவுடன், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. 6,000 ரூபாய் சாப்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டு, அந்தப் பணி அங்கே நடைபெறாத காரணத்தினாலே அந்தப் பணம் திரும்ப

ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில், Gas Kitchen இருக்கிறது; சமையலாளரும் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால், உணவு இதுவரை கொடுக்கப்படவில்லை. இந்தக் குறைபாடு அரசினுடைய கவனத்திற்கு வந்தவுடன், உடனடியாக ரொட்டி, பால் கொடுப்பதற்கான ஏற்பாட்டை நான் செய்யச் சொல்லியிருக்கிறேன். மற்றபடி உள் நோயாளிகளுக்கு சாப்பாடு போடுவதற்கு அரிசி மற்றும் சமையல் பொருட்கள் வாங்குவதற்கான அனுமதிக்காக சம்பந்தப்பட்ட இணை இயக்குநரை, அரசுக்கு Proposal அனுப்பச் சொல்லியிருக்கிறோம். அது முடிந்தவுடன் அங்கே உள் நோயாளிகளுக்கு உணவு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், முடிந்துவிட்டது. (குறுக்கீடு) அமைச்சரிடம் தனியாகக் கேட்டுக்கொள்ளுங்கள்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110—ன்கீழ் அறிக்கை

### குறுவைப் பயிரைப் பாதுகாக்க காவிரி நீரை கர்நாடக மாநில அரசு திறந்துவிட வேண்டியது பற்றி விவாதிக்க அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற இருப்பது குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதியில் உள்ள தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் குறுவை



நெற்பயிர் பயிரிடப்பட்டு, அதற்காக காவிரித் தண்ணீர், மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து கடந்த 12—6—2001 முதல் திறந்து விடப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வருடமும் காவிரி நதிநீர்ப் பங்கீட்டு நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி கர்நாடக மாநிலம் ஆண்டுதோறும் தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. அடி நீர் வழங்க வேண்டும். இந்த ஆண்டு 6.9.2001 வரை வழங்க வேண்டிய 113.93 டி.எம்.சி. அடி நீரிலே 50.73 டி.எம்.சி. அடி நீர் மட்டுமே திறந்து விடப்பட்டுள்ளது. ஆகவே, இன்னும் தமிழ்நாட்டிற்கு கர்நாடக மாநிலம் 63.20 டி.எம்.சி. அடி நீர் வழங்க வேண்டியுள்ளது. தற்போது மேட்டூர் அணையின் தண்ணீர் இருப்பு மிகவும் குறைந்த நிலையில், அதாவது மேலும் 9 நாட்களின் தேவையை மட்டுமே நிறைவு செய்யும் வகையில் 13.80 டி.எம்.சி. அடியாகக் குறைந்துள்ளது. தஞ்சை டெல்டா பகுதியில் 3.9 இலட்சம் ஏக்கரில் குறுவை நெற்பயிர் பயிரிடப்பட்டுள்ளன. விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஏற்கெனவே 27—7—2001 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் அவர்களுக்கும் கடிதங்களை எழுதியிருந்தார்கள். மேலும், கடந்த 23—8—2001 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. எஸ்.எம். கிருஷ்ணா அவர்களுக்கும் கர்நாடக மாநிலம் உடனடியாக கர்நாடக நீர்த் தேக்கங்களிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, மீண்டும் கடிதம் எழுதியிருந்தார்கள். மேலும், காவிரி நதிநீர்ப் பங்கீட்டு மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி இரு மாநிலங்களுக்கும் இடையே தண்ணீர் விடப்படுகின்ற அளவினைக் கண்காணிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மத்திய கண்காணிப்புக் குழுவின் அவசரக் கூட்டத்தையும் உடனடியாகக் கூட்ட வேண்டுமென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியிருந்தார்கள்.

அதனடிப்படையில், 6.9.2001 அன்று புது டெல்லியில் காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினை தொடர்பான மத்திய கண்காணிப்புக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. அதில் தமிழகத்தின் சார்பாக தலைமைச் செயலாளர் மற்றும் பொதுப் பணித் துறைச் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்துகொண்டார்கள். துரதிருஷ்டவசமாக, இந்தக் கூட்டத்திலும் தமிழ்நாட்டிற்குக் கூடுதல் தண்ணீர் கர்நாடக மாநிலத்திலிருந்து விடுவதுபற்றி எந்த நல்லதொரு முடிவும் எடுக்கப்படவில்லை.

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2001 செப்டம்பர் 7

*முற்பகல் 11-05*

இதன் விளைவாக காவிரி டெல்டா மாவட்டங்களில் நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தமிழக விவசாயிகளுக்குக் கூடுதல் தண்ணீரைக் கர்நாடக மாநிலத்திலிருந்து பெற்றுத் தர வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் பொருட்டு, இது தொடர்பான அனைத்து அம்சங்களையும் உடனடியாக விவாதிப்பதற்கும், அடுத்து இந்தப் பிரச்சினையில் தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை முடிவு செய்யவும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 8-9-2001 அன்று சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் ஒன்றை சென்னையில் கூட்டியுள்ளார்கள். இந்தக் கூட்டம் சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில், பத்தாவது மாடியில் உள்ள கூட்ட அரங்கத்தில் நடைபெறும்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் விவாதம் கூடாது.

## 3. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 30 – பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்**

**(ஆ) கோரிக்கை எண் 31 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்**

– –

**(அ) கோரிக்கை எண் 30 – பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 30-பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.



***மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.3,82,13,32,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 3624, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஏற்கெனவே இயங்கி வருகிற சத்திரப்பட்டி, ஆதிதிராவிட மாணவர் விடுதிக்குப் பதிலாக, புதிதாகக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 695, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம் பெருமுகையிலுள்ள ஆதிதிராவிடர் நலத் துறை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2293, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2565, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி முறையை அறிமுகப்படுத்தும் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1228, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காட்டுநாயக்கன் மறவர் சமூகத்திற்குச் சாதிச் சான்றிதழ் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3154, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3382, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1896, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3557, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3202, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2613, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 878, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 780, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2037, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1801, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தியில் ஆதிதிராவிடர் மாணவர் இல்லம் ஒன்று துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2972, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3110, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதிக்கு உட்பட்ட ஆதிதிராவிட பழங்குடியினர் நலத் துறை மாணவ, மாணவிகள் விடுதிக்கு முறையான பராமரிப்பு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3586, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியில் உள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 700, திரு. இரா. திருமாவளவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 725, திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1463, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதிதிராவிடர் நலத் துறை விடுதிகளில் மாணவர் உணவுக் கட்டணத்தைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1673, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்கு அரசு வழங்கும் உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 585, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளி-கல்லூரி ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகளில் படிக்கும் மாணவர்களின் உதவித் தொகையை (Scholarship) அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கா. கந்தசாமி] [2001 செப்டம்பர் 7

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3058, திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களை கல்வித் துறையில் மேம்படுத்த ஆதிதிராவிடர் நலத் துறை சார்பில் தனியாக தொழிற் கல்லூரிகள் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,82,13,32,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1762, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

@ 241 முதல் 257 வரையிலான பக்கங்களில் இணைப்பு-1 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



2001 செப்டம்பர் 7]

## (ஆ) கோரிக்கை எண் 31 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31–பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதிகாரர்களின் சூழ்ச்சிகளை மதியால் முறியடித்து, வெற்றிப் புன்னகையோடு அமர்ந்திருக்கும் எங்களது நிரந்தர முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.151,93,10,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1950, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 692, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மக்களுக்குக் கடன் வழங்கும் திட்டத்தைச் செம்மைப்படுத்தி, மனு கொடுத்த 3 மாதங்களுக்குள் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2393, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2569, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்களுக்கு அரசு ஏற்கெனவே கட்டிக் கொடுத்துள்ள வீடுகளைப் பராமரிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3140, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 3368, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1763, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2887, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3204, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2612, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 879, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 779, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2025, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1798, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, பழையனூரில் உள்ள அரசு பிற்பட்ட மாணவர் இல்லத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2971, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3111, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதிக்கு உட்பட்ட பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட நலத் துறை மாணவ, மாணவிகள் விடுதிகள் பராமரிப்பு, சரியான கழிவறை வசதி இல்லாமல் உள்ள நிலை குறித்தும், இத்துறை கட்டிய விடுதிகளை உடனடியாகத் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3622, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதி, கள்ளிமந்தயத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதி புதியதாகக் கட்டித்தர வேண்டியதன் அவசியம்



குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1479, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாட்ராம்பள்ளி தொகுதியில் உள்ள புதுப்பேட்டை, கந்திலி, பேர்ணாம்பட்டு ஆகிய ஊர்களில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு அரசினர் விடுதிகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3293, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளவர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3596, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.151,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையிலே படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவையினுடைய பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களது அரிய கருத்துகளைத் தெரிவித்ததற்குப் பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம், திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் ஆண்டிற்கான, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை இங்கே பதிவு செய்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில், 2–வது முறையாக மக்கள் பணி ஆற்றுவதற்காக வாய்ப்புத் தந்த, வரலாற்றில் திறனாய்வு செய்யப்படுகின்ற சொல்லாற்றலும், எழுத்தாற்றலும் மிக்க ஒப்பற்ற தலைவர், எங்களுடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்களுடைய இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், எங்களின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் தளபதி மு.க. ஸ்டாலின்

@ 259 முதல் 283 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



அவர்களுக்கும், இரண்டாவது முறையாக என்னைத் தேர்தெடுத்து, இந்த மாமன்றத்திற்கு அனுப்பிய என்னுடைய தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எங்களுடைய தோழமைக் கட்சி, எங்களுடைய இயக்கச் செயல் வீரர்களுக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவிப்பதோடு, இந்த மாமன்றத்தில் கடந்த முறை மக்கள் அனைவரிடத்திலும் அன்பாக பழகி, என்னுடைய அரசியல் வாழ்க்கைக்கு மிகவும் உறுதுணையாக இருந்த எங்களுடைய பாசமிகு அண்ணன் அன்பில் பொய்யாமொழி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–15*

இன்றைக்கு இந்த அவையிலே தாழ்த்தப்பட்ட தொகுதிகளின் சார்பாக, தனித் தொகுதிகளின் சார்பாக, 45 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். பல்வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே வந்து அங்கம் வகிக்கலாம். ஆனால், அவர்கள் எல்லாம் அங்கம் வகிப்பதற்குக் காரணகர்த்தா இன்றைக்கு இந்த மாமன்றத்தினுடைய மண்டபத்திலே படமாக இருக்கிறாரே, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினுடைய அடித்தளத்திலே பிறந்து, ஊமையாக இருந்தவர்களைப் பேசவிட்டு, ஊனமாக இருந்தவர்களை நடமாடவிட்டு, நடைப்பிணமாக நடந்தவர்களுக்கு உயிரூட்டி, விதியின் கதியால் ஒடுங்கி இருந்தவர்களுக்கு சிந்தனையைத் தூண்டிய அண்ணல் அம்பேத்கரை இந்த நேரத்திலே நான் எண்ணிக்கொள்கிறேன். அவர் பிறந்த மராட்டிய மண்டலத்திலே கூட ஒரு பல்கலைக்கழகத்திற்கு, மிகப் பெரிய போராட்டத்திற்குப் பிறகுதான் அவருடைய பெயரை வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆனால், எங்களுடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான், அவருடைய பெயரிலே வியாசர்பாடியிலே ஒரு கலைக் கல்லூரி; சட்டக் கல்லூரி; அவருடைய பெயரால் சட்டப் பல்கலைக்கழகம் என்பதோடு மட்டுமல்லாது அகில இந்தியாவிலும் போற்றப்படுகிற விதத்திலே அவருக்கு நினைவு மணி மண்டபம் அமைக்கப்பட்டது என்பதைச் சொல்லிக்கொள்வதிலே நான் பெருமையடைகிறேன். அதுமட்டுமல்ல, இன்றைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு மணி மண்டபம், முந்தைய

ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டதாகச் சொன்னார்கள். தவறான தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) 1991–96–லே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு மணி மண்டபம் கட்டுவதற்காக 5 ஏக்கர் நிலமும், அதைக் கட்டுவதற்கு ரூ.5 கோடியும் ஒதுக்கினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அடிக்கல் நாட்டினார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அசோகன் அவர்கள் பேசட்டும். அவர் விளக்கம் சொல்வார். பரிதி உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** ஏன், என்னைப் பேச விடமாட்டேன் என்கிறீர்கள். இது என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பின்னால் பேசுங்கள். அசோகன் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் விளக்கம் சொல்வார்.

**திரு. அ. அசோகன்:** நிலம் ஒதுக்கியது உங்களுடைய ஆட்சியாக இருந்தாலும், கட்டி முடித்தது நாங்கள் என்றுதான் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆக, அதற்காகத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) அசோகன் பேசினால் ஒழுங்காகத்தான் பேசுவார். அதற்காகத்தான் சொல்கிறேன். பரிதி, உட்காருங்கள். (குறுக்கீடு) அடிக்கல் நாட்டியது அவர்கள்தான்; கட்டி முடித்தது நாங்கள் என்று ஒத்துக்கொள்கிறார். பரிதி உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், அசோகன் பேசட்டும். (குறுக்கீடுகள்) அதைத்தான் அவர் சொல்கிறார். அசோகன் பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் பார்க்கின்ற வகையிலே அதாவது தமிழகத்திலே இருக்கிற ஆதிதிராவிட மக்களாக இருந்தாலும் சரி அல்லது மற்றவர்களாக இருந்தாலும், பார்க்கின்ற வகையிலே கிரீன்வேஸ் சாலையிலே அந்த மணிமண்டபத்தை அமைக்க வேண்டுமென்று சொல்லி,



மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள் என்பதை நினைவுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்குப் பதில் சொல்லி என்னுடைய நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் ஏற்கெனவே சொல்லிவிட்டார். அடிக்கல் நாட்டியது அவர்கள் என்று சொல்லிவிட்டார்.

**திரு. அ. அசோகன்:** திருவாரூர் தொகுதியின் சார்பிலே நான் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வந்திருந்தாலும், திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டம். அது நான்கு சட்டப் பேரவைத் தொகுதிகள் அடங்கிய மாவட்டம். அந்த நான்கு சட்டப் பேரவைத் தொகுதிகளில், திருவாரூர், நன்னிலம், திருத்துறைப்பூண்டி என்ற மூன்று தொகுதிகள் தனித் தொகுதிகள் என்பது உங்களுக்குத் தெரியும். இன்றைக்கு தமிழகத்திலே மூன்று தனித் தொகுதிகள் அடங்கிய மாவட்டம், எங்களுடைய திருவாரூர் மாவட்டமாகத்தான் இருக்கமுடியும். இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், எல்லா மாவட்டங்களையும்விட எங்களுடைய மாவட்டம்தான் தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலித் தொழிலாளிகள் நிறைந்திருக்கிற பகுதி. இவர்களுக்கு இந்த அரசால் பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக கடந்த காலத்தில், எங்களுடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே—நேற்றைக்கு முன்தினம் உள்ளாட்சித் துறை மானியத்திலேகூட, அதற்குப் பதில் சொன்னார்கள்—மிகவும் பயன்பட்டு வந்தது அந்த சிமெண்ட் சாலை; குறிப்பாக மிகவும் அதிகமாகப் பயன்பட்டது ஆதிதிராவிட விவசாயக் கூலித் தொழிலாளிகளுக்குத்தான். கிராமப்புறங்களிலே குடிசையிலே இருக்கிற அந்தக் கூலித் தொழிலாளி, மழை வெள்ளக் காலங்களிலே, வயல் வெளியிலே காலையிலிருந்து மழையிலே நின்றுவிட்டு, வீட்டிற்கு வந்தால், இரவிலே வீட்டில் படுக்க முடியாத நிலைமை; மழை விட்டிருந்தாலும் படுக்க முடியாது; ஈரம் சேர்ந்திருக்கும்; ஓதம் என்று சொல்வார்கள் கிராமப் பகுதியிலே.

ஆனால் எங்களுடைய கலைஞர் ஆட்சிக் காலத்திலே அந்த சிமெண்ட் சாலை போட்ட பிறகு, விவசாயக் கூலித் தொழிலாளர்கள்,

தாழ்த்தப்பட்ட மக்கள் இரவு நேரத்திலே அந்த சிமெண்ட் சாலையிலே உணவருந்திவிட்டு சோடியம் விளக்கு வெளிச்சத்திலே இருக்கின்ற காட்சியை நாங்கள் பார்த்திருக்கிறோம். நான், முழுவதும் முடிந்துவிட்டது என்று சொல்லமாட்டேன். 25 விழுக்காடு வேலை முடிந்திருக்கின்றது. மீதியை உங்களுடைய காலத்திலே செய்ய வேண்டும். மற்றதை நாங்கள் வரும்போது பார்த்துக்கொள்கிறோம்.

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழுகிற பகுதியில் சந்துபொந்துகளில் எல்லாம் சிமெண்ட் சாலை போடுகின்ற பணியைக் கடந்த கால ஆட்சி மேற்கொண்டது என்று கூறுகிறார். சிமெண்ட் சாலை தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதி மக்களுக்குப் போடுகிறோம் என்ற பெயரில் ஒரு தனியார் சிமெண்ட் தொழிற்சாலைக்கு உற்சாகத்தைத் தந்து 80 ரூபாய், 90 ரூபாய் என்று சிமெண்ட்டை, அரசு பணத்தை விரயமாக்கி 100 ரூபாய், 150 ரூபாய் என வாங்கி சிமெண்ட் சாலை என்ற போர்வையிலே 1 இலட்சம், 2 இலட்சத்தில் முடிக்கக்கூடிய பணியை 5 இலட்சம், 6 இலட்சம் என நீட்டித்துக் கொள்ளையடித்த வரலாற்றைத் தமிழகத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் நினைவுபடுத்துகிறார் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

***திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் சாலையைப் போட்டது யார்? உதவி செய்பவர் யார்? சிமெண்ட் வாங்குபவர் யார் என்ற விவரமும் தங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதைச் சற்றுத் தெரிவித்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 80 ரூபாய் என்று மார்க்கெட்டிலே இருந்த சிமெண்ட்டை 150 ரூபாயிலிருந்து 190, 200 என்று உயர்த்தி, அந்த உயர்ந்த விலையிலே அரசுப் பணத்தை, மக்கள் வரிப் பணத்தை விரயமாக்கி, அந்த சிமெண்ட்டை வாங்கி, அந்த சிமெண்ட்டை அரசுத் துறைகள் கட்டாயம் வாங்க வேண்டுமென்று பணித்து பல கோடி ரூபாயைக் கொள்ளையடித்தது கடந்த கால அரசுதான் என்பதை நான் இந்த அவைக்குச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கேட்டதற்குப் பதில் சொல்லிவிட்டார், உட்காருங்கள்.



**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே...

**திரு. பரிதி இளம்வழுதி:** தலைவர் அவர்களே....

**திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** எந்தக் கம்பெனியிலிருந்து வாங்க வேண்டுமென்று எந்த அரசு உத்தரவிட்டது? அந்த உத்தரவின் நகல் அவர் கையிலே இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க. அரசு என்று அவர் சொல்கிறார். கடந்த கால ஆட்சி என்று அவர் தெளிவாகச் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) அசோகன் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதற்கும் விளக்கம் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கோ.சி. மணி அவர்களே, விளக்கம் தருகிறேன். (குறுக்கீடுகள்) அதற்கும் விளக்கம் தருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லிவிட்டார். கடந்த கால ஆட்சி என்று அவர் விளக்கம் சொல்லிவிட்டார்.

*(எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு விளக்கம் கேட்டுக்கொண்டேயிருந்தனர்)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்கு விளக்கத்தைத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அமருங்கள். (குறுக்கீடுகள்) ஆதாரத்தைத் தருகிறேன், அமருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தை, விளக்கத்தைத் தருகிறேன், அமரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) அமைச்சர் விளக்கத்தைச் சொல்கிறார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஆதாரத்தைச் சொல்கிறேன். அமரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அமைதியுடன் இருங்கள். (குறுக்கீடுகள்) கூச்சல் போட்டு ஆதாரத்தை மறைக்க முயற்சிக்கின்றீர்கள்.

(குறுக்கீடுகள்) நான் கூறியிருக்கின்ற ஆதாரத்தை மறைப்பதற்குக் கூச்சல் போட்டால் உண்மை மறைந்துவிடாது; உண்மை மறைக்கப்படாது (குறுக்கீடுகள்) என்பதனை நான் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொல்கிறேன் என்று சொன்னபிறகும் எல்லோரும் நின்றுகொண்டே இருந்தால் எப்படி? அவர் விளக்கம் சொல்கிறார். நீங்கள் எல்லோரும் அமருங்கள். அவர் சொல்லி முடித்தபிறகு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அமைதியுடன் கேளுங்கள், விளக்கம் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்களே, உண்மையை அறிந்துகொள்ள அச்சப்படுகிறீர்களா? (குறுக்கீடுகள்) உண்மையை அறிந்துகொள்ள அச்சப்படுகிறீர்களா? (குறுக்கீடுகள்) உண்மையைச் சொல்வதற்கு அனுமதி தாருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லி முடித்ததற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** உண்மையை அறிந்துகொள்ள அச்சமில்லையென்றால் பொறுமையுடன், அமைதியுடன் இருங்கள்; விளக்கம் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். நீங்கள் எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞான ரீதியான ஊழலை, முறைகேட்டை மேற்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு, (கூச்சல்–குழப்பம்) ஆதாரத்தைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** என்ன விஞ்ஞான ரீதியிலே ஊழல்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துரைமுருகன் அவர்களே, அவசரம் வேண்டாம். ஆதாரத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அவர் சொல்லி முடிக்கட்டும். அதற்குள்ளே ஏன் அவசரப்படுகிறீர்கள்? அவர் பதிலைச் சொல்லி முடித்ததற்குப் பிறகு உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அவர் சொல்லி முடிக்கட்டும்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அச்சப்படுகிறார்கள். உண்மை வெளிவருவதற்கு அச்சப்படுகிறார்கள். கூச்சலிட்டு, கூச்சலிட்டு உண்மையை மறைக்க முயற்சிக்காதீர்கள். நீங்கள் என்னை ஆதாரத்தைச் சொல்வதற்கு விடமாட்டேன் என்று தடுக்கின்றீர்களே. (குறுக்கீடுகள்) அமைதியுடன் இருங்கள், சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அவை முன்னவரைப் பேசவிடுங்கள். (குறுக்கீடு) அவர் சொல்லி முடிக்கட்டும். அதற்குப் பிறகு எழுந்து, என்ன விளக்கம் கேட்க வேண்டுமோ கேளுங்கள்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால தி.மு.க. ஆட்சியில் சிமெண்ட் மூலமாக (குறுக்கீடு) 65 ரூபாய் உற்பத்திச் செலவு; அந்த சிமெண்ட் 80 ரூபாய்க்கு விற்கப்பட்ட நிலை; அது 200 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டு கட்டடத் தொழில்கள் எல்லாம் நசுக்கப்பட்டு, வேலையில்லாத் திண்டாட்டம் உருவாக்கப்பட்டு, கட்டடங்களே கட்ட முடியாத ஒரு நிலை உருவானபோது—சிமென்டுக்கு எப்படித் தமிழகத்தில் தேவை இருந்திருக்கும்? தேவையில்லை. ஆனாலும்கூட, கட்டடங்களே கட்டப்படவில்லை; கட்டடத் தொழிலாளர்களுக்கே வேலை இல்லை என்ற நிலை. (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்தபின் அனுமதி கொடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்தபின் அனுமதி கொடுக்க வேண்டும்.

*(தி.மு.க. உறுப்பினர்கள் திரு. கோ.சி. மணி, திரு. துரைமுருகன் மற்றும் திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் எழுந்து நின்று, விளக்கம் தர அனுமதி கோரினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.சி. மணி அவர்களே, திரு. துரைமுருகன் அவர்களே, அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) விளக்கத்தை முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) விளக்கத்தைச் சொல்லி முடித்தவுடனே உங்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களைப் பேச அழைக்கிறேன். விளக்கத்தை அவர் சொல்லி முடித்ததற்குப் பிறகு உங்களைப் பேச அழைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நீங்கள் அச்சப்பட வேண்டாம். சற்றுப் பொறுமையாக இருந்தால் (குறுக்கீடுகள்) சற்றுப் பொறுமையாக இருந்தால், விளக்கமாக நான் சொல்கிறேன். அப்படிக் கட்டட

வேலைகளே நின்றுவிட்டன. கட்டடத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத நிலை; சிமென்டுக்கே தேவையில்லை என்ற நிலை. தனியார் சிமென்டை வாங்கக்கூடிய நிலை இல்லை. இந்த நிலையில்தான், நான் ஆதாரத்திற்கு வருவதற்கு முன்னால் சொல்கிறேன், இப்படி சிமென்ட் தொழிற்சாலைகளிலே உற்பத்தியாகின்ற சிமென்டை எப்படி விஞ்ஞான ரீதியிலே அதன்மூலம் கொள்ளையடிப்பது என்ற திட்டத்தை வகுத்ததற்கு ஆதாரத்தைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) ஆதாரத்தைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. கோ.சி. மணி அவர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லி முடிக்கிற வரைக்கும் நீங்கள் ஏன் பொறுமையாக இருக்கக்கூடாது? (குறுக்கீடுகள்) அனைவரும் பொறுமையாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அப்படி அவர்கள் திட்டம் தீட்டியபோது, அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.சி. மணி அவர்களுடைய உள்ளாட்சித் துறை பயன்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அது எப்படி என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அது எப்படி என்று சொல்கிறேன். சிமென்ட் வாங்குவதற்கு ஆள் இல்லை. அரசாங்கமே அந்த சிமென்டை வாங்கியது. எந்த விலைக்கு? 80 ரூபாய்க்கு இருந்த சிமென்டை 180 ரூபாய் என்ற அளவிலே அரசு, அரசுத் துறைகளுக்கே வாங்கியது. அதற்காகத் தமிழகத்திலே இருக்கின்ற சிமென்ட் தொழிற்சாலைகளில் வாங்கினால் வெளிப்படையாகத் தெரிந்துவிடும் என்ற காரணத்திற்காக, தமிழகத்திலுள்ள அரசுக்குச் சொந்தமான சிமென்ட் தொழிற்சாலைகள்மூலம் வாங்கினாலும்கூட தவறு செய்வது அவ்வளவு சுலபம் இல்லை என்ற காரணத்திற்காக, G.O. 75 என்ற G.O.-வைப் போட்டார்கள். அதுதான் ஆதாரம். அப்படி அந்த G.O.-வைப் போட்டு, அரசு சிமென்டுக்குத் தந்திருந்த சலுகைகள், 15 சதவிகித வரிச் சலுகைகளையும் இரத்து செய்து, முன்னுரிமைச் சலுகையையும் இரத்து செய்து, எங்கு வேண்டுமென்றாலும் வாங்கிக்கொள்ளலாம் என்று G.O.75-ஐக் கொண்டு வந்து சாதாரண நிலையிலே, பணமற்ற நிலையிலே இருந்த சாதாரண ஒருவரை கோடீசுவர பினாமி முதலாளியாக ஆக்கி, ஆந்திராவிலே உள்ள சிமென்ட் தொழிற்சாலைகளை எல்லாம் வாங்கி, ஆந்திராவிலேயிருந்து ஆண்டுக்கு 25 இலட்சம் டன் சிமென்ட் கொண்டு வரப்பட்டு, உள்ளாட்சித் துறை மூலமாக, பெரும்பான்மையாக இப்படிச் சேரிகளுக்கெல்லாம் சாலைகள் போடப்பட்டதாகக் கொள்ளையடிக்கப்பட்டதே, அதற்கு ஆதாரம், G.O.75 கொண்டு வரப்பட்டது. அரசு சிமென்டுக்குத் தரப்பட்டு வந்த சலுகை இரத்து செய்யப்பட்டது. இதைவிட ஆதாரம் என்ன வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழைய உள்ளாட்சித் துறை அமைச்சர் விளக்கம் சொல்கிறார். (குறுக்கீடுகள்)

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஆரம்பத்தில் சொன்னது, சிமென்ட் சாலை போடப்படுவதற்குத் தனியாக ஒரு கம்பெனியில் முடிவு செய்யப்பட்டு, அதில் ஒரு G.O. போடப்பட்டு, அந்த சிமென்ட் வாங்கியதில் கொள்ளையடித்திருக்கிறார்கள் சென்ற ஆட்சியில் என்று குறிப்பிட்டார். நான் இப்போது கேட்பது, ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் இந்தக் கம்பெனியில் அந்த சிமென்டை, இந்த விலைக்கு வாங்க வேண்டுமென்று உத்தரவு போட்டதை அவர் நிரூபிப்பாரா? அந்த உத்தரவைக் காண்பிப்பாரா? அதுதான் எங்கள் கேள்வி. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் அதற்கு விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் அதற்கு விளக்கம் சொல்கிறேன்.

**திரு. கோ.சி. மணி:** 75-ஐப் பற்றிச் சொல்லும்போது இன்னொன்றை அவர் குறிப்பிட்டிருப்பது (குறுக்கீடுகள்) எங்கு வேண்டுமானாலும் வாங்கலாம். யார் வேண்டுமானாலும் வாங்கலாம் என்று குறிப்பிட்டார். ஊராட்சி மன்றத் தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** எங்கு வேண்டுமானாலும் வாங்கலாம்.(குறுக்கீடு)

**திரு. கோ.சி. மணி:** அவரை நான் பேசவிட்டேன்..(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** எங்கு வேண்டுமென்றாலும் வாங்கலாம் என்று ஆணையைப் போட்டார்கள். ஆதாரத்தைக் காட்டவா? (குறுக்கீடுகள்)

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் எழுந்து நின்று கூச்சலிட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அமருங்கள். நீங்களும் அமருங்கள். திரு. மணி அவர்கள் விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகில் வந்து தம் கட்சியின் உறுப்பினர் திரு. மணி அவர்களைப் பேச விடுமாறு கேட்டார்.)*

திரு. பரிதி, உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இது முறை கிடையாது. இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி, சொல்லுங்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். திரு. மணி பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்களும் அமருங்கள். (குறுக்கீடுகள்) சரி, கேளுங்கள். கேட்க வேண்டிய விளக்கத்தைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் விளக்கத்தைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-30*

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், இவர்கள் எல்லாம் ஒன்றுகூடி நடத்திய மாநாட்டில், அதிகாரங்கள் தேவை, அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று பலமுறை இந்த மாமன்றத்தில் பேசியதன் அடிப்படையில், ஒரு இலட்சம் ரூபாய் வரை, ஊராட்சி மன்றம், அவர்கள் அபிப்பிராயத்திற்குத் தீர்மானம் நிறைவேற்றி, சட்டத்திற்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு பணிகளைக் கொடுக்கலாம் என்று உத்தரவிடப்பட்டு உள்ளது. அந்த உத்தரவின் அடிப்படையில் அவர்களால் எந்தப் பணியாக இருந்தாலும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி உள்ளவர்களுக்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வளவுதான். சிமெண்ட் வாங்கியதற்கும், அரசாங்கத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. இதை எங்கேயும் நிரூபிக்கத் தயார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிமெண்ட் வாங்கியதைத்தான் குறிப்பிடுகிறீர்களா? அவை முன்னவர் அவர்கள் சொல்வது..

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்கள் கூறியதற்கு நான் விளக்கம் தர விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) மன்னிக்க வேண்டுகிறேன். நான் இதற்கு விளக்கம் தந்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) No, No. I should be allowed.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கேட்டதற்கு விளக்கம் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** என்னுடைய விளக்கத்திற்குப் பிறகு பொன்முடி அவர்கள் பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், ஒரு லோயஸ்ட் டெண்டர் என்ற முறையிலே அவர்கள் அதை வாங்கினார்கள் என்று சொன்னார்கள். ஏதோ உள்ளாட்சித் துறை என்பது தமிழகத்திற்குச் சம்பந்தமில்லாமல் ஆப்பிரிக்க நாட்டுக்குச் சம்பந்தம் உள்ளதைப்போல சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசுக்கு (குறுக்கீடுகள்) இல்லை. தவறான தகவலை அவர் அவைக்குத் தரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அரசு சிமெண்டிலேயிருந்து உள்ளாட்சித் துறை இதற்கு முன்னால் வாங்கிக் கொண்டிருந்த நிலையை மாற்றி அரசுக்குச் சொந்தமான சிமெண்ட் தொழிற்சாலையிலே வாங்குகிற வாய்ப்பை இரத்து செய்துவிட்டு, அரசு சிமெண்ட் தொழிற்சாலைக்குத் தந்த 15% வரிச் சலுகையை இரத்து செய்துவிட்டு, அரசு சிமெண்ட் தொழிற்சாலைக்குத் தர வேண்டிய முன்னுரிமையை இரத்து செய்துவிட்டு, டெண்டர் என்ற போர்வையிலே வெளி மாநிலத்திலிருந்து வாங்கலாம் என்ற நிலையைக் கொண்டு வந்து, அப்படி வெளி மாநிலத்திலிருந்து கொண்டு வந்தபோதே அந்தத் திட்டம், அந்த ஊழல் முறைகேட்டுத் திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னால், உள்ளாட்சித் துறையைச் சேர்ந்தவர்கள் அதிகாரிகளாக இருந்தாலும் சரி, உள்ளாட்சித் துறை நிர்வாகத்தினராக இருந்தாலும் சரி, 80 ரூபாய்க்கு வாங்க வேண்டிய சிமெண்டை 180 ரூபாய்க்கு வாங்கி, 100 ரூபாய் மக்கள் பணத்தைப் பாழ்படுத்தினீர்களே, ஏன் நீங்களே எதிர்க்கவில்லை? ஏன் தட்டிக் கேட்கவில்லை? எதற்காக அரசுப் பணத்தைப் பாழ்படுத்த உடந்தையாக இருந்தீர்கள்? (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் – சிமெண்டிலே நேர்மையான ஓப்பன் டெண்டர் நடைபெற்றது. இன்றைக்குக் காலையிலேகூட பிரதமரிடம் ஒரு எக்கானமிஸ்ட் (குறுக்கீடுகள்) நான் பேச வேண்டுமா, வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) பொன்முடி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** அப்புறம் கத்தினால் என்ன அர்த்தம்? இன்றைக்குக் காலையிலே பிரதமரிடம் கொடுத்த செய்தியிலேகூட ஒரு பொருளாதார நிபுணர், இந்தியாவினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு

10% வளர்ச்சி வேண்டும் என்று சொன்னால் அனைத்திலும் ஓப்பன் டெண்டர் முறை இருக்க வேண்டும் என்றுதான் அவரும் அறிவுறுத்தி இருக்கிறார். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். அப்புறம் நீங்கள் வேண்டுமானால் சொல்லுங்கள். இந்த சிமெண்ட் விவகாரத்தைப் பொறுத்தவரையிலே கடந்த காலங்களிலே P.W.D. போன்றவற்றின் கான்ட்ராக்டர்கள் எல்லாம் அரசு கொடுக்கின்ற சிமெண்டைத்தான் வாங்க வேண்டும் என்று இருந்த நிலைமையைக்கூட மாற்றி, ஓப்பன் டெண்டரிலே வாங்கிக்கொள்ள வேண்டும் என்று நிர்ணயித்ததும் இந்த அரசுதான். அதுமட்டுமல்ல. (கூச்சல்–குழப்பம்) ஒவ்வொரு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அமைச்சர் சொல்வது, ஓப்பன் டெண்டர் என்று கொண்டு வந்ததே மறைமுகமாக ஊழல் செய்வதற்காகச் செய்யப்பட்ட ஒரு ஏற்பாடு என்பதுதான் அமைச்சருடைய கருத்து. அமைச்சர் சொல்கிற கருத்து.

**டாக்டர் க. பொன்முடி:** அதைத்தான் சொல்கிறேன். சொல்லவிடுங்கள். நான் சொல்வதைக் கொஞ்சம் தயவு செய்து கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த ஓப்பன் டெண்டர் என்பதேகூட, மறைமுகமாக ஊழல் செய்வதற்காகச் செய்த ஏற்பாடு என்பது அமைச்சருடைய கருத்து. அதற்கு நீங்கள் என்ன கருத்துச் சொல்கிறீர்கள் என்று கேட்கிறேன். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களிலே டான்செம் என்ற அரசு நிறுவனம்கூட சிமெண்டை முழுமையாகக் கொடுக்கவில்லை என்பது உண்மை. அவர்களும் வேறு தனியார் கம்பெனிகளிடமிருந்து வாங்கி கமிஷனுக்குக் கொடுத்தார்களே தவிர, Total Production செய்து அரசுக்கு வேண்டியதை அவர்கள் கொடுக்கவில்லை என்பது உண்மை. அந்த டான்செம் சிமெண்ட் (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்லிவிடுகிறேன். இது ஏற்கெனவே பேசப்பட்ட பிரச்சினை. அதனாலே சொல்கிறேன் நான். அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். டான்செம் என்பதிலே வேண்டிய அதிகாரிகளை வைத்துக்கொண்டு நீங்கள் தவறு செய்வதற்காக ஏற்பாடு செய்தீர்கள் என்று முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். அதனால் கூறியது கூறல் என்பது பெரிய குற்றம் பொன்முடி.



**டாக்டர் க. பொன்முடி:** நான் சொல்வது இந்த ஆட்சியில் அல்ல. 1991–96–லேயே டான்செம் மூலமாக சப்ளை செய்யப்பட்ட சிமெண்ட் எல்லாம் அங்கே உற்பத்தி செய்யப்பட்ட சிமெண்ட் அல்ல. ஏனென்றால், Under Production (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், உட்காருங்கள். அவர் சொல்லி முடித்துவிடட்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** மற்ற கம்பெனிகளிலிருந்து சிமெண்ட் வாங்கித்தான் சப்ளை செய்யப்பட்டது. அப்படி ஒரு கமிஷனுக்கு அவர்கள் வாங்குவதைவிட நேரடியாகவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக டெண்டர் கோரப்பட்டு இதுபோன்ற அரசுப் பணிகளுக்குக் குறைந்த விலையினை யார் நிர்ணயிக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்கலாம் என்றுதான் சொல்லப்பட்டது. அதிலே அரசு தொழிற்சாலையும் கலந்துகொள்ளலாம். குறைந்த விலையிலே இருந்தால் அவர்களும் செய்யலாம் என்ற அடிப்படையிலே ஒரு Open tender system தான் பின்பற்றப்பட்டதே தவிர, அதிலே எந்தத் தவறும் நடக்கவில்லை. இங்கே Scientific, Scientific என்று ஒன்றைச் சொல்லி ஒரு கோயபல்ஸ் தனமான பிரச்சாரத்தைச் செய்கிறார்களே தவிர, உண்மையிலேயே Scientific...(கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, Scientific என்பது நம்முடைய அவை முன்னவர் கண்டுபிடித்தது அல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்களே, உட்காருங்கள், நான் சொல்கிறேன். அவை முன்னவர் அவர்களே, நான் சொல்கிறேன். Scientific என்ற விஞ்ஞான ரீதியான ஊழல் என்பது ஏதோ அவை முன்னவர் பயன்படுத்துகிற சொல் அல்ல. சர்க்காரியா கமிஷனிலே பயன்படுத்தப்பட்ட சொல் அது.

*முற்பகல் 11–35*

**திரு. துரைமுருகன்:** கோயபல்ஸ் என்பதுகூட....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உள்நோக்கத்தோடு சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அதற்காகச் சொல்லவில்லை. அவை முன்னவரை நீங்கள் குற்றஞ்சாட்ட வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் பேசுகிறபோது, தொடர்ந்து அவைக்குத் தவறான தகவல்களைத் தந்துகொண்டே இருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியிலே நடந்தது என்ன என்ற உண்மை தெரியும். ஆந்திர மாநிலத்திலே இருக்கிற எரகுண்டலா, விஷ்ணு, ராசி, கொரமண்டல் போன்ற சிமெண்ட் தொழிற்சாலைகள் தமிழகத்திலே இருக்கிற ஒருவரின் ஏகபோக ஆதிக்கத்திற்கு உட்பட்டு வந்துவிட்ட காரணத்தினால், ஆண்டுக்கு 25 இலட்சம் டன் சிமெண்டை, அவர்களுடைய சிமெண்டை இங்கு கொண்டுவர வேண்டும், அரசுத் துறைகள் அதை வாங்க வேண்டும், உள்ளாட்சி போன்ற துறைகள் வாங்க வேண்டும், 80 ரூபாய்க்கு வாங்க வேண்டிய சிமெண்டை 180 ரூபாய்க்கு வாங்கி, கோடி கோடியாகக் கொள்ளை அடிக்க வேண்டும் என்ற நோக்கோடு கொண்டுவரப்பட்டதேயொழிய, வேறு இதில் ஒன்றுமில்லை. (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. பொன்முடி விளக்கம் கேட்டார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன் அவர்களே, அமருங்கள். எல்லோரும் உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) திரு. கோ.சி. மணி அவர்களே, உட்காருங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தவறான தகவல். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) திரு. பொன்முடி, உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். அந்தக் குற்றச்சாட்டுக்கு நீங்கள் எழுந்து விளக்கம் கேட்டீர்கள். அந்த விளக்கத்திற்கும் அவை முன்னவர் அவர்கள் பதில் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) ஓப்பன் டெண்டர் என்கிற முறை பின்பற்றப்பட்டது, அதுதான் காரணம் என்று திரு. பொன்முடி அவர்கள் சொன்னார்கள். அதற்கும் அவை முன்னவர் விளக்கம் சொல்லி இருக்கிறார். (குறுக்கீடுகள்)

**திரு. கோ.சி. மணி:** சொல்லவில்லையே! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்துவிட்டார். (குறுக்கீடுகள்) திரு. பொன்முடி அவர்களே, நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படவில்லை.



அவ்வளவும் இருக்கிறது. நீங்கள் சொன்ன விளக்கம் இருக்கிறது. அவை முன்னவர் தந்த விளக்கமும் இருக்கிறது. திரு. அசோகன் அவர்கள் தொடர்ந்து பேசலாம். (குறுக்கீடுகள்)

**திரு. கோ.சி. மணி:** G.O.75 போட்டது எதற்காக? (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

*(உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அனைவரும் அமைதியாக அமருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக அமருங்கள். திரு. சோ. பாலகிருஷ்ணன், விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இந்த அவை என்பது ஏதோ தி.மு.க.-வுக்கும், அ.தி.மு.க.-வுக்கும் சொந்தம் என்பதைப் போல ஆகிவிடும். த.மா.கா.-வைச் சார்ந்தவர்கள் கொஞ்சம் பேசட்டும். நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் கொஞ்சம் பேசட்டும். திரு. சோ. பாலகிருஷ்ணன். (குறுக்கீடுகள்)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினையை இங்கே பேசிக் கொண்டிருக்கிறபோது தயவு செய்து திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் இந்த நேரத்தில் இந்தப் பிரச்சினையைக் கிளப்பாமல், (குறுக்கீடுகள்)..

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் கிளப்பியது? (கூச்சல் -குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் விளக்கம்தானே சொல்கிறார். (குறுக்கீடுகள்) அவர் விளக்கம்தானே சொல்கிறார். உட்காருங்கள். அதாவது, அவர் சொல்வதிலே உள்ள நியாயம் என்பது, (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். அதாவது, ஆதிதிராவிடர் நலத் துறை என்பது மிக முக்கியமான ஒரு துறை. அந்தத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்) இதிலே ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். திரு. அசோகன் உட்காருங்கள். கூப்பிடும்போது பேசுங்கள். உங்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) ஆதிதிராவிடர் நலத் துறை என்பது ஒரு மிக முக்கியமான துறை. அதையொட்டி எழுந்த

சில பிரச்சினைகள் இந்த அவையிலே கிளப்பப்பட்டன. அவை முன்னவர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.சி. மணி அவர்கள் விளக்கம் சொன்னார்கள். திரு. பொன்முடி அவர்கள் சொன்னார்கள். ஆக, இவை எல்லாம் அவைக்குறிப்பிலே இருக்கின்றன. அவை எதுவும் நீக்கப்படவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்ன விளக்கங்கள், அவை முன்னவர் தந்த பதில் அனைத்தும் இருக்கின்றன. மேற்கொண்டும் இந்த சிமென்டுக்குள்ளே போய்ப் புதைந்துவிடாமல் கொஞ்சம் ஆதிதிராவிடர் நலத் துறைக்கு வரட்டும். ஏனென்றால், இது மிக முக்கியமான பிரச்சினை. திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் அந்த உணர்வோடுதான் குறிப்பிட்டார்கள். ஆக, இதுவரைக்கும் பேசப்பட்ட பிரச்சினைகள் போதும். இப்பிரச்சினைகளுக்கு இத்தோடு முற்றுப்புள்ளி வைத்து, திரு. அசோகன் அவர்களை நான் பேச அழைக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கேள்வி. (குறுக்கீடுகள்)..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உங்கள் உறுப்பினர்தான் அவர். பேசட்டும். அவருக்குள்ள வாய்ப்பைப் பறிக்க வேண்டாம். திரு. அசோகன் பேசட்டும். (குறுக்கீடுகள்) மறுபடியும் இந்தப் பிரச்சினைக்குள்ளே போக வேண்டாம். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** 80 ரூபாய் சிமென்ட்டை 180 ரூபாயாக ஆக்கிவிடமுடியுமா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை அதோடு முடிந்தது. இதுபற்றி ஏற்கெனவே இந்த அவையிலே பேசப்பட்டு இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**திரு. கோ.சி மணி:** ஓப்பன் டெண்டரை நீங்கள் ஒத்துக்கொள்ளப் போவதில்லையா? (குறுக்கீடுகள்)..

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றியெல்லாம் அவர் சொன்ன விளக்கம், நீங்கள் சொன்ன பதில் எல்லாம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அவைபற்றியெல்லாம் அவைக் குறிப்பிலே இருக்கிறது. நீங்கள் சொன்ன பதிலும் இருக்கிறது. (குறுக்கீடுகள்) உள்ளாட்சித் துறைக்குத் தனி அதிகாரம் தரப்பட்டது. அவர்கள் வாங்கினார்கள் என்று நீங்கள் சொன்ன



பதிலும் இருக்கிறது. அவை முன்னவர் சொன்ன பதிலும் இருக்கிறது. இப்போது ஆதிதிராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடக்கட்டும். திரு. அசோகன் பேசுங்கள்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏழுமலை உட்காருங்கள். அசோகன் நீங்கள் பேசுங்கள்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அசோகன், சிக்கலுக்குள் போகாமல் ஆதிதிராவிட சமூகத்தின் மேம்பாட்டைப் பற்றி கொஞ்சம் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. அ. அசோகன்:** தாழ்த்தப்பட்டவர்களுக்கு சிமென்டுதான் கேட்டேனே தவிர, நான் சிக்கலுக்குள் போகவில்லை.

**திரு. துரைமுருகன்:** சிக்கலுக்குப் போகாமல் திருவாரூர் போக முடியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அசோகன், சரித்திரத்திலேகூட அசோகன் கலிங்கப் போருக்குப் பின்னர், அமைதிக்குத் திரும்பினான் என்றுதான் நாம் படிக்கிறோம். ஆகவே, அசோகன், அமைதிக்குக் கொஞ்சம் திரும்பட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அசோகன் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அசோகன் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அசோகன் பேசி முடிக்கட்டும்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கோரிக்கை வைத்தாலே கோபப்படுகிறீர்கள். அதுவும் குறிப்பாக என்னுடைய திருவாரூர் மாவட்டத்தினுடைய நிலைமைகளைச் சொன்னேன். அதுதான் உண்மையே தவிர வேறு ஒன்றுமில்லை. அதிலே குறிப்பாக, ஆதிதிராவிடர்கள் பொருளாதாரத்திலே மிகவும் வீழ்ச்சியுற்று இருக்கிறார்கள். தாட்கோ என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. நான் யாரையும் குறை கூறுவதாகக் கருதக்கூடாது. அது எங்களுடைய கலைஞர் ஆட்சிக் காலத்தில் 1974–லே தொடங்கப்பட்டது. ஆனால், அது எந்த நோக்கத்தோடு தொடங்கப்பட்டதோ, அதாவது தாழ்த்தப்பட்ட மக்கள், பொருளாதாரத்திலே வீழ்ச்சியுற்ற மக்கள், பொதுத் துறையில் முன்னேற வேண்டுமென்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்ட அந்த தாட்கோ இன்றைக்கு அதற்குப் பயன்படுவதே கிடையாது. எங்களுடைய ஆட்சிக்

காலத்தில்கூட இதைப் பற்றிப் பேசியிருக்கிறோம். தயவுசெய்து, இந்த அவையைப் பொறுத்தவரை எனக்குக் கன்னிப் பேச்சு மாதிரிதான். அடிக்கடி தடை வர வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது இந்தப் பிரச்சினைகளில் அரை மணி நேரம் போய்விட்டது. இன்னும் ஏழு நிமிடங்கள் எடுத்துக்கொண்டு பேச்சை முடியுங்கள்.

**திரு. அ. அசோகன்:** அந்த டாட்கோ பிரச்சினை உங்களுக்குத் தெரியும். டாட்கோ, அதிகாரிகள் கரங்களில் இன்று இல்லை. அது புரோக்கர் கூட்டத்திலே இருக்கிறது. தொடர்ந்து..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், பதிலுரையில் சொல்லுங்கள், அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு)

**திரு. அ. அசோகன்:** அதேபோல இன்றைக்கு I.A.S., I.P.S. பயிற்சி கொடுக்கப்படுகிறது. அந்த I.A.S., I.P.S. பயிற்சியைச் சென்னையில் மட்டுமே கொடுக்கிறார்கள். அதைத் தமிழகத்திலே பரவலாக மூன்று இடங்களில் தெ ...ங்கினால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. ஆதிதிராவிடர்களுடைய நலனுக்கான சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய உயர்மட்டக் குழு எங்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்தது. அந்தக் குழுவைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எங்களுடைய கலைஞர் ஆட்சிக் காலத்தில் மொத்தப் பள்ளிகள் 1260. ஆதிதிராவிடர்களுக்கு 1017 தொடக்கப் பள்ளி 806; நடுநிலைப் பள்ளி 110; உயர்நிலைப் பள்ளி 47; மேல்நிலைப் பள்ளி 54; மொத்தம் 2,43,000 மாணவ மாணவியர் பயின்று வந்தார்கள். இந்தத் துறை மூலம் இலவச பாடப் புத்தகங்கள், எழுது பலகை, குறிப்பேடுகள், சிறப்பு வழிகாட்டிகள், அதிக மதிப்பெண் பெறுவோர்க்கு ஊக்கத்தொகை மற்றும் பரிசுப் பொருட்கள், கல்லூரி மாணவ மாணவிகளுக்கு உதவித் தொகை, கடனுதவித் தொகை, இலவச தொழிற் கல்வி அறிவுக் கூர்மைப் பரிசு, காந்தி நினைவுப் பரிசு, முதலமைச்சர் தகுதிப் பரிசு, சிறப்புக் கல்விப் பரிசு, வழக்கறிஞர் சட்டப் பயிற்சி போன்றவை வழங்கப்பட்டன.

அதுமட்டுமல்ல. எங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் 52.64 கோடி ரூபாய்க்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இலவச பாடப் புத்தகங்களுக்கு 12.40 கோடி ஒதுக்கி, 58 இலட்சம் மாணவ மாணவியர் பயன்பெற்றார்கள்.



சீருடைக்கு 7.8 கோடி. இதன்மூலம் 12.50 இலட்சம் மாணவர்கள் பயன் அடைந்தார்கள். ஆதிதிராவிட மாணவர்களுக்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் படிக்க தினமும் இரண்டு நாளிதழ்கள் வழங்கப்பட்டன. இந்தத் துறையில் 1075 மாணவ மாணவியர் விடுதிகள் இயங்கி வந்தன.

அதுமட்டுமல்ல. கல்விக்காக, கடந்த அதிமுக. ஆட்சிக் காலத்தில் ரூபாய் 415.25 கோடி ஒதுக்கப்பட்டது. அதை இரண்டு மடங்காக அதாவது 923.30 கோடியாக உயர்த்திய பெருமை எங்களுடைய கலைஞர் ஆட்சிக்கு உண்டு. அதைப்போல உங்களுடைய அதிமுக. ஆட்சியில் 1995–96–ல் ரூபாய் 4.25 கோடி ஒதுக்கப்பட்டு ஒரு விடுதி கட்டப்படாமல் அந்தப் பணம் சரண்டர் செய்யப்பட்டது. ஆனால், கலைஞர் ஆட்சியில் 124 விடுதிகள் கட்டப்பட்டு, 111 விடுதிகள் தொடங்கும் நிலையில் இருந்தன. கடந்த அதிமுக. 5 ஆண்டு கால ஆட்சியில் வெறும் 52 விடுதிகள் மட்டுமே கட்டப்பட்டு இருந்தன என்பதை இந்த மாமன்றத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்ல. விடுதிக்கான உணவுக் கட்டணம் 138.75 ஆக இருந்ததை 225 ரூபாயாக உயர்த்தியது எங்களுடைய கலைஞர் அரசு. அதை நீங்கள் 300 ஆக உயர்த்தியிருக்கிறீர்கள். அதேபோல கல்லூரி விடுதிக்கு ரூபாய் 197/–லிருந்து ரூ.400/–ஆக கலைஞர் அரசுதான் உயர்த்தியது. அதைப் பற்றி இந்தக் கொள்கைக் குறிப்பில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. அதை 400 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

விடுதிகளில் சமையல் எரிவாயு இணைப்புகளுக்கு ரூ.24 லட்சம் ஒதுக்கப்பட்டது. அதைப்போல இன்றைக்கு மிகவும் முக்கியமான பிரச்சினை, உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிற பிரச்சினை, தொடர்ந்து ஆளுநர் உரையிலே முதலமைச்சர் பதில் சொன்ன பிரச்சினை, இன்றைக்கு தமிழ்நாடே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற பிரச்சினை, அரசாணை எண் 44 அதை இன்றைக்கு அனைவரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். உங்கள் கொள்கைக் குறிப்பிலே அதாவது அரசாணை நிலை எண் 44–ஐச் சீரமைத்து பணியிடங்களில் ஏற்படும் பின்னடைவுகளை நிறைவு செய்ய இவ்வரசு கருதியுள்ளது என்று ஒரு உத்தரவாதம் இல்லாத அறிவிப்பை இந்த அரசு வெளியிட்டிருக்கிறது. அதற்குத் தகுந்த விளக்கம் அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசி முடிக்கட்டும். அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே எல்லா விளக்கங்களையும் சொல்லலாம். திரு. அசோகன், 5 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையிலே 11 ஆம், 12 ஆம் வகுப்பு படிக்கும் அனைத்து ஆதிதிராவிட பழங்குடியின மாணவியர்களுக்கும் மிதிவண்டி வழங்கும் திட்டத்தை நாங்கள் பாராட்டுகிறோம். அதேநேரத்தில் கடந்த காலங்களிலே ஆடு வாங்க லோன் கொடுப்பதாக ஆதிதிராவிட நலத் துறை மூலமாக தெரிவிக்கப்பட்டும் இதுவரை மத்திய கூட்டுறவு வங்கிக் கடன் வழங்கவில்லை.

தாட்கோவிலே இன்றைக்கு வழங்கப்படுகிற கடன் அதிகபட்சமாக ரூ.25 ஆயிரம். அதில் விளிம்புத் தொகையாக 20 சதவிகிதம் மட்டும் அளிக்கப்படுகிறது. மீதியை வங்கி மூலமாகப் பெற வேண்டும் என்று சொல்கிறார்கள். நான் மனசாட்சியோடு இங்கே இருப்பவர்களுக்கு–அது எந்த இயக்கத்திலே இருந்தாலும்–தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாகத் தாழ்த்தப்பட்டவர்கள் பயன்பெறுவதே கிடையாது. பினாமிகள் பெயரிலேதான் அங்கே கடன் பெறப்படுகிறது. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால் அந்த வங்கிகளிலே கடன் பெறுவதற்குக்கூட அலைக்கழிக்கப்படுகிறார்கள். கடனாளியாக மாறுகிற நிலைமை இந்த நாட்டிலே உருவாகியிருக்கிறது. எந்த நோக்கத்திற்காக இந்த தாட்கோ தொடங்கப்பட்டதோ அது நிச்சயமாக மறுக்கப்பட்டிருக்கிற நிலைமையை நீங்கள் புரிந்து தாட்கோ மூலமாக ஒரு கடன் வங்கியை நீங்கள் உருவாக்க வேண்டும். அதுவும் குறிப்பாக இன்றைக்கு எங்களுடைய திருவாரூர் தொகுதியைப் பொறுத்தவரைக்கும் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. தொகுப்பு வீடுகள் திட்டத்தின்கீழ் குறிப்பாக கிராமப்புறத்திலே தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். ஆனால், சென்னை போன்ற மாநகரங்களிலே Slum Clearance Board மூலம் ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். கிராமப்புறங்களிலே இருப்பவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். ஆனால், நகரத்திலே இருக்கிறவர்கள் எந்த நகரமாக இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே வசித்துக் கொண்டு இருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த விதத்திலும் வீடுகள் கிடைப்பது கிடையாது. அதை மாற்றி கிராமப்புறத்திலே தொகுப்பு வீடுகள் கொடுப்பதைப் போல நகர்ப்புறங்களில் இருப்பவர்களுக்கும் தொகுப்பு வீடுகள் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று



கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, தொகுப்பு வீடுகளுக்கு 33 ஆயிரம், 36 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். அது எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் போதாது. காரணம், நாகை மாவட்டமாக இருந்தாலும், திருவாரூர் மாவட்டமாக இருந்தாலும், தஞ்சை மாவட்டமாக இருந்தாலும் வெள்ளம் மழை என்று சொன்னாலும், புயல் சீற்றம் என்று சொன்னாலும் அதிகமாகப் பாதிக்கப்படுவது எங்கள் மூன்று மாவட்டங்கள்தான். நிச்சயமாகச் சிறப்புத் திட்டத்தின்கீழ் அந்த மூன்று மாவட்டத்திற்கும் ரூ.40 ஆயிரமாவது தொகுப்பு வீடுகளுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய திருவாரூர் தொகுதியைப் பற்றி பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. கடந்த காலத்திலே எங்களுடைய திருவாரூர் நகரத்திற்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்பட்டு அது டெண்டர் விடப்பட்ட நிலையிலே இருந்தது. அது என்ன ஆனது என்று இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல நெடுஞ்சாலைத் துறையிலே திருவாரூர் நகரத்திலே மருதப்பட்டணம், கிடாரங்கொண்டான் பாலம் வேண்டும் என்று இன்றைக்கு நாங்கள் கேள்வி கொடுத்திருக்கிறோம். அதையும் செய்து தர வேண்டும். மடப்புரம் ஒற்றையடிப் பாலத்தில் ஆட்கள் மட்டுமே நடந்துகொண்டிருக்கிறார்கள். அதை மாற்றி, போக்குவரத்திற்கு ஏற்றவாறு அகலப் பாலமாக அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகை மாவட்டம், திருவாரூர் தொகுதியில், கீவளூரில் விளாம்பாக்கம் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் சாலையைப் பற்றிச் சொன்னபோதுகூட என்று உங்களால் முடிந்த வரையிலே செய்து கொடுங்கள், மற்றவற்றை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். அதற்குக்கூட கேலியாகச் சிரித்தார்கள். அதாவது ஒரு காலத்திலே–நீங்களே ஆட்சிக்கு வந்திருக்கிறபோது, அதாவது பிளேக் நோய் வந்த நீங்களே ஆட்சிக்கு வந்திருக்கிறபோது, பித்தவாந்தி எடுத்த நாங்களும் நிச்சயமாக வருவோம் என்று கூறி, அரிய வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அசோகன் தவறாகச் சொல்லவில்லை. அசோகன் தவறாகச் சொல்லவில்லை. அவர், நான் பேசிய ஒன்றை, மேடையிலே நான் பேசிய ஒன்றை விளக்கமாகச் சொன்னார். தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது, நான் பொதுக்கூட்ட

மேடையிலே பேசிய ஒரு கருத்தைச் சொன்னார். அவர் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) சாமி அவர்களே, அறையிலே வந்து கேளுங்கள், விளக்கத்தைச் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் (குறுக்கீடு) இல்லை சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள். அவர் என்ன சொன்னார் என்று நான் சொல்கிறேன். இந்தப் பீடத்திலே இருந்துகொண்டு அதற்கு விளக்கம் சொல்ல விரும்பவில்லை. (குறுக்கீடு) சமூக நலத் துறை அமைச்சர், சொல்லுங்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியிலே பேசியவற்றை எல்லாம் அவைக்குள்ளே வந்து பேசுவதாக இருந்தால் இங்கே உட்கார்ந்து இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்களும் பேசுவதிலே குறைந்தவர்கள் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களாலும் பேச முடியும் நீங்கள் அனுமதித்தால், என்பதை மட்டும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அசோகன் அவர்கள் நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மேடைகளிலே பேசிய ஒரு கருத்தைத்தான் சொன்னார்கள். எனக்கு அதில் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. அடுத்து, நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் வரகூர் அருணாசலம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அசோகன் அவர்கள் ஏதோ அவர்களுடைய அரசுதான் ஆதிதிராவிடர்களுக்கு நல்ல திட்டங்களை எல்லாம் தீட்டியதாக இங்கே பெருமைப்பட்டுக் கொண்டார்கள். ஓரேயொரு உதாரணத்தை மட்டும் சொல்கிறேன். 1999–2000 ஆம் ஆண்டுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைப்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியருக்கு ரொக்க ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்திற்கு அளிக்கப்பட்ட நிதியில் ரூ.3 கோடியே 99 இலட்சத்தைப் பயன்படுத்தாமல் திருப்பிச் செலுத்திய அரசு என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரிடத்திலே அந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் கொடுங்கள். அவர் பதிலுரையிலே அதைத் தெரிவிக்கட்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு)



**திரு. செ.கு. தமிழரசன்:** தலைவரவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், பிரச்சினை முடிந்துவிட்டது. புதிதாகக் கிளப்பாதீர்கள். (குறுக்கீடு) தமிழரசன், நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் பேசும்போது சொல்லலாம்.

***மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த, தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற தங்கத் தலைவி, சிங்கத் தலைவி இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். என்னை வெற்றி பெறச் செய்த வரகூர் வாக்காளப் பெருமக்களுக்கும் அதேபோல கிள்ளியூர் அழகப்பன், வள்ளியம்மை மகனை, சாதாரண மகனை வரகூர் அருணாசலம் என்று அழைத்து இந்த மாபெரும் சபையிலே துணை சபாநாயகராக ஆக்கிய பெருமை அன்னை அவர்களைச் சாரும். அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மானியக் கோரிக்கையில் இரண்டொரு கருத்துகளை மட்டும் சொல்லி நான் அமைய விரும்புகிறேன். ஏனென்றால் நாங்கள் பேசுகிற நேரத்தை எல்லாம் எடுத்துப் பேசி விட்டார்கள். நான் பேசினால்–நான் மணி அடிப்பவன்–நீங்கள் மணி அடித்தால் எனக்கு மரியாதை இருக்காது. ஆகவே, குறிப்பாக, இந்தக் குறிப்பிட்ட நேரத்தில் இரண்டொரு கருத்துகளை மட்டும் நான் சொல்லி அமைய விரும்புகிறேன்.

"காக்கை குருவி யெங்கள் ஜாதி–நீள்
கடலு மலையுமெங்கள் கூட்டம்"–என்று பாரதி சொன்னது போல
"சாதி இரண்டொழிய வேறில்லை"...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகமாகப் பேசினால் மணியை உங்களிடம் கொடுத்து விடுவேன். நீங்கள்தான் அடிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** தலைவரவர்களே,

"சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறி முறையின்–மேதினியில்

இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி."

என்று பாடினார்களே அப்படி, "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று சொன்னார்களே அப்படி. இந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஜாதியை ஒழிக்க வேண்டும், சமுதாயத்திலே ஏற்றதாழ்வு இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கைக்கு நிதியாக திட்டத்திட்ட 352 கோடியே 13 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிற பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவிக்கு உண்டு.

இங்கே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். முதலிலே இந்தத் துறையே அரிஜனத் துறை என்று இருந்தது. மகாத்மா காந்தி அவர்கள் இந்த மக்களை கடவுளின் குழந்தைகள் என்று அழைத்தார். ஆகவே, அரிஜனத் துறையாக இருந்தது. பிறகு தாழ்த்தப்பட்டோர் துறையாக மாற்றப்பட்டு, திரும்ப புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே ஆதிதிராவிடர் நலத் துறை, பழங்குடியினர் நலத் துறையாக மாற்றப்பட்டது. அப்படி மாற்றிய பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்திலே 28 முதலமைச்சர்கள் ஆண்டு கொண்டிருக்கிறார்கள். அதிலே இரண்டே இரண்டு பெண் முதலமைச்சர்களை மட்டும் இந்தியத் துணைக் கண்டம் பெற்றிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள அத்தனை முதலமைச்சர்களும் செய்யாத பணிகளை வேறு மாநிலத்திலே பீகாரில் ஒரு முதலமைச்சர் இருந்தாலும், தமிழகத்திலே இருக்கிற ஒரேயொரு முதலமைச்சர் ஆதிதிராவிட மக்களுக்குத் திட்டங்கள் வாயிலாக நல்ல பல பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். பல திட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த பெண் முதலமைச்சரையும், பணிகளை நடத்த முடியாமல், முடக்குகின்ற வகையிலே பல சூழ்ச்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சூழ்ச்சிகளை எல்லாம் முறியடித்து வெற்றி பெற்ற பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவிக்கு உண்டு என்பதை இந்த மர்மன்றத்திலே பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்தத் துறையைப் பொறுத்தவரையில் பெண்கள் நலம் பெற வேண்டும். ஏனென்றால் ஒரு பெண்மணி முதலமைச்சராக இருக்கிறார்கள். ஆகவே, plus two வரை படிக்கின்ற, பட்டப் படிப்புப் படிக்கின்ற மாணவர்களுக்கு இலவசமாகப் படிப்புத் தொகையைக் கொடுத்த பெருமை புரட்சித் தலைவிக்கு உண்டு.



முற்பகல் 11-55

அதற்குப் பின்னாலே plus two படிக்கின்ற பெண்கள் சைக்கிளில் சென்று வருவதற்கு ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக ரூபாய் 20 கோடியை ஒதுக்கி, 80 ஆயிரம் குழந்தைகள் பயன்பெறுகின்ற வகையிலே திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் கட்டடங்கள் வேண்டும். மாணவர்கள் தங்க வேண்டும். மாணவியர்கள் தங்க வேண்டும். உங்களுக்கு குறிப்பாகத் தெரியும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு என்றால் Hostel கொடுத்து விடுவார்கள். ஆனால், ஆதிதிராவிடர் நலத் துறை என்றால், அதற்கு வாடகைக் கட்டடங்கள்கூடக் கிடைப்பது கொஞ்சம் சிரமமாக இருக்கும். அந்தச் சூழ்நிலையை எல்லாம் கருத்திலே கொண்டு, புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு 25 கோடி ரூபாயிலே கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் பாடாலூருக்கும், கொளக்காநத்தத்திற்கும், அதேபோன்று இன்னும் இரண்டு ஊர்களுக்கும் கட்டடம் தேவை என்று இங்கே அமைச்சரிடம் மனு கொடுத்திருக்கிறேன். அதையும் இதிலே சேர்த்துக்கொள்ளுமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொறுப்பேற்றதற்கு முன்னாலே, மாணவர்களுக்கு, சிறைச்சாலைகளில் கைதிகள் சாப்பிடுகின்ற உணவிற்குக் கொடுக்கின்ற தொகையைவிடக் குறைவாகக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1986–லே அந்த உணவுத் தொகையை அதிகமாக உயர்த்தினார்கள். அதற்குப் பிறகு வள்ளலின் வாரிசாக வந்த புரட்சித் தலைவி அவர்கள் 225 ரூபாய் என்று இருந்ததை 300 ரூபாயாக உயர்த்தினார்கள். அப்படி உயர்த்திய பெருமை புரட்சித் தலைவிக்கு உண்டு. அதை மாணவர்கள் பாராட்டுகிறார்கள். அவர்களை ஈன்றெடுத்த பெற்றோர்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல 12 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற அத்தனை ஆதிதிராவிட குழந்தைகளுக்கும் சீரான உடை வழங்க வேண்டுமென்று சிந்தித்த புரட்சித் தலைவி அவர்கள் 6 கோடியே 87 இலட்சம் ரூபாயைச் சீருடைக்கு ஒதுக்கி சிறப்புச் செய்திருக்கிறார்கள். அந்தப் பெருமை புரட்சித் தலைவிக்கு உண்டு.

அதைப்போல ஆதிதிராவிட, பழங்குடியின மாணவ மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்க இந்த நிதி ஆண்டிலே ரூ.11.39 இலட்சம் ஒதுக்கி பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

இங்கே ஜாதி ஒழிய வேண்டுமென்றால், கலப்புத் திருமணம் மிக முக்கியமானது என்பதைக் கருத்திலே கொண்டு inter–caste marriage என்று சொல்வார்களே, அதற்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது புரட்சித் தலைவி அவர்கள் அதை 20,000 ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். ஜாதி ஒழிய வேண்டுமென்றால் கலப்புத் திருமணம் செய்துகொள்கிற அந்தத் தம்பதிகளுக்கு ரூபாய் 20 ஆயிரமல்ல; நான் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்; நீங்கள் அதை 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்துங்கள். அப்போதுதான் ஜாதியை ஒழிக்க முடியும். கலப்புத் திருமணங்கள் எங்கே அதிகமாக்கப்படுகின்றனவோ– ஜாதி விட்டு ஜாதி திருமணம் செய்துகொள்கிற நேரத்தில்–அங்கே ஜாதி ஒழிக்கப்படும். எனவே, அந்தத் தொகையை 50 ஆயிரம் ரூபர்யாக புரட்சித் தலைவி அவர்கள் உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவுடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் தமிழகத்தைப் பொறுத்தவரையில் untouchability–ஐப் போக்க வேண்டும். அதற்காகத் தமிழகத்தை 5 பகுதிகளாகப் பிரித்து, 5 மண்டலங்களாகப் பிரித்து Protection of Civil Rights என்கிற கோர்ட்டை உருவாக்கி இருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக 5 மாவட்டங்களுக்கு ஒன்று என்றுதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கே நீதித் துறை அமைச்சர் இருக்கிறார். –Justice– நீதியைப் பெற்றிருக்கிற அவர்கள், அந்தக் கோர்ட்டை அதிகப்படுத்தி 5 மாவட்டங்களுக்கு ஒன்று என்று இருப்பதை, ஒரு மாவட்டத்திற்கு ஒன்று அல்லது 3 மாவட்டங்களுக்கு ஒன்று என்ற அடிப்படையிலே அமைத்தால்தான் நல்லது. ஒரே ஒரு D.S.P., ஒரே ஒரு S.I. இவர்கள்தான் இந்த ஐந்து மாவட்டங்களுக்கும் சென்று தீண்டாமை இருக்கிறதா, untouchability–ஐ எப்படி ஒழிக்க வேண்டும் என்று case போடுகிறார்கள். அதை நீங்கள் அதிகப்படுத்தினால் அந்த மக்களுக்குப் பயன் கிடைக்கும், தீண்டாமை ஒழிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

கடந்த ஆட்சியிலே – இங்கே சொன்னார்கள் – ஆதிதிராவிட மக்கள் பழிவாங்கப்பட்டார்கள் என்று சொன்னார்கள். குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மதுரையிலே மேலவளவு என்கிற



பகுதியிலே 4 பேர்களை, ஆதிதிராவிட மக்களை வெட்டிக் கொன்ற பெருமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. அதுமட்டுமல்லாமல் நெல்லையைப் பொறுத்தவரையில், ஆதிதிராவிட மக்கள் தங்களுடைய குறையைத் தெரிவித்த நேரத்தில் அவர்களைத் துரத்தியடித்து, தாமிரபரணி ஆற்றிலே 17 பேரைக் கொலை செய்தார்களே, அப்போது எங்கே சட்டம்–ஒழுங்கு இருந்தது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே சொன்னார்கள், மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு மணி மண்டபம் நாங்கள்தான் கட்டினோம் என்று. புரட்சித் தலைவர்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. புகழேந்தி ஏதோ பேச வேண்டும் என்கிறார்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் இவையெல்லாம் நடந்தன என்பதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் முன்பாகவே கொடியங்குளம் போன்ற பகுதிகளிலே ஏற்பட்ட, மிகப் பெரிய, அந்தக் கொடுமையான நிலைகளுக்கு யார் காரணம் என்பதையும் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** 1998–லே நெல்லையிலே பார்த்தால் – கொடியங்குளம் என்று சொன்னால் கொடி போலப் போய்க்கொண்டிருக்கும், பின்னாலே அதைப் பற்றி நாம் பேச வேண்டாம் – இப்போது நீங்கள் முதலில் ஐந்தாண்டுகள் இருந்தீர்கள். அதைப் பற்றித்தான் பேசுகிறேன் – அப்போது 1998–லே நடந்த நிகழ்ச்சி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்பொழுது நீங்கள் பேசும்போது அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அவர்கள் பேசும்போது அதைச் சொல்லட்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். அவர் பேசி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** சட்டத்தை இயற்றிய மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு மணி மண்டபம் கட்டியதாகச் சொன்னார்கள். 1986–லே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பொறுப்பேற்ற பின்னாலே, எப்படி பெருந்தலைவர், பச்சைத் தமிழர் காமராஜர் அவர்களுக்கும், நம்முடைய மகாத்மா காந்தி அவர்களுக்கும், அதேபோல நேரு அவர்களுக்கும், எப்படி நாம் அரசு விழாவாகக் கொண்டாடுகிறோமோ, அதேபோல டாக்டர் அம்பேத்கர்

அவர்களுக்கும் அரசு விழாவாக எடுத்தது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சி என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை நீங்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்தீர்கள். ஆகவே, அதைப் பற்றிக் கவலையில்லை. இருந்தாலும், இந்த மணி மண்டபத்தைப் பற்றி ஒன்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஐந்து கோடி ரூபாய் செலவிலே புரட்சித் தலைவி அவர்கள் 14—4—1993-லே மாமேதை அம்பேத்கர் பிறந்த நாளிலே அந்த மணி மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டினார்கள். அடிக்கல் நாட்டுகிற நிகழ்ச்சியிலே நானெல்லாம் கீழேயிருந்து அமர்ந்து பார்த்தவன். ஆனால், அடிக்கல் நாட்டிய பின்னாலே உங்கள் ஆட்சியிலே பணி நடந்தது. அதை நாங்கள் பாராட்டுகிறோம். புரட்சித் தலைவி எனக்கு துணை சபாநாயகர் பதவி கொடுத்த பின்னாலே இரண்டு தடவை அந்த மணி மண்டபத்துக்குப் போய் பார்த்தேன். அடிக்கல் நாட்டியதற்கான ஆதாரமே இல்லாமல் அந்த அடிக்கல் நாட்டிய கல்கூட அந்த மணி மண்டபத்திலே இல்லை என்பதைப் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாமேதை டாக்டர் அம்பேத்கருக்கு புரட்சித் தலைவி அவர்கள் ஐந்து கோடி ரூபாயிலே அடிக்கல் நாட்டினார்கள். அந்தக் கல்லைத் திரும்பவும் புரட்சித் தலைவி ஆட்சியிலே பதிக்க வேண்டுமென்று இங்கே நான் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப் பல திட்டங்கள் இருட்டடிப்பு செய்யப்பட்டன.

ஒரு நாள் செய்தித் தாளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். திடீரென்று ஓர் அறிவிப்பு. என்னவென்று பார்த்தால் தூக்கி வாரிப்போட்டது. ஏனென்றால் 'தாட்கோ'-விலே நான் சேர்மனாக இருந்தேன். ஆதிதிராவிட பெண் குழந்தைகளுக்கு இரண்டாவதிலிருந்து ஐந்தாவது வரை படிக்கிற பெண் குழந்தைகளுக்கு, மாதத்திற்கு ஒரு பெண் குழந்தைக்கு 50 ரூபாய், அதைப்போல ஆறாவதிலிருந்து எட்டாவது வரை படிக்கிற பெண் குழந்தைக்கு 100 ரூபாய், இதை அரசு கொடுக்கிறது, இந்தத் திட்டத்தை மாண்புமிகு முன்னாள் ஆதிதிராவிட நலத் துறை அமைச்சராக இருந்தவர் அங்கே மதுரையிலே அறிவிக்கிறார். புதிய திட்டம், எங்கள் ஆட்சியிலே கொண்டு வந்திருக்கிறோம் என்றார். நான் பார்த்து அசந்து போனேன். புரட்சித் தலைவி கொண்டு வந்த திட்டம், 'தாட்கோ' மூலமாக 1994 என்று நினைக்கிறேன், நானே அந்தத் துறையினுடைய சேர்மனாக இருந்திருக்கிறேன். அந்தத் திட்டத்தைத்தான் திரும்பக் கொண்டு வந்து சொன்னீர்கள். இப்படிப்பட்ட நல்ல பல திட்டங்களை புரட்சித் தலைவி தன்னுடைய ஆட்சியிலே கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில்



முதன்முதலாக, இறந்தவர்களுக்கு, கொல்லப்பட்டவர்களுக்கு ஈமச் சடங்கிற்கான தொகையை எல்லாம் கொடுத்தது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில்தான் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த ஈமச் சடங்கிற்கான தொகையை புரட்சித் தலைவி ஆட்சிக்குப் பின்னாலே உயர்த்தினார்கள். அதை நீங்களும் உயர்த்தினீர்கள். அப்படி படிப்படியாக, புரட்சித் தலைவி கொண்டுவந்த திட்டங்கள் தமிழகத்திலே மலர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. எனவே, எந்தச் சக்தியாலும் புரட்சித் தலைவியை மக்களிடமிருந்து பிரிக்க முடியாது.

*பிற்பகல் 12-05*

ஒன்றை மட்டும் சொல்லி விடைபெற நினைக்கின்றேன். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பார்கள். ஆகவே, மக்கள் தீர்ப்புதான் மகேசன் தீர்ப்பு. மேதகு ஆளுநர் அவர்களுக்கு உயர் நீதிமன்ற நீதிபதி பதவிப் பிரமாணம் செய்து வைத்திருக்கிறார்கள். அதுபோல உச்ச நீதிமன்றத்திலே இருக்கின்ற Supreme Court-லே இருக்கின்றவர் ஜனாதிபதிக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்திருக்கிறார்கள். நான்கூட முன்னாள் ஜனாதிபதி மரியாதைக்குரிய வெங்கட்ராமன் அவர்களுக்கு ஓட்டுப் போட்டேன். ஆகவே, ஓட்டுப் போடுகின்ற உரிமை இருக்கிறபோது மக்கள் தீர்ப்புதான் மகேசன் தீர்ப்பு. எந்தச் சக்தியாலும் புரட்சித் தலைவியை ஒன்றும் செய்ய முடியாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், உங்களுக்கும் நன்றி சொல்லி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாரமலை.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 30-ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பை நல்கியதற்கு நான் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. வழக்கமாக நடைமுறைப்படுத்துகிற திட்டங்களுக்கு எல்லாம் மேலாக சில நல்ல நீண்டதூரப் பலன் அளிக்கின்ற திட்டங்கள்

அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவியருக்கு அரசுக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கின்ற திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தச் சலுகையை மாணவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி.ஆர். சுந்தரம் தலைமை)*

அடுத்து 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் படிக்கின்ற மாணவியருக்கு இலவச மிதிவண்டி வழங்குகிற திட்டம் ஓர் அருமையான திட்டம். அந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். அதே திட்டத்தை, அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவிகளுக்கு மட்டுமல்லாது, அரசு உதவி பெறுகிற மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார்கள் நடத்தும் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவிகளுக்கும் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கேட்கின்றபோது, நிதி நெருக்கடி அதிகமாக இருக்கிற இந்தச் சூழ்நிலையில் இதைப் படிப்படியாகவாவது நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்கு, Hostel–லில் தங்கிப் படிக்கின்றவர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணத்தை ரூ.225–லிருந்து ரூ.300 ஆக உயர்த்தி அதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதற்கு நான் உண்மையிலேயே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். அரசு Hostel–களில் ஏறக்குறைய 70,000 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், மகாத்மா காந்தி அவர்கள் ஆரம்பித்த அரிஜன சேவா சங்கங்கள் போன்ற சேவை அமைப்புகள் ஏறக்குறைய தமிழகத்திலே பல்வேறு Hostel–களை நடத்திக் கொண்டிருக்கின்றன. மொத்தம் 43 மாணவ மாணவியர் இல்லங்கள் இருக்கின்றன. அதிலே படிக்கின்ற மாணவர்கள் எண்ணிக்கை 4,854. அந்த 4,854 மாணவர்களுக்கு – நான் மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்– அரசு மாணவர்கள் இல்லம் என்று சொன்னால், அரசு கட்டட வாடகை, வார்டனுடைய சம்பளம், அதிலிருக்கிற சமையல்காரர்களுடைய சம்பளம் போன்ற எல்லாவற்றையும் நாமே ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால், சேவை சங்கங்கள்



நடத்துகின்ற அந்த மாணவர்கள் இல்லங்களிலே ஒரு மாணவருக்கு 150 ரூபாய்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த 4,854 மாணவர்கள் என்று சொல்கிறபோது அவர்களுக்கும் அதிகமாக, இந்த அரசு நடத்துகிற மாணவர்கள் இல்லங்களில் இருப்பதைப்போல, உணவுக் கட்டணத்தை 300 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும் என்ற இந்தக் கோரிக்கையை நீங்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

அடுத்து அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த தேர்தல் அறிக்கையில் ஓர் அருமையான செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். மின் விளக்கு, குடி தண்ணீர், தண்ணீர் வசதிகளுடன்கூடிய கழிப்பிட வசதி, சாலைகள், வீட்டு மனைகள், வீடுகள், Pre–schools for babies இவை வருகின்ற ஐந்து ஆண்டுகளில் அடித்தட்டு மக்களுக்குச் செய்து தரப்படும். இந்த விதத்தில் கீழ்த்தட்டு சமுதாய சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நேரத்திலே நான் பணிவோடு இந்தத் திட்டத்தை வரவேற்கின்ற நிலையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குழும வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் கட்டிக் கொடுக்கப்படுகின்ற குழும வீடுகளின் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வருகிறது. 1996–97 ஆம் ஆண்டிலே 71 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன; 1997–98 ஆம் ஆண்டில் 56 ஆயிரமாகக் குறைந்து இருக்கிறது; 1998–99–லே 40 ஆயிரமாக இருந்தது; 2000–2001–ல் 31,179 வீடுகளாகக் குறைந்து இருக்கிறது. இந்த நிலை நீடித்தால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற அந்தச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் 25 ஆண்டு காலமானாலும் நிறைவேறாது என்பதைச் சுட்டிக்காட்டி, இதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். என்ன சிறப்புத் திட்டம் என்று சொன்னால், கடந்த ஐந்து ஆண்டுகளிலே இரண்டு இலட்சம் வீடுகள்தான் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது ஒரு வீட்டினுடைய மதிப்பு 32 ஆயிரம். ஒரு குழும வீட்டின் மதிப்பு கிராமங்களில் 32 ஆயிரம் ரூபாய், மலைப் பகுதிகளிலே 34 ஆயிரமாக ஆக்கியிருக்கிறார்கள். 40 ஆயிரமாக அந்த வீட்டினுடைய மதிப்பை ஆக்கி, ஏறக்குறைய 5 ஆண்டுகளில் 5

இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுத்தால் மொத்தச் செலவு 2 ஆயிரம் கோடிதான் வருகிறது. அதுபோல, கச்சா வீடுகள் 10 ஆயிரம் என்று சொல்கிறபோது 2 இலட்சம் வீடுகள் கட்ட 300 கோடி, ஆக 2,300 கோடி ரூபாயில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு சிறப்புத் திட்டம் தீட்டி செயல்படுத்த வேண்டும். அந்தத் திட்டத்திற்கு ஏறக்குறைய வருடத்திற்கு 400 கோடி செலவாகும். தமிழக அரசு சந்திக்கின்ற நிதி நெருக்கடி பற்றி நன்றாகத் தெரியும்.

பல்வேறு நீண்ட தொலைநோக்குத் திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் NABARD போன்ற அல்லது வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் போன்றவற்றிலிருந்து பணம் பெற்றுத்தான் நிறைவேற்றுகின்ற கட்டாயம் இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நன்றாக அறிவேன். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு ஆதிதிராவிடர் சமுதாயத்திற்கு ஒரு தன்னிறைவு வர வேண்டுமென்று சொன்னால், நிச்சயமாக இந்தத் திட்டத்தை ஒரு சிறப்புத் திட்டமாக அறிவித்து, ஏற்கெனவே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிற அந்த இலட்சியத்தை அடைவதற்கு, நீங்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு என்னுடைய அருமை நண்பர் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் அசோகன் அவர்கள் G.O. 44–ஐப் பற்றிச் சொன்னார்கள். அது தொடர்புடையதுதான். திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இந்தச் சட்டமன்றத்தில் 11—5—2000 அன்று வெள்ளை அறிக்கையை வைத்தது. அந்த வெள்ளை அறிக்கைதான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய முன்னேற்றத்தை அடியோடு குலைக்கின்ற, அடிப்படையையே தகர்க்கின்ற ஒரு திட்டம் என்பதை நான் மெத்த வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் யாரையும் புண்படுத்த வேண்டுமென்று விரும்பவில்லை. உண்மை நிலையை நான் சொல்கிறேன். இந்த G.O. 44–ல் Para 3–ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டு நிரப்பப்படாத காலியிடங்கள் இருந்தால் அது A,B,C,D, என்று ஒவ்வொரு பிரிவிலும் இருக்கின்ற இடங்களை நேரடித் தேர்வு மூலமாக பூர்த்தி செய்ய வேண்டுமென்று G.O. 44 சொல்கிறது. (மணியடிக்கப்பெற்றது) என்ன சார், நான்கு நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். நான் ஒரு ஆள்தான் எங்கள் கட்சி சார்பாகப் பேசுகிறேன். 20 நிமிட நேரம் கொடுக்க வேண்டும்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** உரையாற்ற ஆரம்பித்து 8 நிமிடங்கள் ஆகிவிட்டன. பேசுங்கள்.

**திரு. க. பாரமலை:** ஆனால், அந்த வெள்ளை அறிக்கை என்ன சொல்கிறது என்று சொன்னால், "To make good such backlog vacancies, appointment may be made at the cntry level post in that Department" என்று சொல்கிறார்கள். ஒன்றை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் சொல்ல விரும்புகிறேன். A, B, C, D, என்று சொல்கிறபோது A என்ற Group–ஐ எடுத்துக்கொண்டால் அந்த A–வினுடைய lowest post என்பது Deputy Collector Post. ஆனால், A, B, C, D, என்று சொல்லி அந்தத் துறையினுடைய நுழைவு வேலை என்றால் அது Clerk Post தான். அந்த Clerk Post–ஐப் போட வேண்டுமென்று வெள்ளை அறிக்கையிலே சொல்கிறபோது, 25 ஆண்டுகளானாலும் அந்த A என்ற category–க்குப் போவதற்கு முடியவே முடியாது. ஆக, அப்படிப்பட்ட சமுதாயத்தினுடைய முன்னேற்றத்திற்கான அடித்தளத்தையே அசைக்கின்ற அந்த வெள்ளை அறிக்கை நிச்சயமாக திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குத் தடையாக இருக்கிற 44 G.O.–வையும் அவர்கள் விலக்கிவிட்டார்கள். அதிலே ஓர் அறிக்கைப் போரே நடந்திருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக அறிக்கை கொடுத்தார்கள். பத்திரிகையிலே மிக விளக்கமாக சர்ச்சைகள் வந்தன. (மணியடிக்கப் பெற்றது) என்ன சார், 3 நிமிடங்கள்கூட பேசவில்லை சார்.

*பிற்பகல் 12-15*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளை இரண்டு வேளை வைத்திருக்கிறீர்கள். ஆதிதிராவிட பழங்குடி மக்கள் மற்றும் பின்தங்கிய சமுதாயத்தினர் நலனைப் பற்றிப் பேச வேண்டும். ஒரேயொருவர் 5 நிமிடங்கள்தான் பேச வேண்டுமென்றால் முடியாது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** மன்னிக்க வேண்டும். 12–06–க்கு ஆரம்பித்திருக்கிறார். இப்போது 12–16. 10 நிமிடங்கள். பேசச் சொல்லுங்கள் நீங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள் பேச விடுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணன் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் சொல்வதைப்போல பேசவிட்டு பிற்பகலில்தான் பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பதில் கூறவிருக்கிறார்கள். அனைவருக்கும் வாய்ப்புக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளை அறிக்கையில் இன்னும் ஒரு மிகத் தவறான கருத்து சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த வெள்ளை அறிக்கையில் 105 துறைகளில், 96 துறைகளின் விவரங்கள்தான் கிடைத்திருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, அந்த வெள்ளை அறிக்கை முழுமையானது அல்ல என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். அது உண்மை என்று ஒப்புக்கொள்ளப்பட்டாலும்கூட, அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற, அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் என்று எடுத்துக்கொள்கிறபோது, ஏறக்குறைய 27,139 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆனால், அந்த அறிக்கையினுடைய பின் பகுதியிலே, 1–4–1989 ஆம் தேதியிலிருந்து உருவான 6,000 இடங்கள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 6,000 இடங்களைத்தான் நுழைவு நிலையிலிருந்து கொண்டு வர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த அரசாணை எண் 44–ஐ நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற, கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிற, 44 அரசாணையை மீண்டும் கொண்டு வந்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்குரிய வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கிற அந்தச் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் நன்றியுடன் ஒன்றை நினைத்துப் பார்க்கிறேன். நான் சென்ற முறை 1984–1989 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயத்திற்கு ஒதுக்கப்பட்ட, நிரப்பப்படாத, Group I இடங்களுக்கு நேரடித் தேர்வு நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன். அன்றைய முதலமைச்சர், நான் மதிக்கின்ற, நான் வணங்குகின்ற எம்.ஜி.ஆர். அவர்கள் அதற்கு வாக்குறுதி தந்தார்கள். அதன் அடிப்படையிலே தேர்வு நடத்த வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்கள். Tamil Nadu Public Service Commission அதற்கு எதிரான கருத்தைத் தெரிவித்தது. அந்த எதிர்ப்பையும்



மீறி, அரசாணை பிறப்பித்து, 13 பேரைத் தேர்ந்தெடுக்கிற ஓர் ஆணையை வழங்கி, அன்று தேர்ந்தெடுத்து, இன்று அவர்கள் பல்வேறு உயர் பதவிகளில் இருக்கிறார்கள். அந்தத் தேர்வு 8–12–1989 ஆம் ஆண்டு நடைபெற்றது. நேரடித் தேர்வு நடத்தும் வகையில் இந்த அரசாணை எண் 44–ஐ செயலுக்குக் கொண்டு வந்து நேரடித் தேர்வு நடத்துவதன் மூலமாக அந்த மக்களுக்கு நல்ல வாய்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர் நியமனத்தில் மிகப் பெரிய தவறுகள் நடந்தன. 1996–97 ஆம் ஆண்டு ஏறக்குறைய 1,340 காலியிடங்கள் இருந்தன. அந்த 1,340 காலியிடங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டு, நிரப்பப்படாத இடங்கள், இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள், அதிக இடங்களை பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்ப வேண்டுமென்று முடிவெடுத்து 1996–97 ஆம் ஆண்டு நிரப்பினார்கள். ஆனால், யாரையும் பார்க்காமல், Employment Exchange–லிருந்து வாங்கிக்கொண்டு போகிறார்களே என்ற வருத்தத்தில் ஓர் அதிகாரி என்ன செய்தார் என்று கேட்டீர்களென்றால், அடுத்த ஆண்டு 1997–98 வருகிறபோது தமிழ், கணிதம், அறிவியல் இந்த 3 பாடங்களைப் படித்தவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று ஓர் ஆணையைப் பிறப்பித்தார். அப்படிச் சொல்கிறபோது, வரலாறு, பொருளியல், வணிகவியல், ஆங்கிலம் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பே இல்லை என்று ஆகிவிட்டது. அவர்கள் நீதிமன்றம் சென்று தடையாணை பெற்றுவிட்டார்கள். ஆக, 1997–98, 1998–99, 1999–2000 ஆகிய ஆண்டுகளிலே 6,000 இடங்களுக்கு மேலாக காலியிடங்கள் இருந்தும், அந்தக் காலியிடங்களைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைதான் இருந்தது என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த நீதிமன்றத்திலே பெற்ற தடையாணையை விலக்கிக்கொள்வதற்கு அவர்கள் தயாராக இருந்தாலும்கூட, அன்றைக்கு இருந்த அரசு அதைப் பரிசீலிக்கத் தவறிய காரணத்தினாலே வேலைவாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 12-20*

அடுத்து தாட்கோ பற்றி சில வார்த்தைகளை அருமை நண்பர் சொன்னார். என்னுடைய சகோதரர், மாண்புமிகு உறுப்பினர் அசோகன் அவர்கள் இதைக் குறிப்பிட்டார்கள். நான் தாட்கோ பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 1998 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் நடந்துகொண்டு இருந்தது. அதில் 73 பேர்களுக்கு மட்டும் கடன்

வழங்குவதற்காக அரசு ஆதரவு கொடுத்து TIIC நிறுவனத்திற்கு எழுதினார்கள். அதில் 55 பேர்களுக்குத்தான் கடன் வழங்கப் பட்டிருக்கிறது. அந்த 55 பேர்களில் ஏறக்குறைய 18 பேர் பினாமியாக இருக்கிறார்கள் என்ற செய்தி எங்களுக்குக் கிடைத்திருக்கிறது.

அதோடு மட்டுமல்ல. இப்போது ஈரோடு மாவட்டத்திலுள்ள ஈங்கூர், அங்கே கட்டப்பட்டிருக்கிற அந்தத் தொழிற்கூடங்கள் எல்லாம் இன்றைக்கும் பூர்த்தி செய்யப்படாமல் பயன்படாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இன்னும் அந்தத் தொழிற்சாலையே செயல்பட வில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன், Community Certificate பற்றி. ஏனென்றால், ஏற்கெனவே அன்றைக்கு ஒரு கேள்வி வந்தபோது நான் சொன்னேன், சமுதாய சாதிச் சான்றிதழ் பற்றி. அதிலே 1961 ஆம் ஆண்டு நடந்த சென்சஸ்படி கொண்டா ரெட்டி என்று சொல்லப்படுகிற சமுதாயத்தினர் மொத்தம் 10 பேர்தான் சென்னையில் இருந்திருக்கிறார்கள். தமிழகம் முழுவதுமாக 14 பேர் இருந்திருக்கிறார்கள். ஆனால், 1981 ஆம் ஆண்டு 31,521 பேர் இருக்கிறார்கள். அதேபோல காட்டுநாயக்கன் என்று சொல்லப்படுகிற சமுதாயம் 6,459 பேர் இருந்திருக்கிறார்கள் 1961–லே. ஆனால், 1981 ஆம் ஆண்டு 26,383 பேர். தமிழக அரசாங்கங்கள், அது எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, குடும்பக் கட்டுப்பாடு நலத் திட்டத்தைச் சரியாக அமல் நடத்தியதால், மத்திய அரசாங்கத்தினுடைய பாராட்டை நாம் பெற்றிருக்கிறோம். ஜனத்தொகை வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதிகமாக ஜனத்தொகை இல்லை என்கிற காரணத்தினாலே நமக்கு மத்திய அரசின் உதவி குறைந்துகொண்டிருக்கிறது. அப்படிக் குடும்ப நலத் துறையிலே கட்டுப்பாடு செய்து கொண்டிருக்கிற இந்தத் தமிழ்நாட்டில், ஒரு சாதி மட்டும் 20 ஆண்டுகளில் 2,000 மடங்கு கூடியிருக்கிறது. அதைப் பற்றி யோசிக்க வேண்டாமா? அவையெல்லாம் போலி certificate என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட certificate–ஐ வாங்கி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய உரிமைகளைப் பறித்துச் செல்வதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 12-25*

வேலைவாய்ப்புக்களைப் பொறுத்தவரை கூட்டுறவுத் துறையிலே Higher Diploma in Co–operation படித்தவர்களுக்கு, அந்தத் தகுதி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு இருந்தும் தகுதியான ஆதிதிராவிடர்கள் இல்லாத காரணத்தினாலே, அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி கொடுக்கப்பட்டது; அரசு செலவிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தச் சிறப்புப் பயிற்சி முடித்தும் இன்னும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே, ஆதிதிராவிடர் சமுதாயத்தைப் பொறுத்தவரை, திட்டங்கள் என்ன இருந்தாலும், அந்தத் திட்டத்தினுடைய ஒதுக்கீடுகளை மக்கள்தொகைக்கு ஏற்ப சரியாகப் பெறவில்லை என்று நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, சிறப்புக் கூறுகள் திட்டத்தின்படி அந்த மக்களுக்கு ஒதுக்கீடுகள் சரியாகக் கிடைக்கவில்லை என்று நம்முடைய அமைச்சருடைய அறிக்கையில் இருக்கிறது; நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருகிறார்கள். ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் நலனுக்காக வழங்கப்பட்ட சிறப்பு ஒதுக்கீடு திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதியின் அளவு அம்மக்களின் தொகைக்கு ஏற்ப இல்லை என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி நானும் சொல்லப் பிரியப்படுகிறேன். 1997–98 ஆம் ஆண்டில் இந்த Plan Scheme–லே Special Component Plan–லே ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற அந்த நிதி 4.2%; 1999–2000–லே 7 சதவீதம். 2000–2001–லே 6 சதவீதம். ஆக, Special Component Plan திட்டத்தின்கீழ் பல்வேறு துறைகளிலே ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்படுகிற தொகை மிக மிகக் குறைவு என்பதையும் அப்படிச் செலவழிக்கப்படுகிற தொகை உண்மையாக செலவழிக்கப்படுகிறதா என்பதைக் கண்டறிவதற்கு எந்த ஒரு ஏஜென்சியும் இல்லை. There is no Monitoring agency. ஆகவே, நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி அந்தத் திட்டங்கள் Special Component Plan–ல் மற்ற துறைகள் செலவிழக்கின்ற, அமல் நடத்துகின்ற திட்டங்களை மேற்பார்வையிடுவதில், பரிசீலிப்பதில், கண்காணிப்பதில், வரவு–செலவு பார்ப்பதில் ஆதிதிராவிட நலத் துறைக்கும் பங்கிருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு Part–II Scheme–லேகூட இவ்வாண்டு 435 கோடியே 29 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதிலே தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு இந்த

ஆதிதிராவிட நலத் துறைக்கு 54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 8 சதவீதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், ஒட்டுமொத்த தமிழக பட்ஜெட்டிலே 12 சதவீதம்தான் தாழ்த்தப்பட்ட, ஆதிதிராவிட நலத் துறைக்கு என ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டங்களை அமல் நடத்துவதில் நாம் கொஞ்சம் முன்னெச்சரிக்கையாக இருந்து அந்தத் திட்டத்தினுடைய பலன் அந்த மக்களைப் போய்ச் சேருகின்ற வகையிலே முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும்; அதற்கென Monitoring Agency ஒன்று இருக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஏற்கெனவே, இந்தச் சமுதாயத்திற்காக ஆதிதிராவிட நலத் துறையிலே மாநில ஆதிதிராவிட நல கமிட்டி என ஒன்று இருந்தது. அந்த கமிட்டியை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். முடிந்தால் Legislative Committee on Scheduled Castes Welfare என்ற கமிட்டியையும் அமைக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

போலி certificate மூலமாக பல்லாயிரக்கணக்கான வேலைகளை மற்ற சமுதாயத்தினர் வாங்கிச் சென்றுவிடுகிறார்கள். ஒரு பக்கம் சட்டப்படி வேலை கிடைக்கவில்லை. அப்படிச் சட்டத்தைப் போட்டு, அதை அமல் நடத்தாமல் அரசாணை இதைத் தடுத்து நிறுத்திவிடுகிறது. வேறு சமூகத்தினர் அந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தி வேலைக்குச் சென்றுவிடுகிறார்கள். அதுபோன்ற பல வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்துகொண்டிருக்கின்றன.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையிலே இதற்காக விசேஷ நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நில ஆர்ஜிதம், P.C.R. Act அல்லது Prevention of Atrocities Act 1999, இதைப் போன்ற சட்டங்களின்கீழ் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு நீதி வழங்க வேண்டுமென்று சொன்னால், இரண்டு விஷயத்திற்கும் தனி நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கும், தீண்டாமை ஒழிப்பிற்கும் இது உதவும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

1954 ஆம் ஆண்டு நம்முடைய மதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயம் கோயிலுக்குள்ளே செல்ல முடியாத காலத்தில் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த பரமேஸ்வரன் என்பவரை அறநிலையத் துறை அமைச்சராக்கி அவர் செல்லுகின்ற கோயில்களில் எல்லாம் பூரண கும்ப



மரியாதையோடு வரவேற்கின்ற வகையில் ஒரு சமுதாயப் புரட்சியை உருவாக்கினார்கள். 1958 ஆம் ஆண்டு எங்களுடைய முன்னாள் பாராளுமன்ற உறப்பினர் மரியாதைக்குரிய மருதையா அவர்களை மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு Managing Trustee ஆக்கி ஒரு பெரிய புரட்சியை உண்டாக்கினார்கள். இப்போது இந்த அறநிலையத் துறையின்கீழ் இயங்குகின்ற கோயில்களுக்கு நீங்கள் அறங்காவலர்களை நியமிக்கின்றபோது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த நல்லவர்களை, சமுதாயப் பற்றுள்ளவர்களை தென் தமிழ்நாட்டிலும், வட தமிழ்நாட்டிலும்...

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறநிலையத் துறையின் சார்பாக அறங்காவலர்கள் நியமிக்கப்படுகின்ற நேரத்தில்-முன்பிருந்த அரசாங்கங்கள் எல்லாம் ஆதிதிராவிட மக்களுக்கு முன்னுரிமை கொடுத்ததாகக் கூறினார்கள் — இன்றைக்கு மாவட்ட அளவிலே அறங்காவலர்கள் குழுவை நியமிக்கின்ற நேரத்திலே பெண்களுக்கும் முதலிடம் கொடுக்க வேண்டும்; ஆதிதிராவிடர்களுக்கும் முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லி தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இன்னும் 15 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. க. பாரமலை:** இதற்கு முன்னாலே இருந்த எல்லா அரசாங்கங்களையும் சொல்லவில்லை. 1954 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் இருந்தபோது நியமித்தார்கள் என்றுதான் சொன்னேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட நியமனம் செய்ய ஒரு Direction கொடுத்தார்கள் என்று சொன்னால் நிச்சயமாக நான் அதைப் பாராட்டுகிறேன் என்று சொல்லி இந்த அளவுக்கு பேசுகிற வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி சொல்லி முடிக்கின்றேன். வணக்கம். ஜெய்ஹிந்த்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் க. முருகவேல் ராஜன்.

[2001 செப்டம்பர் 7

***திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறுக்கப்பட்ட மனித மாண்புகளுக்காகவும், மறுக்கப்பட்ட மனித உரிமைகளுக்காகவும் போராடிக் கொண்டிருக்கின்ற, இலட்சோப இலட்சம் மண்ணின் மைந்தர்களாக இருக்கக்கூடிய இலட்சோப இலட்சம் பட்டியல் இன மக்களின் பிரதிநிதியாக, இங்கே அந்த மக்களுடைய உணர்வுகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு முதற்கண் என் பணிவான நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாட்டிலே தீண்டாமை என்கிற மிகப் பெரிய கொடிய நோய் வேரறுக்கப்பட வேண்டும் என்பதற்காக தன்னுடைய வாழ்நாள் முழுவதும், தன்னுடைய ஆற்றல் நிறைந்த சிந்தனையால் இந்த மக்களின் விடுதலைக்காகப் போரிட்டு, மகாராஷ்டிர மாநிலத்திலே பொதுக் குளத்திலே நீர் எடுப்பதற்கு, ஆடுகளுக்கும் மாடுகளுக்கும்கூட அனுமதியிருக்கிறது; மனிதர்களுக்கு இல்லையா என்று சுட்டிக்காட்டி, பொதுக் குளத்திலே நீர் எடுப்பதற்குப் போராடிய டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கும், கோயிலிலே நுழைவதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படை உரிமை இருக்கிறது என்று சொல்லி, வைக்கத்திலே கோயில் நுழைவுப் போராட்டம் நடத்தி, தீண்டாமையை ஒழிப்பதற்கு வித்திட்ட வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார் அவர்களுக்கும், ஆதிதிராவிடர் ஒருவர் பிணத்தைத் தோளிலே சுமந்து, தான் பிறந்த சமூகத்திற்கு எதிராகக்கூடத் தீண்டாமையை எதிர்த்துப் போராடி, அவர்களின் வரிசையிலே இன்றைக்கு தீண்டாமை ஒழிப்புப் போராளியாக இருந்து கொண்டிருக்கிற எங்களுடைய டாக்டர் ஐயா அவர்களுக்கும், இந்த நேரத்திலே நான் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசனங்கள் என்று சொன்னால், அது அவமரியாதையான சொல் என்று இன்றைக்கு அந்த மக்கள் கருதுகிறார்கள். ஆதிதிராவிடர் என்று சொல்வதைக்கூட, அந்தப் பட்டியலிலே 76 சமுதாயங்கள் இருக்கிறபோது, பொதுப் பெயரால் அப்படி அழைப்பது தவறு என்ற கருத்தும் இன்றைக்கு அந்த மக்கள் மத்தியில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, ஆதியிலே வந்தவர்கள் ஆதிதிராவிடர்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** நான் அந்த வார்த்தைக்கு என் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. அது மிகப்பெரிய வாதத்திற்கும், விவாதத்திற்கும் உரியது. எனவே, அந்த வகையிலே ஆங்கிலத்திலே



2001 செப்டம்பர் 7] [திரு. க. முருகவேல் ராஜன்]

சொல்லப்பட்டிருக்கிற Scheduled Castes and Scheduled Tribes என்று சொல்லக்கூடிய அந்த வார்த்தைக்கு சரியான பதம், பட்டியலின மக்களும், பழங்குடியின மக்களும் என்பதாகக் கொண்டு, அந்தப் பொருளிலே நான் என்னுடைய கருத்துக்களை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

இங்கே வைக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையிலும், இங்கே வைக்கப்பட்டிருக்கிற பட்டியலின, பழங்குடி மக்களுக்கான இந்த மானியக் கோரிக்கையிலும் பாராட்டக்கூடிய பல அம்சங்கள் இருக்கின்றன. அதை நான் மனந்திறந்து பாராட்ட விரும்புகிறேன். அதிலே எடுத்த எடுப்பிலே சொல்லப்பட்டிருக்கிற சிறப்புக்குரியதோர் திட்டத்தை சிறப்புக்கூறு திட்டத்தை மறு ஆய்வுக்கு உட்படுத்துவதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். அதைப்போலவே, ஒரு ரூபாய் பணத்தை தாட்கோவிலே கொடுத்துவிட்டு 9 ரூபாய் பணத்தை வங்கியிலே வாங்க வேண்டும் என்று சொல்லி, அந்த 9 ரூபாய் பணத்தை வாங்க முடியாமல் ஓய்ந்துபோன ஆதிதிராவிட பழங்குடியின, பட்டியலின மக்களுக்காக தாட்கோவை தனி வங்கியாக ஆக்க வேண்டுமென்று நீண்டகாலமாகக் கோரி வருகிற அந்த மக்களுடைய கோரிக்கையை நிறைவு செய்கிற வகையிலே, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மாற்றியமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிற அந்தக் கருத்தை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

அதைப்போலவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலேயும் இங்கே ஆளுநர் உரையின் மீதான விவாதத்திலே ஓர் உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கும் அரசாணை எண் 44–ஐ முழுமையாக அமல்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அந்தக் கருத்தை வரவேற்கிற அதேநேரத்திலே, அரசாணை எண் 44–ஐப் பற்றி இந்த அறிக்கையிலே எதுவும் சொல்லப்படவில்லை என்கிற என்னுடைய மனத்தாங்கலையும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதைப்போலவே பட்டியலின, பழங்குடியின மாணவியர்களுக்கு மிதிவண்டி வழங்குவதாகச் சொல்லியிருக்கிற அந்தச் சிறப்பான திட்டத்தை நெஞ்சார வரவேற்கிற அதேநேரத்திலே, அந்தத் திட்டத்தை மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகளுக்கும் விரிவுபடுத்தியிருக்கலாமே என்கிற எங்களுடைய ஆதங்கத்தையும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே பட்டியலின, பழங்குடியின மாணவிகள், அரசுக் கல்லூரிகளிலே பட்ட மேற்படிப்பு வரை படிப்பதற்கு இலவசக் கல்வி அளிக்கப்படும் என்கிற அந்தத் திட்டத்தையும் நான் மனதார வரவேற்கிறேன்.

அதைப்போலவே பழங்குடியின, பட்டியலின மாணவர்கள் விடுதியிலே தங்கிப் படிப்பதற்கான உணவுக் கட்டணத் தொகையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 225 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தியதையும் நான் வரவேற்கிறேன். இவற்றையெல்லாம் வரவேற்கிற அதேநேரத்திலே, நான் ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது என்னவென்றால், நல்ல பொருளியல் இல்லாமல் நல்ல அரசியல் இல்லை. நல்ல அரசியல் இல்லாமல், நல்ல பொருளியல் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. பட்டியலின, பழங்குடியின மக்களுக்கு நல்ல பொருளியல் இல்லை என்பதனாலேயே அந்தச் சமூகத்தினுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகத்தான், இந்த மானியக் கோரிக்கைகளிலும் வரவு-செலவுத் திட்டங்களிலும் பட்டியலின, பழங்குடியின மக்களுக்காக ஒரு துறை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஒரு கருத்து மிகத் தெளிவாகத் தெரிகிறது. என்னவென்று சொன்னால், அந்த சமூக மக்கள் பொருளியலிலே மிகவும் பின்தங்கி இருக்கிறார்கள் என்பது. அப்படியென்று சொன்னால், பொருளியலிலே மிகவும் பின்தங்கியிருக்கக்கூடிய அந்த மக்கள் எப்படி அரசியலிலே நல்ல தரமான இடத்தைப் பெற முடியும் என்கிற எண்ணம் நிச்சயமாக எழுகிறது.

*பிற்பகல் 12-35*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே 1952–லிருந்து இன்றைக்கு வரைக்கும் 12 சட்டமன்றப் பேரவைகள் இந்தச் சட்டமன்றத்தை அலங்கரித்திருக்கின்றன. ஆனால், இந்த 12 சட்டப் பேரவைகளிலும் முன்பு அரிஜன மானியக் கோரிக்கை என்றிருந்து பிறகு ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கை என்று மாறிய பிறகும்கூட இந்த மானியக் கோரிக்கைகளில் எல்லாம் ஒரு வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையிலேகூட அந்த வார்த்தை வருகிறது. சமுதாய முன்னேற்றம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக இந்தத் துறை பாடுபடுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மையிலே நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், விடுதலைக்குப் பிறகு இந்த நாட்டிலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் எல்லாம் பட்டியலின, பழங்குடியின மக்களினுடைய விடுதலை என்பது ஏதோ, அவர்களுக்குச்



சில திட்டங்களையும் சில பொருளாதார வழிமுறைகளையும் ஏற்படுத்துவதனாலேயே அந்தச் சமூக மக்கள் தீண்டாமையிலிருந்து மீண்டு எழுந்துவிட முடியும் என்ற தவறான கண்ணோட்டத்தைக் கொண்டிருந்ததன் அடிப்படையிலே இதுபோன்ற அறிக்கைகள் எல்லாம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றனவோ என்ற எண்ணம் எனக்கு எழுகிறது. ஏனென்று சொன்னால், உண்மையில் இந்த நாட்டிலே பட்டியலின மக்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் என்று சொன்னால், தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, சமூக விடுதலை, சமூக நீதி, சமத்துவம், ஜனநாயகம் என்பவற்றைத்தான். வெறுமனே அரசு வழங்குகிற திட்டங்களை மட்டும் வைத்துக்கொண்டு அந்த மக்கள் விடுதலை பெற முடியும் என்கின்ற கருத்து மிகவும் தவறான கருத்து என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை ஓர் உதாரணத்தின் மூலமாக என்னால் சொல்ல முடியும். ஒருபுறம் பொருளாதார மேம்பாட்டிற்காக இந்தத் துறை தொடர்ந்து பட்டியலின, பழங்குடியின மக்களுக்காக சலுகைகளை அறிவித்துக் கொண்டிருக்கிற அதேநேரத்திலே, இன்னொரு புறத்தையும் நாம் பார்க்க வேண்டும். முதுகுளத்தூர் கலவரம், தாழ்த்தப்பட்ட மக்களுடைய விடுதலைக்காகப் போராடிய இமானுவேலுவினுடைய படுகொலை; கீழ்வெண்மணி, உஞ்சனை, புளியங்குடி, கொடியங்குளம், சென்னரகப்பட்டி, மேலவளவு, இராஜபாளையம், போடி, தேவாரம் என்று தொடங்கி, தாமிரபரணி ஆற்றின் கரையிலே 17 உயிர்களைப் பலிகொண்ட பிறகும்கூட இந்தக் கொடுமைகள் நின்று இருக்கின்றனவா என்று சொன்னால் இப்போதும் அவை நடந்து கொண்டிருக்கின்றன.

8–8–2001–லே சிக்கலிலே கணேசபாண்டியன் படுகொலை, வெள்ளையன் படுகொலை; 17–8–2001–லே நெல்லை மாவட்டம் கருங்காடிலே முனியசாமியினுடைய படுகொலை; 19–8–2001–லே தச்சநல்லூரில் சுரேஷ் என்பவருடைய படுகொலை; ஆக, ஒருபுறம் நலத் திட்டங்களை நாம் வகுத்துக் கொண்டேயிருந்தாலும்கூட, மறுபுறம் கலவரங்களும், படுகொலைகளும் தாழ்த்தப்பட்டோர் உயிர் இழப்பும், உரிமை இழப்பும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன என்று சொன்னால் இந்த நலத் திட்டங்களினாலே நாட்டிலே என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாமெல்லாம் தவறாக ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டிருக்கிறோம். அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். சாதி ஒழிப்பு என்பது ஏதோ மேல்சபை ஒழிப்பைப் போன்றதோ, அல்லது கொசு ஒழிப்பைப் போன்றதோ, மலேரியா காய்ச்சல் ஒழிப்பைப் போன்றதோ அல்லது AIDS ஒழிப்பைப் போன்றதோ கிடையாது. சாதி ஒழிப்பு என்பது

அடித்தளத்திலே உருவாக்கப்படக்கூடிய ஒரு சிந்தனை மாற்றம் என்று பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள் சொல்கிறார்கள். விடுதலைக்கு முன்பு மூன்று கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன இந்தச் சமூகத்திலே. அது என்னவென்று சொன்னால், உடன்கட்டை ஏறுதல், பால்ய விவாகம், தீண்டாமை, மூன்றும் மிகப்பெரிய குற்றங்கள் என்று சொன்னார்கள். ஆக, உடன்கட்டை ஏறுதலை இந்தச் சமூகம் விட்டுவிட்டது. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால் உடன்கட்டை ஏறுவதனால் உயிரிழப்பது தன்னுடைய சகோதரியாகவோ, தன்னுடைய தாயாராகவோ இருக்கிறார்கள் என்பதனால் அதைக் கைவிட்டுவிட்டார்கள். அதைப்போலவே, பால்ய விவாகத்தைக் கைவிட வேண்டுமென்று சொன்னவுடனேயே அதையும் கைவிட்டுவிட்டார்கள். ஏனென்றால், அதில் பாதிக்கப்படுவது தன் தங்கையாகவோ, தன் தாயாகவோ இருக்கலாம் என்பதால் கைவிட்டார்கள். ஆனால் இவை அனைத்தையும் விட மிகப் பெரிய கொடுமை தீண்டாமைக் கொடுமை. அதைக் கைவிட வேண்டுமென்று சொன்னதற்குப் பிறகும் அது கைவிடப்படவில்லை என்று சொன்னால், இந்தச் சமூகம் பட்டியலின மக்களைக் கூடப் பிறந்த சகோதரர்களாக ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறது என்கின்ற உண்மையை நான் இங்கே வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே சிறப்புக்கூறு திட்டம். நான் இங்கே எடுத்துக்கொள்கிற ஓர் உதாரணம் சிறப்புக்கூறுத் திட்டம். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சிறப்புக்கூறுத் திட்டம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சிறப்புக்கூறுத் திட்டங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றனவா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை. அதற்கு ஓர் உதாரணம். நான் உதாரணத்திற்கு கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வெளியிடப்பட்ட Special Component Plan for Scheduled Castes என்கிற இந்தப் பிரதியைக் கையிலே எடுத்திருக்கிறேன். 50 ஆண்டு காலமாக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் இந்தச் சமுதாயத்திற்காகச் செலவழித்தும்கூட, இந்தச் சமூகம் முன்னேற்றம் பெறவில்லை என்பதனாலேதான் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மீண்டும் இந்தச் சிறப்புக்கூறுத் திட்டம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக...

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள். 10 நிமிடங்கள் ஆகிவிட்டன; பேசி முடித்துவிடுங்கள்.



**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணியடிப்பது என்பதை ஒரு சம்பிரதாயமாக சடங்காக நாம் வைத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மணி அடித்தால், கேட்காமல் இருப்பது சரியல்ல; அதைக் கேட்க வேண்டும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 50 ஆண்டு காலமாக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் இந்த மக்களுக்காகச் செலவழித்தும்கூட அது இந்த மக்களுக்கு முறையாகச் சென்றடையவில்லை. எனவே இதை மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று சொல்லி, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இது மீண்டும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டிலே அதைப்பற்றிக் கவலைப்பட்டவர்கள் யாராவது உண்டா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. ஆனால், முதன்முறையாக நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு இந்தத் திட்டம் மறுபரிசீலனை செய்யப்படும் என்று சொல்லியிருப்பதனை நான் நெஞ்சார வரவேற்கிற அதே நேரத்திலே, உதாரணத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வெளியிடப்பட்ட இந்தச் செய்தியை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 4-9-2001 தேதியிட்ட 'இந்து' நாளேட்டிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. "Funds for Scheduled Caste and Scheduled Tribe welfare in four States are not adequate" என்று. அந்த அறிக்கையிலே, "The National Council for S.C/S.T welfare has found that the fund allocation for promoting the Scheduled Castes and Scheduled Tribes and utilisation of the funds are not satisfactory in the four States." என்று சொல்பவர் யார் என்று சொன்னால், திரு. செல்லப்பன்; Member of S.C/ S.T .Council சொல்கிறார். அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டைப் பற்றிச் சொல்கிறபோது 'meagre amount' மிகக் குறைந்த அளவு பணம்கூட இந்தத் துறையின் வாயிலாக 'Special Component Plan' என்று சொல்லக்கூடிய சிறப்புக் கூறுத் திட்டத்தின் வாயிலாகச் செலவிடப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். 'இந்து' நாளேட்டிலே 4-9-2001-லே செய்தி வந்திருக்கிறது. இந்த அறிக்கையிலே வேதனையான விஷயம் என்னவென்று சொன்னால், ஒவ்வொரு துறையிலும் ஒதுக்கப்படுகிற பணத்திலே, 19.18 சதவிகிதம், இந்த மக்களுக்குச் செலவிடப்பட வேண்டுமென்று சிறப்புக் கூறுத் திட்டம் சொல்கிறது. ஆனால் இங்கே ஓர் உதாரணத்தைச் சொல்ல வேண்டும். Animal Husbandry என்று ஒரு துறை இருக்கிறது.

அந்தத் துறையிலே, கடந்த ஆட்சியிலே சொல்லியிருக்கிறார்கள். பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே 30 சதவிகிதம் establishment, 30 சதவிகிதம் building அதற்காகவும் செலவிட்டுவிட்டு, இந்த மக்களுக்கு அடிப்படையிலே பயன்படுத்தக்கூடிய Livestock Development Scheme–க்கு ஒரே ஒரு ரூபாய் பணம்கூட செலவிடப்படவில்லை என்பதை நான் மெத்த வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்துச் சொல்கிறார்கள். ஆதிதிராவிட மக்களுக்கு கடந்த ஆட்சியிலே Animal Husbandry–யிலே எதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், 'Establishment of dog breeding unit'– நாய் உற்பத்தி செய்வதற்கு 30 சதவிகிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நாய்ப் பண்ணை வைப்பதற்கு, ஆதிதிராவிடர்களுக்குப் பணம்–பழங்குடி இன மக்களுக்குப் பணம். அதற்குப் பிறகு Strengthening of horse breeding–குதிரை உற்பத்தி செய்வதற்கு பழங்குடியின, பட்டியலின மக்களுக்கு 30 சதவிகிதம் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை 40–வது பக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள், Animal Husbandry–யிலே. என்ன கொடுமை? ஒவ்வொரு துறை வாரியாக இந்தச் சமுதாய மக்களுக்கு 19.18 சதவிகிதம் ஒதுக்கப்பட வேண்டுமென்று சொன்னதற்குப் பிறகு இப்படியெல்லாம் அதைச் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செலவு செய்தாலும் பரவாயில்லை. 'சம்பந்தி வீட்டுச் சோற்றை எடுத்து சமபந்தியிலே வைத்தது' போல தாட்கோவிற்கு ஒதுக்கப்பட்ட பணத்தை எடுத்து சமத்துவபுரத்திற்குச் செலவழித்திருக்கிறார்கள் என்ற இந்தக் கொடுமையை இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் மிக்க வேதனையோடு எண்ணிப்பார்க்கிறார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) மிக வேதனையோடு எண்ணிப் பார்க்கிறார்கள். இங்கே என்னிடம் குறிப்பு இருக்கிறது. Total amount of Rs.43 crores 73 lakhs and 79 thousand was allocated...(Interruption) I am not yielding. *(குறுக்கீடு)*

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசி முடிக்கட்டும்.

**THIRU K. MURUGAVEL RAJAN:** Total amount of Rs.43 crores 73 lakhs and 79 thousand was allocated for Samathuvapuram scheme. எல்லாத் துறைகளிலும் அவர்களுக்குரிய பங்கு கொடுக்கப்பட வேண்டுமென்று



சொல்லியிருக்கிறார்கள். எல்லாத் துறைகளிலும் கொடுக்கப்படவில்லை என்கிற வேதனையைச் சொல்கிறேன். அதேநேரத்தில் இந்த மக்களுக்காகப் பிரத்தியேகமாகக் கொடுக்கப்பட்ட அந்தப் பணத்திலிருந்து சமத்துவபுரம் கட்டுவதற்கு 48 கோடி ரூபாய் எடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக இந்த மக்கள் சமுதாயம் அனுமதிக்காது. எனவே இந்த நேரத்திலே நான் சொல்வது என்னவென்றால், ஒவ்வொரு துறையிலும் என்ன பணம் செலவிடப்படுகிறது என்பதை கடைசியிலே, வரவு–செலவுத் திட்ட துணை நூலிலே குறிப்பிட வேண்டுமென்று இந்தச் சிறப்புக் கூறுத் திட்டம் சொல்கிறது. எனவே உங்களுடைய ஆட்சியலாவது இந்தச் சிறப்புக் கூறுத் திட்டத்திலே செலவிடப்படுகிற அந்தத் தொகையை விலாவாரியாக, விவரம் வாரியாக நீங்கள் 'Budget Link'–லே குறிப்பிட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே பெரும்பாலும் ஆதிதிராவிடர்களுக்கு சிறப்புக் கூறுத் திட்டம் இருப்பதைப்போல, பழங்குடியின மக்களுக்கும் Tribal Area Sub–Plan என்ற திட்டம் இருக்கிறது. அந்த Tribal Area Sub–Plan –க்கும் ஆதிதிராவிடர்களுடைய சிறப்புக் கூறுத் திட்டத்திற்கும் அடையாளம் தெரியாமல் கடந்த ஆட்சியிலே குழப்பியிருக்கிறார்கள். அதற்கும்கூட என்னிடம் எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. அதைவிட வேதனையான ஒரு செய்தி. இந்தப் புத்தகத்தின் பக்கம் 72 லே சமஸ்கிருதம் படிப்பதற்கு பட்டியலின, பழங்குடியின மக்களுக்கு, 52 வயதுக்கு மேலே இருக்கிற சமஸ்கிருத பண்டிட்டுக்கு 30% ஒதுக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். உங்களுக்கே தெரியும். பழங்குடியின, பட்டியலின மக்களிலே நாடு முழுவதும் சமஸ்கிருத பண்டிட்டுகள் இருந்து கொண்டிருக்கிறார்களா? எப்படிப்பட்ட நிலைமை பாருங்கள்?

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள், 15 நிமிடத்திற்கு மேலே ஆயிற்று.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இன்னும் 5 நிமிடங்கள் கொடுங்கள். நான் வேகமாக முடித்துவிடுகிறேன். எனவே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நாங்கள் எதை வலியுறுத்துகிறோம் என்று சொன்னால், பட்டியலின மக்கள் நலனுக்காகச் சிறப்புக் கூறுத் திட்டத்தையும், பழங்குடியினர் நலனுக்காக பழங்குடியினர் திட்டத்தையும் மதிப்பீடு செய்ய சீரிய முறையில் செயல்பட அரசு முன்வர வேண்டும். முன்வருவதோடு,

துறை வாரியாக சிறப்புக் கூறுத் திட்டங்கள் அமலாக்கப்படுகின்றவா என்பதைக் கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும், அதை நடைமுறைப் படுத்தவும் முதல்வர் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்பதை பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்துகிறது.

அதைப்போல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே அரசினுடைய ஆணை 44–ஐ நாங்கள் வலியுறுத்துவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இங்கே உறுப்பினர் அவர்கள் கேட்டதற்குக்கூட 44 அமல்படுத்தப்படும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நீங்கள் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அதைப்பற்றி இந்த பட்ஜெட்டிலே எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து பணியிடங்களைச் சொல்கிறேன். பணியிடங்களிலே 19.18% அரசுப் பணியிடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் பட்டியலின மக்களுக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் Class 1, Class 2, Class 3 பிரிவிலே அந்த மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் சரியாகக் கொடுக்கப்படாமல் 6001 இடங்கள் காலியாக இருக்கின்றன என்று 'இந்து' பேப்பரில் ஜுன் 16, 2000–லே வெளிவந்த செய்தி சொல்கிறது. அந்த மக்களுக்கு Class 1, Class 2, Class 3 ஆபீசர் ரேங்கிலே 6,001 இடங்கள் காலியாக வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். எனவே பணியிடங்களை நிரப்புவதிலும் இந்த அரசு கவனமாக இருக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மூத்த உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லிவிட்டு முடித்து விடுங்கள். நிறையப் பேர் பேச இருக்கிறார்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** 2 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். அதைப்போலவே கிராமப் பொது வள ஆதாரங்கள். அதாவது கிராமப் பொது வள ஆதாரங்கள் வருவாய்த் துறை, வனத் துறை, இந்து அறநிலையத் துறை, ஊரக வளர்ச்சித் துறை போன்ற துறைகளிலே பொது ஏலம் விடும்பொழுது, பட்டியலின, பழங்குடியின மக்களுக்குச் சரியான பங்கும், பிரதிநிதித்துவமும் கிடைக்காததால்தான் அங்கு ஜாதி மோதல்கள் நிகழ்கின்றன என்று பல ஆய்வு அறிக்கைகள் சொல்கின்றன. எனவே மதுக்கடை ஏலத்திலே பின்பற்றப்பட்டதைப் போன்று இனிமேல் கிராமப் பொது ஆதார வளங்களைக் கொடுக்கும்போது குலுக்கல் முறையிலே



நீங்கள் அதை நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லையென்றால் அவற்றிலே விகிதாச்சார அடிப்படையை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலே பக்கம் 77-78-ல் பஞ்சமி நிலங்களை மீட்பது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதுகுறித்து எந்த ஒரு தகவலும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கடைசியாக ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்து விடுகிறேன். தரிசு நில மேம்பாடு; அருமையாகச் சொன்னீர்கள்; மகிழ்ச்சியாக வரவேற்கிறேன். ஆனால் என்ன நிலைமை என்றால், தரிசு நில மேம்பாடு என்பதும் பழப் பண்ணை, மூலிகைப் பண்ணை உருவாக்குகிற இந்தத் திட்டமும் மேல்மட்ட, நடுத்தர விவசாயிகளுக்கு மட்டுமே பயன்படுமே தவிர, அடித்தட்டு பழங்குடியின மக்களுக்கு, பட்டியலின மக்களுக்கு எப்படிப் பயன்படும் என்பதை இந்தத் திட்டத்திலே நீங்கள் விளக்கிக் கூறவில்லை. இதற்கு நான் உதாரணம் சொல்கிறேன். திண்டுக்கல், தேனி மாவட்டம், கம்பம் அதிலும் குறிப்பாக பெரியகுளம் வட்டத்திலே தேவதானப்பட்டி என்கிற இடத்திலே ஆதிதிராவிட, பழங்குடியின, பட்டியலின மக்களுடைய நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இதைப்போன்ற பண்ணை முதலாளிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு அதிலிருந்து அவர்கள் வெளிவர முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த தரிசு நில மேம்பாடு என்பது பட்டியலின, பழங்குடியின மக்களுக்கு எப்படிப் பயன்படும் என்பது இந்த அறிக்கையிலே விரிவாகச் சொல்லப்படாதது மட்டுமல்ல, அதை எப்படிப் பயன்படுத்துவோம், அதற்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்பதையும் இந்த அரசு சொல்ல வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) உடனே நாங்கள் உங்களுக்கு எதிராக நினைக்கிறோம் என்று மணியடிக்காதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஆதரவாகப் பேசினாலும் அந்த டைம்தான் கொடுக்க முடியும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். நான் சொல்வது என்பது நடுநிலையான ஒரு விவாதம். பட்டியலின மக்களுடைய குரல் இது. நீங்கள் தடுக்கக்கூடாது. ஒரு நிமிடம் கொடுங்கள் எனக்கு. இறுதியாக நான் என்ன சொல்லுகிறேன்

என்று சொன்னால், அப்படியெல்லாம் இருக்கிறது. அதனால் மாண்புமிகு பேரவைத் தலைவர் வார்த்தையிலே, அவருடைய உதாரணத்தைக் கொண்டு சொல்ல வேண்டும் என்றால், தாழ்த்தப்பட்ட மக்கள் உரிமை அற்றவர்களாக இருக்கிற நிலையில் வெறும் பொருளாதார வளர்ச்சியைப் பற்றி மட்டும் இந்த அறிக்கைகள் எல்லாம் பேசுவதனாலே தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிட பழங்குடியின மக்களுக்கான இந்த மானியக் கோரிக்கை பற்றி பட்டியலின மக்கள் என்ன கருத்து வைத்திருக்கிறார்கள் என்றால், மாடு போகிற திசையில் கயிறு போகிற மாதிரி, நம்முடைய வாழ்க்கை இருக்கிறது என்று சொல்லி ஆதிதிராவிட மக்கள் எல்லாம் இன்றைக்கு கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மூத்த உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப். (குறுக்கீடுகள்)

**திரு. க. முருகவேல் ராஜன்:** கடைசியாக ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அண்ணன் அப்துல் லத்தீப் அவர்கள் எனக்கு ஒரு நிமிட நேரம் விட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்; நான் ஒரு நிமிடத்திலே பேசி முடித்துவிடுகிறேன்; கடைசியாக ஒரு செய்தி மட்டும்.

இந்த தரிசு நில மேம்பாட்டைப் பற்றிச் சொல்கிறபோது ஒரு செய்தி நான் சொல்லி முடிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வெளிநாடுகளிலிருந்து உயர்ந்த வகை வித்துக்கள், நல்ல வருமானம் கிடைக்கக்கூடிய எண்ணெய் வித்துக்கள் இங்கே வரப்போகின்றன என்று சொன்னார்கள். அப்படி எண்ணெய் வித்துக்களைக் கொண்டு வருவதாலேயோ, தரிசு நிலத்தினை மேம்படுத்துவதாலேயோ அது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்த வகையிலே உதவி செய்ய முடியும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் கடந்த 1991–96 வருடங்களில் நடைபெற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தஞ்சை, திருச்சி, காவிரி டெல்டா பகுதியிலே பனை எண்ணெய் எடுப்பதற்காக பனை எண்ணெய் வித்துக்களைக் கொடுத்தீர்களே; அது இன்றைக்கு விளைந்து தொங்கிக் கொண்டிருக்கிறதே, அதற்கு நல்ல விலை கிடைக்காமல் அங்கு ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான விவசாயிகள் எல்லாம் தற்கொலை செய்துகொள்கின்ற நிலைமை ஏற்பட்டு இருக்கின்றதே, அதைப்பற்றி மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அக்காள் வளர்மதி அவர்களுடைய வார்த்தைகளிலே சொல்ல வேண்டுமென்று சொன்னால், கேழ்வரகிலே நெய் வடிகிறது என்று சொன்னால், கேட்பவர்க்கு புத்தி எங்கே போய்விட்டது?





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப். (குறுக்கீடு) உறுப்பினர் அவர்கள் ஒரு மணிக்குப் போக வேண்டியிருக்கிறது என்று சொன்னார். திரு. க. முருகவேல் ராஜன் போதும். அடுத்து, திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலன், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) குறிப்பாக ஆதிதிராவிடர் நல மானியத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் நிறையப் பேர் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக என்னைப் பொறுத்தவரையில், ஆதிதிராவிடர் நலத்திற்காக, அவர்களுடைய மேம்பாட்டிற்காக அரசு நிறையத் திட்டங்களை வகுத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது; அதை நான் வரவேற்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மூத்த உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். ஆதிதிராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையில் இன்னும் நிறையப் பேர் பேச இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். எனவே, திரு. முருகவேல் ராஜன் அமருங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் பேசுவதற்கு அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அண்ணன், மூத்த உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் கொஞ்சம் மன்னிக்கவும். உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் நன்றி சொல்ல வேண்டுமென்று சொல்கிறார். திரு. முருகவேல் ராஜன், ஒரே வார்த்தையில் சொல்லி முடியுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. எனவே தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நடத்தப்படுகிற படுகொலைகள் இனி தடுத்து நிறுத்தப்படுவதோடு, அமைச்சர் பொறுப்பு மறுக்கப்பட்டு இருக்கிற தேவேந்திர சமுதாயத்திற்கு அமைச்சர் பொறுப்பு தரவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியினுடைய ... வலியுறுத்தி, நன்றிகூறி அமைகிறேன். நன்றி, வ...



V211, 31 P01
P01 .. 2.1
224479.
சென்னை-600 008

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கிய கருத்து என்னவென்றால், உறுப்பினர்கள் பேசுவதற்கு நேரம் ஒதுக்குகிறீர்கள். ஓர் உறுப்பினருக்கு 10 நிமிடம், என்று முதலிலே அறிவிக்கிறீர்கள்; ஒவ்வோர் உறுப்பினருக்கும் 20,25,18 நிமிடங்கள் கொடுத்துவிட்டு, பின்னர் யார் பேசவேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல், பல கட்சிகளுக்கு பிரதிநிதித்துவம் இல்லாமல் பண்ணிவிடுகிறீர்கள். இந்த முறையைத் தவிர்ப்பதற்கான முயற்சியைக் கண்டிப்பாக எடுக்க வேண்டும். யாருக்கும், தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்ற நோக்கத்தில் அல்ல; அனைவருமே இந்த சட்டசபையில் பேசுவதற்கு உரிய வாய்ப்பு அனைத்துக் கட்சிகளுக்கும் கிடைப்பதற்கான முயற்சி எடுப்பதற்கு, உரிய முறையிலே இந்த நேரத்தைக் கணக்கிட்டு, உரிய முறையிலே அனைவரும் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் துணை சபாநாயகராக இருந்தாலும் சரி, யார் அமர்ந்திருந்தாலும் சரி, எந்த உறுப்பினரும் தலைவரை நிர்பந்தம் பண்ணக்கூடாது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு சிவபுண்ணியம் அவர்கள் சொன்ன கருத்தை நானும் பிரதிபலிக்கிறேன். விவாதம் நடைபெறுவது தேவை. விவாதங்களை நடத்துவதற்குத்தான் நாம் இங்கே கூடியிருக்கிறோம். ஆனால், விவாதங்களை முழுக்க முழுக்க அரசியல் கண்ணோட்டத்தில் நடத்துவது பயனுடையதும் அல்ல; ஏற்புடையதுமல்ல. கடந்த காலத்தில் ஓர் ஆட்சி இருந்தது. இப்போது இன்னோர் ஆட்சி மலர்ந்திருக்கிறது. எனவே, இந்த ஆட்சியிலே இருப்பவர்கள் கடந்த கால ஆட்சியைப் பற்றியும், கடந்த கால ஆட்சியிலே இருந்தவர்கள் இன்றுள்ள ஆட்சியைப் பற்றியும் அரசியல் கண்ணோட்டத்தில் மட்டும் பேசுவது மக்களுடைய நலிவுகளை நீக்கி நாட்டில் பொலிவுகளை ஏற்படுத்த வேண்டிய இந்த அவையினுடைய நேரத்தை, அதற்காகச் செலவழிப்பது அவ்வளவு பயனுடையதாக இருக்காது என்பதை மிகுந்த மன வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



*பிற்பகல் 12-55*

வாதப் பிரதிவாதங்கள் இருக்கலாம். ஆனால் அதற்காக சபையினுடைய நடவடிக்கைகள் தடை செய்யப்படுவதும், மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, எல்லா உறுப்பினர்களுக்கும் இருக்கக்கூடிய இந்த நேரத்தை வேறு சில சூழ்நிலைகளின் காரணமாக பிறர் எடுத்துக்கொள்வதும் இந்த அவையைப் பொறுத்தவரையில் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடாத ஒன்று என்பதை நான் உங்களுக்கு மிக அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த காலத்தில் அப்படித்தான் நடந்தது. இந்த அவை என்பது நாங்கள் இங்கே வந்திருப்பது இன்று ஆட்சியில் இருப்பவர்களைக் கண்காணிக்க; தவறுகள் நடந்தால் கண்டிக்க; அவர்களுக்கு ஆலோசனை கூற; தேவைப்பட்டால் அறிவுரை கூற; இதற்காகத்தான் நாம் வந்திருக்கிறோம். கடந்தகால ஆட்சியைப்பற்றி நாம் இந்த ஆட்சியில் விமர்சிக்கும்போது, ஒப்பிட்டு வேண்டுமானால் கூறலாம். 'அப்படி நடந்தது, நீங்கள் அப்படி நடந்து கொள்ளாதீர்கள்' என்ற அளவுக்கு அதைப் பயன்படுத்தலாம். ஆனால் எதிர்வரிசையில் இருப்பவர்களும், ஆளுங்கட்சி வரிசையில் இருப்பவர்களும் முழுக்க முழுக்க அரசியல் கண்ணோட்டத்தில் மட்டும் பேசுவது அவ்வளவு ஏற்புடையது அல்ல; பயனில்லாத ஒன்று என்பதை மிகுந்த பொறுப்புடனும், அன்புடனும் உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதிதிராவிடர் நலத் துறையிலே நிறையப் பேர் பேசியிருக்கிறார்கள். எனக்கு முன்பே பலர் இந்தத் துறையைப் பற்றியும், அந்தச் சமுதாயத்தைப் பற்றியும், அதற்கு இங்கே நாம் தீட்டியிருக்கிற திட்டங்கள் பற்றியும் மிக விரிவாகப் பேசியிருக்கிறார்கள். இவையெல்லாம் தேவையான திட்டங்கள். அதிலே சந்தேகம் இல்லை. அரசு சிறப்புக் கவனத்தை அவர்களுடைய மேம்பாட்டிற்காக, குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்காகச் செலுத்த வேண்டியது இன்றியமையாதது. இது நாட்டுக்குத் தேவையானது. ஆனால், அதேநேரத்தில் நீங்கள் எவ்வளவுதான் பணத்தைச் செலவழித்து திட்டங்களைத் தீட்டினாலும், சமுதாயத்தில் ஓர் உணர்வை ஏற்படுத்துவதுதான் இன்றியமையாதது. எல்லா மக்களும் சமமானவர்கள் என்ற உணர்வும், எல்லோரும் நம்முடைய சகோதரர்கள், சகோதரிகள் என்ற உணர்வும், ஜாதிக்கு அப்பாற்பட்டு, மதத்திற்கு அப்பாற்பட்டு, எல்லா மக்களும் இந்த நாட்டில் சகோதரர்களாக வாழவேண்டும், யாருக்கும் யாரும் உயர்ந்தவர்களும் அல்ல. யாருக்கு யாரும் தாழ்ந்தவர்களும் அல்ல என்ற ஓர் உணர்வும் ஏற்படுவதுதான் மிக

[திரு. ம. அப்துல் லத்தீப்] [2001 செப்டம்பர் 7

முக்கியமானது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். ஏனென்றால், பிரிட்டிஷ்காரன் ஆண்ட அந்தக் காலனி ஆட்சி முடிந்துவிட்டது. ஆனால் அந்தக் காலத்தில் தோன்றிய காலனிகள் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. காலனி ஆட்சி முடிந்தது. ஆனால் சமுதாயத்தில் இன்றைக்கும் காலனிகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. என்றைக்கு காலனிகள் எல்லாம் இல்லாமல் ஆக்கப்படுகிறதோ அன்றைக்குத்தான் சமுதாயம் உண்மையிலேயே ராஜபாட்டையில் நடைபெறுகிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியும். எனவே, இந்தக் காலனிகளை ஒழித்துவிட்டு, ஏற்றத்தாழ்வுகளை அகற்றிவிட்டு அவர்களுக்குச் சமத்துவ உணர்வைத் தந்தால் அதுதான் உண்மையான முன்னேற்றம் என்பதை நாம் நிச்சயமாகப் புரிந்துகொள்ள வேண்டும். நான் இதைக் குறித்து விரிவாகப் பேசுவதற்கான நேரம் இதுவல்ல. ஏனென்றால், சபாநாயகர் அவர்களுக்கு உள்ள சிக்கல் எனக்குத் தெரிகிறது. எனவே, அந்த நிலையில் நான் உங்களைக் கேட்டுக்கொள்வது, இப்பொழுது பிற்படுத்தப்பட்டோர் நலனைக் குறித்து ஒரு சில வார்த்தைகளைக் கூறி என்னுடைய உரையை வெகு விரைவில் முடித்துக்கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலன், இது தந்தை பெரியார் போன்றவர்களின் சிந்தனை. அதுவும் குறிப்பாக தாழ்த்தப்பட்டோர் என்று சொல்லப்படுகிற அவர்களைக் குறித்து நம்முடைய அரசமைப்புச் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாபா சாகிப் அம்பேத்கருடைய தலைமையில் இந்த அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது, அவர்களை சமுதாயத்தில் உயர்த்த வேண்டுமென்று அரசமைப்புச் சட்டத்திலே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பிறகுதான் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் அவர்களைப்பற்றி நாம் சிந்திக்கத் தொடங்கினோம். அரசமைப்புச் சட்டம் 15(4), அரசமைப்புச் சட்ட விதி 16(4) இவையெல்லாம் விதிக்கப்பட்டு, இந்த விதிகளின் அடிப்படையில் பல குழுக்கள் நியமிக்கப்பட்டன. அந்தக் குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில்தான் இப்பொழுது சிறுபான்மை மக்கள் மட்டுமல்ல, அந்தத் தாழ்த்தப்பட்டவர்களோடு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் என்றெல்லாம்கூட நம்முடைய கவனத்திலே எடுத்துக்கொண்டு அவர்களுடைய முன்னேற்றத்திற்காக நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அதிலே ஒரு வார்த்தையை ஆங்கிலத்திலே பயன்படுத்தி இருக்கிறார்கள். நான் அதைத் தவறு என்று சொல்லவில்லை. அப்படியே மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. கள்ளர்களைக் குறித்துச் சொல்லும்போது criminal tribes என்று ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து இருக்கிறார்கள். இது தேவைதானா?



2001 செப்டம்பர் 7] [திரு. ம. அப்துல் லத்தீப்]

அதற்கு வேறு ஏதாவது வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கக் கூடாதா என்று நான் வியந்து கொண்டிருக்கிறேன். தயவுசெய்து இதை Denotified என்று சொல்லலாம். Denotified Community என்று இப்போது மாற்றியிருக்கிறோம். இந்த Denotified Caste என்று இருந்ததை எல்லாம் இன்றைக்கு Denotified Community என்று மாற்றியிருக்கிறோம். ஆனால், இதைப் பொறுத்தவரையிலே கள்ளர்கள் என்று அதே வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தாலும் பாதகம் இல்லை. தயவுசெய்து நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன், Criminal Caste என்று இதிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதைப் படிக்கும்போதே அது ஒரு மாதிரியாக இருக்கிறது. எனவே, தயவு செய்து அந்த மொழிபெயர்ப்பைக் கொஞ்சம் திருத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை நான் வேண்டுகோளாக வைக்கின்றேன்.

பிற்பகல் 1-00

சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரையில் 1974-லே அவர்களும், சிறுபான்மை மக்களும் எல்லோரும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இணைக்கப்பட்டார்கள். அது வரவேற்கக்கூடிய ஒன்று. அப்படி இணைத்தவர்களுக்கு அன்றைக்கும் நன்றி சொன்னோம்; இன்றைக்கும் நன்றி சொல்கிறோம். ஆனால், நிலைமை என்னவென்றால், இந்தப் பட்டியலில் இடம் பெற்ற காரணத்தினால் சிறுபான்மை மக்களுடைய பொருளாதார வாழ்வு, சமூக வாழ்வு, கல்வித் துறையில் அவர்களுக்கு இருக்க வேண்டிய பங்குகள் இவையெல்லாம் முறையாகக் கிடைத்திருக்கின்றனவா என்றால் இல்லவே இல்லை. கடந்த 30 ஆண்டு காலமாக நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இதுவரையிலும் சிறுபான்மை மக்களுடைய முன்னேற்றத்திற்காக அரசு எடுத்ததாகச் சொல்லும் நடவடிக்கைகளினால் சிறுபான்மை மக்களுக்கு எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக அவர்களிடத்திலே மிகப் பெரிய பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு தன்னுடைய கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக நான் வேண்டிக்கொள்வது, அரசமைப்புச் சட்டத்திலே சிறுபான்மை மக்களுக்குத் தனி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. Constitutional Scheme என்று சொல்லக்கூடிய அளவிற்கு விதி 20, 21-லேயிருந்து 31 வரையிலும் சிறுபான்மை மக்களுக்குத் தனி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றுவரையில் எந்த அரசும் சிறுபான்மை மக்களுக்கு அரசமைப்புச் சட்டம் கூறும் உரிமைகளை வழங்குவதற்கு, அவர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு தனிக் கவனம் செலுத்தவில்லை என்பது எங்களுக்கு மிகப் பெரிய மனக்குறையாகவே இருந்துகொண்டிருக்கிறது.

[திரு. ம. அப்துல் லத்தீப்] [2001 செப்டம்பர் 7

ஓர் உண்மையைச் சொல்கிறேன். சமுதாயத்திலே எல்லோருக்கும் சம வாய்ப்புக் கிடைக்க வேண்டும்; அதிலே சந்தேகமே இல்லை. யாரோ ஓர் உறுப்பினர் வளர்ந்து விடவேண்டும் என்பதில்லை. நாங்கள் விரும்புவதெல்லாம் பள்ளங்களையெல்லாம் மேடுகளாக ஆக்க வேண்டும் என்பதுதான். அதுதான் எங்களுடைய கோரிக்கையே தவிர, மேடுகளையெல்லாம் பள்ளங்களாக ஆக்க வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை அல்ல. மற்றவர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பு சிறுபான்மை மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று ஒருபோதும் நாங்கள் கூறமாட்டோம். ஏனென்றால், பக்கத்து வீட்டில் ஏழ்மை இருந்தால் அந்த ஏழ்மை, எவ்வளவுதான் பணக்காரனாக இருந்தாலும் அது உன்னைப் பாதிக்கும். பக்கத்து வீட்டுக்காரன் பசியோடு இருக்கும்போது, எவன் ஒருவன் உண்டு களித்து வாழ்கிறானோ அவன் என்னைச் சார்ந்தவன் இல்லை என்று உலகத்திற்கு உணர்த்திய ஓர் உத்தமரைப் பின்பற்றக்கூடியது இஸ்லாமியச் சமுதாயம்.

பக்கத்து வீட்டுக்காரனும் வாழவேண்டும் என்று நினைக்கக்கூடியவர்கள் நாங்கள். ஆனால், இஸ்லாமியர்களுக்கு 'பக்கிரி' என்ற சொல் வந்திருப்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அந்த 'பக்கிரி' என்ற சொல்லுக்கே பொருத்தமானவன், சொந்தக்காரன் யார் என்றால் முஸ்லிம்தான். இன்றைக்கு வேலை இல்லாத நிலை, படிப்பு இல்லாத நிலை, இயலாத நிலை, வீடில்லாத நிலை, இந்த நிலைகளுக்கெல்லாம், சமுதாயத்தில் இருக்கின்ற பலவீனங்களுக்கெல்லாம் இருப்பிடங்களாக இஸ்லாமியர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். யார் பெருமூச்சு விடுகிறார்களோ, அவர்களுக்காக நாம் பேசுவோமே தவிர, அவர்கள் ஏதோ ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்கள் அல்லது ஜாதியைச் சார்ந்தவர்கள் என்பதற்காக நிச்சயமாகப் பேசமாட்டோம். எங்களைப் பொறுத்தவரையில், சமுதாயத்தில் இருக்கக்கூடியவர்கள், ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் பிறந்தவர்கள்; பிறப்பால் யாரும் உயர்ந்தவர்களும் அல்ல. தாழ்ந்தவர்களும் அல்ல. உங்களுக்கிடையே அதற்குப் பிறகு குடும்பங்களும், இனங்களும் உருவாகின்றன. ஆனால், குடும்பங்களும், இனங்களும் உருவாவது பேதா பேதம் கற்பித்து, நான் உயர்ந்தவன், நீ தாழ்ந்தவன் என்று பேதா பேதம் பாராட்டுவதற்காக அல்ல. இறைவனுடைய சன்னிதானத்தில் யார் உயர்ந்தவன் என்றால், யார் மனிதாபிமானத்தில் உயர்ந்தவனோ, யார் ஒழுக்கத்தில் சிறந்தவனோ, யார் மற்றவர்களைப் பேணிக்கொண்டு சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் வளர்க்கிறானோ, சமுதாயத்தில் இணக்கத்தையும், அணுக்கத்தையும் ஏற்படுத்திக்கொள்வதற்கு யார் உறுதுணையாக



2001 செப்டம்பர் 7] [திரு. ம. அப்துல் லத்தீப்]

இருக்கிறானோ, அவன் ஒருவன்தான் உயர்ந்தவன்; மற்றவர்களெல்லாம் தாழ்ந்தவர்கள் என்பது எங்களுடைய நம்பிக்கை. அதைத்தான் எங்களுடைய வேதமும் எங்களுக்கு உணர்த்துகிறது.

*பிற்பகல் 1-05*

ஜாதி என்பதை என்றைக்கு வரையில் நாம் ஒழிக்க மாட்டோமோ, பேதா பேதங்களை இல்லாமல் ஆக்கமாட்டோமோ அன்றுவரையிலே எத்தகைய திட்டங்களை நீங்கள் தீட்டி உயர்வுகளைத் தந்தாலும், தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள், சம உணர்வு மனிதனுக்கு வேண்டும் என்ற நிலையிலே. இந்த வகையிலேதான் நாங்கள் பெருமூச்சு விடக்கூடியவர்களாக இந்த நாட்டிலே ஆக்கப்பட்டிருக்கிறோம். நாங்கள் சிறுபான்மை மக்கள்; குறிப்பாக முஸ்லிம்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே கடந்த காலத்தில் இருந்த ஆட்சி இணைத்தது. அதை இப்போதும் நாங்கள் நன்றியோடு சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், பலன் என்ன? அதைத்தான் நான் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னேன். இந்தக் காலத்திலே இட ஒதுக்கீடு என்பது நடைமுறைக்கு வந்துவிட்டது. இட ஒதுக்கீடு எல்லோருக்கும் கொடுத்திருக்கும்போது அரசமைப்புச் சட்டம் வலியுறுத்துகின்ற சிறுபான்மை மக்களுடைய நன்மைகள், அந்தப் பாதுகாப்பு என்று சொல்லப்பட்டிருக்கிற நிலையிலே அவர்களுக்கும் இட ஒதுக்கீட்டில் ஒரு பங்கு தாருங்கள் என்றுதான் நான் கேட்டேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த இடத்திலே உட்கார்ந்து கொண்டிருந்தபோது அவர்களிடத்திலே நான், எவ்வளவு பேர் இந்த நாட்டிலே, தமிழ்நாட்டிலே இருக்கிறோம், சொல்லுங்கள் என்று கேட்டேன். 5.8% என்பது அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னார்கள். நான் சொன்னேன், இந்த .8 என்பதை நாங்கள் விட்டுவிடுகிறோம். 5 சதவிகிதமாவது எங்களுக்கு நீங்கள் இட ஒதுக்கீடு தாருங்கள் என்று கேட்டேன். போலீஸ் துறையைப்பற்றி, அன்று நடந்த மானியக் கோரிக்கையிலே, போலீஸ் துறையிலே எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு விளக்கம் தந்தார்கள். அதை கொள்கை ரீதியாக மாண்புமிகு நம்முடைய புரட்சித் தலைவர் அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

பிறகு வந்தவரும் என்னுடைய அண்ணன்தான், அவரும் அண்ணன்தான். எனவே, அவரிடத்திலே நான் என்னுடைய கோரிக்கையை வைத்தேன். அவர் பரிவோடு கவனிக்கிறேன் என்றுதான் சொன்னார். இதே மன்றத்திலே வாக்குறுதிகள் 3 தடவை தரப்பட்டன.

ஒரு கூட்டத்திலே, கடற்கரைக் கூட்டத்திலே அவர் வாக்குறுதி தந்தார், பிறகு ஒரு Iftar நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு வாக்குறுதி தந்தார். இறுதியாகச் சொன்னார், இதிலே சட்டப் பிரச்சினைகள் இருக்கின்றன. *(மணியடிக்கப்பெற்றது)* Supreme Court-லே வழக்கு இருக்கிறது. இருந்தாலும் அரசு இதை ஏற்றுக்கொண்டு ஆவன செய்யும் என்று வாக்குறுதி தந்தார்கள். இறுதியாக எங்களுடைய அடுத்த தேர்தல் அறிக்கையிலே இதுகுறித்து நாங்கள் சொல்கிறோம் என்று சொன்னார். ஆனால், தேர்தல் அறிக்கையிலே சொல்லவில்லை. இந்த நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. தயவுசெய்து, மாண்புமிகு நம்முடைய அருமை புரட்சித் தலைவி, சகோதரி அவர்கள் இன்றைக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்த அவையிலே 30 ஆண்டுகளாகப் பேசிக் கொண்டிருக்கிறேன். இன்னும் எத்தனை நாள் பேசுவேன் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், பேசுகின்ற நேரத்திலே எல்லாம் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

இங்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இருக்கிறார், கல்வி அமைச்சர் இருக்கிறார், அமைச்சர் பெருமக்கள் எல்லாம் இருக்கிறார்கள், தயவுசெய்து நீங்கள் இதை என்னுடைய குரலாக எடுத்துக்கொள்ளுங்கள். இந்தச் சமுதாயத்தினுடைய குரலாக எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஆயிரம் நன்மைகளைச் செய்துவிட்டோம் என்று சொல்லலாம். ஆனால், இந்த இட ஒதுக்கீடு கேரளாவைப் போல, ஆந்திராவைப் போல, கர்நாடகாவைப் போல இங்கே நீங்கள் செய்வதற்கு எது தடையாக இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை; வற்புறுத்திச் சொல்கிறேன், தயவுசெய்து இட ஒதுக்கீட்டைத் தாருங்கள். அது இல்லாமல் நீங்கள் எதைச் செய்தாலும் இந்தச் சமுதாயத்தை நீங்கள் திருப்தி செய்ய முடியாது. காரணம், இந்தச் சமுதாயம் மேலே போக வேண்டுமென்று சொன்னால், மற்றவர்களைப்போல அந்த இட ஒதுக்கீடு எங்களுக்கும் வேண்டும். மற்றவர்களுக்குக் கொடுக்காததை எங்களுக்குக் கொடுக்காதீர்கள். ஏனென்றால், எங்களைப் பொறுத்தவரையில் மற்றவர்கள் வாழ்விலே வளத்தைக் கண்டு மகிழ்ச்சி அடையக்கூடியவர்கள். எனவே, மற்றவர் வாழ்விலும் வளத்தைக் காண வேண்டும். எங்களுக்கு இருக்கிற பெருமூச்சையும் நீங்கள் தீர்க்க வேண்டுமென்று மிக அன்போடு வற்புறுத்தி நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு இல்லை. அப்படி இல்லாத நேரத்தில் அவர்களுடைய பிரதிநிதிகளாக இருக்கிற, அமைச்சரவையிலே இருக்கிற, அன்பு மாண்புமிகு சகோதரர்கள் இந்த உணர்வைப் பிரதிபலித்து அவருக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மைனாரிட்டி கமிஷன் பற்றியும் மற்ற பிரச்சினைகள் பற்றியும் நான் பேசலாம். ஆனால்....



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர், நீங்கள் ஒரு மணிக்கே போக வேண்டுமென்று சொன்னீர்கள். மறந்துவிட்டீர்களா என்று தெரியவில்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் போவது என்றால், வேறு எதற்கும் போகமாட்டேன். எனக்கு நேரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. போக வேண்டிய நேரம் வந்துவிட்டது. போக வேண்டிய இடத்திற்குப் போக வேண்டும். ஆகையினால் நான் அங்கே போக வேண்டும். என்னுடைய கடமை என்னை அங்கே அழைக்கிறது. அந்தக் கடமையைவிட இந்தக் கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்து இங்கே நான் பேச வேண்டும் என்பதற்காகப் பேசுகிறேன். பல நேரங்களிலே எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்போது நான் ஒருவனாகத்தான் இருந்தேன். அப்போதும் நான் ஒருவன்தான். ஆனால், அப்போது இந்தப் பிரச்சினையெல்லாம் எழுப்பப்படவில்லை. நான் ஒரு மணிநேரம் பேசினேன் என்று என்னுடைய தம்பிமார்கள் சிலபேர் வெளியிலே சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்னுடைய கடமை நான் மணியைத் தட்ட வேண்டியிருக்கிறது.

*பிற்பகல் 1-10*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** ஆகையினால் நான் இப்போது பேச வேண்டும் என்பது அல்ல. பேசிப் பேசியே அலுத்துப் போனவன் நான். எனவே, பேசவேண்டும் என்ற ஆசையோடு பேசுவதில்லை. கடமை உணர்வோடு பேசுகிறேன். தயவுசெய்து, நான் ஒருவன் என்று மட்டும் சுட்டிக்காட்டாதீர்கள். நான் ஒருவன் என்று சுட்டிக்காட்டினால், அதை வைத்து நீங்கள் ஒரு தீர்ப்புக் கூறினால் அல்லது தீர்மானம் செய்தால், ஒரு நபராக இனி வரமாட்டோம், பலராகத்தான் வருவோம் என்ற கூளுரையைத்தான் இங்கிருந்து சொல்வேன். ஆகவே, இதை தயவுசெய்து உங்களுடைய உள்ளத்திலே, எண்ணத்திலே வைத்துக்கொண்டு, மாண்புமிகு அருமைச் சகோதரர் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்–அடுத்த இடத்திலே உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கூட எனக்குத் தம்பிதான். எனவே, அவரை நான் கேட்டுக்கொள்கிறேன் - இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் கலைஞர் அவர்களிடத்திலே என்ன சொன்னேன்? 'கொள்கை ரீதியாகவாவது ஏற்றுக்கொள்ளுங்கள், கொள்கை ரீதியாக முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு தர வேண்டும் என்று சட்டசபையிலே அறிவியுங்கள்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மிகப் பெரிய வரலாறு. சிரித்துக் கொண்டே சிறைக்குச் செல்வேன் என்று வீராவேசமாகப் பேசியவர்கள் எல்லாம் 5 ஆண்டு காலம் இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டாலும்கூட, நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு இதிலே தனிக் கவனம் செலுத்தி, உச்ச நீதிமன்றத்திலே உள்ள வழக்கை விரைவுபடுத்துவதற்கு, 69 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு சட்ட ரீதியான முயற்சியைச் செய்யும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெலுங்கு படித்த காரணத்தால், தமிழ் அவ்வளவு நன்றாகப் பேசத் தெரியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றாகப் பேசத் தெரியாது என்றால் சீக்கிரம் உரையை முடித்துவிட்டால் நல்லதுதான். *(சிரிப்பு)*

**திரு. கே.வி. முரளிதரன்:** நன்றியை மட்டும் தெலுங்கில் சொல்லிக் கொள்கிறேன்.

*(தெலுங்கில் பேசினார்)*

*(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. பி.எம். நரசிம்மன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் அமருங்கள், Point of Order கேட்கிறார்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெலுங்கிலே பேசுகிறபோது பிரதான எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கையைத் தட்டினார்கள். எதற்காகத் தட்டினார்கள் என்று சொல்ல முடியுமா?



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பெயர் வந்ததால் தட்டினார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் பாரதிய ஜனதாக் கட்சியினுடைய தலைவராக இருக்கிற பிரதமருக்கும், அதே N.D.A.-வினுடைய தமிழகத்தின் தலைவராக இருக்கிற தலைவருக்கும் நன்றி சொல்கிறேன் என்று சொன்னதற்காகக் கைதட்டினோமே தவிர, வேறு ஒன்றும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. இல்லை. பெயரைக் குறிப்பிடக்கூடாது என்றீர்கள். அதற்காகச் சொல்கிறார். பெயரைக் குறிப்பிட்டதற்குக் கையைத் தட்டினீர்களே என்றுதான் சொல்கிறார்.

**திரு. கே.வி. முரளிதரன்:** *(தெலுங்கில் பேசினார்)*

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நீங்கள் பேசுவதைத் தமிழிலே எழுதிக் கொடுத்துவிடுங்கள். தெலுங்கில் பதிவு செய்யும் முறை இல்லை.

**திரு. கே.வி. முரளிதரன்:** *(தெலுங்கில் பேசினார்.)* நான் தமிழில் பேசும்போது ஏதாவது தவறு இருந்தால் மன்னிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

Last D.M.K. ஆட்சியில் 8 சதவிகிதம் இருக்கின்ற உருது பேசுபவர்களுக்கு ஒரு Academy கொடுத்திருக்கிறார்கள். நமது தமிழ்நாடு ஸ்டேட்டில் 46 சதவிகிதம் தெலுங்கு பேசுபவர்களாக இருக்கின்றவர்களுக்கு தெலுங்கு Academy-யை நீங்கள் கொடுக்க வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதுவும் நமது Education Minister எங்கள் District-ஐச் சேர்ந்தவர். நேற்றுகூட ஆந்திர மாநிலத்திலே முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்கள் 8 சதவிகிதம் இருக்கின்ற உருது பேசுபவர்களுக்கு 11 மாவட்டங்களிலே Official Language – 2nd language கொடுத்திருக்கிறார்கள்.

எங்கள் மாவட்டத்திலேயிருந்து வந்துள்ள ஓசூர் தொகுதி எம்.எல்.ஏ.கூடத் தெலுங்கில் பேசினார். தமிழ் பேசத் தெரியாமல் தெலுங்கில் பேசினார். எங்களுக்குத் தெரிந்த தமிழில் நாங்கள் பேசுகிறோம்.

[திரு. கே.வி. முரளிதரன்] [2001 செப்டம்பர் 7

My language is Telugu. இந்த minority language-லே இருந்துகொண்டு நாங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே, 4, 5 மாவட்டங்களிலே தெலுங்கை Official language ஆக ஆக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முரளிதரன், அருமையாகப் பேசுகிறீர்கள். அப்படியே பேசி முடியுங்கள். தமிழிலே அருமையாகப் பேசுகிறீர்களே!

**திரு. கே.வி. முரளிதரன்:** அதேமாதிரி, வேறு மாநிலங்களிலிருந்து இங்கே வந்து Employment Exchange-ல் பதிவு செய்கிறார்கள். அப்படிப் பதிவு செய்வதற்கு நமது State-ல் எந்தத் தடையும் இல்லை. நமது தமிழ்நாட்டிலேயிருந்து எந்த State-க்குப் போனாலும்கூட அந்த ஸ்டேட்டில் கண்டிப்பாக நீங்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டும் என்று நிபந்தனை வைத்திருக்கிறார்கள். நமது State-ல்கூட அப்படி வைத்தால் நன்றாக இருக்கும். ஏன் என்றால், வேறு மாநிலங்களிலிருந்து வந்து இங்கு Employment Exchange-ல் பதிவு செய்து எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டு போய் விடுகின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது) இருங்கள் சார், இன்னும் ஒரு 10 நிமிடம் Extra-வாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழில்தானே பேசுகிறேன்!

அதேபோல கர்நாடகா மற்றும் பீகாரிலே எல்லாம் minority language-க்கு ஒரு Directorate வைத்திருக்கிறார்கள். Last D.M.K. Government-ல் State Language Tamil-க்கு ஒரு Minister வைத்திருந்தார்கள். State Language-க்கு ஒரு Minister நிஜமாகவே தேவையில்லை. அந்த ஸ்டேட்டிலே அந்த language கண்டிப்பாக அப்படியே இருக்கும். ஆனால், Minority Language-க்கு நமது A.I.A.D.M.K. Government-ல் ஒரு Minister போட்டால், Minority Languages பேசுபவர்களுக்கு மிகவும் நன்றாக இருக்கும். Minister இல்லையென்றால்கூட ஒரு Director-ஐயாவது நியமிக்கலாம். தெலுங்கு தெரிந்த Minister-ஆகப் போட்டால் மிகவும் நன்றாக இருக்கும். அதுவும் நமது பாண்டுரங்கன் அவர்களைப் போட்டால் மிகவும் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்களைத்தான் போட்டிருக்கிறார்களே! மாண்புமிகு உறுப்பினர், உரையை விரைவில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இந்தத் தெலுங்கு.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முரளிதரன், இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2001 செப்டம்பர் 7]

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற அனைத்து சிறுபான்மைச் சமுதாயத்தினுடைய தாயாக விளங்கிக் கொண்டிருக்கிற நம்முடைய தங்கத் தலைவி, தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெலுங்கு மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட எனக்கு அமைச்சர் என்கிற மாபெரும் அந்தஸ்தை வழங்கியிருக்கிறார்கள் என்பதை மாமன்றத்தினுடைய உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (மலையாளத்தில் பேசினார்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** (மலையாளத்தில் பேசினார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எனக்கு எதுவுமே புரியவில்லை. முரளிதரன், இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

*பிற்பகல் 1-25*

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தந்த மாவட்டங்களில் ஒரு பகுதியில் இருக்கின்ற சிறுபான்மையின மக்களுடைய உரிமையைப் பாதுகாக்கின்ற வகையிலே ஆங்காங்கு வாழ்கின்ற மக்களுடைய மொழியினை ஒரு Official Language ஆக ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்தார்கள். நான் 1994-95 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராக இருந்தேன். அப்போது சிறுபான்மையினர் நலத் துறையை நம்முடைய அம்மா அவர்கள் கொடுத்தார்கள். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அந்தந்த மாவட்டங்களிலுள்ள அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற linguistic minorities, மொழிவாரி சிறுபான்மையினர் நலனைக் காப்பாற்றுவதற்காக official language என்று declare செய்யப்பட்டு ஓர் அரசாணையும் போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முரளிதரன், இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. கே.வி. முரளிதரன்:** அமைச்சருக்கு நன்றி. கர்நாடக மாநிலத்தில்.....

[2001 செப்டம்பர் 7

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழைப் பற்றிக் கூறும்போது, 'கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன்னுதிரத்தே உதித்தெழுந்தது' என்று நமது தமிழ்ப் புலவர் பாடுகிறார். எனவே, மலையாளம், கன்னடம், தெலுங்கு அத்தனையும் தமிழ் மொழியினுடைய வடிவங்கள்தான் என்கிற காரணத்தினால்தான் புரட்சித் தலைவி அவர்கள் தெலுங்கு பேசுகிறவர்களுக்கும், மலையாளம் பேசுகிறவர்களுக்கும், எல்லோருக்கும் இந்த அமைச்சரவையிலே இடம் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முரளிதரன், ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. கே.வி. முரளிதரன்:** கர்நாடக மாநிலத்தில் நம் தங்கத் தமிழை Second Official Language என்று நேற்று அறிவித்திருக்கிறார்கள். அதேபோல, தெலுங்கை நம்முடைய தமிழ்நாட்டில் கண்டிப்பாக second language என்று அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்கிறேன்.

முதன்முதலாக நான் பேசுவதால் என்னுடைய தொகுதியைப்பற்றிச் சிலவற்றைப் பேசிவிடுகிறேன். தமிழ்நாட்டிலேயே எங்கள் Thalli Constituency is the biggest Constituency. தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். Thalli Union-ல் 50 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. தளி தொகுதியில் 78 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அந்த யூனியன் அலுவலகத்திற்கு அஞ்செட்டியிலிருந்து வரவேண்டுமென்றால் 80 கிலோ மீட்டர் ஆகிறது. எனவே, தளி யூனியனை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

அதேமாதிரி இதுவரைக்கும் எங்கள் ஏரியாவில் ஒரு அணைகூட இல்லை. அப்பர் சின்னார் அணை, தொட்டபாலட்டா அணை ஆகியன கட்டப்படும் என்று 1983-ல் புரட்சித் தலைவர் எம்ஜி. இராமச்சந்திரன் அவர்கள் எங்கள் ஏரியாவிற்கு வந்தபோது உறுதி அளித்தார்கள். 1989-ல் பொதுப் பணித் துறை அதிகாரிகள் அங்கே வந்து ஆய்வு செய்து, 8 கோடி ரூபாய்க்கு அத்திட்டத்தை அறிவித்தார்கள். ஆனால், இதுவரை அது நடக்கவில்லை.

ஒகேனக்கல் என் தொகுதிக்கு அருகில் உள்ளது. அதற்கு 5 கிலோமீட்டர் தார் ரோடு போட வேண்டும். Rural Development Minister அதைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். 5 கிலோ மீட்டர் போட்டால்



2001 செப்டம்பர் 7] [திரு. கே.வி. முரளிதரன்]

ஒகேனக்கல் போவதற்கு வசதியாக இருக்கும். கர்நாடகாவிலிருந்து வருகின்ற மக்களுக்கு 35 கிலோ மீட்டர் குறைவாக இருக்கும். அதை நீங்கள் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.

அதேமாதிரி ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்புத் தந்தது எனக்கு மிகப் பெருமையாக இருக்கிறது. பெண்டமுல்லாம் என்ற பஞ்சாயத்தில் எஸ்.சி., எஸ்.டி. மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே Forest Gate ஒன்று இருக்கிறது. ஏதாவது ஒரு disease வந்து, யாராவது அந்த gate-க்குள் வரவேண்டுமென்றால் 150 ரூபாய் கட்ட வேண்டும். இல்லையென்றால் விடுவதில்லை. எனவே, அந்த gate அப்படியே இருக்கட்டும். காசு கட்டாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேமாதிரி வனப் பகுதியில் யானையினால் நிறைய இழப்பு ஏற்படுகிறது. கர்நாடக மாநிலத்தில் யானையினால் இழப்பு ஏற்பட்டால் உடனே ஒரு மாதத்திற்குள் எவ்வளவு இழப்பு என்று பார்த்து, 10,000, 15,000 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் ஆறு மாதங்கள் ஆனாலும் கொடுப்பதில்லை. கடைசியில் இரண்டாயிரம் ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அதற்குக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேமாதிரி 2001-2002 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் நம்முடைய நிதியமைச்சர் கூறியிருக்கிறார்கள். எல்லோரும் இவ்வளவு கோரிக்கை வைத்தால் ஆகாது. நமக்கு நாமே திட்டம்-Reserve Bank announce செய்தால் ஏதாவது செய்ய முடியும். Sanitary Complexes announce பண்ணியிருக்கிறீர்கள், Village Panchayat-ல் எல்லாம் Sanitary Complex கட்டினால் பயன்படாது. அது டவுனில்தான் use ஆகும். Village Panchayat-ல் கட்டினால் கண்டிப்பாக அது use ஆகாது. எங்களுக்கு மைராடா என்ற Private Scheme இருக்கிறது. எங்கள் 15 ஊர்களிலே Sanitary Complex......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்ளுங்கள். வணக்கம் என்று முடியுங்கள்.

*பிற்பகல் 1-30*

## 4. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாலை சட்டமன்றப் பேரவையின் கூட்டம் நடைபெறவிருப்பதால், மாலை 4-30 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தை ஒட்டிய பகுதியில்

உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*பிற்பகல் 4-30*

*பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

## 3. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த அறிஞர் பெருமக்களும், தியாக சீலர்களும் அங்கம் வகித்த இந்த மகத்தான அவையில் சாதாரண பிற்படுத்தப்பட்ட சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த என் குரலும் ஒலிக்கத்தக்க வகையில் என்னைத் தேர்ந்தெடுத்த பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், அதற்கு வழிவகுத்த, 'பாளையங்கோட்டை சிறைச்சாலை, நான் புனித யாத்திரை செல்லும் திருத்தலம்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றப்பட்டு, பாளையங்கோட்டைக்கு மகத்துவம் ஏற்படுத்திக் கொடுத்த, மொழிப் போரில் தனிமைச் சிறையில் தியாக வரலாறு படைத்து, அன்னைத் தமிழ் மொழி காக்க உரிமைக் குரல் எழுப்பிய உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், ஐந்தமிழ் அறிஞர், என் உயிரினும் மேலான தாயுள்ளம் கொண்ட தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இம்மன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவர் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், நாளைய தமிழினத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிற தமிழகத்தின் தலைநகரின் தலைமகன், தளபதி



மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்தவனாக இந்த மாமன்றத்தில் என் இதய உணர்வுகளை இந்த நாளில் பதிவு செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

எந்த செப்டம்பர் திங்களில் தந்தை பெரியார் பிறந்தாரோ, எந்த செப்டம்பர் திங்களில் பேரறிஞர் அண்ணா அவதரித்தாரோ, எந்த செப்டம்பர் திங்களில் கொட்டும் மழையில் ராபின்சன் பூங்காவில் திராவிட முன்னேற்றக் கழகம் உதயமானதோ, எந்த செப்டம்பர் திங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்றிய வகுப்புரிமை அரசாணை 80 ஆண்டுகளுக்கு முன்பு திரு. முத்தையா முதலியார் அவர்களால் வெளியிடப்பட்டதோ, அந்த செப்டம்பர் திங்களின் ஏழாவது நாளான இன்றைக்கு, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் நலன் குறித்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவராகிய தங்களுக்கு என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்குத் தனியே ஒரு துறையை உருவாக்கி, தனியே மானியக் கோரிக்கை தாக்கல் செய்ய வழிவகுத்த தலைவர் என்பதனால் காலமெல்லாம் இந்தப் பெருமக்களின் நன்றியறிதலுக்கு உரியவராகத் திகழும் எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மீண்டும் என் நன்றியினைக் காணிக்கையாக்கிக் கொண்டவனாக என் உரையை ஆரம்பம் செய்கிறேன்.

1995-96-ல் இந்தத் துறைக்கென ஒதுக்கிய நிதி ரூபாய் 47.27 கோடி மட்டும்தான். கலைஞர் அரசு 1996-ல் பதவியேற்ற பின்னர், 1996-97-ல் ரூபாய் 54.52 கோடியும், 1997-98-ல் ரூபாய் 64.32 கோடியும், 1998-99-ல் ரூபாய் 89.45 கோடியும், 1999-2000-ல் ரூபாய் 150 கோடியும், 2000-2001-ல் ரூபாய் 156.43 கோடியும் ஒதுக்கியது.

ஆனால் இந்த ஆட்சியில் ரூபாய் 152 கோடி மட்டும்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒதுக்கீடு செய்யப்பட்டதுபோல் அதிக நிதி ஒதுக்கீடு செய்ய, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காகக் கோரிக்கை வைக்கிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவியருக்கு, 3 முதல் 5 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவியருக்கு, ஆண்டிற்கு ரூபாய் 500 என 60,000 பேருக்கும், 6-வது வகுப்பில் பயிலும் மாணவியருக்கு

ஆண்டிற்கு ரூபாய் 1,000 என 30,000 பேருக்கும், ஆக ஆண்டிற்கு 90,000 பேருக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவியருக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கியவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

1996–97 வரை மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருக்கு மட்டும் வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டா திட்டமானது, 1997–98 முதல் டாக்டர் கலைஞர் அவர்களால் பிற்படுத்தப்பட்டோருக்கும், பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கும்கூட விரிவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கென 1995–96–ல் ஒதுக்கிய நிதி ரூபாய் 1 கோடியாக இருந்தது. அதை 1996–97–ல் 2 கோடியாகவும், 1997–98–ல் 18 கோடியாகவும், 2000–2001–ல் 22 கோடியாகவும் உயர்த்தியது திராவிட முன்னேற்றக் கழக அரசின் மிகப் பெரிய சாதனை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் 1,34,942 நபர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. பட்டாக்கள் விரைவாக வழங்கிட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 15 தனி வட்டாட்சியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன.

கடந்த ஐந்து ஆண்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆண்டிற்கு 175 பேருக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த கணினிப் பயிற்சியானது 1500 நபர்களுக்கு பல்கலைக்கழகங்கள் மூலமாக அளித்தது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். 5000 நபர்களுக்கு உயர்நிலை சிறப்புக் கணினிப் பயிற்சி அளிக்கும் திட்டமும் கழக அரசால் கொண்டுவரப்பட்டது. 250 நபர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியானது 2000 நபர்களுக்கு வழங்கியதும் எங்கள் கழக அரசுதான்.

*பிற்பகல் 4-35*

அதுமட்டுமின்றி 25 நபர்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட செவிலியர் உதவியாளர் பயிற்சி 250 மகளிர் பயன்பெறும் வகையில் உயர்த்தப்பட்டது. மேலும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையே வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும்பொருட்டு, தானியங்கி பொறியியல் பயிற்சி, குளிர்சாதனப் பெட்டி பழுதுபார்க்கும் பயிற்சி, தேசிய ஆடை அலங்கார நிறுவனம் மூலம் பெண்களுக்கான ஆடை தயாரிக்கும் பயிற்சி, பிளாஸ்டிக் செய்முறை, இயந்திர இயக்குதல் பயிற்சி தோல் பொருள் தயாரிக்கும் பயிற்சி மற்றும் அலுவலகச் செயலர் பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கும் திட்டம் போன்ற திட்டங்கள் கழக அரசினால் கொண்டு வரப்பட்டவைதான். இந்த ஆட்சியில் புதிய பயிற்சித்



திட்டங்கள் எதுவும் கொண்டு வரப்படவில்லை. கழக ஆட்சியில் 137 மாணவியர் விடுதிகள் புதிதாகத் தொடங்கப்பட்டன. முந்தைய ஆட்சியில் பள்ளி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வந்த உணவுக் கட்டணம் ரூ.135 ஆக இருந்ததை 1997–98–ல் ரூ.225 ஆகவும், கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.250–ஐ 1997–98–ல் ரூ.300 ஆகவும், 1998–99–ல் ரூ.400/– ஆகவும் வழங்கியதும் கழக அரசுதான்.

இட ஒதுக்கீடு கோரி போராடிய மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, அவர்களது போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீடு கலைஞர் அவர்களால்தான் வழங்கப்பட்டது. துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 23 தியாகிகளின் குடும்பங்களுக்குத் தலா ரூ.3 இலட்சம் நிதியுதவி வழங்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். மேலும், அவர்களின் குடும்பங்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ.1500 வழங்கியது டாக்டர் கலைஞர் அரசுதான். அரசுப் பணிகளில் நியமனம் செய்யப்படும்போது முதல் 10 இடங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த ஓர் இடம் என்பது 2000–2001–ல் இரண்டு இடங்களாக மாற்றி அமைக்கப்பட்டது; அது கலைஞர் அரசில்தான். 1989–ல் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குத் தனியாக ஒரு இயக்குநரகத்தை ஏற்படுத்தியதும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

1996–க்கு முன்னர், ஆண்டிற்கு வழங்கப்பட்டு வந்த 4000 சலவைப் பெட்டிகள் 6000 ஆகவும், 2000–2001–ல் 8000 ஆகவும், 500 கல்லுடைக்கும் கருவிகள் என்பதை 2000 ஆகவும், 500 முடி திருத்தும் கருவிகள் என்பதை 2000 ஆகவும் கழக அரசில் உயர்த்தி வழங்கப்பட்டது. இதுபோன்று அதிக அளவில் வழங்கிட நடவடிக்கை தேவை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி உதவித் தொகை பெற்றிட பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000–த்திற்குள் இருக்க வேண்டும் என்பது ரூ.50,000 ஆக உயர்த்தப்பட்டது. அதேபோல், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பெற்றோர் ஆண்டு வருமான வரம்பை ரூ.50,000 ஆக உயர்த்தியதும் கழக அரசுதான். சமூக நீதிக்கென தந்தை பெரியார் விருது பெறுகிறவர்களுக்கு ஆண்டுதோறும் 3 சவரன் தங்கப் பதக்கம் மற்றும் ரூ.20,000 என்பதை பெரியார் வழிவந்த கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ரூ.1 இலட்சம் என உயர்த்தி வழங்கினார்கள்.

டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இயற்கை எய்தினால் இறுதிச் சடங்கிற்கு அவர்களுக்கு ரூ.500 உதவித் தொகை வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த ஆட்சியில்

[திரு. டி.பி.எம். மைதீன்கான்] [2001 செப்டம்பர் 7

வேலைவாய்ப்புகளை உருவாக்கிட புதிய முயற்சித் திட்டங்கள் எதுவும் கொண்டு வரப்படவில்லை.

இறைத்தூதர் பெருமானார் நபிகள் நாயகம் அவர்கள் பிறந்த நாளை அரசு விடுமுறையாக அறிவித்து இஸ்லாமிய சமுதாயத்தின் பாராட்டைப் பெற்று, என்றைக்கும் சிறுபான்மைச் சமுதாயத்தின் காவல் அரணாக விளங்கி வருகிறவர் அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் எனப் பெருமையோடு கூறுவதற்கு நான் பெருமைப்படுகிறேன்.

*பிற்பகல் 4-40*

தமிழகத்தில் உள்ள சிறுபான்மையினர் நலனுக்காகவும், அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1-7-1999 அன்று தனி அமைப்பாக உருவாக்கப்பட்டது. 31-10-2000 அன்று வரையில் 591 சிறுபான்மையினருக்கு 2 கோடியே 51 இலட்சம் ரூபாய் கடனுதவி வழங்கியது தலைவர் கலைஞர் ஆட்சியில்தான்.

தமிழகத்தில் முதன்முதலில் சிறுபான்மையினரின் நல ஆணையம் 13-2-1989 அன்று தலைவர் டாக்டர் கலைஞர் அரசால் தொடங்கப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது)

இஸ்லாமிய சமுதாயத்தின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்கப்பட்டு, தமிழகத்தில் உருது அகாடமி 21-7-2000 அன்று 15 இலட்சம் ரூபாய் தொடக்க முதலீட்டுடன் அமைக்கப்பட்டது தி.மு.க. அரசில்தான்.

ஒவ்வொரு ஆண்டும் ஹஜ் புனிதப் பயணத்திற்கென 1800 பேருக்கு மிகாமல் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை கைவிடப்பட்டு, 1999 ஆம் ஆண்டு முதல் மனு செய்யும் அனைத்து ஹஜ் பயணிகளும் பயணம் மேற்கொள்ள வழிவகை செய்தது கழக அரசு. (மணியடிக்கப்பெற்றது)

இஸ்லாமியர்களின் நீண்ட காலக் கோரிக்கையான, அரசு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் தனி ஒதுக்கீடு வழங்கிட பரிசீலிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மைதீன்கான், ஒரு மணித் துளியில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** இரண்டு அல்லது மூன்று மணித் துளிகளில் பேசி முடித்துவிடுகிறேன்.



2001 செப்டம்பர் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, 3 மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** எங்களுடைய பாளையங்கோட்டை தொகுதியில் அரசு பெண்கள் கல்லூரி அமைக்கப்பட வேண்டும்.

பாளையங்கோட்டையில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுகிறேன். மேலும், கால்நடை மருத்துவக் கல்லூரியும் அங்கே வேண்டும்.

இருதய அறுவை சிகிச்சைக்குரிய அனைத்து வசதிகளும் வழங்கி, சென்னை, மதுரையில் உள்ள மருத்துவமனைகளில் இருப்பதுபோன்று எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி கொண்டதாக பாளை ஹைகிரவுண்டு அரசு தலைமை மருத்துவமனையை ஆக்கிட வேண்டும். மேலப்பாளையம் மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனைக்கு இணையாக விரிவுபடுத்த வேண்டும். மேலப்பாளையத்தில் அரசு பெண்கள் பள்ளி, பெண்கள் தொழில்நுட்பக் கல்லூரி உருவாக்க வேண்டும். பாளை புறவழிச் சாலை தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்லப்பாண்டியன் உருவச் சிலை அருகே மேம்பாலம் கட்டப்பட வேண்டும்.

மேலப்பாளையத்தில் உழவர் சந்தை திறக்கப்பட இருந்தது. இந்த ஆட்சி வந்தபின், அது கிடப்பிலே போடப்பட்டுவிட்டது. அதைச் செயல்படுத்த வேண்டும். மிகச் சிறப்பாக நடைபெற்ற பாளை உழவர் சந்தை தற்போது கவனிக்கப்படுவதில்லை. தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தை மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடத்தாமல் அரசு நல்ல முறையிலே செய்திட வேண்டும்.

என்னுடைய பாளை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேலப்பாளையம் பகுதியில் உள்ள மக்களில் பெரும்பான்மையோர் குடிசைத் தொழிலாகக் கொண்டிருப்பது பீடித் தொழில். தமிழ்நாட்டில் பல இடங்களிலே இத்தொழில் நடைபெற்றாலும்கூட, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அதிகமாகப் பணியாற்றுவது மேலப்பாளையத்தில்தான். இப்போது இந்த அரசு பொது இடங்களில் புகை பிடிக்கக்கூடாது என்கிற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அப்படிச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதால், தினசரி இத்தொழிலை நம்பிப் பிழைத்துக் கொண்டிருக்கக்கூடியவர்கள், குறிப்பாகப் பெண்கள், இப்போது மறுவாழ்வுக்கு என்ன செய்வது என்ற யோசனையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மறுவாழ்வுக்கு ஒரு வழி

செய்யாமல் இந்தத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தால், தமிழ்நாட்டிலே பட்டினிச் சாவுகள் முதலிலே மேலப்பாளையத்திலேதான் ஆரம்பிக்கும் என்கிற ஒரு வருத்தமான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளுக்கு இதுவரை தினசரிப் பத்திரிகைகள், நடுநிலை நாளேடுகளான ஹிந்து, தினமணி, முரசொலி ஆகியவை வாங்கப்பட்டு வந்தன. தற்போது அவை நிறுத்தப்பட்டு, மக்கள் குரல், நமது எம்ஜிஆர்., நியூஸ் டுடே ஆகிய இதழ்கள் மட்டும் வரவழைக்க ஆணையிடப்பட்டுள்ளது. நடுநிலை ஏடுகளை நிறுத்திவிட்டு, ஆளும் கட்சி ஆதரவுப் பத்திரிகைகளை மட்டும் வாங்கும் செயல் கண்டிக்கத்தக்கது. கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 16-ல் பொது அறிவை மேம்படுத்தும் வகையில் நாளிதழ் வாங்குவதாகக் குறிப்பிட்டுள்ளதை உண்மையாக்கும் வகையில் ஆட்சி அதிகாரத்தின் துணையோடு கட்சித் திணிப்பை ஏற்படுத்தும் ஆணையை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், தானைத் தலைவர் கலைஞர் அவர்களும் இந்த மண்ணில் தோன்றியிருக்காவிட்டால் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினரின் வாழ்வு கேள்விக்குறியாக இருந்திருக்கும் எனக் கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பினைச் சரியாகப் படிக்கவில்லை என்று நான் கருதுகிறேன். பல்வேறு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய தொழிற் பயிற்சியை, தங்களுடைய ஆட்சிக் காலத்திலே கொண்டு வந்ததாக அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அந்தத் தொழிற் பயிற்சிக்கென்று அவர்கள் தனியாக நிதியொதுக்கீடு செய்தார்களா? ஏழைக் குழந்தைகள் தங்கிப் படிக்க வேண்டிய அந்த விடுதிக்குக் கட்டடம் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்துதானே அவர்கள் செலவழித்தார்கள்? அதை அவர்கள் மறுப்பதற்குத் தயாரா என நான் கேட்க விரும்புகிறேன்.



*பிற்பகல் 4-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சொ. கருப்பசாமி.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண குக்கிராமத்தில், ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை சங்கரநயினார்கோயில் தொகுதியில் இதுவரை இல்லாத அளவுக்கு இரண்டாவது முறையாக வெற்றிபெறச் செய்து, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் தலைவராகவும் நியமனம் செய்து, இம்மாமன்றத்தில் மீண்டும் பேசுவதற்கு முகவரி தந்த மாண்புமிகு மாதர்களின் குலவிளக்கு, மங்கா தமிழகத்தைக் காத்து வந்த தெய்வம் தந்த ஒரு விளக்கு, தென்னகத்தின் திருவிளக்கு, ஏழைகளின் இல்லம் எல்லாம் நிறைந்து இருக்கிற தமிழகத்தின் ஒளி விளக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியைப் பொற்பாத மலர்களில் சமர்ப்பிக்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

சங்கரநயினார்கோயில் தொகுதியில் இரண்டாவது முறையாக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச்செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், தோழமைக் கட்சிகளைச் சார்ந்தவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முந்தைய ஆட்சியில், இதே மாமன்றத்தில் மக்கள் பிரச்சினையை முன்வைத்துப் பேசியபோது என்னை முந்தைய ஆட்சியாளர்கள் அடித்து, மிதித்து, உதைத்து, கொலை முயற்சி செய்த நேரத்தில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியால் தப்பித்தேன். எலும்பு முறிவு ஏற்பட்டு பாதிக்கப்பட்ட என்னை....(குறுக்கீடு) I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியிலே என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்களா, சட்டமன்றத்திலே என்று சொல்கிறார்களா? எப்போது என்று எனக்கே தெரியவில்லை என்பதாலேயே கேட்கிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் 22—3—1999 அன்று, தேதியைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். நீங்கள் வேண்டுமென்றால் அவை நடவடிக்கைக் குறிப்பில் பார்த்துக்கொள்ளலாம். அன்றயதினம், முந்தைய ஆட்சியாளர்களால், மக்கள் பிரச்சினையைச் சட்டமன்றத்திலே எடுத்துப் பேசுகின்ற நேரத்திலே, தி.மு.க. ஆட்சியில் இதே அவையில் நான் பேசுகின்றபோது, மக்கள் பிரச்சினையை எடுத்துப் பேசுகின்றபோதுதான் என்னை அடித்து, மிதித்து, உதைத்து கொலை செய்ய முயற்சி செய்த நேரத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வத்தின் நல்லாசியால் தப்பித்தேன். எலும்பு முறிவு ஏற்பட்டு பாதிக்கப்பட்ட நான் சிகிச்சை பெறுவதற்காக மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறும்போதுகூட அன்றைய ஆட்சியாளர்கள் மருத்துவமனை டாக்டர்களை மிரட்டி, என்னென்ன செய்ய வேண்டுமோ (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை கெடுதல்களையும் செய்தும் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணையால் பரிபூரணமாகக் குணமடைந்தேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கற்பனை வளத்தை நான் பாராட்ட விரும்புகிறேன். அப்போது ஏற்பட்ட நிகழ்ச்சியே வேறுவிதமானது. இருந்தாலும்கூட அவர் சொல்வதை நான் மறுக்க விரும்பவில்லை. இருந்தாலும் இந்த அவையில் நான் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறபோது, இப்படி ஒரு கருத்தைச் சொல்லும்போது, அன்றைக்கு நான் இந்த அவையில் முன்னவராக இருந்தவன் என்ற காரணத்தால் அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதையும், இது உண்மைக்கு மாறானது என்பதையும் நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மானியக் கோரிக்கையில் பேசலாம்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உண்மைக்கு மாறான தகவலை இந்த அவைக்குத் தருகிறார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் இதுபோன்ற சம்பவமே நடக்கவில்லை என்று கூறியிருக்கிறார். உண்மையிலேயே இதுதான் வருந்தத்தக்கது. சட்டமன்ற



நிகழ்ச்சியிலே, அன்று நடந்த நிகழ்ச்சியின்போது சட்டமன்றத்திலே நான் இல்லை. ஏனென்றால், அன்று என்னைத் தூக்கி வெளியே அனுப்பிவிட்டார்கள். அதனால் நான் அன்றைக்கு இல்லை. ஆனால், கருப்பசாமி இங்கே இருந்தார். திரு கருப்பசாமி அவர்களை உறுப்பினர்கள் எல்லாம் வந்து, செருப்புக் காலால் மிதித்து, அடித்து, அவருக்குக் கையிலே காயம் ஏற்பட்டு, மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, அங்கே (குறுக்கீடு) இல்லை, அவர் மருத்துவமனையிலே....

*பிற்பகல் 4-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எதிர்க்கட்சியிலே அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடக்கவில்லை என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மருத்துவமனையிலே அவர் அனுமதிக்கப்பட்டு, கை முறிந்த நிலையில் கிட்டத்தட்ட 15 நாட்கள் அங்கே சிகிச்சை பெற்றார் என்பதுதான் உண்மை. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் சொல்கிறார்கள். அந்த நிகழ்ச்சியே நடக்கவில்லை என்று எதிர்க்கட்சியினர் கூறுவது எந்தவிதத்தில் நியாயமானது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து, பத்திரிகைகளிலே எல்லாம் செய்தி வந்தது. தாமரைக்கனிக்கும், வீரபாண்டி ஆறுமுகத்திற்கும் இடையே ஏற்பட்ட மோதலையொட்டி, அவையிலே ஏற்பட்ட குழப்பத்திலே சில அசம்பாவிதங்கள் நடந்திருக்கலாம். நீங்கள் பிரச்சினையை அத்தோடு விட்டுவிட்டு, மானியக் கோரிக்கைக்கு வாருங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குலதெய்வத்தின் அருளாலும், அன்னையின் நல்லாசியாலும், எத்தனையோ ஏழைகளை வாழ வைப்பதைப்போல, என்னையும் வாழவைத்த, வாழ வைத்துக் கொண்டிருக்கின்ற இதயதெய்வம் புரட்சித் தலைவியை மீண்டும் இருகரம் கூப்பி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. சொ. கருப்பசாமி] [2001 செப்டம்பர் 7

பழங்குடியினர் நலன், ஆதிதிராவிடர் நலன், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலத் துறை மானியக் கோரிக்கைகளிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில், மக்கள் எந்த அளவிற்கு நலன்களைப் பெறுகிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்துறையில், தாழ்த்தப்பட்ட, குறிப்பாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த, 11 ஆம், 12 ஆம் வகுப்புப் படிக்கின்ற அனைத்து மாணவிகளுக்கும், இலவசமாக மிதிவண்டி வழங்கும் அற்புதமான திட்டத்தை உருவாக்கி, அதற்காக 20.00 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்த, இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நான் மகிழ்ச்சியோடு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட சுய உதவிக் குழுக்களை அமைத்து, தொழிற் பயிற்சி பெறுவதற்கு 20,000 மகளிர்களைக் கொண்டு சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் அற்புதமான திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. மேலும் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில் 11,000 பேர்; ஆக மொத்தம் 31,000 பேர் சுய வேலைவாய்ப்புப் பெறும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இதுவரையில் எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் சாதனை படைத்துள்ளார்கள். ஆனால், முந்தைய ஆட்சிக் காலத்தில் 4,700 பேர் மட்டுமே தொழிற் பயிற்சி பெற்றுள்ளார்கள் என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. காலையில் மாண்புமிகு உறுப்பினர் திருவாரூர் அசோகன் அவர்கள் பேசுகையில் 'தாட்கோ' சரியான முறையில் செயல்படவில்லை என்பதை அவர்களே ஒப்புக்கொண்டார்கள். முந்தைய ஆட்சியில், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1995–96 ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்த நேரத்தில், மேம்பாடு செய்ய வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ.29.56 கோடி; கடந்த 1996–97 தி.மு.க. ஆட்சியில் ஒதுக்கப்பட்டு, செலவு செய்யப்பட்டது ரூ.21.46 கோடியாகும். 1997–98 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு ரூ.25.47 கோடி; 1998–99 ஆம் ஆண்டு ரூ.30.72 கோடி; 1999–2000 ஆம் ஆண்டில் ரூ.49.29 கோடி. 2000–2001 ஆம் ஆண்டில் ரூ.63.45 கோடி மட்டுமே நிதியாகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் குறிப்பிட்டுச் சொல்லப் போனால்,



2001 செப்டம்பர் 7] [திரு. சொ. கருப்பசாமி]

S.T. துப்புரவுப் பணியாளர்கள், scavengers போன்றவர்களுக்கெல்லாம், கொடுக்க வேண்டிய மானியமும், விளிம்புத் தொகை மட்டும் ஏறக்குறைய 33.00 கோடி ரூபாய் இருப்பில் வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள் முந்தைய தி.மு.க. ஆட்சியில். இவற்றையெல்லாம் – கடனாகக் கொடுக்க வேண்டிய நிதி – தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்க முடியாமல் அவர்கள் வேதனையோடு இருப்பதை மக்கள் நன்கு அறிவார்கள். ஆனால், முந்தைய ஆட்சியில் 'வழிகாட்டி ஏடு' என்ற ஏட்டிலே, கறுப்பு, சிவப்பிலே ஒரு விளம்பரத்தைப் போட்டு, கடன்கள் கொடுப்பதாகச் சொல்லி, 3,500 மனுக்களைப் பெற்று கடந்த 2 ஆண்டுகாலமாகக் கிடப்பில் போட்டுவிட்டார்கள். யாருக்கும் கடன் கொடுக்கப்படவில்லை. அந்த அளவிற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கடந்த ஆட்சியில் துரோகம் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிய வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4–55

அதுபோல் முந்தைய ஆட்சியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு விவசாயக் கிணற்றை ஆழப்படுத்தவோ, பம்பு செட் அமைக்கவோ அல்லது கிணறு வெட்டுவதற்கோ எந்தக் கடனும் கொடுக்கப்படவில்லை. கடந்த ஆட்சியில் விவசாயிகள் இவற்றையெல்லாம் எண்ணி மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். விவசாயிகள் ஒன்றைச் சொல்வார்கள்; 'தேரோட்டி வாழ்ந்த மன்னர் காலந்தொட்டு, காரோட்டி வரும் கனவான்கள் வரை, ஏரோட்டி உணவு தந்த உழவனுக்கு, கடந்த ஆட்சியில் பாராட்ட நாதியில்லாமல் இருந்த விவசாயிகள்' என்று அவர்கள் படும் கஷ்டத்தை நஷ்டத்தையெல்லாம் அறிந்து இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற ஐந்தே நாளில்–விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டுள்ள நம்முடைய முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்–விவசாயிகளுடைய வட்டி, அபராத வட்டியாக இருந்த ரூ.311 கோடியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். எனவே, விவசாயிகள் சார்பில் நான் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. 20 இலட்சம் ஹெக்டேரில் மானாவாரி தரிசு நிலங்களைப் பண்ணைத் தோட்டங்களாக மாற்றும் திட்டத்தை உருவாக்கி இருக்கின்றார்கள். அதுபோல், ஆதிதிராவிடர் மாணவ மாணவியர்கள்

தங்கிப் படிக்கக்கூடிய விடுதிகள் 1,075 உள்ளன. இவற்றில் இன்னும் 574 விடுதிகள் வாடகைக் கட்டடத்தில் இயங்குவதாக (மணியடிக்கப்பெற்றது)– ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்–வரவு– செலவுத் திட்டக் குறிப்பில் உள்ளது. ஆனால், 1995–96–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 575 விடுதிகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதாக, அன்றைய ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக அறிவிப்புச் செய்து இருக்கிறார்கள். கடந்த ஐந்தாண்டு காலமாக இன்னும் 574 விடுதிகள் வாடகைக் கட்டடத்தில் இயங்குவதாக இருந்தால், கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில், முந்தைய ஆட்சியினர் எந்த அளவிற்குப் பள்ளி மாணவர்கள் மீது அக்கறை கொண்டிருந்தார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல. இப்போது இதய தெய்வம் அம்மா அவர்கள், அவற்றையெல்லாம் ஆய்வு செய்ததன் காரணமாகத்தான் இந்தப் பள்ளி மாணவர்களுக்கு விடுதிகளைக் கட்டுவதற்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மட்டுமல்ல, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் அனைவருக்கும் அவர்கள் தங்கிப் படிப்பதற்கு, மாணவர்கள் விடுதிகளை 25 கோடி ரூபாயில் கட்டுவதற்கு, சமமாக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் முருகவேல் ராஜன் அவர்கள்கூடச் சொன்னார்கள். மிதிவண்டிக்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்; அனைவருக்கும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், நிதியிருந்தால் எதையும் தாராளமாகக் கொடுப்பார்கள். நாங்கள் கேட்கவேயில்லை; கேட்காமலேயே மிதிவண்டியைக் கொடுத்த தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரியப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், 1995–96 ஆம் ஆண்டு 14 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 8 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் 8 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன. ஆனால், முந்தைய ஆட்சிக் காலத்தில், 1996–97 ஆம் ஆண்டு, அன்றைய ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், 5 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றியிருக்கிறார்கள். 4 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றியிருக்கிறார்கள். அதற்கும் காரணம் சொல்லியிருக்கிறார்கள், ஏன் ஐந்து கொடுத்தோம் என்று. அன்றைய முதல்வருடைய பெயர் ஐந்து எழுத்துகளால் ஆனது; அதனால்



அந்த எழுத்திற்காகத்தான் 5 பள்ளிகள் மட்டும் உயர்த்தப்பட்டன என்று அன்றைய அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதுபோல், 4 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றியிருக்கிறார். அதற்குப் பொருள் கொடுக்கவில்லை. ஒருவேளை, குடும்பத்தினுடைய எண்ணிக்கையோ என்னவோ தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களாகிய நீங்களே தெரிந்துகொள்ளுங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல கடந்த 100 நாட்களாகப் பல்வேறு பகுதிகளிலேயிருந்து இதய தெய்வம் அம்மா அவர்களை, நேரடியாகப் பார்க்க வேண்டுமென்று– ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் போன்ற அனைத்து ஏழையெளிய மக்களெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நேரடியாகப் பார்த்து, நல்லாசி பெற்று, நிதிகளையும் பெற்று, வேலைவாய்ப்புகளையும் பெற்றுக்கொண்டிருப்பதையெல்லாம் தெரிந்து–தினசரி நம்முடைய தலைமைச் செயலகத்திற்கு வந்துகொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும், கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இவற்றையெல்லாம் தினசரிப் பத்திரிகை மூலமாக, தொலைக் காட்சி மூலமாக மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்த்த உடனே, அவர்கள், வீட்டிற்கு வெளியே வராதவர்கள், வீதிக்கே வராதவர்கள், ஊனமுற்றவர்கள், ஏழையெளிய மக்களெல்லாம் வீதிக்கு வந்த வண்ணமாகக் குவிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் சென்னையிலே பவனி வந்தவர்களெல்லாம் இன்றைக்கு வீட்டில் மூலையிலே முடங்கிக் கிடக்கிறார்கள் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்கள், ஏழையெளிய மக்களெல்லாம், வீட்டிலேயிருந்த ஏழையெளிய மக்களெல்லாம் சென்னைக்கு, தலைமைச் செயலகத்திற்கு, கோட்டையை நோக்கி நம்பிக்கையோடு வருவது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 5-00*

அதுபோல என்னுடைய தொகுதிப் பிரச்சினை. மாணவர் விடுதிகளுக்கு ரூ.225 மாதம் உணவுக் கட்டணமாக இருந்ததை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.300 ஆக உயர்த்தி இருக்கிறார்கள். அதுபோல பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்கள் எல்லாம் வழங்கப் பட்டிருக்கின்றன. அதேபோல என்னுடைய தொகுதி, மாண்புமிகு அம்மா அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருப்பசாமி, அதை இன்னொரு தடவை நாம் வைத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன், (குறுக்கீடு) போதும், போதும். நேரம் இல்லை. இன்னும் 7, 8 பேர் பேச வேண்டும்.

**திரு. சொ. கருப்பசாமி:** நன்றி மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 நிமிடமா?

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை, நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையாக, பேரறிஞர் அண்ணாவின் அறிவுக் களஞ்சியமாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசியல் வாரிசாகத் திகழ்ந்து வருபவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

'கருணையிருந்தால் வள்ளலாகலாம்;
கடமையிருந்தால் வீரனாகலாம்;
பொறுமையிருந்தால் மனிதனாகலாம்
இந்த மூன்றுமிருந்தால் தலைவனாகலாம்'

என்று புரட்சித் தலைவர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் பாடினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மூன்றையும் ஒருங்கே பெற்றவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும்வரை அவர்கள்தான் முதலமைச்சர். இது தமிழ்நாட்டு மக்களால் எழுதப்பட்ட தீர்ப்பு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய சங்கரன்கோவில் தொகுதி மக்கள்மீது மாண்புமிகு அம்மா அவர்கள் தங்களின் கருணையான பார்வையைச் செலுத்த வேண்டும். ஏனென்றால், இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என்றைக்கும் சங்கரன்கோவில் தொகுதி மக்கள் ஆதரவு தருபவர்களாக இருந்து வருகின்றார்கள். அங்கும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. குடி தண்ணீர்ப் பிரச்சினை, சாலைகள், பஸ் போக்குவரத்து அனைத்தும் நலிவுற்று, கடந்த 5 ஆண்டு காலங்களிலே பழி வாங்கிவிட்டார்கள். அந்தப் பழி வாங்கும் படலத்தினால் எங்கள் தொகுதி மக்கள் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கண்ணீரையெல்லாம் துடைக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன். (குறுக்கீடு) என்ன சொல்லுங்கள்.

***திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருப்பசாமி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசில் ஆதிதிராவிட மாணவ–மாணவியர்களுக்கு விடுதிகள் கட்டப்படவில்லையென்ற குற்றச்சாட்டை எழுப்பியிருக்கிறார்கள். உதாரணமாக, கடந்த 1996–லிருந்து, 2001 வரை மாணவர் விடுதிகள் கட்டுவதற்கு 53 கோடியே. 20 இலட்சம் ரூபாய் செலவில் 166 விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டு இதுவரை 40 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் 126 விடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை இந்த அவையில் கூறிக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் இதுபோன்ற தவறான தகவலைத் தரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன். (குறுக்கீடு) இல்லை. அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்கள். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே விளக்கம் சொல்லும்போது சொல்வார்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** பழி வாங்கிவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருப்பசாமி, நீங்கள் உட்காருங்கள். திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர் நலன் குறித்த மானியக் கோரிக்கையின்பேரில் எனது கருத்துகளை எடுத்து வைக்கின்ற வாய்ப்பை வழங்கிய உங்களுக்கு எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப்பட்டு, ஒதுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, சுரண்டப்பட்டு, மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தப்பட்டு வருகிற ஒரு சமுதாயத்தின் குரலை, அவர்களுடைய பிரச்சினைகளை இங்கே பிரதிபலிப்பதற்கு நீங்கள் தக்க வகையிலே கொஞ்சம் நேரம் ஒதுக்கித் தரவேண்டுமென்று முதலிலே என்னுடைய கோரிக்கையை முன்வைக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

ஒன்பதாவது முறையாக இந்த ஆதிதிராவிடர் நலன் குறித்த மானியக் கோரிக்கையின்பேரிலே நான் இன்றைக்குப் பேசிக்கொண்டிருக்கிறேன். ஏறக்குறைய ஒன்பது முறை இந்த Demand–லே நான் பேசியிருக்கின்றேன். ஒன்பதாவது முறையாக இன்றைக்குப் பேசிக்கொண்டிருக்கின்றேன்.

2002–லே உலக மக்கள்தொகையிலே ஐந்தில் ஒருவன் இந்தியனாக இருப்பான் என்று சொல்கிறார்கள். அதிலே ஐந்தில் ஒருவன் இந்தியாவிலே தலித்தாக இருப்பான். தமிழ்நாட்டின் மக்கள்தொகையிலே ஏறக்குறைய 21 சதவிகிதம் பேர் ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் இருக்கிறார்கள். இவ்வளவு பெரிய மக்கள் தொகையை உள்ளடக்கிய மிகப் பெரிய வாக்கு வங்கியான இந்த மக்களின் பிரச்சினைகளை நெடிய நேரம் பேச வேண்டும். நிறைய யோசனைகளை, கருத்துகளை வழங்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

நாம் இன்றைக்கு இங்கே ஆதிதிராவிடர் நல மானியக் கோரிக்கையிலே விவாதித்துக் கொண்டிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்திலே தென் ஆப்பிரிக்காவிலே, டர்பன் நகரிலே உலகளாவிய ஒரு மாநாடு நடந்து கொண்டிருக்கிறது. இன வெறி, இன ஒதுக்கல், இனப் பாகுபாடு இவற்றை உலகளாவிய அளவிலே அறவே ஒழிக்க வேண்டுமென்று ஒரு மாநாடு நடத்தப்படுகிறது. இந்த மாநாட்டிலே இந்தியாவிலே அழுந்திக் கிடக்கின்ற 20 கோடி தலித் மக்களின் பிரச்சினைகளைப் பேச வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் நீண்டகாலமாக, ஓராண்டு காலமாக வலியுறுத்தி வருகிறோம். சென்ற முறை, ஜெனிவாவில் நடந்த மனித உரிமை மாநாட்டிலேயே, இதை வலியுறுத்தினோம்; எங்கள் பிரதிநிதிகள் வலியுறுத்தினார்கள். ஓராண்டு காலமாகத் தொடர்ந்து வலியுறுத்துகிறோம். ஆனால் என்ன காரணத்தினாலோ மத்தியிலே ஆளுகிற பாரதிய ஜனதா அரசு 'இது உள்நாட்டுப் பிரச்சினை; இது சகோதரர்களுக்கிடையே இருக்கிற பிரச்சினை, இதுகுறித்து வெளிநாட்டிலே பேச வேண்டிய அவசியம் இல்லை' என்ற பிற்போக்குத்தனமான, மூடத்தனமான ஒரு கொள்கையைக் கையாண்டு வருகிறது. இந்தப் பாரதிய ஜனதா அரசு, அந்த மாநாடு குறித்து குறைந்தபட்சம், மாநில அரசுகளையாவது கலந்து ஆலோசித்திருப்பார்களா என்று எனக்குத் தெரியவில்லை. அப்படி கலந்து ஆலோசித்திருப்பதாகவும் தெரியவில்லை. எனவே நம்முடைய மாநில அரசு, மத்திய அரசை – டர்பன் மாநாட்டிலே, ஒதுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்கு, இன வேறுபாடு என்பதும், சாதிய வேறுபாடு என்பதும் வேறல்ல; ஆனால், சாதிய வேறுபாடும், இன வேறுபாடும் ஒன்றே என்று வலியுறுத்துவதற்கு மத்திய அரசை–மாநில அரசு நிர்ப்பந்திக்க வேண்டும் என்று நான் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



*பிற்பகல் 5–05*

உள்ளாட்சித் தேர்தல்கள் வரவிருக்கின்றன. அறிவித்து இருக்கிறார்கள். உள்ளாட்சித் தேர்தல்களிலே, தலித் மக்களுக்கு முறையான இட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்ற ஒரு கேள்வி இருக்கிறது. மதுரை போன்ற மாவட்டங்களில் சில பஞ்சாயத்துகளிலே இன்னும்கூடத் தேர்தல்கள் நடக்கவில்லை. இட ஒதுக்கீடு செய்து, தலித் மக்களுக்காக அந்தப் பஞ்சாயத்தை ஒதுக்கி, ஐந்தாண்டு காலமாகியும் அந்தத் தேர்தல்களை நடத்த முடியவில்லை. அது கிடக்கட்டும்.

மாநகராட்சி மேயர் பதவியிலே, இட ஒதுக்கீடு தர வேண்டும் என்று வலியுறுத்தினோம். 6 மாநகராட்சிகள் இருக்கின்றன; சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி. இவற்றிலே இட ஒதுக்கீடு வேண்டுமென்று சொன்னால், வழக்கமாக இட ஒதுக்கீட்டு முறையை எப்படிப் பின்பற்றுவார்கள் என்று சொன்னால், எந்த நகரத்திலே அதிகமான தலித் மக்கள் இருக்கிறார்களோ, அந்த நகரத்தை ஒதுக்குவார்கள். எங்கே அந்த மக்கள்தொகை அதிகமாக இருக்கிறதோ அதை ஒதுக்குவார்கள். அதுதான் மரபு. அதுதான் தேர்தல் ஆணையமே பின்பற்றுகிற மரபு. அப்படி இந்த 6 மாநகராட்சிகளிலே, தலித் மக்களுக்கு ஒரு மாநகராட்சி ஒதுக்கப்பட்டு இருக்க வேண்டுமென்று சொன்னால், அது சென்னை மாநகராட்சியாகத்தான் இருந்திருக்க வேண்டும். சென்னை மாநகராட்சிதான் மக்கள்தொகை அடிப்படையிலே, தலித் மக்களின் விகிதாசாரப்படி ஒதுக்கப்பட வேண்டிய ஒரு மாநகராட்சி. ஆனால் கடந்த முறை, முதலமைச்சராக இருந்தவர் தன்னுடைய சொந்த குடும்ப சுயநலத்தோடு, தனது மகன், மாநகரத் தந்தையாக வரவேண்டும் என்கிற உணர்வோடு, இந்த மாநகரத்திலே 30 சதவிகித மக்கள் தலித் மக்களாக இருந்தபோதும், ஏறக்குறைய 250 சேரிகள் இந்த மாநகரத்திலே இருந்தபோதும், இந்த மாநகரத்து மேயர் பதவியைப் பொதுவானதாக மாற்றினார்கள்; திருநெல்வேலிக்குக் கொண்டுபோய்த் தந்தார்கள். திருநெல்வேலியும் எப்படி என்று சொன்னால், அதுவே பெண்களுக்குமான இட ஒதுக்கீடு, அதுவே தலித் மக்களுக்குமான இட ஒதுக்கீடு. சமீபத்திலே, திரைப்படத்திலே, ஒரு கதை வரும். அது எந்த வாழைப் பழம் என்றால், அதுதான் இது; இதுதான் அது என்று சொல்வார்களே அதைப்போல. பெண்களுக்கு எது அந்த 6 மாநகராட்சிகளிலே என்றால், திருநெல்வேலி. தலித்துகளுக்கு எங்கே இட ஒதுக்கீடு என்று சொன்னால், அதுவும் திருநெல்வேலி. இப்படி வாழைப் பழக் கதையாகக் கடந்த ஆட்சியிலே, முதலமைச்சர் அவர்கள் தனது மகனை இந்த சென்னை மாநகரத்து மேயராக உருவாக்க வேண்டுமென்ற ஒரு குறுகிய சுயநல உணர்வோடு,

[திரு. செ.கு. தமிழரசன்] [2001 செப்டம்பர் 7

சென்னை மாநகர மேயர் பதவியை, நியாயமாக தலித்துகளுக்குக் கிடைக்க வேண்டிய அந்தப் பதவியை, அந்தப் பொறுப்பை, அந்த இட ஒதுக்கீட்டை, மரபுகளை மீறி மாற்றினார்கள். ஆகவே, உள்ளாட்சித் தேர்தல் நடைபெற வேண்டிய இந்தச் சந்தர்ப்பத்திலே, நான் ஒரு கருத்தை வலியுறுத்திக்கொள்கிறேன். நியாயப்படி, மரபுப்படி... *(குறுக்கீடு)*

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, அவர் பேசட்டும். நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. செ.கு. தமிழரசன்:** உறுப்பினர் சொல்லட்டும்; நான் பதில் சொல்கிறேன். I am ready to answer. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் சீக்கிரம், அவர் தண்ணீர் குடிக்கிற நேரத்திற்குள் பேசி முடித்து விடுங்கள், ஒரே நிமிடத்திற்குள்.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த உள்ளாட்சித் தேர்தல் என்பது, நேரடியாக அரசாங்கம் தலையிட்டு, நடத்துவதல்ல. இதற்கென்றே தனித் தேர்தல் கமிஷன் இருக்கிறது. அவர்கள்தான் வரையறுத்து, எந்தெந்த ஒதுக்கீடு பெண்களுக்கு, ஆதிதிராவிடர்கள் எந்தெந்த ஊராட்சிகளுக்கு, எந்தெந்த மாநகராட்சிகளுக்கு என்று, தேர்தல் கமிஷன்தான் ஒதுக்குகிறது. அப்படி ஒதுக்கீடு செய்த அடிப்படையிலேதான் சென்னை மாநகரம் ஒதுக்கப்பட்டதேயொழிய, தனிப்பட்ட முறையில் முதலமைச்சர் இதை ஒதுக்கவில்லை என்பதையும் அவர் தலையிடவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது ஒரே கேள்வி மரபுப்படி, முறைப்படி, தலித் மக்களின் மக்கள்தொகை எங்கே அதிகமாக இருக்கிறதோ, அந்த மாநகராட்சி இட ஒதுக்கீட்டின் வழியாக முன்னுரிமை தந்து வழங்கப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியானால், இந்த 6 மாநகராட்சிகளிலே, சென்னை மாநகராட்சியிலேதான் 30 சதவிகிதம் தலித் மக்கள் இருக்கிறார்கள். One–third–30 சதவிகிதம்–இருக்கிற இந்த சென்னை மாநகராட்சிதான் முன்னுரிமை அடிப்படையிலே, முதலிலே மாநகரத் தந்தைக்கு இட ஒதுக்கீடு முறையிலே வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஏன் அந்த மரபு மாற்றப்பட்டது; மீறப்பட்டது; அந்த விதிகள் மீறப்பட்டன என்பதுதான் என் கேள்வி. எதற்காக? யாருக்காக? யாரை நிறுத்துவதற்காக அது மாற்றப்பட்டது? ஏன் அந்த மரபு கைவிடப்பட்டது? அதுதான் என்னுடைய கேள்வி. அந்தக் கேள்விகளுக்குத்தான் நான் பதிலை எதிர்பார்க்கிறேன். சொல்ல முடியுமானால் சொல்லட்டும்.



2001 செப்டம்பர் 7] [திரு. செ.கு. தமிழரசன்]

*பிற்பகல் 5–10*

அடுத்தபடியாக நம்முடைய தமிழக அரசு பிறப்பித்திருக்கிற அந்த 44–வது அரசு ஆணையைச் செயல்படுத்தலாமா என்று கடந்த ஆட்சியாளர்கள் ஓர் ஆணையத்தை முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி சாமிதுரை தலைமையிலே ஏற்படுத்தினார்கள். 44–வது அரசு ஆணை என்பது எல்லா நிலைகளிலும் பதவி உயர்விலே தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பது. அது அரசியல் சட்டத்தின் அடிப்படையிலே அமைந்த ஓர் ஆணை; அரசு பின்பற்றிய ஓர் ஆணை. ஆனால் அந்த ஆணையைக் கிடப்பிலே போட்டு ஒரு சுற்றறிக்கையின் மூலம் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 33–வது அரசு ஆணையை ஏற்படுத்தியது. நாங்கள் 44–வது அரசு ஆணையைச் செயல்படுத்த வேண்டும் என்று ஊர்வலம் நடத்தி ஆளுநர் மாளிகைக்கே போய் ஆளுநரிடமே ஒரு மனுவைத் தந்தோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அரசியல் சட்டத்தையே மீறி இருக்கிறது; அரசியல் சட்டத்திற்கு முரணாக இந்த ஆணையைப் பிறப்பித்திருக்கிறது என்று சொன்னோம். இன்றைக்கு இந்த ஆட்சி புதிய ஆட்சி ஏற்பட்ட பின்னாலே புரட்சித் தலைவி அவர்கள் இந்த அரசு ஆணையை நிறைவேற்றுவதாக இந்த மாமன்றத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். அதை விரைவிலே நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

பத்திரிகைகளிலே தினம் தினம் பார்த்தால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த சுய நிதிக் கல்லூரிகளிலே இடம் கிடைத்தும் சேர முடியாத மாணவர்களுக்கு ஒவ்வொரு நாளும் நிதி தருவதைப் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். சுய நிதிக் கல்லூரியிலே இடம் கிடைத்தும் ஏழை மாணவர்கள், தலித் மாணவர்கள், மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பணம் கட்டுவதற்கு வசதி இல்லாதபோது முதலமைச்சர் அவர்கள் நிதி தருவதைப் பத்திரிகையிலே ஒவ்வொரு நாளும் பார்த்து வருகிறேன். நான் இந்த அரசிடம் ஒன்றைப் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன். ஒவ்வோர் ஆண்டும் 200 மாணவர்களுக்கு அல்லது 250 மாணவர்களுக்கு என ஒரு

வரையறை வைத்து இவ்வளவு மாணவர்களுக்கு சுய நிதிக் கல்லூரியிலே இடம் கிடைத்தாலும் அவர்களுக்குப் பணம் இல்லை என்கிறபோது அரசே கட்டவும், அதற்கு வேண்டுமானால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பெயரிலே 'புரட்சித் தலைவி கல்விக் கட்டண உதவித் தொகை' என்றே ஒரு திட்டத்தை வைத்து அதை நீங்கள் கொண்டு வருவீர்களானால் (மேசையைத் தட்டும் ஒலி) – இப்போது ஏராளமாக புதிய அரசுக் கல்லூரிகள் இல்லை. அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்து வீர்களேயானால்–நன்றாக இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட மாணவர்களும், இளைஞர்களும் இன்றைக்குப் பெருமளவிலே படித்துவிட்டு கிராமப்புறங்களிலே வேலையில்லாமல் இருக்கிறார்கள். 'வேலையற்றவர்கள் நெஞ்சிலே விபரீத எண்ணங்கள்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள். 'சாலையோரம் சில வேலையற்றதுகள்; வேலையற்றதுகள் நெஞ்சத்திலே விபரீத எண்ணங்கள்' என்று அண்ணா அடிக்கடி கூட்டங்களிலே சொல்வார். இன்றைக்கு ஏராளமான தலித் இளைஞர்கள், படித்துவிட்டு கிராமப்புறங்களிலே வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வழியும் உடனடியாகத் தெரியவில்லை. அவர்களுக்கு வேலை கிடைப்பது என்பதே ஏதோ ஒரு புதிய கவிஞன், 'கோயிலுக்குப் போவது மட்டுமா மூடநம்பிக்கை, வேலைவாய்ப்புத் துறை அலுவலகத்திற்குப் போவதும் மூடநம்பிக்கை' என்று சொல்வதுபோல அப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. எனவே நான் இந்த அரசிடம் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படி வேலை கிடைக்கிற வரை படித்த தலித் இளைஞர்களுக்கு மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்குவோம் என்று சொல்வீர்களானால் தமிழ்நாட்டிலே இத்தகைய இளைஞர்கள் திசை திருப்பப்படுவது, அவர்கள் தீவிரவாதத்தைப் பின்பற்றுவது, முறையற்ற வழிகளுக்குப் போவது, கலவரங்களிலே ஈடுபடுவது போன்றவற்றை எல்லாம் தடுக்க முடியும்; கொஞ்சம் அமைதியைக் கொண்டுவர முடியும். எனவே ஆயிரம் ரூபாயை, படித்த தலித் இளைஞர்களுக்கு மாதந்தோறும் நிவாரணமாக வழங்குகிற திட்டத்தை இந்த அரசு கொண்டு வர வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இவ்வளவு பெரிய சென்னை மாநகரத்திலே தலித் மாணவிகளுக்கு என்று ஒரே ஒரு விடுதிதான் இருக்கிறது; இராயபுரத்திலே மட்டும் இருக்கிறது. மாணவர்களுக்கு ஏராளமான விடுதிகள் இருக்கின்றன.



துணைத் தலைவர் அவர்களுக்கே தெரியும். ஒரே ஒரு மாணவியர் விடுதி இருக்கிறது. இத்தனை கல்லூரிகள், நூற்றுக்கு மேற்பட்ட கல்லூரிகள் இருக்கின்ற சென்னை மாநகரத்திலே இலவசமாக பெண்களுக்கு என்று ஒரே ஒரு விடுதி இருந்தால் அந்த விடுதி எப்படி இருக்கும், எவ்வளவு நெருக்கடிக்குள்ளே இருக்கும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அதுகூட 1986–லேதான் கட்டப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. செ.கு. தமிழரசன்:** எனவே பெண்களின் நலனிலே அக்கறை உள்ள, அதுவும் தலித் மாணவிகள் படிக்க வேண்டும் என்பதற்காக இலவசமாக சைக்கிள் தர முன்வந்திருக்கிற, புரட்சித் தலைவி அரசு சென்னை மாநகரத்திலே பெண்களுக்கு அதிகப்படியான இட வசதி உள்ள ஆதிதிராவிடர் விடுதிகளை உருவாக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதேபோல படிக்கிற தலித் மாணவர்களுக்கு ஓர் உச்சவரம்பைக் கொண்டு வந்து இருக்கிறார்கள்; கல்விக் கடன் தரப்படுகிறது வங்கிகளிலே. அதற்கு உச்சவரம்பு கொண்டு வந்திருக்கிறார்கள். ஆண்டுக்கு 50000–க்கு மேலே அவர்களுடைய பெற்றோர்களுக்கு வருமானம் இருக்குமானால்–இது கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த உச்சவரம்பு–அவர்களுக்குக் கடன் தர வேண்டாம் என்று இருக்கிறது. உதாரணமாக சாதாரண ஒரு கடைநிலை ஊழியன் இருக்கிறானே, அவனுடைய ஆண்டு வருமானம்கூட சில துறைகளிலே 60 ஆயிரத்துக்கும் மேலே போகும். மத்திய அரசுத் துறை, இரயில்வே, எல்.ஐ.சி., வங்கிகள் போன்ற நிறுவனங்களிலே வேலை செய்கிற கடைநிலை ஊழியர்களுடைய வருமானம்கூட ஆண்டுக்கு 60 ஆயிரத்துக்கும் மேலே போகும். ஆகவே, 50 ஆயிரம் என்கிற அந்த உச்சவரம்பைத் தளர்த்தி ஒரு இலட்சமாகவோ அல்லது ஒன்றரை இலட்சமாகவோ உயர்த்த வேண்டுமென்கிற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 5-15*

அதேபோல தொழிற் கல்வி படிக்கிற ஆதிதிராவிட மாணவர்களுக்கு arrears; அதாவது தேர்வுகளிலே நிலுவை இருக்குமானால், அவர்களுக்குக் கல்விக் கடன் தரப்பட மாட்டாது என்கிற ஓர் ஆணையை கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு பிறப்பித்திருக்கிறது. இந்த ஆணை பின்பற்றப்படுமேயானால், இன்ஜினியரிங் படிக்கிற, டாக்டருக்குப் படிக்கிற,

தொழிற் கல்வி படிக்கிற பல ஆதிதிராவிட மாணவர்கள் கடனே பெற முடியாது. Arrears இல்லாத M.B.B.S. மாணவனே இருக்க முடியாது. Arrears இல்லாத இன்ஜினியரிங் மாணவனே இருக்க முடியாது. ஆகவே, அந்தக் கல்வித் தேர்ச்சிகளிலே நிலுவை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் கடன் தருவதற்கு என்ன நிபந்தனை, கடன் தருவதற்கு என்ன உச்சவரம்பு என்பதை மட்டும் கவனித்து, அந்த ஆணையைத் தளர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபொழுது, loan scholarship பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்த loan scholarship பெறுவதில் *1991–96* வரையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அந்த நிபந்தனைகள் கிடையாது. அதற்குப் பின்னாலே வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே *20–12–2000* அன்று இந்த loan scholarship பெறுகின்றவர்களுக்கு நிபந்தனை போட்டார்கள். மீண்டும் *2001*–ல் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இந்த நிபந்தனைகளெல்லாம் நீக்கப்பட வேண்டுமென்று பல்வேறு விண்ணப்பங்கள் வந்திருக்கின்ற காரணத்தினால், அத்துணை மனுக்களையும் பரிசீலனை செய்து, இனிமேல் ஒரு நிபந்தனையும் வேண்டாம் என்ற கருத்துரு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பரிசீலனையில் உள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, அடுத்த பத்தாவது மானியக் கோரிக்கை அடுத்த வருடம் வர இருக்கிறது. அதிலே மற்றவற்றைப் பேசிக்கொள்ளலாம். சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிபந்தனையைத் தளர்த்தியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு வெளிநாடுகளிலே போய்ப்



படிப்பது என்பது மிக எளிதான ஒரு விஷயமாக நாட்டிலே வந்து விட்டது. ஆதிதிராவிட, தலித் மாணவர்கள் வெளிநாடுகளிலே போய்ப் படிப்பதற்கு ஒரு தனித் திட்டத்தை, ஓர் ஆண்டுக்கு *10* மாணவ மாணவியர்களை, அதிகமான மதிப்பெண் பெற்றவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பிப் படிக்க வைக்கிற ஒரு திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வந்தால் அது மிகப் போற்றுதலுக்குரிய, வரலாற்றிலே பாராட்டுகிற ஒன்றாக இருக்கும் என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆதிதிராவிட மாநில உயர்மட்டக் குழு என்று ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்; ஓர் ஆணையம் அமைக்கப்பட வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் இருக்கிறது. சிறுபான்மையோர் நல ஆணையம் இருக்கிறது. ஆதிதிராவிட மக்களுக்காக ஏன் ஆணையம் இருக்கக் கூடாது? ஒரு தனி நபர் ஆணையமாக வைத்து, கடந்த அரை நூற்றாண்டு காலமாக இந்த மக்களின் அரசியல், பொருளாதார, சமூக மேம்பாடு எந்த வகையிலே இருக்கிறது; அந்த மேம்பாட்டை முழுமையாக நிறைவேற்றுவதற்கு எவையெவை தேவை என்று ஆராய ஓர் ஆணையத்தை உருவாக்க வேண்டும், ஒரு கமிஷனைக் கொண்டு வரவேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

தீண்டாமை ஒழிப்பு பற்றியெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். கடந்த முறை இதே சட்டப் பேரவையிலே அன்றைய முதலமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பைத் தந்தார்கள். தமிழ்நாட்டிலே ஆயிரம் தேநீர்க் கடைகளிலே தீண்டாமை கடைப்பிடிக்கப்படுகிறது; தனி டம்ளர் முறை இருக்கிறது என்று இந்த அவையிலே கடந்த முறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபொழுது முன்னாள் முதல்வர் அவர்கள் இந்த அவையிலேயே ஒரு செய்தியைத் தந்தார்கள். தமிழ்நாட்டிலே மட்டும் ஆயிரம் கிராமங்களிலே தேநீர்க் கடைகளிலே தனி டம்ளர் முறை இருக்கிறது என்று அவர் சொன்னாரே தவிர, அதைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று சொன்னால், அது ஏமாற்றம் அளித்தது. அதைத் தவிர்ப்பதற்கு, அதுபற்றித் தீவிர நடவடிக்கை எடுப்பதற்கு இன்றைக்கு உரிய நடவடிக்கைகள் வேண்டும்.

பல இயக்கங்கள் இன்றைக்கு பி.சி.ஆர். சட்டத்தை எடுங்கள் என்று செயல்படுகின்றன. ஏன்? காவல் துறைக்கு உரிய அதிகாரம் வழங்க வேண்டும். காவல் துறைக்கு உரிய அதிகாரத்தை வழங்கி, நேரடி நடவடிக்கைகளில் இறங்கினாலொழிய இதைக் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் என்ன நிலைமை என்று சொன்னால், சென்னை மாநகர காவல் துறை ஆணையராக ஒரு தலித் இருக்கிறார். ஓர் அரசியல் கட்சி

ஊர்வலம் நடத்துகிறது. அந்த ஊர்வலத்திலேயே அவருடைய சாதியைப் பற்றிக் கேவலமாகப் பேசுகிறார்கள். ஓர் அரசியல் கட்சி நடத்துகிற ஊர்வலத்திலே இந்த மாநகரத்தின் காவல் துறை ஆணையராக இருக்கிற தலித்தை, அவர்கள் குடும்பத்தைப்பற்றி அவருடைய சாதியைப்பற்றி மிகக் கேவலமாகக் கோஷமிட்டு, முழக்கமிட்டு வருகிறார்கள் என்று சொன்னால், அவருக்கே இந்த நிலைமை என்று சொன்னால், கிராமப்புறத்திலே ஏர் ஓட்டுகிறவனுக்கும், விறகு பிளந்து கொண்டிருக்கிறவனுக்கும், செருப்பு தைத்துக் கொண்டிருப்பவனுக்கும், விவசாயக் கூலியாக இருப்பவனுக்கும் என்ன பாதுகாப்புக் கொடுக்க முடியும்? ஒரு பெரிய I.P.S. அதிகாரியை, சாதியைச் சொல்லித் திட்டுகிற நிலைமை இன்றைக்கு சென்னை மாநகரத்தில் இருக்கிறது. இந்த மாநகரத்திலே அதை நாம் பார்த்தோம். ஆகவே, இதுகுறித்து கடுமையான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

*பிற்பகல் .5-20*

அடுத்து நான் நீண்டகாலமாக ஒரு கோரிக்கையை முன்வைத்து வருகிறேன். தமிழ்நாட்டிலே 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட பஞ்சாயத்துகள் இருக்கின்றன என்று சொன்னால், அவ்வளவு சேரிகளும் அதற்குப் பக்கத்தில் இருக்கின்றன. ஓர் ஊர் என்றால், பக்கத்திலே ஒரு சேரி; அந்தச் சேரிக்கு ஒரு தனிக் கிணறு, தனிக் குடியிருப்பு; சேரிக்கு என்று தனி மயானம், சேரிக்கு என்று தனி வாழ்விடம்; இது ஊர், அது சேரி என்று பிரிந்தே கிடக்கிறது. தமிழ்நாட்டிலே மட்டுமல்ல. காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை ஊர் என்றும், சேரி என்றும் இன்றைக்கும் பிரிந்துதான் கிடக்கின்றன. ஆகவே, ஒரு பெரிய பட்ஜெட்டைப் போடுகிறபோது, நம்முடைய Planning Commission அப்படிப்பட்ட ஓர் அறிவுரையைச் சொல்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் விகிதாச்சாரத்துக்கு ஏற்ப நிதி ஒதுக்க வேண்டும் என்று Planning Commission அப்படிப்பட்ட advice–ஐத் தருகிறது. ஆனால் நாம் இன்னமும் மிகக் குறைந்த அளவிலேயே பட்ஜெட்டைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) எனவே, ஆதிதிராவிட மக்களுக்கு என்றே ஒரு தனி பட்ஜெட்டைப் போட வேண்டும். குறைந்த பட்சம் ஒரு சிறப்பு ஐந்தாண்டுத் திட்டத்தையாவது கொண்டு வர வேண்டும். அதுபற்றி முன்னர் முதலமைச்சராக புரட்சித் தலைவர் இருந்தபோது, அவர்கள் ஓர் அறிவிப்பை இந்த மன்றத்திலே சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்புகளுக்கு குடியிருப்பு வசதி, வீட்டுமனை வசதி, பள்ளிக்கூட வசதி, மருத்துவமனை வசதி, மயான வசதி, குடிநீர் வசதி



போன்ற அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இங்கே முதல்வராக இருந்தபோது ஒரு சிறப்பு ஐந்தாண்டுத் திட்டத்தைக் கொண்டு வருவேன், ஒரு special Five Year Plan–ஐக் கொண்டு வருவேன் என்ற அறிவித்தார். அப்படிப்பட்ட அறிவிப்பைச் செய்த பின் அவரால் கொண்டு வர முடியவில்லை. அது அதோடு ஒரு தொய்வாகப் போய்விட்டது. எனவே, புரட்சித் தலைவி அவர்கள் அந்த special Five Year Plan–ஐயாவது மீண்டும் கொண்டு வர வேண்டும்; ஒரு சிறப்பு ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்க வேண்டும். மின்சாரத் துறைக்கு இந்த அவையிலே ஒரு தனி பட்ஜெட் போடுகிறோம். ஏன் ஆதிதிராவிடர்களுக்குத் தனி பட்ஜெட் போடக்கூடாது? பொது பட்ஜெட் என்று இருக்கும்போது, மின்சாரத் துறைக்கு ஒரு பட்ஜெட் போடுகிறோம். ஆதிதிராவிட மக்கள் ஒன்றே முக்கால் கோடி மக்கள், அடித்தளத்து மக்கள் ஊர் என்றும், சேரி என்றும் தனித்தனியே இருக்கிறார்கள். ஆகவே ஒரு தனி பட்ஜெட்டைப் போடுவதற்கு ஏன் முயற்சிக்கக் கூடாது என்ற சிந்தனையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அடுத்து மாவட்டப் பெயர்கள். வேலூர் மாவட்டத்திற்கு அம்பேத்கர் மாவட்டம் என்று பெயர் வைக்க வேண்டும் என்பதற்காக 11 உயிர்களைப் பலி கொடுத்தோம். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். 11 உயிர்களைப் பலி கொடுத்தோம். 11 உயிர்களைப் பலி கொடுத்து வேலூர் மாவட்டத்திற்கு அண்ணல் அம்பேத்கர் மாவட்டம் என்று பெயர் வைத்தோம். ஆனால், கடந்த ஆட்சி அதை மிக எளிதாக எடுத்துவிட்டது. சாதியத் தலைவர்கள் பெயராலே வைக்கக் கூடாது என்று சொன்னார்கள். நாங்களும் நம்பினோம். சரி, இந்த பாபா சாகிப் அண்ணல் அம்பேத்கரை சாதியத் தலைவர் என்று ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னாலும் சரி, ஏதோ ஒரு காரணத்திற்காக எல்லாப் பெயர்களையும் எடுக்கிறார்களே, எடுத்துவிட்டுப் போகட்டும் என்று நானும் அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே நம்பினேன். ஆனால், என்ன ஆனது என்ற சொன்னால், அந்தப் பெயர்களை எடுத்தார்களே, அந்தக் கொள்கையிலே கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு உறுதியாக இருந்ததா என்றால் இல்லை. அதற்குப் பிறகு அன்றைய முதல்வர் அவர்கள் ஒரு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் மாநாட்டிலே கலந்து கொண்டார்கள். அந்த மாநாட்டிலே ஓர் உறுதியைத் தந்தார்கள். அதற்குப் பிறகு, அன்றைக்கு முதலமைச்சராக இருந்தவர் அரசினர் தோட்டத்திற்கு ஓமந்தூர் ராமசாமி அவர்களுடைய பெயரை வைத்தார். அன்று சாதிய மாநாட்டிலே அறிவித்தார்; அதன் பின்னர் வந்து பெயர் வைத்தார். இருந்த பெயர்களை எல்லாம் எடுத்தார்.

ஆனால் அதற்குப் பிறகு வைத்தார். இந்த முரண்பாடு, ஒன்றுக்குப் பின்னாலே பேசுகிற பேச்சு, கடந்த ஆட்சியிலே இருந்ததை நாங்கள் பார்த்தோம். மீண்டும் அந்தப் பெயரை ஏற்படுத்த வேண்டும். பழைய பெயர்களை வைத்தாலும் எங்களுக்குப் பிரச்சினை இல்லை. அதை வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கிறேன்.

இதே அவையிலே பாட்டாளி மக்கள் கட்சி கோரிக்கை வைத்தது என்பதற்காக, இனக் கலவரம் ஏற்பட்டபோது, அவர்கள் பெயரில் போட்ட வழக்குகளை எல்லாம் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கைவிட்டது. அதுபோல் திருநெல்வேலி மாவட்டமானாலும், தென்னாற்காடு, கடலூர், விழுப்புரம் மாவட்டங்களானாலும் ஆதிதிராவிடர்கள் பெயரில் இருக்கிற வழக்குகளையும் வாபஸ் பெற வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) ஆனால் அதை வாபஸ் பெறவில்லை. ஆகவே, வாபஸ் பெற வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

*பிற்பகல் 5-25*

ஒரேயொரு நிமிடம். அண்ணல் அம்பேத்கர் பெயரிலே மணிமண்டபம் அமைத்தார்கள். அண்ணல் அம்பேத்கருக்கு மணிமண்டபத்தை உருவாக்க வேண்டுமென்று கடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இங்கே இருந்தபோது, இதே மன்றத்தில் கோரிக்கை வைத்து, நூற்றாண்டு விழாவின்போது ஒரு சின்னத்தை ஏற்படுத்தச் சொன்னோம். திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் நூற்றாண்டு விழாவின்போது ஆட்சியிலே இருந்தது. அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மாண்புமிகு திரு. அசோகன் பேசுகிறபோது, வியாசர்பாடியிலே அண்ணல் அம்பேத்கர் பெயரிலே ஒரு கல்லூரி வைத்திருக்கிறோம் என்று சொன்னார். உண்மையிலேயே அந்தக் கல்லூரியின் வரலாறு என்ன தெரியுமா? இரண்டு இலட்சம் ரூபாய் யார் தருவதற்கு முன்வருகிறார்களோ அவர்கள் பெயரிலே வைக்க அந்தக் காலத்தில் அந்த அரசின் சட்டம் இருந்தது. இரண்டு இலட்சம் ரூபாயைத் தந்தால் அவர்கள் பெயரிலே வைக்கலாம். இரண்டு இலட்சம் நிதி திரட்டித் தருவதற்கு எங்கள் இயக்கம் எவ்வளவு கஷ்டங்கள் பட்டு, சினிமா நடிகை நடிகர்களையெல்லாம் அணுகி, நட்சத்திர கிரிக்கெட் போட்டி நடத்தியது, அதில் கிடைத்தது அந்த வசூல். அந்த வசூலும் போதவில்லை என்று பம்பாய்க்குப் போய், பம்பாயிலே அண்ணல் அம்பேத்கர் உருவாக்கிய People Education Society-ல் கடன் வாங்கினார்கள். அப்படி இந்த இரண்டு இலட்சம் ரூபாயைக் கட்டித்தான் அந்தப் பெயரை வாங்கினார்களே தவிர, அரசாங்கம் ஒன்றும் பெயரை வைக்கவில்லை. இன்றைக்கு திரு. கருணாநிதி அவர்கள் அந்தப் பெயரை ஏதோ அவராகவே வைத்துவிட்டார் என்று சொல்கிறார்களே அப்படி வைக்கவில்லை. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். என்ன திரு. உசேன், அவர் பெயரைச் சொன்னதைத் தானே சொல்கிறீர்கள், உட்காருங்கள், மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன், பேசுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** நான் அதற்கு எல்லாவிதமான விவரங்களையும் வைத்துக் கொண்டுதான் பேசுகிறேன். அந்தப் பணத்தைக் கட்டித்தான் பெயர் வந்தது. அரசுக் கல்லூரிக்குப் பணம் தந்தால் பெயர் வைக்கலாம் என்ற மரபு அன்றைக்கு இருந்தது. யார் தந்தார்கள்? குடியாத்தம் பகுதியிலே இன்றைக்கும் ஒரு கல்லூரிக்கு விசித்திரமான பெயர் இருக்கிறது. அரசினர் திருமகள் ஆலைக் கல்லூரி என்று இருக்கிறது. திருமகள் மில்ஸ் என்ற மில் பணம் தந்ததாலே, இன்னும் அரசினர் திருமகள் ஆலைக் கல்லூரி என்று பெயர். அதைப்போல பம்பாய் வரைக்கும் போய் வசூல் செய்து இயக்கங்கள் எல்லாம் பணம் கொடுத்து அந்த இரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்த பின்னாலே அதுவும் ஒதுக்குப்புறத்திலே, வடசென்னையிலே தலித் மக்கள் அதிகம் வசிக்கும் அந்தப் பகுதியில் அந்தப் பெயர் வைக்கப்பட்டதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** எந்த அளவிற்கு பாபா சாகிப் அம்பேத்கர் புகழ் கொச்சைப்படுத்தப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக அரசிலே என்பதற்கு உதாரணம் சொல்கிறேன். சென்னையிலே மேயராக இருந்த சிவராஜ் சிலையைத் திறந்து வைத்தபோது, அந்த மேடையிலேயே முதல்வராக இருந்த புரட்சித் தலைவியிடம் ஒரு கோரிக்கை வைத்தோம். ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்காகப் பாடுபடுகிற தலைவருக்கு, அதுவும் ஏழைத் தலைவருக்கு நீங்கள் ஒரு இலட்சம் ரூபாய் நிதியுடன் அண்ணல் அம்பேத்கர் என்ற விருதை அறிவித்தால் அது பயனுள்ளதாக இருக்கும் என்று சொன்னோம். அந்த மேடையிலேயே அன்றைக்கு முதல்வராக இருந்த புரட்சித் தலைவி அவர்கள் அந்த விருதை அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அதைச் செயல்படுத்துகிற காலம்

திராவிட முன்னேற்றக் கழக அரசிடம் இருந்தது. யாருக்கு விருதைத் தந்தார்கள் தெரியுமா, 2–வது அம்பேத்கரை நான் கண்டேன், அவர் ஒரு மேயர் என்று சொன்ன திராவிட முன்னேற்றக் கழகப் பேச்சாளருக்கு, அண்ணல் அம்பேத்கருக்கு ஒரு தொடர்பும் இல்லாத பேச்சாளருக்கு அந்த அம்பேத்கர் விருதை திராவிட முன்னேற்றக் கழக அரசு தந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியானால் அண்ணல் அம்பேத்கரிடத்தில் எவ்வளவு மரியாதை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருந்திருக்கும் என்பதற்கு இதைவிட வேறு ஒரு சான்று சொல்ல முடியாது. (மணியடிக்கப்பெற்றது) வரும் டிசம்பரிலே அண்ணல் அம்பேத்கரின் நினைவு நாள் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** அந்த நினைவு நாளிலே உண்மையாகவே ஒடுக்கப்பட்ட, தலித் மக்களுக்கு உழைத்து உருக்குலைந்து போயிருக்கிற, பாராட்டத்தக்க கௌரவமிக்க தலைவர் யாராவது ஒருவருக்கு அந்த விருதை வரும் டிசம்பரிலே இந்தப் புதிய அரசு வழங்க வேண்டும். நீங்கள் ஏற்படுத்திய அந்த விருது சரியான நபர்களுக்குப் போகும் வகையில் அதை நீங்கள் முறைப்படுத்த வேண்டும் என்று இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அன்று வெள்ளை அறிக்கையை வைத்தது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, தலித் மக்களுக்கு எவ்வளவு இட ஒதுக்கீடு பின்பற்றப்படுகிறது என்று பல கோரிக்கைகள் வைத்த பின்னாலே வெள்ளை அறிக்கைய வைத்தார்கள். உண்மையிலேயே அது வெள்ளை அறிக்கையா என்று சொன்னால், அது நிச்சயம் வெள்ளை அறிக்கை அல்ல, கொள்ளை அறிக்கை என்று சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட ஓர் அறிக்கையாக இருந்தது. (மணியடிக்கப்பெற்றது) ஓராண்டு காலத்தில் முயற்சித்தும் 9 துறைகளிலே எங்களால் கணக்கு எடுக்க முடியவில்லை என்று சொன்னது ஓர் அரசு. இந்தத் துறைகளில்தான் எங்களால் கணக்கு எடுக்க முடிந்தது, இந்த 9 துறைகளில் எங்களால் கணக்கு எடுக்க முடியவில்லை என்று, 9 துறை பற்றிய குறிப்பு இல்லாமலேயே ஓர் வெள்ளை அறிக்கை; கேட்டால் எங்களால் அதிலே கணக்கு எடுக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள் என்றால் அதை எப்படி முழுமையான வெள்ளை அறிக்கையாகச் சொல்ல முடியும், மாநகராட்சி என்றால் அந்த மாநகராட்சியில் எத்தனை Commissioners இருக்கிறார்கள். எவ்வளவு Deputy Commissioners



இருக்கிறார்கள், அதில் எத்தனை Health Officers இருக்கிறார்கள், எத்தனை zonal officers இருக்கிறார்கள், Clerical job–ல் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று கேட்டால், ஒட்டுமொத்தமாக 2,500 பேர் இருக்கிறார்கள் என்ற ஒரு கணக்குச் சொல்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இருக்கிற scavengers–ஐ எல்லாம் கணக்கிலே வைத்துக்கொண்டு சொன்னால்...

*பிற்பகல் 5–30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பழைய தலைவர் மாதிரியே பேசிக்கொண்டிருக்கிறீர்கள். தமிழ் மாநில காங்கிரசிலேயிருந்து பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அதனால் சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள். உங்களுக்கும் 10 நிமிடங்கள்தான்.

**திரு. செ.கு. தமிழரசன்:** முடித்துவிடுகிறேன். அதைப்போல ஒரு கணக்கு இருக்கக்கூடாது. A, B, C, D என்று ஒவ்வொரு நிலையிலும் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று ஒரு வெள்ளை அறிக்கையைத் தந்திருப்பார்களேயானால் பாராட்டலாம். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையிலே, துப்புரவுத் தொழிலாளர்களுக்கு ஒரு பெரிய துரோகம் இழைக்கப்பட்டிருக்கிறது. துப்புரவுத் தொழிலாளர்களுக்கு என்ன துரோகம் என்று சொன்னால், இதற்காக ஒரு சட்டத் திருத்தமே கொண்டு வந்தார்கள். ஓனிக்ஸ் என்கிற ஒரு தனியார் நிறுவனத்திற்கு இங்கே அந்தத் துப்புரவுப் பணியை கான்ட்ராக்ட் விட வேண்டும் என்பதற்காக ஒரு சட்டத் திருத்தத்தையே கொண்டு வந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார். (குறுக்கீடு)

**திரு. செ.கு. தமிழரசன்:** ஒரேயொரு நிமிடம். ஒரு சட்டத் திருத்தத்தையே கொண்டு வந்தார்கள். எங்கெல்லாம் 50–க்கும் மேற்பட்ட துப்புரத் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்பது தொழிலாளர் துறையிலே இருக்கிற ஓர் ஆணை. இந்த ஆணையிலே சென்னை மாநகராட்சி நீங்கலாக என்று ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். எதற்காக என்று சொன்னால், சென்னை மாநகராட்சியிலே துப்புரவுத் தொழிலை ஓனிக்ஸ் என்கிற பன்னாட்டு நிறுவனத்திற்கு கான்ட்ராக்ட் தருவதற்காக. சென்னை மாநகராட்சி நீங்கலாக என்கிற ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். இந்த நிலைமை நாளைக்கு எல்லா நகராட்சிகளுக்கும் போகுமானால்

ஒரு நிலையிலும் துப்புரவுத் தொழிலாளி, நிரந்தரத் தொழிலாளியாக வர முடியாது; வெறும் கான்ட்ராக்ட் லேபராக, கூலியாகத்தான் இருக்க முடியும். கேவலமான தொழிலிலே அவன் கட்டாயம் கடைசிவரை இருநதாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார். (குறுக்கீடு)

***திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சிலே குறுக்கீடு செய்யக்கூடாது என்பதற்காக அமர்ந்திருந்தேன். இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்த மேதகு கே.ஆர். நாராயணன் அவர்கள் ஜனாதிபதி பொறுப்பிலே இருக்கிறார்கள். அவர் வருவதற்கு முன்பு அத்தகைய பொறுப்புக்கு இந்தச் சமுதாய அடிவாரத்து மனிதர்கள் வரமுடியுமா என்ற மிகப் பெரிய கேள்விக்குறி இருந்தபோது, அன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஸ்வெல் என்பவர் அந்தப் பொறுப்பிற்குப் போட்டியிட்டார். போட்டியிட்டபோது ஓட்டுபோடுகின்ற வாய்ப்பு அவருக்கும், எனக்கும் இருந்தது. இவர் சமுதாயத்திற்காகக் கட்சி நடத்திக் கொண்டு இருப்பவர்கள். ஆனால் அந்த ஸ்வெல்லுக்கு ஓட்டு போடவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார்.

***திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களை வணங்குகிறேன். நல்ல ஒரு வாய்ப்பினைத் தந்தமைக்காக..(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், அவர் பேசட்டும். இன்னும் நிறைப் பேர் இருக்கிறார்கள். (குறுக்கீடு) இங்கே ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முதன்முதலாக அந்த proposal–ஐக் கொண்டு வந்தவர் மரியாதைக்குரிய மறைந்த ஜி.கே. மூப்பனார் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது இப்போது நடந்த தேர்தல் அல்ல. திரு. வெங்கட்ராமன் அவர்கள் மேதகு குடியரசுத் தலைவராக இருந்தபோது ஸ்வெல் அவர்களை எதிர்த்து நின்றார். அன்றைக்கு நடந்த நிகழ்வு. மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் தவறான தகவலைத் தருகிறார்கள்.



**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் மரியாதைக்குரிய மறைந்த மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுடைய பெயரைச் சொன்னீர்கள். அவரை உட்கார வைத்துக் கொண்டு அம்பேத்கருடைய நிகழ்ச்சியிலேதான் நான் குறிப்பிட்டேன். ஏனென்றால் அவர் சமுதாயத்தின் பெயரிலே கட்சி நடத்திக் கொண்டிருப்பவர். நான் ஓர் அரசியல் கட்சியிலே இருப்பவன். ஆனால் என்னுடைய வாய்ப்பைத் பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட மகன் ஸ்வெல்லுக்கு ஓட்டுப் போட்டேன். அந்தச் சமுதாயத்தின் பெயரைச் சொல்லி கட்சி நடத்திக்கொண்டிருப்பவர் ஓட்டுப் போடவில்லை என்று மூப்பனார் முன்னிலையிலே தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களை வணங்குகிறேன். தயவுசெய்து நீங்கள் மணிக்காட்டியைப் பார்த்துக்கொள்ளுங்கள்; 20 நிமிடத்திற்கு மேலாக உங்கள் நேரத்தை எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று கூறி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எனக்கு ஒன்றும் இல்லை. நேரமாகிக்கொண்டு போகிறது. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் 9 நிமிடங்கள் கொடுக்கலாம். 10 பேர் இருக்கிறார்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** எனக்கு முன்பு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் செ.கு. தமிழரசன் அவர்கள் பேசியபோது குறைகளையே சுட்டிக்காட்டிப் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் நிறைகளை மட்டும் சொல்ல வேண்டும் என்று கருதுகிறேன். கொடுக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையிலே, குறிப்பாக தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்காக அறிவிக்கப்பட்ட திட்டங்களைப் பார்க்கின்றபோது நிறைவானவையாக இருக்கின்றன; மனதுக்கு திருப்தி அளிக்கக் கூடியவையாக இருக்கின்றன. ஒவ்வொரு திட்டத்தையும் குறித்து இங்கே பேசிக்கொண்டிருந்தால் காலம் போதாது என்ற காரணத்தால் இந்த அரசுக்கு அத்தகைய நல்ல திட்டங்களை அறிவித்ததற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-35*

எந்தவொரு நற்பயன் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்குக் கிடைத்தாலும் இவை அரசியல் ரீதியாக, அரசியல் சாசனத்தின் அடிப்படையிலே கிடைப்பவை. இவற்றை 3 வகைகளாகப் பிரித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஒன்று, சமூகப் பாதுகாப்பு; மற்றொன்று,

[திரு. கு. ஜெயக்குமார்] [2001 செப்டம்பர் 7

அரசியல் பாதுகாப்பு; அடுத்தது பொருளாதாரப் பாதுகாப்பு. ஆக, எந்தவொரு திட்டத்தையும் செயலாக்க வேண்டும் என்றாலும், அது இந்திய அரசமைப்பின் அடிப்படையில் இருக்கிற காரணத்தால்தான் அறிவுலகக் கோமான், அரசியல் மாமேதை, ஈனப் பிறவி என்ற இழிவினைப் போக்கிட்ட ஈடற்ற செம்மல், அஞ்சா நெஞ்சினன், ஆடுகளாக வாழாதீர்கள், சிங்கங்களாக வாழுங்கள் என்று தன்மான உணர்வைக் கொடுத்துச் சென்ற டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொடுக்கின்ற காலத்திலே பாராளுமன்றத்திலே உரையாற்றுகின்றார், "எவ்வளவுதான் ஒரு நல்ல அரசியல் சாசனமாக இருந்தாலும், இதை இயக்குவோர் நல்லவர்களாக இல்லாவிட்டால் அந்த அரசியல் சாசனம் மக்களுக்குப் பயன்படாது; எவ்வளவுதான் மோசமான அரசமைப்புச் சட்டமாக இருந்தாலும், அதனை இயக்குவோர் நல்லவர்களாக இருந்தால் அச்சட்டம் நல்லதாகவே செயலாற்றும்" என்று சொல்லிச் சென்றிருக்கிறார். ஆக, மக்களுக்கு நல்லதைச் செய்வதும், நல்லதைச் செய்யாததும் அரசமைப்பின் அடிப்படையிலே இருந்தாலும்கூட அதைச் செயலாற்றுகின்றவர்கள் எந்த அளவிற்கு மனமுவந்து செய்கிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற அரசு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் வாழ்வு மேம்பட வேண்டும் என்பதற்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நிதிநிலை அறிக்கையிலே நாம் காண முடிகிறது. குறிப்பாக, அரசியல்வாதிகளானாலும் சரி அல்லது அதிகாரிகளானாலும் சரி, தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களுக்காக வருகின்றபோது, திட்டங்களைச் செயல்படுத்துகின்றபோது சற்று தொய்வாகவே காணப்படுகிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு ஓர் உதாரணத்தை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

மண்டல் கமிஷன் அறிக்கை வெளியிட்டபோது, அதன்மீது உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியபோது, அந்தத் தீர்ப்பு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக இருந்த காரணத்தால் அன்றைக்கு இருந்த அரசு ஒரு அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை, Constitutional Amendment–ஐக் கொண்டு வந்தது. அதுதான் 77–வது சட்டத் திருத்தம். அந்த 77–வது சட்டத் திருத்தத்தின்படி எல்லா நிலைகளிலும், எல்லாப் பதவிகளிலும் எல்லா அந்தஸ்துகளிலும் இட ஒதுக்கீடு கொடுக்கப்பட வேண்டும் என்பதேயாகும். அப்படி ஒரு சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்திருந்தபோதும் மத்தியிலே இருந்த அரசானது–மதிப்பிற்குரிய எஸ்.ஆர்.பி. அவர்கள் சற்று இங்கு இருந்தால் நலமாக இருக்கும் என்று கருதுகின்றேன்–



2001 செப்டம்பர் 7] [திரு. கு. ஜெயக்குமார்]

ஆக மத்திய அரசு 77–வது சட்ட வடிவினைக் கொடுத்தபோதும், அப்போது இருந்த அரசானது அதைச் சரியாகச் செயல்படுத்தாமல் ஓர் அரசாணையைப் பிறப்பித்தபோது, அந்த அரசாணையிலே களவாணித்தனமாக ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியது. இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும், பதவி உயர்விலே இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்ற அந்த அமெண்ட்மெண்ட்டிலே அரசாணையைப் பிறப்பிக்கின்றபோது, அப்போது இருந்த தேவகவுடா அரசும், குஜ்ரால் அரசும், எதைக் குறிப்பிடுகிறது என்றால், "as at present" என்ற ஒரு வார்த்தையை, அதிகாரம் இல்லாமல் பயன்படுத்தி, இந்த மண்டல் கமிஷன் அறிக்கையைக் கொடுப்பதற்கு முன்பாகவே, எந்த ஒரு நிலை இருந்ததோ அந்த நிலை இருந்தால் போதும் என்று அறிவுறுத்தியது. எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அரசாங்கம் ஒரு மசோதாவைக் கொண்டு வந்த பிறகும்கூட அதைச் செயல்படுத்துகின்றவர்களுக்கு மனம் இல்லாமல் அதைத் தடுத்து நிறுத்துகிறார்கள் என்பதைக் குறிப்பிடுவதற்காக இதை நான் குறிப்பிடுகிறேன்.

*பிற்பகல் 5–40*

ஏற்கெனவே இந்த அவையிலே நான் குறுக்கிட்டு மருத்துவக் கல்லூரிகளிலே இட ஒதுக்கீடு பற்றிப் பேசியிருக்கிறேன். அந்த இட ஒதுக்கீட்டை மருத்துவக் கல்லூரிகளிலே மத்திய அரசு கொடுக்காத காலகட்டத்திலே அதனால் பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவர் இங்கே நம்முடைய உயர் நீதிமன்றத்திற்குச் சென்று சாதகமான ஒரு முடிவைப் பெற்றார். அன்றைக்கு அரசிலே இருந்தவர்கள் நம்முடைய நாட்டைச் சார்ந்தவர்கள் – தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் ஒருவர் அன்றைக்கு பொது நல மந்திரியாக அங்கே இருக்கிறார் – இங்கே சட்டம் சொல்கிறது, மாண்புமிகு நீதிபதி சண்முகம் அவர்கள் இட ஒதுக்கீடு கொடுக்கப்படாதது, it is impermissible and injustice rendered to the people. Therefore reservation should be applied in those seats என்று தீர்ப்புக் கொடுக்கிறார். உடனே அந்தத் தீர்ப்பை எடுத்துக்கொண்டு நான் டெல்லிக்கு ஓடுகின்றேன். அன்றைக்கு தமிழ்நாட்டைச் சார்ந்த ஒரு மந்திரியிடம் சென்று இன்றைக்கு நீங்கள் சமூக நீதிக்காக இருக்கும் கட்சியின் சார்பில் மந்திரியாக இருக்கின்றீர்கள். உங்களுடைய தலைவர் சமூக நீதியைப் பற்றிப் பேசுகிறார். இப்போது சமூக நீதி கோர்ட்டின் மூலமாக வந்திருக்கின்றது. நீங்கள் அமைச்சராக இருக்கின்றீர்கள், இதை நீங்கள் ஏன் செய்யக்கூடாது என்று கேட்டபோது, என்னுடைய வேண்டுதலை நிராகரித்து, அவர் மேல்முறையீட்டிற்குச் செல்கிறார்.

இதுதான் ஒரு சிலர் இந்த நாட்டிலே பேசிக் கொண்டிருக்கின்ற சமூக நீதி. தனக்கு என்றால் ஒன்று; மாற்றானுக்கு என்றால் ஒன்று. ஒரு கண்ணில் வெண்ணெய், ஒரு கண்ணில் சுண்ணாம்பு தடவுகின்ற சமூக நீதியை இன்றைக்குப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தத் தலைவரையும் சந்தித்துப் பேசினேன் நான் புதுடெல்லியிலே. ஏனய்யா உங்கள் கட்சியைச் சேர்ந்தவர் மந்திரியாக இருக்கிறார்களே, அம்பேத்கர் பெயரைச் சொல்லுகிறீர்களே, சமூக நீதி என்கிறீர்களே, ஏன் இந்தச் சமூக நீதியைக் கொடுக்கக்கூடாது. சுமார் 600 மாணவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து மருத்துவர்களாக வருகின்ற வாய்ப்பு இருக்கிறதே, ஏன் செய்யக்கூடாது என்று கேட்டபோது, பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு, துணை மந்திரி, Petroleum Minister அவர்களிடம் சொல்லிவிட்டு, அதைச் செய்யுங்கள் என்று சொன்ன பிறகும் (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். நான் பேசி முடித்த பிறகு பேசிக்கொள்ளலாம். கடைசியில் பேசலாம். என்னுடைய கருத்துகளை தயவுசெய்து இடைமறிக்க வேண்டாம். இது என்னுடைய கன்னிப் பேச்சு என்று கூறினால்கூடப் பொருந்தும். ஆக, சமூக நீதியைச் சொல்பவர்கள் சமூக நீதியைச் செய்து காட்ட வேண்டும். You should hit when the iron is hot; when you get an opportunity and you don't do it, you will never do it. That will be the situation. ஆனால், இன்றைக்குத் தமிழகத்திலே மாண்புமிகு முதல்வர், திருச்சி பாராளுமன்ற தொகுதியிலே இடம் காலியானபோது சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சகோதரனை அங்கே நிறுத்தி, பொதுத் தொகுதியிலே நிறுத்தி அவரை அங்கே வெற்றி பெறச் செய்து வரலாறு படைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சி என்றால் இப்படித்தான் புரட்சி செய்ய வேண்டும் என்பதைச் செய்து காண்பித்திருக்கிறார்கள். ஆகவே, பேசிக் கொண்டிருக்கக்கூடாது. தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கு உதவ வேண்டும். இந்த நாட்டிலே பேசுவதுதான் அதிகமாக இருக்கிறதேயொழிய, செயல்வடிவம் (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். Hon. Deputy Speaker Sir, I object firmly the interruption; I am not yielding at all; I am proceeding further. (Interruption) I am proceeding further. (Interruption) *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடித்தவுடன் நீங்கள் பேசலாம்.

**திரு. துரைமுருகன்:** ஒருவர் பேசுகிறபோது மற்றோர் உறுப்பினர் எழுந்து நிற்கவே கூடாதா?



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. துரைமுருகன்:** I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் பேசிய பின்னால் நீங்கள் பேசுங்கள். ஜெயக்குமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசிய பின்னால் திரு. துரைமுருகன், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I am on a point of order, Sir.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Point of order என்ன? சொல்லுங்கள்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் பேசுகிறபோது, மற்றோர் உறுப்பினர் எழுந்து நிற்பதே கூடாது என்பதல்ல இந்த மன்றத்தின் சட்டம். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். ஆனால், ஒரு முக்கியமான செய்தியை குறுக்கிட்டுச் சொல்கிறபோது, Point of order; Point of clarification என்று சொல்லலாம். பேசிக் கொண்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் I am not yielding என்று எப்போது சொல்லலாம் என்றால் Point of clarification, Point of information என்று சொல்கிறபோது I am not yielding என்று சொல்லலாம். ஆனால் Point of order என்று சொல்கிறபோது பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினரும் உட்கார்ந்து விட வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவரும் அதற்கு இடம் கொடுக்க வேண்டும். ஆகையினால், ஒருவர் பேசும்போது அனாவசியமாகக் குறுக்கிட்டு அவர் பேச்சுக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டும் என்று எண்ணுகிற சுபாவம் உடையவர்கள் அல்ல நாங்கள். எனவே, அவர் ஒன்று சொன்னார். நல்ல கருத்து. ஒரு தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகனை, ஒரு பொதுத் தொகுதியில் நிற்க வைத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுவா Point of order? (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** இதை நான் விரும்பவில்லை. நீங்கள் விரும்பினால் நானும் செய்வேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், என்னைப் பார்த்துப் பேசுங்கள். Point of clarification என்ன? அதைச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஒரு நல்ல கருத்தை மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். ஒரு தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகனை ஒரு ரிசர்வ் தொகுதியிலே நிறுத்துவது என்பது பெரிதல்ல. ஆனால் பொதுத் தொகுதியில் நின்று வெல்கிறபோதுதான், அது உள்ளபடியே ஒரு சமுதாய நோக்கம். அதை நான் பாராட்டுகிறேன் என்று சொன்னார். அது அவர் பார்த்த அளவிலே ஓர் இடம், அவர் கண்ணுக்குத் தெரிந்தது. அதைப் பாராட்டினார். நான் அவருடைய பேச்சுக்குச் சாதகமாகச் சொல்கிறேன். எங்களுடைய கட்சியிலேகூட சி.டி. தண்டபாணி என்பவரை ஒரு பொதுத் தொகுதியிலே நிற்க வைத்து எம்.எல்.ஏ. ஆக ஆக்கியிருக்கிறோம். (குறுக்கீடு) செல்வராஜ் என்பவரைக்கூட நிற்க வைத்திருக்கிறோம் என்று சொல்வதற்காகத்தான் நான் வந்தேனே தவிர, அவருடைய பேச்சில் குறுக்கிட வேண்டும் என்றோ அல்லது வாதம் ஏற்படுத்த வேண்டும் என்றோ அல்ல.

*பிற்பகல் 5-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி, திரு. ஜெயக்குமார் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு போளூர் வரதன், வேண்டாம். வேண்டாம் உட்காருங்கள். திரு. ஜெயக்குமார் தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு) வரதன், ஜெயக்குமார் தொடர்ந்து பேசட்டும். உங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்தானே பேசுகிறார். பேசட்டும். (குறுக்கீடு) சரி, திருமதி யசோதா, என்ன சொல்ல வேண்டுமோ சொல்லுங்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைச் சொல்லிக் கொண்டே போனால் நீண்டு கொண்டே போகும். ஜோதி அம்மாவைக்கூட எழும்பூர் பொதுத் தொகுதியிலே – அப்போது அது தனித் தொகுதி இல்லை – பொதுத் தொகுதியாக இருந்தபோது தலைவர் காமராஜர் அவர்கள் முதன்முதலாக அந்த அம்மாவை நிறுத்தி வெற்றி பெற வைத்து இந்த மாமன்றத்துக்குக் கொண்டு வந்தோம். அதனாலே புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொண்ட கதை மாதிரி எங்கேயிருந்தோ எங்கேயோ வரக்கூடாது.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜோதி அம்மாள் தாழ்த்தப்பட்டவர் அல்ல, அவர் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகளாக வாழ்ந்தவர்.



**திருமதி டி. யசோதா:** ஒரு தவறான தகவலை சட்டமன்றத்துக்குச் சொல்கிறார். ஜோதி அம்மாள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்தான்.

**திரு. துரைமுருகன்:** If you are correct, அதை நான் ஒத்துக் கொள்கிறேன். என்னைவிட யசோதா அவர்களுக்குத் தெரியும், நான் ஒத்துக்கொள்கிறேன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அதைப் பெரிதுபடுத்த வேண்டாம். ஜெயக்குமார் பதில் சொல்வார். பதில் சொல்லுங்கள்.

**திருமதி டி. யசோதா:** அவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். தவறான தகவலைக் கொடுக்கக் கூடாது.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புகள் அளிக்கப்படும்போது தாழ்த்தப்பட்ட.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசட்டும், உட்காருங்கள். போளூர் வரதன் உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் பேசுகிற நேரத்திலே ஏதோ பேச்சளவிலே சமூக நீதியைப் பற்றிப் பேசுகிறார்கள், நடைமுறைப் படுத்துவதிலே ஒரு கட்சியிலும் சமூக நீதி பின்பற்றப்படாததை எல்லாம் குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். எங்களுடைய கட்சி அமைச்சர் மத்திய அரசாங்கத்திலே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தார்கள். அந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். அதை எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்களிடத்திலே சொல்லி, அந்த அமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அதை நிறைவேற்றுவதற்காக எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இருந்தாலும்கூட குறுகிய காலத்திலே அமைச்சர் பதவியிலிருந்து நாங்கள் விலக வேண்டியிருந்த காரணத்தினாலே அது நிறைவேற்றப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்திலே இன்னொன்றை இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உறுப்பினர் யாரைப் பற்றிக் குறிப்பிட்டுச்

சொன்னார்களோ தெரியாது. பாட்டாளி மக்கள் கட்சியாக இருந்தாலும், எந்தவொரு கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சியிலே அதிக அதிகாரம் வாய்ந்த பதவி, பொதுச் செயலாளர் பதவி. பாட்டாளி மக்கள் கட்சியிலே பொதுச் செயலாளர் பதவியைக் கொடுத்தது ஒரு தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவருக்கு என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுகிறேன். மத்திய அமைச்சரவையிலே ஒரு அமைச்சர் பதவி கிடைக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சிக்கு முதலாவதாக ஒரு அமைச்சர் பதவி கிடைக்கிற நேரத்திலே அந்த முதலாவது பதவி ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவருக்குத்தான் கொடுக்கப்பட்டது. இன்னும் தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சியிலே பொதுச் செயலாளர் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதோடு, கடந்த வாரம்கூட ஒன்றைச் சொன்னேன். அதே நேரத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, தாங்கள் பேசுகிறபோது இந்த விளக்கங்களையெல்லாம் சொல்லலாம்.

**திரு. ஜி.கே. மணி:** எங்களுடைய உறுப்பினர் அட்டையிலேகூட சமூக நீதியைப் பின்பற்றக்கூடிய வகையிலே தந்தை பெரியார், பேராசான் அண்ணல் அம்பேத்கர் அவர்கள், காரல் மார்க்ஸ், பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் படங்களை எல்லாம் பொறித்து கொள்கை நெறியோடு இந்தக் கட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். இது சமூக நீதியை உள்ளடக்கிய கட்சி என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஐந்து நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடுகள் எல்லாம் சேர்த்துத்தான் கணக்கு, எப்போதுமே. பேசுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** அதுமட்டுமல்ல. தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுடைய வேலைவாய்ப்புகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக அவர்கள் அந்த உச்சகட்டத்தை எய்துகிற சமயத்திலே பல இன்னல்கள் அவர்களுக்குச் செய்யப்பட்டு வருகின்றன. ஒருசில உதாரணங்களை நான் சொல்ல விரும்புகிறேன். தமிழக அரசிலே சட்டத் துறையிலே செயலாளர் பதவி வெகுகாலமாகக் காலியாக இருந்து, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் அந்தப் பதவிக்கு பாலையா என்பவர்



அமர்த்தப்பட்டிருக்கிறார். அதற்கு இந்த அரசுக்கு நன்றி. அதுமட்டுமல்ல. தீயணைப்புத் துறையிலேயும் ஆவணப் பதிவுத் துறையிலேயும் ராமையா, தருமன் போன்றவர்கள் எல்லாம் நல்ல அளவிற்கு அந்தத் துறைகளிலே செயலாற்றி, தங்களுக்கு பதவி உயர்வு கிடைக்காமல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு இருக்கிற நம்முடைய தலைமைச் செயலகத்திலேகூட 18 சதவிகித இட ஒதுக்கீடு இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கிறது என நான் அறிந்தேன். அதற்கும் நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த G.O. 44--ஐப் பற்றி மிகவும் தவறாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். 44 G.O., 33 G.O. என்பதைப் பற்றி எல்லாம் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் .5-.50*

It is a total confusion in Tamil Nadu today. Regarding the reservation policy, a new approach is required in this direction. I very humbly request the Government and the Hon. Chief Minister, the Finance Minister and the Ministers concerned; இந்த G.O. 44-ம் எங்களுக்கு வேண்டாம். இந்த G.O. 33--ம் எங்களுக்கு வேண்டாம். நான் சொன்னேனே, அந்த 77--வது அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா மத்திய அரசு செய்தது என்று.

Reservations should be given in all posts, all categories and at all levels. Let us be too simple. Let us not complicate these GOs. Reservations should be provided at all levels, in all posts and in all categories. Kindly let this Government implement it. The people from this State as well as from the other States will definitely praise this Government for this achievement. G.O. 44 creates a confusing situation and G.O.33 also creates a confusing situation. Nobody is aware of them completely. Therefore, let it be simple. You bring a G.O. immediately. This will solve the entire problem. This is my very humble request.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், இன்னும் இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள். இன்னும் 6, 7 பேருக்கு மேலே பேச வேண்டும். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஐயா 5 மணித்துளிகள் வேண்டும். அடுத்ததாக பொருளாதாரம். தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்கள் தங்களுடைய அன்றாட வயிற்றுப் பிழைப்புக்கு மற்றவர்களை நாடி

இருக்கின்ற வரையில் அவர்கள் மீது இழைக்கப்படுகிற கொடுமைகள் நிறுத்தப்படமாட்டாது. அதற்கு ஒரே வழி தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களுக்குப் பொருளாதார சுதந்திரத்தை அளிக்க வேண்டும். Economic independence should be provided for these people. அதற்காக SCA Fund என்றும் மத்திய அரசிலேயிருந்து வருகின்றது. Special Central Assistance; Special Component Plan என்பதை இங்கே இருக்கின்ற அத்தனை துறைகளும் ஒதுக்கித்தர வேண்டும். Tribal Sub Plan என்கிற ஒரு நிதியும் இதற்காக வருகிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தங்களுடைய வெள்ளை அறிக்கையிலே குறிப்பிடுகிறபோது வெளிப்படையாகச் சொன்னார்கள், ஒளிவு மறைவில்லாமல் சொன்னார்கள். ஆகவேதான் அதை transparent வெள்ளை அறிக்கை என்று நான் குறிப்பிட்டேன் முன்பு பேசுகிறபோது. இந்த TSP, SCP Fund-களை உங்களுடைய எந்தத் துறைகளும் சரியாக இதுவரை ஒதுக்கியது கிடையாது; இந்த அரசாவது தயவு செய்து ஒதுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இந்த TSP, SCP Fund-களை ஒழுங்காக ஒதுக்கி இந்த நிதிகளைக் கொண்டு திட்டங்களை அந்தந்தத் துறைகளே செயல்படுத்தினால் நிச்சயமாகச் சரிப்பட்டு வராது. இதை கடந்த 20 ஆண்டுகளாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆக இந்தத் துறைகள் எல்லாம், ஒதுக்கப்பட்ட அந்த நிதியை Scheduled Caste, Scheduled Tribe Department-க்கு அதாவது ஆதிதிராவிட நலத் துறைக்கு ஒதுக்கிக் கொடுத்துவிடுங்கள். அதைத்தான் மகாராஷ்டிரா அரசு செய்கிறது. அதைத்தான் ஆந்திர அரசு செய்கிறது. அதைத்தான் கர்நாடக அரசு செய்கிறது. சிறப்பாகச் செயல்படுகிறது அங்கே. The nodal agency will be the Scheduled Castes and Scheduled Tribes Department and all other Departments will strictly allocate their funds and transfer them to the SC/ST Department account. இதைத் தயவுசெய்து நீங்கள் செய்வீர்களானால், இந்த மக்களுக்குச் செய்கிற பெரும் நன்மையாக இருக்கும். நீங்கள் வாழ்த்தப்படுவீர்கள், போற்றப்படுவீர்கள் என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஐயா, தயவுசெய்து 3, 4 நிமிடங்கள் கொடுங்கள். 6-00 மணிக்குள் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்திலே உரையை முடியுங்கள். இல்லை என்றால், அடுத்த உறுப்பினரை நான் அழைக்க வேண்டியிருக்கும்.

**திரு. கு. ஜெயக்குமார்:** 65-வது பக்கத்திலே கடந்த 5 ஆண்டுகளிலே 3,142 கோடி என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். S.C.P.-க்கு. எனக்கு நம்பிக்கை இல்லை. இது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே வேண்டிய அளவிற்கு நீங்கள் SC/ST-க்கு நிதி



ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் எப்படித்தான் 3.31 கோடியை தாட்கோவிற்கு Share capital-ஆக ஒத்துக் கொண்டீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இதில் நீங்கள் அதிகபட்சமாக 10 கோடி அளவிற்குத்தான் திட்டங்களைச் செயல்படுத்த முடியும். எனக்கு இதில் நிறைய அனுபவம் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். குறைந்தபட்சம் 10 கோடியையாவது Share Capital-ஆக நீங்கள் ஒதுக்க வேண்டும். TAHDCO is not an organisation of the State Government technically, because approximately 50% of the share is held by the Central Government. If you give 10 crores, the Central Government will give 10 crores. நீங்கள் 10 கோடி கொடுத்தால் மத்திய அரசு 10 கோடி கொடுக்கும். உங்களுடையது 51% மத்திய அரசினுடையது 49% எனவே உங்களுடைய share capital-ஐ 10 கோடியாக நீங்கள் உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

TAHDCO is a very very inefficient and ineffective organisation today. I am sorry to say this. A structural change is required. Any Managing Director posted to TAHDCO, when you go and ask him, says, "I am studying the schemes." When the same IAS officer is posted to TIIC next day, he is sanctioning the loan, the next day. How is it possible? தாட்கோவை, மிகவும் வேகமாக வேலை செய்கிற அளவிற்கு நீங்கள் நடத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-55*

அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் செ.கு. தமிழரசன் அவர்கள் capitation fee-ஐப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இதற்கு நீங்கள் முடிவு எடுக்க வேண்டும். SC/ST மாணவர்களுக்கு அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மகேந்திரன். ஜெயக்குமார் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** நன்றி.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலத் துறை மானியக் கோரிக்கை

விவாதத்திலே கலந்துகொள்வதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசால் ஆதிதிராவிட மாணவிகளுக்கு பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படிக்கக்கூடிய ஆதிதிராவிட மாணவிகளுக்கு மிதிவண்டி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு நிதி என்பது ஒதுக்கப்பட்டிருக்கிறது. விடுதி மாணவர்களுக்கு வழங்கப்படக்கூடிய உணவுக் கட்டணம் என்பது ரூ.225/-லிருந்து 300 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. புதிய விடுதிகளைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக முதலிலே நான் வரவேற்கிறேன்.

இன்றைக்கு ஆதிதிராவிடர் நல மானியக் கோரிக்கையின்மீது பேசிய பல்வேறு நண்பர்கள் இன்றைக்கும் தமிழகத்திலும் இந்தியாவிலும் நிலவக்கூடிய பல்வேறு தீண்டாமைக் கொடுமை சம்பந்தமாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கக்கூடிய கொடுமைகள் சம்பந்தமாக பல்வேறு விவரங்களைச் சுட்டிக்காட்டினார்கள். நாடு விடுதலை அடைந்து 54 ஆண்டுகளுக்குப் பின்பாக, இந்திய நாட்டினுடைய அரசமைப்பு சட்டம் உருவாக்கப்பட்டு 50 ஆண்டுகளாகியும் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய சாதாரண தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்க்கையிலே முன்னேற்றம் என்பது ஏற்படாத நிலைமையில்தான் இன்றைக்கு ஐக்கிய நாடுகள் சபை சார்பாக நடைபெறக்கூடிய, இனவெறி எதிர்ப்பு மாநாட்டில் இந்தியாவில் நிலவக்கூடிய தீண்டாமைக் கொடுமைகள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு அமைப்புகள் கோரிக்கைகளை வைத்துக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் செ.கு. தமிழரசன் அவர்கள் பேசும்போதுகூட பாரதிய ஜனதா கட்சி, இனவெறி எதிர்ப்பு மாநாட்டிலே தீண்டாமைக் கொடுமைகள் சம்பந்தமாக பேசக்கூடாது என்று முடிவு எடுத்திருப்பது சம்பந்தமாகச் சுட்டிக்காட்டினார். பாரதிய ஜனதா கட்சியைப் பொறுத்தவரை, வர்ணாஸ்ரம தருமக் கொள்கை என்பது இந்தியாவிலே அமலாக வேண்டுமென்று இன்றைக்கு வரை பாடுபட்டுக்கொண்டிருக்கக்கூடிய ஒரு கட்சியாக அந்தக் கட்சி இருக்கக்கூடிய காரணத்தினால், அந்தக் கட்சி அப்படியொரு நிலைமையைத்தான் எடுக்கும். ஆனால், துரதிருஷ்டவசமாக அவர்களோடு கூட்டணி சேர்ந்திருப்பவர்கள்கூட இன்றைக்கு இதுசம்பந்தமாக எதுவும் சொல்லாதது வேதனை அளிக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) இது தமிழகத்திலே, இந்தியாவிலே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலே ஒரு ரணத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





அதேபோன்று இந்த நாட்டினுடைய முதல் குடிமகனாக, ஜனாதிபதியாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் வர முடியும் என்ற நிலைமையிருந்தாலும்கூட, தான் வசிக்கின்ற கிராமத்தில், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவன் பஞ்சாயத்துத் தலைவராக வர முடியாத ஒரு கேவலமான நிலைமை என்பது நீடித்துக்கொண்டிருக்கிறது. கடந்த கால ஆட்சியிலே மேலவளவு கிராமத்தில் பஞ்சாயத்துத் தலைவராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற முருகேசன் உட்பட 6 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு முன்பு தாங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று காவல் துறையிலே புகார்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்பும்கூட அவர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்களா என்றால், இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது சுட்டிக்காட்டினார்கள், தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க வேண்டுமென்றால் காதல் திருமணங்கள் கூடுதலாக நடைபெற வேண்டுமென்று. அதே போன்றுதான் முன்னாள் முதல்வர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலும் கூறினார்கள், வெளியில் பல்வேறு இடங்களிலும் பேசினார்கள். நான் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புவது, அதை ஏற்றுக்கொண்டு புதுக்கோட்டை மாவட்டத்திலே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இளைஞன். பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த ஒரு பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்ததினால் மொட்டை அடிக்கப்பட்ட வரலாறு என்பது (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கால ஆட்சியிலே நடைபெற்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று புதுக்கோட்டை மாவட்டத்திலே தம்மாவூர் என்ற கிராமத்திலேயிருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள் தப்படிக்க மறுத்த காரணத்தினால், 26-க்கும் அதிகமான தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தீண்டாமை ஒழிப்பு ஆண்டு என்று கடந்த காலத்திலே அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட தீண்டாமைக்கு எதிராக நெல்லை மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம் சிங்கிலிபட்டியிலே இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று போராட்டத்தை நடத்தியபோது அவர்கள்மீது கடந்த கால ஆட்சியில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோன்று இன்றைக்கும் தமிழகத்தினுடைய எண்ணற்ற கிராமங்களிலே தீண்டாமைக் கொடுமைகள் நிலவிக்கொண்டிருக்கின்றன. நூற்றுக்கும் அதிகமான வடிவங்களிலே தீண்டாமைக் கொடுமை என்பது நிலவக்கூடிய சூழ்நிலையில், தீண்டாமைக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை புதிதாகப் பொறுப்பேற்று இருக்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்புடன் முதலிலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-00*

அதேபோல G.O. 44 சம்பந்தமாக உறுப்பினர்கள் பேசினார்கள். கொள்கை விளக்கக் குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. G.O. 44 அமலாக்கப்பட வேண்டுமென்று இங்கே பேசிய அனைத்து உறுப்பினர்களும் சொல்லியிருக்கிறார்கள். நீங்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். கடந்த காலத்தில் G.O. 44 பிறப்பிக்கப்பட்டது. இந்த G.O. 44 எப்படி இரத்து செய்யப்பட்டது என்றால் ஒரு சுற்றறிக்கை மூலமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அன்றையதினம் ஆட்சியாளர்கள் அனுப்பிய சுற்றறிக்கையில்கூட, சம்பந்தப்பட்ட துறையினுடைய செயலாளரின் கையெழுத்தில்லாமல், அந்தச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதனுடைய நகல் எங்களிடம் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைதான் கடந்த கால ஆட்சியில் நீடித்துக்கொண்டிருந்தது. அதை மாற்றுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்திலே ஆட்சி அதிகாரத்திலே இருந்தபோது, கூட்டுறவுத் துறையில் கடந்த 20 ஆண்டுகளாக துணை மேலாளர் பதவி நிரப்பப்படாமல் இருந்தது. துணை மேலாளர் பதவி என்பது நிரப்பப்பட வேண்டுமென்று அன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் கோரிக்கை வைத்தபோது, T.N.P.S.C. சார்பாக ஒரு தேர்வு நடத்தப்பட்டு, 210 மாணவர்களுக்கு சென்னையிலும், மதுரையிலும், ஆதிதிராவிடர் நலத் துறை சார்பாக பயிற்சி அளிக்கப்பட்டது. பட்டய மேற்படிப்பு படித்து முடித்து பயிற்சியை முடித்த பிறகு கூட்டுறவுத் துறை துணை மேலாளர் பதவி அந்த மாணவர்களுக்கு கடந்த கால தி.மு.க ஆட்சியிலே வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்படவில்லை. தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஒருவர் வங்கியில் துணை மேலாளராக ஆகிவிடக்கூடாது என்று யாரும் நினைத்தார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. இன்றைக்கு ஆட்சிக்கு



வந்திருக்கக்கூடிய ஆட்சியாளர்கள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அந்த நியாயமான பதவி கிடைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் இருக்கக்கூடிய I.I.T. பற்றி ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். 403 பேராசிரியர்கள் பணியாற்றக்கூடிய சென்னை I.I.T.-யிலே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு என்பது முறையாக அமலாக்கப்பட்டிருக்கிறதா என்றால் அமலாக்கப்படவில்லை. உலகத்திலே இருக்கக்கூடிய தொழிற்கல்வி நிலையங்களிலே, முக்கியமான கல்வி நிலையம் என்று சொல்லக்கூடிய I.I.T.-யில் இட ஒதுக்கீட்டை அமலாக்குவதற்கான முயற்சியை இன்றைக்கு பாரதிய ஜனதா கட்சியினுடைய கூட்டணியில் இருக்கக்கூடிய கூட்டணிக் கட்சிகள் தயவுசெய்து அமலாக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரசுத் துறைகளிலே வழங்கக்கூடிய இட ஒதுக்கீடு முழுமையாக அமலாகியிருக்கிறதா என்பதைக் கண்டறிந்து ஒரு வெள்ளை அறிக்கையை இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்தார்கள். அந்த வெள்ளை அறிக்கையில் 96 துறைகள் குறித்துத்தான் புள்ளிவிவரங்கள் வெளியிடப்பட்டன. தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்குக் கூடுதலான வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடிய ஒன்பது துறைகள் குறித்து அந்த வெள்ளை அறிக்கையிலே மறைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட துறைகளையும் கண்டுபிடித்து புதிய வெள்ளை அறிக்கை உருவாக்கப்பட்டு, தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்குக் கிடைக்க வேண்டிய முழுமையான இட ஒதுக்கீடு கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் அவையிலே ஒரு audit report சமர்ப்பிக்கப்பட்டது. அந்த audit report-ல் 139-வது பக்கத்தில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மாணவிகள் மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை அவர்கள் பள்ளிப் படிப்பைத் தொடராமல் இருக்கக்கூடாது என்பதற்காக அந்த மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த மானியத்திலே நான்கு கோடி ரூபாய் வரை கடந்த கால ஆட்சியிலே அந்த மாணவிகளுக்கு வழங்கப்படாமல் நிதி திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது என்றால் கடந்த கால ஆட்சி என்பது

தாழ்த்தப்பட்ட மக்களுக்கான ஆட்சியாக இருந்திருக்க முடியுமா என்றால் நிச்சயமாக இருந்திருக்க முடியாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. விருதுநகர் மாவட்டத்தில் 12 இலட்சம் ரூபாய் தாழ்த்தப்பட்ட மாணவிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிதி, வேறு திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கையிலே முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட பஞ்சமி நிலங்கள் இன்றைக்கு வரை தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்காமல் இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பஞ்சமி நிலங்களைக் கண்டறிந்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு பழங்குடியின மக்கள் சந்திக்கக்கூடிய பிரச்சினை என்பது கூடுதலான பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்கூட ஒரு நாள் பதில் சொன்னார். குரும்பர், குரும்பா என்று எல்லாம் பேசிக்கொண்டிருந்தோம். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பேசியதன் அடிப்படையிலே 10 நிமிடங்கள் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

*பிற்பகல் 6-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. கொடுத்தால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் நேரம் இல்லை. திருமதி வி. அழகம்மாள். (குறுக்கீடு) சரி, உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** அந்த மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சாதிச் சான்றிதழ்கள் இன்றைக்குப் பல்வேறு பகுதிகளில் மறுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தச் சாதிச் சான்றிதழ்கள் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, மலைப் பகுதிகளில் வனத் துறை உருவாவதற்கு முன்பாக வாழ்ந்த அந்தப் பழங்குடி மக்களுக்கு அந்தப் பகுதியிலே அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்காக ஆட்சியாளர்கள் உத்தரவாதம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.



***திருமதி வி. அழகம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் நீங்காத் துயில்கொள்ளும் தர்மத்தலைவன் உறங்கும் திசையை நோக்கி வணங்கி, தரணி போற்றும் தங்க மகளாம், தாயை இழந்தோர்க்குத் தாயாக, தந்தையை இழந்தோர்க்குத் தந்தையாக, ஒட்டுமொத்த உருவமாக, சக்தி வடிவமாக, விவேகத்தில் தலைசிறந்த வீரமங்கையாக, 6 கோடி தமிழக மக்களின் அம்மா என்ற அடைமொழிக்கு அன்னையாக, ஏழை எளிய மக்களின் இதயத்தில் வீற்றிருக்கும் தெய்வமாக, அல்லும் பகலும் அயராது உழைத்து, எனக்காக வாக்குகள் சேகரித்து, என்னை வெற்றிபெறச் செய்து, கற்றுணர்ந்த சான்றோர்களும், ஆன்றோர்களும் ஆய்ந்து, அறிந்து அரசு பணிபுரியும் அரியாசனத்திற்கு நிகரான சரியாசனம் தந்து, என்னை இந்த மாமன்றத்தில் அமரச் செய்த இதய தெய்வம் அம்மா அவர்களின் பாதச் சுவடுகளை வணங்குகிறேன்.

24 ஆண்டுகளுக்குப் பிறகு, அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக என்னை நிறுத்தி, தலைவாசல் தொகுதிக்குப் புத்துயிர் அளித்த எங்கள் புண்ணிய தெய்வம் அம்மா அவர்கள். கழகத்தின் சார்பில் என் சொந்தத் தொகுதியில் வாய்ப்பு அளித்தமையால் அம்மாவின் ஆணைக்கிணங்கி, என்னை வெற்றி பெறச் செய்த தலைவாசல் தொகுதி வாக்காளர்களுக்கும், அல்லும் பகலும் அயராது உழைத்து, அம்மாவின் கைகளில், தலைவாசல் தொகுதி வெற்றிக்கனியைத் தந்த கழகத் தோழர்களுக்கும், கூட்டணித் தோழர்களுக்கும், என் இதயமார்ந்த நன்றி மலரைக் காணிக்கையாக்குகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

எல்லாவற்றுக்கும் மேலாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களே தலைவாசல் தொகுதிக்கு நேரில் வந்து "இரட்டை இலை சார்பில் என்னால் நிறுத்தப்பட்டிருக்கும் வேட்பாளர் அழகம்மாளுக்கு வாக்களியுங்கள்" என்று அம்மா அவர்கள் இட்ட ஆணையின் பேரில் தலைவாசல் தொகுதி மக்கள் 27,857 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்தார்கள். எனது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் திருவடிகளின் திசைநோக்கித் தொழுது எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

2001-2002 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரின் நலனுக்கு

செந்தாரப்பட்டி அரசுப் பள்ளி வளாகத்தில் ஆதிதிராவிடர் நல உண்டு உறைவிடப் பள்ளி ஒன்று கட்டித்தர அம்மா அவர்களிடம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவாசல் தொகுதியில் மிகவும் புகழ்பெற்ற கோயிலாகிய அருள்மிகு வடசென்னிமலை பாலசுப்பிரமணி சுவாமி திருக்கோயில் கிரிவலப் பாதையை மேம்படுத்துவதற்காகவும், பக்தர்களின் வசதிக்காக, ஒரு நவீன வசதிகொண்ட தங்கும் மையமும், அமைத்துக் கொடுத்து வடசென்னி மலையை ஒரு சுற்றுலாத் தலமாக மேம்படுத்தித் தருமாறும் அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவாசல் தொகுதிக்கு உட்பட்ட பச்சைமலைப் பகுதியில் 80 கிராமங்களில் மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் பயிரிடும் மரவள்ளிக் கிழங்கு சுமார் 3 இலட்சம் டன் அளவில் விளைகின்றது. இவற்றையெல்லாம் தலைவாசல் பகுதியிலுள்ள சேகோ பாக்டரிக்குத்தான் கொண்டு வருவார்கள். அதற்காக லாரிகள் உப்பிலியாபுரம், தும்மம்பட்டி வழியாக 160 கிலோ மீட்டர் செல்ல வேண்டி உள்ளதால் லாரி ஒன்றுக்கு ரூ.2,500 முதல் ரூ.2,700 வரை வாடகைச் செலவும் அதிகமாகிறது. எனவே மாயம்பாடி–நரிப்பாடி வரை வனத் துறை நிலத்தின் வழியாக 5 கிலோ மீட்டர் தூரம் தார்ச் சாலை அமைத்துக் கொடுத்தால் தலைவாசல் செல்லும் வழியாக 100 கிலோ மீட்டர் தூரம் குறைவதோடு வாடகைச் செலவும் குறையும் என்பதை அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பச்சைமலைவாழ் மக்களுக்காக, மாணவ மாணவியருக்கு உடனடியாகச் சாதிச் சான்றிதழ் வழங்க இவ்வரசு ஆவன செய்ய வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

30 வருடங்களுக்கு மேலாக மலைவாழ் மக்கள் அனுபவித்து வரும் நிலங்களுக்கு நிலப் பட்டா வழங்கப்படவில்லை. அதனால் மின்சார இணைப்பும் கிடைக்கவில்லை. எனவே உடனடியாக அரசு பட்டா வழங்கி மின்சார வசதி செய்து தருமாறு அம்மா அவர்களிடம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று முடித்துக்கொள்ளுங்கள்.

**திருமதி வி. அழகம்மாள்:** கடந்த ஆட்சியில் அரசாணை எண் 44–ஐ இரத்து செய்துவிட்டதால், தாழ்த்தப்பட்டவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே அரசாணை எண் 44–ஐ உடனடியாக



அம்மா அவர்கள் அமல்படுத்த உத்தரவிட வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்களிடம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவாசல் தொகுதியில், வசிஷ்ட நதி, சுவேதா நதி ஆகிய இரண்டு நதிகள் ஓடுவதால், கடலூர் விழுப்புரம், பெரம்பலூர், நாமக்கல் போன்ற மாவட்டத்திற்குச் செல்ல கீழ்க்காணும் இடங்களில் பாலங்கள் அமைத்துத்தர வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சுவேதா நதியில் கவர்பனை என்ற இடத்தில் ஒரு பாலம் அமைக்கவும், சுவேதா நதியில் வீரகனூர் தரைப் பாலத்தை மேம்பாலமாக மாற்றி உயர்த்தித் தர வேண்டியும், சுவேதா நதியில் கூடமலை–நரிப்பாடி இடையில் ஒரு பாலம் அமைக்கவும், கெங்கவல்லி–வலசக்கல்பட்டி இடையில் ஒரு பாலம் அமைக்கவும், வசிஷ்ட நதியில், மணிவிழுந்தான் தரைப் பாலத்தை மேம்பாலமாக உயர்த்தித்தர வேண்டியும் அம்மா அவர்களிடம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாமன்றத்தில் உரையாற்றிட எனக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த, நான் நாளும் வணங்கிடும் எனது இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும், உரையாற்ற வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும்......(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பரவாயில்லை.

**திருமதி வி. அழகம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

*பிற்பகல் 6–15*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் ஆண்டிற்குடைய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிர்மரபினர் நலத் துறை மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பளித்தத் தங்களுக்கு நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துகளை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய நிலையைப் பொறுத்தவரையிலே, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட

மற்றும் சிறுபான்மையின மக்கள் எங்கும், எதிலும், எல்லா நிலைகளிலும் சமூக நீதி பெற்று வாழ வேண்டுமென்ற பிரதான கோரிக்கையை வைத்து, இலட்சியங்களை வைத்துச் செயலாற்றக்கூடிய கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி என்பதை இங்கே நான் முதலில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு ஆதாரங்கள் சொல்ல வேண்டுமென்று சொன்னால் என்னிடத்திலே நிறைய இருக்கின்றன. சொல்லிக்கொண்டே இருக்க முடியும். எனவே ஏதோ பெயரளவிலே கட்சி என்பது மாத்திரம் அல்லாமல் கொள்கைக்கு ஏற்ப, கட்சிகளின் பொறுப்புகளிலேகூட பிற்படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்டவர், சிறுபான்மையினர் என்ற வகையிலே கட்சியினுடைய தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் மற்றும் எல்லாப் பொறுப்புகளும் கட்சியினுடைய அமைப்புகளிலேயும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல. இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் ஒருவர் சொன்னார். பிற்படுத்தப்பட்டவர்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் ஒருங்கிணைப்பாக, பாலமாக இருக்க வேண்டுமென்ற அந்த நல்ல நோக்கத்தோடும் அதே நேரத்திலே மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும் மோதல்கள் இருக்கக் கூடாது; ஒன்றுபட்டு வாழ வேண்டுமென்ற உயரிய நோக்கத்திற்காக சமய, சமுதாய ஒற்றுமை நல்லிணக்க மாநாடு என்ற பெயரிலே மாவட்டந்தோறும் மாநாடுகளை நடத்திய கட்சி பாட்டாளி மக்கள் கட்சி. அந்த மாநாடுகளில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த தலைவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த தலைவர்கள், இஸ்லாமியப் பெருமக்கள், இன்னும் கிருத்துவப் பாதிரியார்கள் இப்படி மதத்தின் பெயராலே உள்ள பெரியவர்கள், எல்லாச் சமுதாய மக்களையும் ஒன்றாகச் சேர்த்து, ஒரே மேடையிலே வைத்து சமூக நல்லிணக்கத்திற்காக பாடுபட்டு வரக்கூடியவர் எங்களுடைய நிறுவனத் தலைவர், சமூக நீதிக் காவலர் டாக்டர் ஐயா அவர்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே தலித் மக்களுக்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு தமிழ்நாட்டிலேயே தன்னுடைய திருக்கரத்தாலே அதிகமான அம்பேத்கர் சிலையை நிறுவியவர் டாக்டர் ஐயா அவர்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாத்திரமல்ல. கும்பகோணம் பக்கத்திலே குடிதாங்கி என்ற ஒரு கிராமம். அந்தக் கிராமத்திலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச்



சேர்ந்தவர் ஒருவர் இறந்து ஒரு வீதியின் வழியாக சடலத்தை எடுத்துச் செல்லக் கூடாது என்று 2 நாட்கள் தடை விதித்திருந்தாலும்கூட, அந்த தலித் சமுதாயத்தினுடைய அழுகிய நிலையில் இருந்த அந்தப் பிணத்தை, தன்னுடைய தோளிலே சுமந்து தலித் மக்களின் உரிமையை நிலைநாட்டியவர் சமூக நீதிக் காவலர் டாக்டர் ஐயா அவர்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நிறைய கருத்துகளை நான் சொல்லிக்கொண்டிருக்க முடியும். ஆகவே, இப்படி எல்லா வகையிலும்...

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒருவர் பேசுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் பேசுகின்ற போது குடிதாங்கியைப் பற்றிச் சொன்னார்கள். அன்றைக்கு இந்த அவையிலே நான் உறுப்பினர். 5 நாட்களாக இறந்த பிணம் அந்தக் கிராமத்திலே அந்த வீட்டிலே கிடக்கிறது, துர்நாற்றத்தோடு. அன்றைக்கு இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்த பின்னாலே நடவடிக்கை எடுத்தார்கள். அப்படி நடவடிக்கை எடுத்து, அந்தச் சடலத்தை எடுத்துச் செல்ல வேண்டுமென்கிற சூழ்நிலை வந்தபோது அதையும் தடுத்தவர்கள் தான் இவர்கள் என்பதை இந்த நாடு அறியும்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. உறுப்பினர் மணி பேசட்டும். (குறுக்கீடு) உறுப்பினர் மணி பேசுங்கள். (குறுக்கீடு) அடுத்த மானியக் கோரிக்கையிலே பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அவைக்குத் தவறான தகவலை...

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் மணி பேசட்டும். (குறுக்கீடு) உறுப்பினர் மணி பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ வேண்டுமென்ற காரணத்திற்காக தவறான தகவலைச் சொல்லக் கூடாது. இந்த மாமன்றத்திலே உறுப்பினராக ஒருவர் இன்றும் இருந்துகொண்டிருக்கிறார். அவர் தலித் மக்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து அந்த அழுகிய நிலையில் இருந்த பிணத்தை தன்னுடைய தோளிலே சுமந்து சென்ற காரணத்தினாலே அந்த மக்களும், அந்தச் சமுதாயத்தினுடைய தலைவர் பெருமக்கள் எல்லாம் சேர்ந்து "தமிழ் குடிதாங்கி" என்ற பட்டத்தையும் வழங்கினார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது அரசியலுக்காகப் பேசுவது அல்ல. அரசியல் பேசுவதற்காக நான் இதைச் சொல்லவில்லை. இப்படிச் சமுதாய நல்லிணக்கத்திற்காகச் செயலாற்றிக் கொண்டிருக்கின்ற ஓர் உன்னதமான தலைவரை அலட்சியப்படுத்தக் கூடாது, கொச்சைப்படுத்தக் கூடாது என்பதற்காக நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு ஆதாரங்கள் நிறைய இருந்தாலும்கூட, எனக்கு நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தாலே.....

*பிற்பகல் 6–20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிதாங்கியிலே அன்றைக்கு அழகன் என்கின்ற பெரியவர் இறந்து, அந்தப் பிணத்தை 3 நாட்களுக்கு மேலாக அடக்கம் செய்ய முடியாமல் அவருடைய குடிசையிலேயே வைத்திருந்தபோது, இந்த அவையிலே அதுகுறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அன்று விவாதம் நடந்தபோது அப்போது பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினராக இருந்த பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் குறுக்கிட்டுப் பேசியபோது, டாக்டர் ராமதாஸ் அவருடைய தோளிலே கொண்டுபோக முடியுமா என்று நான் கேட்டதற்குப் பின்னாலே, அதற்குப் பின்னாலே, ஒரு குழந்தை இறந்து போனபோதுதான் டாக்டர் ராமதாஸ் அங்கே போய் அதைத் தூக்கிக் கொண்டு போவதற்கு முயற்சி செய்தார்கள். இங்கே பதிவேடுகளில் அது இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, இதை விட்டுவிட்டு அடுத்த பிரச்சினைக்கு வாருங்கள். மாண்புமிகு உறுப்பினர் சட்டமன்றப் பதிவேட்டில் இருக்கிறது என்கிறார்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தவறான தகவல். அவர் தன்னுடைய தோளிலே சுமந்து சென்ற பிறகு இவர் அதைப் பற்றி இங்கே பேசினார். அது குழந்தையினுடைய பிணம் அல்ல. குழந்தையினுடைய பிணத்தை எடுத்துச் சென்றதாகச் சொல்லுகிறார். குழந்தையினுடைய பிணம் அல்ல. வயது முதிர்ந்த ஒரு பெரியவரின் பிணம் அழுகிய நிலையிலே இருந்தபோது அந்தப் பிணத்தைத் தோளிலே சுமந்து சென்று சாதனை படைத்தவர் என்பதை யாரும் மறுக்கக் கூடாது; வேண்டுமென்றே பேசக் கூடாது.

ஒரு நாடு முன்னேறுவதற்கு இப்படி எல்லா நிலைகளிலும் சமூக நீதி அந்த நாட்டிலே நிலைநாட்டப்பட வேண்டும். இங்கேகூட எங்களுக்கு ஒரு வகையிலே பெருமை. பெருமை என்னவென்று சொன்னால், இந்த நாட்டிலே கடந்த 5 ஆண்டு காலமாக சட்டமன்றத்திலே சமூக நீதியைப் பற்றி, இட ஒதுக்கீட்டைப் பற்றி நாங்கள் மாத்திரமே பேசிக்கொண்டிருந்தோம். ஆனால் இன்று, ஒரு சில அரசியல் கட்சிகள் சமூக நீதியைப் பற்றி பேசுவதற்கு முன்வந்துள்ளதைக் கண்டு நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். இதை சமூக நீதிக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதுகிறோம்.

அடுத்த பிரச்சினைக்கு வருகிறேன். இந்த நாட்டிலே மனித வளம் மேம்பாடு பெற வேண்டும். அப்படி மனித வளம் மேம்பாடு பெற வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்திலே ஒரு ஆய்வு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற உண்மையைச் சொல்லுகிறேன். உலகத்திலே இருக்கக்கூடிய 174 நாடுகளை ஆய்வு செய்த நேரத்திலே நம்முடைய இந்திய துணைக் கண்டம் மனித வள மேம்பாட்டு முன்னணியில் 128–வது இடத்தில் இருக்கிறது என்கின்ற வருத்தமான செய்தியை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படி வருத்தத்தோடு இந்தியாவின் நிலையை எண்ணிப் பார்க்கின்ற அதே நேரத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1960–1961–லிருந்து 1999–2000 வரையிலே ஒரு ஆய்வு அறிக்கை சொல்லுகிறது; தமிழகத்தினுடைய ஒருங்கிணைந்த வளர்ச்சி எவ்வளவு என்று சொன்னால் 5.5 சதவிகிதம். அதேநேரத்தில் குஜராத் மாநிலத்தினுடைய ஒருங்கிணைந்த வளர்ச்சி 7.6 சதவிகிதம். மராட்டிய மாநிலத்தினுடைய வளர்ச்சி 6.5 சதவிகிதம். மேற்கு வங்கதேசத்தின் வளர்ச்சி 6.5 சதவிகிதம். ஆந்திரப்பிரதேசத்தினுடைய வளர்ச்சி 6.1 சதவிகிதம்.

கர்நாடக மாநிலத்தினுடைய வளர்ச்சி 5.8 சதவிகிதம். கேரள மாநிலத்தினுடைய வளர்ச்சி 5.6 சதவிகிதம். இப்படித் தனித்தனியாகப் பார்த்துவிட்டு, ஒவ்வொரு ஆண்டுக்குமான ஆண்டு சராசரியைப் பார்க்கின்ற நேரத்திலே குஜராத் மாநிலத்தினுடைய ஆண்டு சராசரி வளர்ச்சி 8.2 சதவிகிதம். மகாராஷ்டிர மாநிலத்தினுடைய சாராசரி வளர்ச்சி 7.35 சதவிகிதம். கர்நாடக மாநிலத்தினுடைய ஒருங்கிணைந்த ஆண்டு சராசரி வளர்ச்சி 7.16 சதவிகிதம். ஆக, இப்படி எல்லா நிலைகளிலும் பார்க்கின்ற நேரத்திலே தமிழகத்தினுடைய ஆண்டு சராசரி ஒருங்கிணைந்த வளர்ச்சி 6.08 சதவிகிதமாக, மிகக் குறைவாக இருக்கிறது என்ற வருத்தமான செய்தியைச் சொல்லுகிறேன். குற்றச்சாட்டு சொல்வதற்காக இதை நான் சொல்லவில்லை. நாம் முன்னணியிலே இருக்கிறோம் என்று பேசிக்கொண்டிருக்கிறோம். ஏதோ ஒரு சில துறைகளிலே ஒரு சில நிலைகளிலே முன்னேறி இருக்கலாமே தவிர எல்லா வகையிலும் ஒருங்கிணைந்த வளர்ச்சி என்று பார்க்கின்ற நேரத்திலே மிகவும் பின்தங்கி இருக்கிறோம். இந்தப் பின்தங்கிய நிலையிலே இருந்து முன்னேற்றப் பாதையிலே கொண்டு வருவதற்காக ஆலோசனை சொல்லப்பட்டதே தவிர, வேறு எதற்கும் அல்ல என்ற கருத்தை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆக இந்தச் சமுதாயம் மேம்பாடு அடைவதற்கு கல்வி மிக முக்கியமானது. இந்தக் கல்வி நிலையைப் பார்க்கின்ற நேரத்திலே தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த தேர்ச்சி விகிதம் 62.66 சதவிகிதம். கிராமப்புறங்களிலே கல்வி பெற்றவர்களுடைய சதவிகிதம் 54.59 சதவிகிதம். அதிலே பெண் கல்வி அறிவு 51.33 சதவிகிதம். பெண்களிலே கிராமப்புற பெண்களுடைய கல்வித் தகுதி 41.84 சதவிகிதம். இதிலே தாழ்த்தப்பட்ட மக்களுடைய கல்வியறிவினுடைய விகிதாச்சாரம் 39.47 சதவிகிதம். இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களிலே, தாழ்த்தப்பட்ட பெண்கள் பெற்ற கல்வி நிலை 29.50 சதவிகிதம். (மணியடிக்கப்பெற்றது) இதிலே, பழங்குடியின மக்கள்—

*பிற்பகல் 6-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ஜி.கே. மணி:** இன்னும் நான் சப்ஜெக்டுக்கே வரவில்லை. பழங்குடியின மக்கள் 23.35 சதவிகிதம். பழங்குடியின மக்களிலே, பழங்குடியினப் பெண்கள் கல்வி 16.94 சதவிகிதம். ஆகவே, இப்படி மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கின்ற காரணத்தாலே, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட



சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம், இன்னும் வறுமைக் கோட்டிற்குக் கீழேயே இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இவர்களுடைய மேம்பாட்டிற்காக ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே வேண்டுவது சமூக நீதி என்று சொல்கின்ற நேரத்திலே, எங்கும், எதிலும், எல்லா நிலைகளிலும் சமூக நீதி வேண்டும். ஏதோ படிப்பதிலே, வேலைவாய்ப்பிலே, பதவி உயர்விலே இட ஒதுக்கீடு என்ற நிலை இல்லாமல், நாம் நிதிநிலை அறிக்கை தயாரிக்கின்றோமே அதிலேயிருந்து வரவேண்டும். எப்படி என்று சொன்னால், இங்கு சமத்துவத்தைப் பற்றிப் பேசுகின்றோம், சமூக நீதியைப் பற்றிப் பேசுகின்றோம், உண்மை ஜனநாயகம் வரவேண்டுமென்று சொல்கின்றோம். அப்படி வருகின்ற நேரத்திலே, இங்கே உணவிலே வேறுபாடு; ஏழைக்கும், பணக்காரனுக்கும் உணவிலே வித்தியாசம் இருக்கிறது. உடை அணிவதிலே வேறுபாடு; குடியிருப்பிலே வேறுபாடு; இப்படி இந்த நிலைகளையெல்லாம் மாற்றுவதற்கு, தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்கு அதைக் கருத்தில்கொண்டு, நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்க வேண்டும்.

அதைப்போல மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், முன்னேற்றத்திலே அக்கறை கொண்டு, அதற்குண்டான வகையிலே நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்திலே இன்னொன்றையும் சொல்கிறேன். பாட்டாளி மக்கள் கட்சி தொடங்கிய நாளிலிருந்து, இன்று வரையில் சொல்கின்றோம், மக்கள் தொகைக்கு ஏற்ப இட ஒதுக்கீடு வேண்டுமென்று, இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிறீர்கள். இதைப் பார்த்து எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. "மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் நலிவுற்ற இப்பிரிவினரின் தொகை, எத்தனை விழுக்காடு இருக்கின்றதோ, அதற்கேற்றபடி, இட ஒதுக்கீட்டின் அளவும் அமைய வேண்டும் என்பதே இவ்வரசின் உறுதியான முடிவாகும்" என்ற வார்த்தைகளைக் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன், பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அதைத்தான் பாட்டாளி மக்கள் கட்சி சொல்லிக்கொண்டிருக்கிறது. ஆகவே, மக்கள் தொகை அடிப்படையிலே இட ஒதுக்கீடு வேண்டும்.

இன்றுகூட தலித் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு 18% இட ஒதுக்கீடு இருக்கிறது. அது போதாது. மக்கள் தொகைக்கு ஏற்ப இல்லை. 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 20 சதவிகிதம் தலித் மக்கள் உள்ளனர். இப்போது மக்கள் தொகை கூடி இருக்கின்ற காரணத்தாலே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 22% இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று

நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, இன்றைக்கு 20% இட ஒதுக்கீடு இருக்கிறது. இதிலே 108 சாதி மக்கள். இதிலே அதிக பெரும்பான்மை மக்கள் தொகை கொண்டவர்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மிகவும் சொற்ப அளவிலே வாழ்ந்து கொண்டு இருப்பவர்களும் இருக்கிறார்கள். இப்படி 108 சாதிகளுக்கும் எல்லா நிலைகளிலும், சரியான இட ஒதுக்கீடு கிடைப்பதில்லை. சில இடங்களிலே, சில நேர்வுகளிலே மக்கள் தொகை அதிகமாக இருக்கக்கூடிய வன்னியர் போன்றவர்களுக்குக் கூடுதலாக இடம் கிடைக்கிறது. அந்த நேரங்களிலே மக்கள் தொகை குறைவாக இருக்கக்கூடிய பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. வேறு சில இடங்களிலே, வேறு சில நேர்வுகளில் மக்கள் தொகை அதிகமாக இருக்கக்கூடிய வன்னியர்களுக்குக்கூட, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைக்காமல் போய் விடுகிறது. மக்கள் தொகை குறைவாக இருக்கக்கூடிய ஒருசில சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கூடுதலாக கிடைக்கக்கூடிய நிலையிருக்கிறது. இப்படி 20% என்று வைத்துவிட்டு, 108 சாதிகளுக்கு, பிரித்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அது சரியான சமூக நீதியின் அடிப்படையில் போய்ச் சேராது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு நான் சொல்கிறேன். ஆந்திர மாநிலத்திலே இருக்கக்கூடிய தலித் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுடைய இடஒதுக்கீட்டை நான்கு தொகுப்பாகப் பிரித்திருக்கிறார்கள். அங்கே தலித் மக்களிடையே இருக்கக்கூடிய உட்பிரிவுகளுக்கு, எல்லோருக்கும் சமூக நீதி கிடைக்கக்கூடிய வகையிலே செய்திருக்கிறார்கள். அதைப்போல தமிழ்நாட்டிலும்கூட, 18% இருக்கக்கூடிய இடஒதுக்கீட்டை, இங்கேயிருக்கின்ற உட்பிரிவின் அடிப்படையிலே பிரித்துக்கொடுத்தால், எல்லாச் சமுதாய மக்களுக்கும் சென்றடையும். அதிலேகூட பல்வேறு சமுதாய மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே மிகவும் பின்தங்கியவர்களுக்கு இருக்கக்கூடிய 20% இட ஒதுக்கீடு நிச்சயமாகப் போதாது. மக்கள் தொகை அடிப்படையிலே நிச்சயமாகக் கொடுக்க வேண்டும். இங்கே 20% இட ஒதுக்கீட்டை, 30% ஆக உயர்த்த வேண்டும். அப்படி 30% ஆக உயர்த்துகின்ற நேரத்திலே அதிகப் பெரும்பான்மை கொண்டவர்கள், இந்தத் தமிழகத்தினுடைய மக்கள் தொகையிலே மூன்றில் ஒரு பங்கு மக்கள் தொகையைக்



கொண்டவர்கள் வன்னியர்கள். ஆகவே இவர்களுக்குத் தனி இடஒதுக்கீடு கொடுப்பதிலே நியாயம் இருக்கிறது. உதாரணத்திற்கு அண்டை மாநிலமான கேரள மாநிலத்திலே, ஈழவர் என்ற சமுதாயம் இருக்கிறது. அந்தச் சமுதாயம் அதிகப் பெரும்பான்மை மக்களைக் கொண்டது. அங்கே ஈழவர்களுக்கு தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போல வன்னியர்களுக்கும் மக்கள் தொகை அடிப்படையிலே இடஒதுக்கீடு வேண்டும். வன்னியர்களைப் போலவே, மிக...

*பிற்பகல் 6–30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். ஏனென்றால், இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, வன்னியர்களைப்போல, எல்லாச் சமுதாய மக்களுக்கும் மக்கள் தொகை அடிப்படையிலே நீங்கள் குறிப்பிட்டிருக்கிற மாதிரி, இடஒதுக்கீட்டைக் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல மத்திய அரசு காரணமாக, உச்ச நீதிமன்றம் காரணமாக 69 சதவிகித இடஒதுக்கீடு இன்று கேள்விக்குறியாக இருக்கிறது. அதற்கு நம்முடைய தமிழக அரசு முனைப்பாகச் செயலாற்ற வேண்டும். இந்தச் சமூக நீதிக்காக முனைப்பாகச் செயலாற்றக்கூடிய நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த அரசுக்கு பாட்டாளி மக்கள் கட்சி எல்லா வகையிலும் உறுதுணையாக இருக்கும் என்ற அந்தச் செய்தியை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று மத்திய அரசுக்கு கட்சி வித்தியாசம் இல்லாமல், இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப வேண்டும். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஒன்றாக இணைந்து குரல் கொடுக்க வேண்டும். பாட்டாளி மக்கள் கட்சி அதில் ஈடுபட்டிருக்கிறது. தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சமுதாயத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்திலே கோரிக்கைக்குக் கையொப்பம் பெற்றுக்

கொடுப்பதற்கான ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே, சமூக நீதி கிடைக்கக்கூடிய வகையிலே, எல்லாச் சமுதாய மக்களுக்கும் நல்ல நிலை கிடைப்பதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1989–லே கவர்னர் அலெக்சாண்டர் இருந்த காலம். அந்த நேரத்திலே ஜாதி வாரிக் கணக்கெடுப்பு வேண்டுமென்று சொல்லி, அவர்கள் வெங்கடகிருஷ்ணன் கமிஷனை நியமித்தார்கள். அதற்குப் பிறகு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு வந்த உடனே அதைக் கலைத்துவிட்டது. ஆகவே, இந்த இட ஒதுக்கீட்டிற்கு ஜாதி வாரிக் கணக்கெடுப்பு மிக மிக அவசியமானது. அதை உடனடியாக எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே மத்திய அரசுத் துறையிலே 27 சதவிகிதம் O.B.C.–க்கு இருக்கிறது. நினைத்துப் பார்க்க வேண்டும். மக்கள் தொகை 65 சதவிகிதத்திற்கு மேலே இருக்கிறார்கள். 27% என்று சொன்னால், மிகக் குறைவாக இருக்கிறது. அதைக் கூடுதலாக்குவதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த M.B.C.–ஆக, S.C.–ஆக, B.C.–ஆக இருந்தாலும்கூட பதவி உயர்விலே இடஒதுக்கீடு இல்லை. அதைக் கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்னொன்று. சமூக நீதிக்கு யாரெல்லாம் போராடினார்களோ– சமூக நீதிக்காக போராடியவர்களுக்கு இந்த அரசு விருது கொடுக்கிறது. ஆகவே, உண்மையாகவே சமூக நீதிக்கு யார் போராடினார்களோ – அவர்களைத் தேர்ந்தெடுத்து இந்த அரசு விருது கொடுக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையையும் இங்கே வைக்க விரும்புகிறேன்.

மொழிப்போர் தியாகிகளுக்கெல்லாம், மொழிப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்கு எல்லாம் 'மொழிப்போர் தியாகிகள்" என்று கௌரவம் செய்கிறது அரசு. அதைப்போலவே இந்த சமூக நீதிக்கு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே 7 நாட்கள் சாலை மறியல் போராட்டம் போன்ற பல்வேறு போராட்டங்களைச் செய்து, இலட்சக்கணக்கான எங்களது இயக்கத்தின் தொண்டர்கள் இன்னும் சிறைக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள்; வழக்குமன்றத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்று கடந்த ஆட்சி காலத்திலிருந்து பேசிக்கொண்டு இருக்கிறோம்;



கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறோம்; நிறைவேறவில்லை. இந்த அரசு சமூக நீதிக்காகப் போராடிய எங்கள் இயக்கத் தொண்டர்கள்மீது போடப்பட்டிருக்கக்கூடிய வழக்குகளை வாபஸ் பெற வேண்டும். அதைப் போலவே சமூக நீதிப் போராட்டத் தியாகி என்ற ஒரு நற்சான்றிதழைக் கொடுக்க வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சுருக்கமாக முடித்துவிடுகிறேன். ஒன்றே ஒன்று. அரசுத் துறையிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் இங்கே குறிப்பிடுகின்றபோது, மத்திய அரசுப் பணியிலே 27 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கப்படுகிறது; அதை உயர்த்தி 30 சதவிகிதமாக ஆக்க வேண்டும் என்பது போல இங்கே சொன்னார்கள். ஆனால், நமது கொள்கைக் குறிப்பிலே இந்த அரசு 27 சதவிகிதத்தை 50 சதவிகிதமாக உயர்த்தித் தருமாறு மத்திய அரசிடத்திலே கேட்டுக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் 30 என்று சொன்னது மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இருக்கக்கூடிய 20 சதவிகித இட ஒதுக்கீட்டை 30 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென்பது பற்றி. ஆனால், இந்த நாட்டிலே பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் மொத்தம் 65 சதவிகிதத்திற்கு மேலே இருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய இடஒதுக்கீடு 27 சதவிகிதம். அதை உயர்த்த வேண்டுமென்று சொல்லி இருக்கிறேன். ஆனால், தமிழக அரசு கொள்கை விளக்கக் குறிப்பிலே 50 சதவிகிதமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் நான் குறித்து வைத்திருக்கிறேன்; வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அத்தோடு உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதை 50 ஆகப் பெறுவதற்கு எல்லா வகையிலும் நீங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு உறுதுணையாக நாங்கள் இருப்போம் என்ற செய்தியை நான் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மீன் வளத் துறையிலே மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் என்று சொல்லக்கூடிய மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பணியிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். 40 சதவிகிதம் ஆட்குறைப்பு என்று சொல்லி, 670 பணியாளர்கள் அங்கே வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களை மீண்டும் பணியிலே நியமனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே, இடைநிலை ஆசிரியர் பயிற்சி. இடைநிலை ஆசிரியர் பயிற்சியிலே– *(மணியடிக்கப்பெற்றது)* இரண்டே பாயிண்ட்தான். பேசி முடித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6–35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, இதைக் கல்வி மானியக் கோரிக்கையிலே பேசியிருக்கிறீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** சீக்கிரம் பேசி முடித்துக்கொள்கிறேன். இடைநிலை ஆசிரியர் பணி நியமனங்களிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அந்த இடங்களை நிரப்புவதற்கு, ஆண்டிற்கு சிறப்பு நேர்வு என்ற அடிப்படையிலே 100 பேரை கூடுதலாகப் பயிற்சிக்கு நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அப்படி வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போல கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பிறகு சென்னைப் பல்கலைக்கழகத்தில் இட ஒதுக்கீடு சுத்தமாகக் கிடையாது. இங்கே தாழ்த்தப்பட்டவர்கள் இரண்டு சதவிகிதம், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் 1.25 சதவிகிதம் பணியிலே இருந்துகொண்டிருக்கிறார்கள்; விரிவுரையாளர்கள் பணியிலிருந்து எல்லாப் பணியிடங்களிலேயும். அதைப்போலவே எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் இடஒதுக்கீடு என்பது பின்பற்றப்படுவது இல்லை. ஆகவே, நம்முடைய அரசு கடுமையாக நடவடிக்கை எடுத்து எந்த அதிகாரி இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றவில்லை என்று சொன்னாலும்கூட, அவர்கள்மீது முழுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே–

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பதினெட்டாம்படியான். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, சமூக நீதிக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நேரத்திலே சமூக நீதி தொடர்ந்து நிலைநாட்டப்பட, இந்த மண்ணிலே நிலைபெற தமிழக அரசு முயற்சிகளை



மேற்கொள்ள வேண்டும். சமூக நீதிக்கு பாட்டாளி மக்கள் கட்சி எல்லா நிலைகளிலும் உறுதுணையாக இருக்கும் என்ற செய்தியைச் சொல்லி, நன்றி கூறி, அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. பதினெட்டாம்படியான்.

***திரு. க. பதினெட்டாம்படியான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில் எனக்கு ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நெஞ்சார்ந்த பணிவான வணங்கங்களைத் தங்களுக்கு முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னை ஈன்றெடுத்த தாய்–தந்தையரை இந்த நேரத்தில் நினைவு கூர்கின்றேன்.

> "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்று எண்ணி அகமகிழ்வதற்கு அவர்கள் இந்தப் பூவுலகில் தற்போது இல்லையென்றாலும், என்னைப் பெற்றெடுக்காத, ஈன்றெடுக்காத, எனது அன்புத் தாய், எனது குலதெய்வமாக விளங்குகின்ற தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தயவால், சாதாரண ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து 15 வருட காலம் இராணுவத்தில் பாராசூட் பட்டாலியனில் எழுத்தராகப் பணியாற்றிவிட்டு 1972–லிருந்து அரசியல் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த, மன்றச் செயலாளராக இருந்த என்னை படிப்படியாக அரசியல் பொறுப்புகளிலே, கழகப் பொறுப்பில் அமர்த்தி இன்று மாவட்டச் செயலாளராக ஆக்கி, நடந்து முடிந்த 12–வது சட்டசபைத் தேர்தலில் என் சொந்தத் தொகுதியான வரலாற்றுச் சிறப்புமிக்க வீரத்தின் விளைவிடமான சேதுச் சீமையில், முதுகுளத்தூர் தொகுதியில் என்னை ஒரு வேட்பாளராகவும் அறிவித்து என் வெற்றிக்காக அல்லும் பகலும், இரவு என்றும் பகல் என்றும் பாராமல் மெய்வருத்தம் பாராமல் கண் துஞ்சாமல், அந்தக் காட்டுக் கருவேல் முள் செடி அடர்ந்த கரடுமுரடான பாதையில், என் அன்புத் தாய் மெய்நோகப் பயணம் செய்து இரவு 9–50 மணிக்கெல்லாம் முதுகுளத்தூர் வந்தடைந்து, அங்கே கூடியிருந்த மாபெரும் கூட்டத்தில் உரையாற்றி என்னை வெற்றிபெறச் செய்ததோடு அல்லாமல் இந்தச் சிறப்புமிக்க மாமன்றத்தில் எனக்குப்

பேச வாய்ப்பு அளித்து, சான்றோர்கள் வரிசையிலே என்னையும் அமரச் செய்து, கண் அழகு பார்த்துக்கொண்டிருக்கும் எனது குலதெய்வமாகிய மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி, என்னுடைய விசுவாசமிக்க நன்றி கலந்த வணக்கத்தை அவர்களுடைய பொற்பாதங்களில் வணங்கி சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-40*

மூன்றாவதாக என்னுடைய வெற்றிக்குப் பாடுபட்ட மதச் சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற அனைத்து இயக்கங்களின் தலைவர்களுக்கும், எனது அன்பு கழக உடன்பிறப்புகளுக்கும், என்னை வெற்றி பெறச் செய்த எனது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை வணக்கத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு”

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கிணங்க, எனது அன்புத் தாயே, தாங்கள் சிந்தித்து ஒரு முடிவு எடுத்துவிட்டால், அதன்பின் வானமே இடிந்து தலையிலே விழுந்தாலும், ‘அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே’ என்று கூறிய பாரதியின் வீரமுழக்கம் போல, எதற்கும் அஞ்சாத நெஞ்சுரம் கொண்ட, சிங்க நிகர் தாயே, தாங்கள் ஒரு சாதாரண மனிதப் பிறவி என்று கருத முடியாது. அப்படி நான் கருதுவதும் இல்லை.

‘துஷ்ட நிக்ரஹம், சிஷ்ட பரிபாலனம்’ என்ற தெய்வீக குணங்களோடு நாட்டு மக்களுக்குச் செய்கின்ற சேவையே மகேசனுக்குச் செய்கின்ற சேவை என்ற உயரிய நோக்கத்தில் இந்தத் தமிழகத்தையும், தரணியையும் ஆளவந்த நவாம்சம் கொண்ட நவசக்தியாகவே கருதுகிறேன் அம்மா.

தங்களிடம் உள்ள உண்மை, அன்பு, கருணை, ஈவு, இரக்கம், தயவு, தாட்சண்யம், வீரம், கண்டிப்பு இவைதானே தாயே தெய்வீக குணங்கள். ஆகையால்தான் நாங்கள் தங்களை இதய தெய்வம் என்று பூஜிக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பூமியில் தெய்வமாக வணங்கப்படுகிற இராமர், கிருஷ்ணர், ஆதிசங்கரர், புத்தர், ஏசுபெருமான், நபிகள் நாயகம், குருநானக், குருகோவிந்த் போன்றவர்கள் எல்லாம் ஒருகாலத்தில் மனிதர்களாக இந்தப் பூமியில் அவதரித்து சிறப்பாக வாழ்ந்து, மக்களோடு மக்களாக அந்த மக்களை ஆண்டு, அதன்பின், இன்று வணங்கப்படுகிற



தெய்வங்களாக விளங்குகிறார்கள் என்பதுதான் உண்மை வரலாறு. ஆகையால்தானே வள்ளுவப் பெருந்தகையும்,

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்”

என்றார்.

மாண்புமிகு அம்மா அவர்களே, நாங்கள் தங்களை இதய தெய்வம் என்ற அளவில் இதயத்தில் வைத்து பூஜிப்பதற்கும் ஒரு முக்கியத்துவம் உண்டு. அதாவது, பெரியபுராணத்தில் வருகிற 63 நாயன்மார்களிலே ஒருவரான பூசலார் நாயனார் என்பவர், தன் விசுவாசம் மிக்க இறைவனுக்கு இதயத்திலே ஆலயம் அமைத்து அதற்கு ஒரு கும்பாபிஷேகமே நடத்திவிட்ட வரலாறு. காடலார் என்ற அரசர் மூலமாக தெரிய வந்த உண்மை வரலாறு பெரியபுராணத்தில் உள்ளது. ஆகவேதான், என் போன்ற, தங்கள் பெயரில் விசுவாசமிக்க பக்தர்களாகிய உண்மைத் தொண்டர்கள் எங்கள் இதயக் கோயிலில் தங்களை இதய தெய்வமாக வைத்து பூஜிக்கிறோம். தாங்கள் இந்த பூமியில் நல்ல ஒரு சிறப்பான பொற்கால ஆட்சி நடத்துகின்ற இந்தக் காலத்திலே உங்களை நாங்கள் இதய தெய்வம் என்று அழைக்கிறோம் என்றால், அதுதான் தாங்கள் பெற்ற அவதாரப் பிறப்பின் மகிமை தாயே. இந்த நிலை, தமிழும், தமிழக மக்களும், தமிழ் மண்ணும், இந்த பூமியில் உள்ளவரை, நிலைத்து இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்தபடியாக நான் இந்த மானியக் கோரிக்கையிலே ஒருசில கருத்துகளை மட்டும் சொல்லி முடிக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இது என்னுடைய கன்னிப் பேச்சு. நான் எப்போதும் இந்த மன்றத்தில் நிற்காதவன். தயவுசெய்து, அடுத்து நீங்கள் எப்போதாவது பேச வேண்டுமென்ற வாய்ப்பு அளிக்காவிட்டாலும்கூட, இரண்டொரு மணித் துளிகள் கூடுதலாகக் கொடுத்துதவ வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கை, ஒரு சிறப்புமிக்க அம்சத்தோடு, இந்த நாட்டு மக்களுடைய உயர்வை, அதிலும் பின்தங்கிய தலித் மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுடைய உயர்வை, வாழ்வைக் கருதி போடப்பட்ட மானியக் கோரிக்கை. ஆகவே நல்ல எண்ணத்தோடு போட்ட திட்டங்கள் அனைத்தையுமே நல்லவிதமாகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்திக் காட்டுவார்கள் என்பதை நான் கருத்திற்கொண்டு, இந்த மானியக் கோரிக்கை முழுவதையுமே என் மனதார வரவேற்கக் கடமைப்பட்டுள்ளவனாகக் கருதி, அடுத்து என் தொகுதியின் கோரிக்கைக்குச் செல்கிறேன்.

[திரு. க. பதினெட்டாம்படியான்][2001 செப்டம்பர் 7

பிற்பகல் 6-45

என் தொகுதி காலம் காலமாக அரசியல் ரீதியாக எதிர் அணியிலே இருந்து வந்த தொகுதி. நடந்து முடிந்த 11–வது சட்டமன்றத் தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரே ஒரு முறைதான் ஓர் உறுப்பினர் 2–1/2 ஆண்டுகாலம் அவர் சார்ந்த இயக்கத்தில் ஆளும்கட்சி உறுப்பினராக இருந்தார். அதன் பின் இந்த 12–வது சட்டசபைத் தேர்தலில்தான் நான் ஆளும்கட்சி உறுப்பினராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதி மிக மிகப் பிற்படுத்தப்பட்ட தொகுதி. ஆகவே, தாயுள்ளம், கருணை உள்ளம் கொண்ட அம்மா அவர்கள் எங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தை எப்படித் தத்து எடுத்து குடிநீர்ப் பெருந்திட்டத்தையும் இராமேஸ்வரத்தில் மீனவர்களுக்காக பெரிய துறைமுகமும் ஏற்படுத்தச் செய்திருக்கின்றீர்களோ–அதற்கு நான் நன்றியைக் கூறிக்கொண்டு–அதேபோல் என்னுடைய தொகுதியையும் தத்து எடுத்து, எல்லாத் துறைகளிலும் மற்ற தொகுதிகளோடு சமமாக வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதில் சிறப்புக் கவனம் எடுத்தால்தான் அது மற்ற தொகுதிகளோடு சமமாக வரும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். காரணம் என் தொகுதியில் இன்னும் நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களில் இணைப்புச் சாலைகள் கிடையாது. பெரும்பாலும் 100 கிராமங்களில் அதிகாலையிலேயே எழுந்து அவர்கள் கால், முகம் கழுவுவதற்குக்கூட தண்ணீர் இல்லாமல்–முற்றம் தெளிப்பது என்று சொல்வார்கள்–வாசல் தெளிப்பதற்குக்குக்கூட தண்ணீர் கிடைக்காத கிராமங்கள் உண்டு. போக்குவரத்தும் அதே மாதிரிதான். ஆகவே, அத்தியாவசியத் தேவைகளான குடிநீர், மின்சாரம், பேருந்துப் போக்குவரத்து, குழந்தைகள் பள்ளிக்குச் செல்லக்கூடிய வாய்ப்புகள் எதுவுமே அற்ற நிலையில் இருப்பதனால் அந்தப் பகுதியில் வாழக்கூடிய மக்கள் அதிகபட்சம் தங்களுடைய விவசாயத்தை நம்பி வாழ்வதனால், கடந்த 2 ஆண்டுகளாக மழை பெய்யாததினால் ஒரு மிகப் பெரிய வறட்சி ஏற்பட்டு அத்தனை பேரும் பஞ்சம் பிழைப்பதற்காக இராமேஸ்வரம், தூத்துக்குடி, மதுரை போன்ற நகரங்களில் பிழைப்பைத் தேடிச் சென்று கூலி வேலை செய்து வருகிறார்கள் என்ற நிலைமையை என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இந்த நேரத்தில் நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இது பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருடைய மானியக் கோரிக்கை. என் தொகுதி அதிகபட்சமான ஆதிதிராவிடர் மக்களும் சீர்மரபினரும் வாழக்கூடிய



2001 செப்டம்பர் 7] [திரு. க. பதினெட்டாம்படியான்]

தொகுதி. ஆகவே, ஆதிதிராவிட மக்களுக்கு எப்படி இலவச மனைப்பட்டாக்கள் கொடுத்து இலவசமாக வீடு கட்டிக் கொடுக்க தாட்கோ மூலமாக நிலைமை இருக்கிறதோ அதுபோலச் சீர்மரபினருக்கும்–இலவசப் பட்டா வழங்குவதோடு மட்டும் இருக்கிறது. அவர்களுக்கும்–வீடு கட்டிக் கொடுக்க இந்த அரசு முன்வரவேண்டுமென்று பணிவோடு நான் அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) காலடியில் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

அடுத்தபடியாக எங்கள் பகுதியில் அதிகபட்சமான தொழிற்சாலைகள் இல்லை. கமுதி ஒன்றியத்தில் அச்சங்குளம் என்ற இடத்தில் ஒரு மில் இருக்கிறது. அதுபோலவே கீழத்தூவளையை மையமாக வைத்து, பஞ்சு அதிகமாகக் கிடைக்கக்கூடிய ஏரியாவாக அது இருப்பதால் அங்கே ஒரு பஞ்சாலை கட்டித்தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அடுத்தபடியாக வாலிநோக்கம் என்ற பகுதியில் பழைய கப்பல்கள் உடைக்கின்ற தொழில் நடக்கிறது. அங்கு பழைய இரும்புகள் கிடைப்பதால் அதை மூலப்பொருளாக வைத்து என் பகுதியில் கட்டுமானப் பணிகளுக்கு உதவக்கூடிய கம்பிகள், ராடுகள் போன்ற வீடு கட்டுமானப் பணிகளுக்கு உதவக்கூடியவற்றைத் தயாரிக்கும் அளவுக்கு ஒரு இரும்புத் தொழிற்சாலையை உண்டாக்கித் தரவேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் சட்டம்–ஒழுங்கு அடிக்கடி கெடக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. காரணம் அடுத்த மாவட்ட அரசியல் தலைவர்கள் கல்யாணம், காதுகுத்து என்று வந்தால் அங்கே ஜாதி உணர்வுகளை அதிகமாகத் தூண்டிவிட்டு திடீரென்று ஒரு பதட்ட நிலை உருவாகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுகின்றது. ஆகவே, அங்கே பரம்பரையாக, ஆதிகாலத்திலிருந்து இருந்து வந்த, துணைக் கண்காணிப்பாளர் என்ற அலுவலகம் முதுகுளத்தூரில் தற்போது இல்லை. இங்கு வசதிக் குறைவு காரணமாக அவர்கள் பரமக்குடியிலே தங்கிவிடுகின்றனர். இங்கே திடீரென்று ஏற்படக்கூடிய சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைகளை அவர்கள் உடனடியாக வந்து கவனிக்க முடியாத காரணத்தினால் அந்தத் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் அதற்கான striking force என்பதும் முதுகுளத்தூரிலேயே இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-50*

அதைப்போலவே Out–post–ஆக இருக்கக்கூடிய தேரிருவேலி போலீஸ் ஸ்டேஷனை, சப்–இன்ஸ்பெக்டர் இருக்கக்கூடிய ஒரு காவல் நிலையமாக ஆக்கித் தர வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே, அந்தப் பகுதியின் வட பகுதி மிக தொலைதூரத்தில், கண்ட்ரோலுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலையில் இருப்பதனால் திருவரங்கத்தில் ஒரு புதிய காவல் நிலையமும், சிறுகுடிபெருங்கரணை என்ற இடத்தில் ஒரு புதிய காவல் நிலையமும் ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதிக நீர்த்தேக்கங்கள் உருவாக்கக்கூடிய திட்டங்களையெல்லாம் அம்மா அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். எங்கள் பகுதியிலுள்ள குளம், குட்டை, ஏரி அனைத்தையும் நல்லபடியாகத் தூர் எடுத்து, நீர்த்தேக்கங்களை உருவாக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

அடுத்ததாக, கல்லூரி. எங்களுடைய தொகுதியில் ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பதினெட்டாம்படியான், சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. க. பதினெட்டாம்படியான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுவும் 20 நாட்களாக மூடிக் கிடக்கிறது. அதை உடனடியாகத் திறப்பதற்கும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பதினெட்டு படியைத் தாண்டிவிட்டார். நன்றி என்று சொல்லி முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நன்றி என்று சொல்லி முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நிறைய கோரிக்கைகள் இருந்தால் அவற்றை மாண்புமிகு அமைச்சர்களிடம் கொடுத்துவிடுங்கள்.

**திரு. க. பதினெட்டாம்படியான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிறைய கோரிக்கைகள் இருக்கின்றன. இருந்தாலும் மற்றவற்றையெல்லாம் அந்தந்தத் துறைகளைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர்களிடம் என்னுடைய கோரிக்கைகளாக வைத்துக்கொள்வேன் என்று கூறி, எனக்கு இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த என்னுடைய இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், தங்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மானியக் கோரிக்கைகளிலே பேசுகிற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்கள் மற்றும் பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார நிலையினை வளப்படுத்தும் பணிக்கு இவ்வரசு உயர் முன்னுரிமை அளித்து, மிகவும் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு பொருளாதார வளர்ச்சியின் பயன்கள் சென்றடைய இவ்வரசு உறுதி பூண்டுள்ளதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இம்மாநிலத்தின் ஆதிதிராவிடர் மக்கள் தொகையில் 46.75 விழுக்காடும், பழங்குடியின மக்கள் தொகையில் 27.89 விழுக்காடும் கல்வி அறிவில்லாதவர்கள் எனக் கணக்கிடப்பட்டு அவர்கள் அனைவருக்கும் கல்வி அளிக்கும் திட்டத்தை வரவேற்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின அனைத்து மாணவ மாணவிகளுக்கும் பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்க 2001–2002 நிதி ஆண்டில் ரூ.11.39 கோடியும், பத்தாம் வகுப்பு படிப்பிற்கு முற்பட்ட படிப்பிற்கான கல்வி உதவித் தொகை வழங்கும் மாநில அரசு திட்டத்தின்கீழ் ரூ.2.89 கோடியும், மத்திய அரசின் திட்டத்தின்கீழ் ரூ.3.40 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன்.

படிப்படியாக அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளையும் பொதுப் பள்ளிகளுடன் இணைத்து நடத்த இந்த அரசு முடிவு செய்துள்ளதும், இதற்காக ஒவ்வொரு பள்ளியிலும் பெற்றோர்–ஆசிரியர் கழகத்திலிருந்து உறுப்பினர்கள் மாவட்ட உதவிக் கல்வி அலுவலர்கள் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியின சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் ஆகியோரைக் கொண்டு குழு அமைக்கப்பட்டுள்ளதும் சிறப்பான அம்சமாகும்.

விடுதியில் தங்கிப் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுவந்த உணவுக் கட்டணத்தை

ரூ.225/-லிருந்து ரூ.300/-ஆக உயர்த்தியிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

குறைந்த வருவாய் பெற்றுவரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பெண்களுக்காக மகளிர் விடுதிகள், பணிக்குச் செல்லும் பெண்களுக்கான விடுதிகள் ஏற்படுத்த சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் போன்ற முக்கிய நகரங்களில் விடுதிகள் அமைக்க அரசு முடிவு செய்துள்ளதை வரவேற்க வேண்டிய அதேநேரத்தில் தருமபுரியிலும் இவ்வாறு ஒரு விடுதி அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பூர்வீகத் தொழிலை மேற்கொண்டு வரும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு முடித்திருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்த அரசு உதவித் தொகையை ரூ.600/-லிருந்து ரூ.1500/- வரையிலும், கடனாக ரூ.1400/-லிருந்து ரூ.3500/- வரையிலும் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். அதேநேரத்தில் இவற்றை உயர்த்திக் கொடுப்பதோடு இந்தத் தொழிலில் உள்ள அனைவருக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இவர்கள் மனித சமுதாயத்தைச் சுத்தப்படுத்துகிற சமூக அடிவேர்கள் ஆவார்கள். எனவே, இவர்களைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-55*

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கெனத் தனியாக 1974 முதல் இயங்கிவரும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் - தாட்கோ - தொழில் நுட்பப் பிரிவு மற்றும் வளர்ச்சிப் பிரிவு என இரு பிரிவுகளாகச் செயல்படுகிறது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கட்டித்தரப்படும் Group House திட்டத்தில் பல முறைகேடுகள் உள்ளன. அதன் மேல்கூரை உயரம் மிகக் குறைவாக உள்ளதால், உச்சி வெயில் நேரத்தில் வெயிலின் வெப்பத்தை, உஷ்ணத்தை அப்படியே வீட்டிற்குள் கொடுக்கிறது. மதிய நேரத்தில் அந்த வீட்டில் யாரும் உட்கார முடியாது. வெளியில் ஓர் ஓலைக் குடிசையோ அல்லது பந்தலோ போட்டு உட்கார வேண்டிய நிலை இருக்கிறது. மழைக்காலங்களில் ஒழுகுகிறது. சுவர் வெடிப்பு ஏற்படுகிறது. இக்குறைகளைப் போக்க இனி நல்ல வீடுகளைக் கட்டித் தருவதோடு, சமூகம் மதிக்கத்தக்க முறையில் ஒரு சமையல் அறை, குளியல் அறை, படுக்கை வசதி போன்ற அனைத்து வசதிகளையும் கொண்ட



வீடுகளைக் கட்டித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் இனத்தவர்களில் 29.49 விழுக்காடும், பழங்குடி இனத்தவர்களில் 16.20 விழுக்காடும் நிலம் இல்லாதவர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஆதிதிராவிடர்களின் எண்ணிக்கை 11,16,291 என்றும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள பழங்குடியின மக்களின் எண்ணிக்கை 76,844 என்றும் கணக்கிட்டால் மட்டும் போதாது. இவர்களுக்கு உபரி நிலங்களை எடுத்துக் கொடுப்பதோடு, தொழிலில் இவர்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட அளவில் 12 ஆம் வகுப்பில் முதலிடம், இரண்டாமிடம் பெற்று தொழில் படிப்பில் சேரும் மாணவ மாணவியர்களுக்கு அண்ணா, பெரியார் ஆகியோரின் பெயரில் நினைவுப் பரிசு வழங்குவதை வரவேற்கிறேன்.

அரசு ஆணை 44-ஐ நீக்கியதை, நீக்கி உத்தரவிட்டமைக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறுமையை ஒழிக்க நமது நாட்டின் பழைய உணவுப் பயிர்களான சோளம், சாமை, கேழ்வரகு போன்ற பயிர்களைப் பயிரிட வேண்டுமென்று கருதுகிற நேரத்தில் மேட்டு நிலப் பயிர்களுக்கு அரசு வங்கிகளில் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவற்றிற்குப் பயிர்ப் பாதுகாப்பு- இன்சூரன்ஸ்-போன்ற திட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட சாதிய மோதல்களைச் சண்டையின்மூலமே தீர்த்துவிட முடியும் என்று சில கருதுகிறார்கள். இந்தச் சாதிய சண்டைக்குக் காரணமானவர்கள் காரணம் தீண்டாமை என்னும் ஒரு கொடிய விஷத் சண்டைக்குக் தன்மையே ஆகும். இதைப் போக்க வேண்டுமானால் அவற்றைக் களைய அரசு கடும் முயற்சியில் இறங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதியைச் சொல்லுவது ஒரு பெரும் குற்றமல்ல. தீண்டாமையை அனுஷ்டிப்பதுதான் மிகப் பெரிய குற்றமாகக் கருதப்படுகிறது. இதைத்தான் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தீட்டு என்ற சொல்லை மட்டும் தேடிக் கண்டுபிடித்து இதை வேரறுக்க தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்.

இது இன்று சர்வதேச அளவில் விவாதப் பொருளாக மாற்றப்பட்டு, இதற்காக டர்பன் மாநாடு இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இதை ஆழமாகப் பேசவும், விவாதிக்கவும் அதற்குத் தீர்வு காண வேண்டுமென்றும் வலியுறுத்தி தன் கருத்தைச் சொல்லி இருக்கிறது.

அமெரிக்காவின் அடிவயிற்றில் இருந்துகொண்டு அதன் நயவஞ்சகச் சூழ்ச்சியை முறியடிக்கின்ற காரணத்தாலேயே கியூபா என்னும் ஒரு சின்னஞ்சிறிய நாடு 16 ஆண்டுகாலம் தன்மீது சுமத்தப்பட்டுள்ள பொருளாதாரத் தடையையும் பொருட்படுத்தாமல் வீறுநடைபோடும் அதன் புரட்சி நாயகன் ஃபிடல் காஸ்ட்ரோ, இதன்மீது கருத்தாழம் மிக்க கருத்துகளை உரையாக நிகழ்த்தியுள்ளார்.

இன்று அளப்பரிய சாதனையை விஞ்ஞானம் சாதித்துக் கொண்டுள்ளது. உலகில் மிகப் பெரிய சாதனைகளைச் சாதித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், தொலைத்தொடர்புச் சாதனங்கள் மிகப் பெரிய அளவில் வளர்ந்து இருக்கிற நேரத்தில், கணினிமயமாக்கப்பட்டுள்ள இந்தக் காலத்தில் இன்னும் பல்வேறு இடங்களில், கோயில்களில், பொது இடங்களில், குளங்களில் தாழ்த்தப்பட்டோர் அனுமதிக்கப்படுவதில்லை. முன்னாள் முதல்வரே இரட்டை டம்ளர் முறை உள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் அதைப் போக்க அவர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்கிறபோதுதான் வேதனையாக இருக்கிறது.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கல்வியில் முன்னுரிமை கொடுத்து இவர்களை உருவாக்க வேண்டும். இதை இந்த அரசு ஒரு கொள்கையாக ஏற்றுச் செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கு வீடுகட்டும் இடம் எடுத்துக் கொடுப்பதிலே மிகப் பெரிய காலதாம்தம் ஏற்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது) அவற்றை உடனடியாக எடுத்துக் கொடுக்க வேண்டும். இவற்றிற்கு ஒரு தலைமுறை ஆகிவிடுகிறது. இந்த முறை போக்கப்பட வேண்டும்.

54 ஆண்டு கால சுதந்திர இந்தியாவில் சுடுகாடும், சுடுகாட்டுப் பாதையும் இல்லாத பல்வேறு கிராமங்கள் இன்னும் இருப்பது மிகவும் வேதனை அளிக்கிறது. இந்தப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 7-00*

இந்த இனத்தைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் விடுதிகளில் இடம் அதிகப்படுத்தப்பட வேண்டும்; விடுதிக் கட்டட வசதிகள் அதிகப்படுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகிய இவர்களுக்கு வழங்கப்படும் சிறுதொழில் முனைவோருக்கான கடன்கள் முறையாக வழங்கப்படுகின்றனவா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இவற்றிலே முறைகேடுகள் ஏற்படுகின்றன. பினாமி முறைகள் கையாளப்படுகின்றன. இவற்றோடு புதிய பொருளாதாரக் கொள்கையினால் தாராளமயம், தனியார்மயம், உலகமயம் போன்றவற்றின் பாதிப்பும் இன்னொருபுறம் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) பேச்சை முடித்துவிடுகிறேன்.

குறிப்பாக சியாட்டில் நகரிலே கூட்டப்பட்ட அனைத்து நாடுகளின் நிதி அமைச்சர்களின் மாநாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படவும், சிறார் உழைப்பு தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் பிரச்சினைகள் அங்கே முன்வைக்கப்பட்டன. இது G-7 நாடுகளின் குள்ளநரித் தந்திரமேயொழிய வேறு ஒன்றுமில்லை. இப்பொழுது சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால் உங்கள் நாட்டு சிறு குறு மற்றும் கனரகத் தொழில்களை இழுத்து மூடிவிடுங்கள், உங்களுக்குத் தேவையான பொருட்களை நாங்கள் கொடுக்கின்றோம் என்று தந்திர உபாயம் செய்தார்கள். நல்லவேளையாக தொழிலாளி வர்க்கத்தினர் ஒரு மிகப் பெரிய போராட்டம் நடத்தி இவர்களை விரட்டிவிட்டார்கள். அவசர அவசரமாக அடுத்த கூட்ட தேதி கூட முடிவெடுக்காமல் அனைவரும் புழக்கடை வழியாக ஓட்டம் பிடித்தார்கள். இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால் ஆண்டாண்டு காலமாக தொழிலாளர்களையும், கம்யூனிஸ்ட்டுகளையும் மட்டுமே அடித்து உதைத்து பழக்கப்பட்டுப்போன போலீஸ்காரர்கள்— இதைத்தான் மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் சினிமாவில் போலீஸைப் பார்த்து, 'நீ தாங்கிய உடையும் ஆயுதமும் பல சரித்திரக் கதை சொல்லும் சிறைக் கதவும்' என்று வரலாற்றின் கொடுமைகளைச் சித்தரிப்பதாக ஒரு பாடல் பாடினார். ** (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** அவையில் இல்லாதவர் பெயரைச் சொல்கிறார், அதை நீக்க வேண்டும்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**திரு. இ. புகழேந்தி:** மத்திய அமைச்சர் பெயர். கமிஷனில் இருக்கிறது. அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி, நீங்கள் சொன்னது கமிஷனில் இருப்பதால், அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** அதுதான் உண்மை. உண்மைக்குப் புறம்பானதை நான் சொல்லவில்லை. அடுத்து, இடஒதுக்கீடு. நல்ல ஆரோக்கியமான முயற்சி. ஆனால் அதேநேரத்தில் கல்லாமையையும் இல்லாமையையும் ஒழிக்க நடவடிக்கையை வேகமாகக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கப்படும் நிதி அவர்களுக்குச் சென்றடைய ஏற்பாடு செய்ய வேண்டும். காடு வளர்க்க நடப்படும் மரங்களை மலைவாழ் மக்களிடத்திலேயே ஒப்படைக்க வேண்டும். அதன் பலன்களை அவர்களே அனுபவிக்கவும், அவர்களுக்கு ரோடு வசதி, போக்குவரத்து வசதி ஆகியவற்றை ஏற்படுத்தவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். பழனிசாமி. (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாலிப்டினம் என்னும் உயரிய தாதுப் பொருள் எனது தொகுதியில் கிடைக்கிறது. அங்கே ஒரு தொழிற்சாலையைத் தொடங்கி, பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியின் கோரிக்கை. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த எடுத்த நடவடிக்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. ஆனால் அதேநேரத்தில் அரூர் தொகுதி தொடர்ந்து வறட்சிக்கு உள்ளாகும் பகுதி என்பதால் வறட்சி நில மேம்பாட்டுத் திட்டத்தை எனது தொகுதி முழுவதும் அமல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டத்தை இரண்டாகப் பிரித்ததன் அடிப்படையில் அரூரில் வேலைவாய்ப்பு அலுவலகம் ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.



ஆதிதிராவிடர் இளைஞர்கள் பி.எட்., டி.சி.பி. படித்து முடித்துள்ளவர்களுக்கு இடஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்க முன்னுரிமை அளிக்க ஏற்பாடு செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது மட்டும் வேலைக்கு அழைக்கப்படும் பணியாளர்கள், துப்புரவுத் தொழிலாளர்களுக்கு நிரந்தரப் பணியோ அல்லது வேலையோ அல்லது இடைக்கால நிவாரணமோ வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். பழனிசாமி.

***திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், சமூக நீதி காத்த வீராங்கனை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குறிச்சி என்ற குக்கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை பெரியார் வடக்கு மாவட்ட டாக்டர் புரட்சித் தலைவி பேரவையின் மாவட்டச் செயலாளராகப் பணியாற்ற அனுமதியளித்து, பெருந்துறை சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்து பெருமைக்குரிய இம்மாமன்றத்தில் பேசும் வாய்ப்பினையும் வழங்கினார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு எனது கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்கி, வாக்களித்த பெருந்துறை தொகுதி மக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கி எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 7-05*

பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில் இவ்வரசுதான், சமூகத்தின் நலிவுற்ற

பிரிவினருக்காக, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 69 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்க வகைசெய்யும் வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டம், தமிழ்நாடு சட்டம் 45/1994 ஒன்றை (மேசையைத் தட்டும் ஒலி) இயற்றி அரசமைப்புச் சட்டத்தின் 9 ஆம் அட்டவணையில் இதனை இடம்பெறச் செய்ய மத்திய அரசை வலியுறுத்தியதன்மூலம் இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உறுதியான நடவடிக்கையை நாடே பாராட்டியதை அனைவரும் அறிவார்கள்.

அவினாசி–அத்திக்கடவு நீர் செறிவூட்டும் திட்டம். நீண்டகாலமாக ஈரோடு, கோவை மாவட்டங்களில் உள்ள பொதுமக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பெருந்துறை, ஊத்துக்குளி உட்பட 11 ஒன்றியங்களில் உள்ள குளம், குட்டைகளில் நீரைத் தேக்கி நிலத்தடி நீரைச் செறிவூட்டும், அவினாசி–அத்திக்கடவு நீர் செறிவூட்டும் திட்டத்திற்கு அனுமதி அளித்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் அமைந்துள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் 32.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க அனுமதியளித்த தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பில் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெருந்துறை, கருமாண்டிசெல்லிபாளையம் ஆகிய இரண்டு பேரூராட்சிகளும் இணைந்து பெருந்துறை நகரிலேயே இருப்பதால் இரண்டு பேரூராட்சிகளையும் ஒன்றாக இணைத்து பெருந்துறையை நகராட்சியாக நிலை உயர்த்தித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் 2,500 ஏக்கரில் அமைந்துள்ள பெருந்துறை சிப்காட் தொழில் மையம் வளர்ச்சி பெற பெருந்துறை வட்டத்தைத் தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவித்திட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.



மேலும் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நல்லாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் பள்ளபாளையம், காஞ்சிக்கோவில், பெத்தாம்பாளையம், நல்லாம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் துடுப்பதி, சீனாபுரம், பட்டக்காரன்பாளையம், பெரியபுலியூர் போன்ற சிற்றூராட்சிகளில் மொத்தம் 147 குடியிருப்புப் பகுதிகள் பயன்பெறும் இத்திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கப்பட்டும்,"பணி இன்னும் முடிக்கப்பெறாமல் உள்ளது. எனவே இத்திட்டத்தை விரைவில் முடித்து மக்களுக்குக் குடிநீர் கிடைக்க ஆவன செய்து உதவ வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

குன்னத்தூர், கொளப்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் உள்ள 76 வழியோரக் குடியிருப்புப் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஒப்புதல் அளித்தும் பணிகள் இன்னும் தொடங்கப்படாமல் உள்ளன. மேற்கண்ட பணிகள் விரைவாக நடைபெற ஆவன செய்து உதவ வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

குன்னத்தூர் பேரூராட்சி, ஊத்துக்குளி பேரூராட்சிப் பகுதிகளுக்கு குன்னத்தூர்–கொளப்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு விரைவில் அனுமதியளித்து உதவ வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கருமாண்டிசெல்லிபாளையம்–பெருந்துறை பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு – வழியோரக் கிராமங்களுக்காக – அரசு ஒப்புதல் பெறப்பட்டு, திட்டம் இன்னும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாமல் உள்ளது. இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

பெருமைமிக்க இம்மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்த தாயுள்ளம் கொண்ட எங்கள் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் மீண்டும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, உடல் மண்ணுக்கு, உயிர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்று பணிவோடு கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பழனிசாமி அவர்களுக்கு நன்றி.

**திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றுவார்கள்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்.
பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்தவந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

என்று பாடினானே புரட்சிக் கவிஞன் பாரதி. அந்தப் பாரதியின் கனவை நிறைவேற்றும் முகமாக பெண்ணுரிமை காக்கும் எங்கள் பெண் பெரியாரே, தொட்டில் குழந்தைத் திட்டம் முதல் பெண்களைத் தொழிலதிபர்களாக்கும் புரட்சித் திட்டம் வரை நாட்டின் நலனுக்காகவே செயலாற்றும் எங்கள் புரட்சித் தீபமே, (மேசையைத் தட்டும் ஒலி) நூறாண்டுகளில் எவரும் செய்ய முடியாத சாதனைகளை நூறே நாட்களில் செய்து முடித்திட்ட எங்கள் உயிர் மூச்சே! (மேசையைத் தட்டும் ஒலி) ஆதாரமேதும் இன்றித் தவித்த எங்களுக்கு வேதமாய் வந்து வழிகாட்டும் எங்கள் அன்னையே! தங்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

*பிற்பகல் 7-10*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலையிளம் தென்றலாக, தமிழர் தம் வாழ்வில் கவலை களைந்து வளம் தரும் தெய்வம் அம்மா அவர்கள். அவரது கடைக்கண் கருணைப் பார்வை கிடைத்ததால் வாழ்வில் வசந்தம் பெற்றோர் பலபேர் உண்டு. அதிலே நானும் ஒருத்தி. 1982 ஆம் ஆண்டு பள்ளி மாணவியாய் எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்களை நான் சந்தித்து ஆசி பெற்றபோது முதன்முதலாக



நான் என் அன்னையிடம் கேட்ட பொறுப்பு, தலைமைக் கழகப் பேச்சாளர் பொறுப்பு. என்னைத் தலைமைக் கழகப் பேச்சாளராக மறுநாளே நியமித்து, 1988 ஆம் ஆண்டு பரபரப்பான அந்த அரசியல் காலகட்டத்திலே நெல்லைச் சீமைக்கு வந்து என்னுடைய திருமணத்தையும் தலைமையேற்று நடத்தி வைத்து, என் வாழ்வின் அனைத்து அம்சங்களாகவும் திகழ்ந்து கொண்டிருக்கிற எங்கள் அன்னை, தெருவிலே கழகக் கொடி பிடித்து நின்ற என்னை இந்தச் சட்டமன்றத்திற்கு அழைத்து வந்ததோடு மட்டுமல்ல; அமைச்சரவை வரிசையிலே அமர வைத்திருக்கிறாரே அந்தத் தாயை நான் மீண்டும் வணங்குகிறேன்.

மண்ணிலே, மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்வார்கள். என்னைப் பொறுத்தவரையில் என்னை வாழ வைத்துக்கொண்டிருக்கிற எங்கள் அன்னை, புரட்சித் தலைவி அவர்கள்தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்பேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கண்ணகி நீதி கேட்டதால் சிலப்பதிகாரம் கிடைத்தது. பாஞ்சாலி நீதி கேட்டதால் மகாபாரதம் கிடைத்தது. எங்கள் அன்னை புரட்சித் தலைவி நீதி கேட்டதால் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி கிடைத்தது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைத் தமிழ்நாட்டு மக்கள் எங்கள் அன்னைக்குக் கொடுத்ததற்குப் பிறகு, நீங்கள்தான் இந்தத் தமிழகத்தை ஆளக்கூடிய தகுதி படைத்த தலைவர், முதலமைச்சர் என்று தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகு (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வெற்றியைப் பொறுக்கமுடியாத சிலபேர் மக்கள் தீர்ப்புக்குத் தலைவணங்க மறுத்துவிட்டு, குறுக்கு வழியிலே முதலமைச்சர் அரியணையிலே அமர்வதற்குத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு நிமிடங்கள்கூட என்னாலே நிற்க முடியாது, அதனால்தான் சட்டமன்றத்திற்குப் போகவில்லை என்று பத்திரிகைகளில் பேட்டி கொடுத்துவிட்டு, நிற்க முடியாவிட்டாலும் பரவாயில்லை, குறுக்கு வழியிலே தவழ்ந்து போயாவது முதலமைச்சர் ஆசனத்தில் அமர முடியாதா என்று துடித்துக்கொண்டிருக்கிறார்கள். சிறு நரிகள் கூட்டம் என்னதான் ஓலமிட்டாலும் எங்கள் சிங்க நிகர்த் தலைவியின் சிம்மாசனத்தில் எவரும் அமர முடியாது என்பதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திருமதி. வளர்மதி ஜெபராஜ்][2001 செப்டம்பர் 7

எங்கள் அன்னையின் திருப்பெயரை உச்சரித்ததால்தான், எங்கள் அன்னை முதலமைச்சராக அமர வேண்டும் என்பதற்காகத்தான் அம்மா அவர்கள் யாரை வேட்பாளர் என்று சுட்டிக்காட்டினாரோ அவர்களை மக்கள் வெற்றிபெறச் செய்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். எண்ணிப் பார்க்கிறேன்; கடந்த ஆட்சியாளர்களின் காட்டு தர்பாரால் பொன் நகைகளைத் தூக்கி எறிந்துவிட்டு, புன்னகையால் மக்களுக்குப் பல்வேறு திட்டங்களை எங்கள் அம்மா அவர்கள் தீட்டி வருகிறார்கள். எங்கள் தாய், புரட்சித் தலைவி அவர்கள் எங்களை வெற்றி பெறச் செய்ததற்குப் பிறகு, தன்னுடைய ஓயாத உழைப்பால், தூங்காமல், உண்பதற்கு நேரம் இல்லாமல், உறங்குவதற்கு நேரம் இல்லாமல், சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்து எங்களை வெற்றி பெறச் செய்து இந்த மாமன்றத்திற்கு அழைத்து வந்ததற்குப் பிறகு எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்கள் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்து எங்களுக்கு அறிவுரை சொன்னார்கள். என்ன சொன்னார்கள் தெரியுமா? பல்வேறு புதுமுகங்களைச் சட்டமன்ற உறுப்பினர்களாக நான் அனுப்புகிறேன். நீங்கள் சட்டமன்றத்திற்குப் புதியவர்களாக உள்ளே செல்கிறீர்கள். சட்டமன்றத்தின் விதிமுறைகள் உங்களுக்குத் தெரியாது. எனவே அதைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். படித்துத் தெரிந்துகொள்வதோடு மட்டுமல்ல, பல மூத்த உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே அமர்ந்து இருப்பார்கள். அவர்களைப் பற்றி, அவர்கள் நடந்து கொள்கிற முறையைப் பார்த்து நீங்களும் தெரிந்துகொள்ள வேண்டும். சட்டமன்றத்திலே அமைதியாக இருக்க வேண்டும், அடக்கமாக இருக்க வேண்டும். கருத்து மோதல்கள்தான் இருக்க வேண்டுமே தவிர காட்டுக் கத்தல் இருக்கக் கூடாது. எங்கள் அன்னை ஆணையிட்டார், மூத்த உறுப்பினர்களைப் பார்த்து சட்ட விதிமுறைகளைத் தெரிந்துகொள்ளுங்கள் என்று சொன்னார்கள். இந்த மன்றத்திற்கு சட்டமன்ற உறுப்பினராக எங்கள் அன்னையால் அமர்த்தப்பட்டு, பின்னாலே அமர்ந்து இருந்தபோது நான் அமைதியாக இருந்தேன். சட்ட விதிமுறைகளைத் தெரிந்து கொண்டேன். என்ன விதிமுறைகள் தெரியுமா? பேச வேண்டும் என்று ஆசைப்படுகிறபோது கையைத் தூக்க வேண்டும். சபாநாயகர் பார்க்கவில்லை என்றால் உட்கார்ந்திருக்கின்ற மேசையிலே ஏறி நின்று கத்த வேண்டும். இதுதான் மூத்த உறுப்பினர்கள் கற்றுத் தருகின்ற வழி, பாதை. அதுமட்டுமல்ல. சபாநாயகரிடத்திலே ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டுவந்து பேசுவதற்கு அனுமதி கேட்கிறபோது, அவர், தான் சொல்லுகின்ற கோரிக்கைகளை ஏற்க மறுத்தால், வாயிலே கறுப்புத்



2001 செப்டம்பர் 7][திருமதி. வளர்மதி ஜெபராஜ்]

துணியைக் கட்டிக்கொண்டு (குறுக்கீடு) நான் பேசுகிறபோது இடையூறு செய்வதற்கு அனுமதி கொடுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) வாயிலே கறுப்புத் துணியைக் கட்டிக்கொண்டு, தனக்கு எப்பொழுதெல்லாம் பேசத் தோன்றுகிறதோ, அப்பொழுதெல்லாம் துணியை விலக்கிக்கொண்டு பேச வேண்டும்...

*பிற்பகல் 7–15*

**திரு. கு. பிச்சாண்டி:** பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கையிலே பேசுவது மாதிரி தெரியவில்லை. பொதுக் கூட்டத்தில் பேசுவது போல் இருக்கிறது. மானியக் கோரிக்கைக்கு பதில் சொன்னால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அமைச்சருடைய கன்னி பதிலுரை, முதல் பதிலுரை. (குறுக்கீடுகள்) அவர்கள் இயக்கத்திலே நீண்ட காலம் பேச்சாளராக இருந்தவர்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மானியக் கோரிக்கைக்கான பதிலாகத் தெரியவில்லை. நேரம் ஆகிக் கொண்டிருக்கிறது. 20–வது வார்டு சார்பாக இந்த மலர் மாலையை அமைச்சர் அவர்களுக்கு அணிவிக்கின்றோம். அவ்வளவுதான். பாராட்டுதான்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** அப்புறம் அணிவியுங்கள், வாங்கிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரவர்கள் இந்த முன்னுரையோடு மானியக் கோரிக்கைக்குப் போகலாம்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** இப்படி பல்வேறு எடுத்துக்காட்டுகளை, இங்கே எப்படியெல்லாம் நடந்துகொள்ளலாம் என்று, சபை விதிமுறைகள் இப்படியெல்லாம் அனுமதிக்கிறது என்று பல்லாண்டு காலம் இந்த மாமன்றத்திலே உறுப்பினர்களாக இருந்தவர்கள், நடந்துகொள்வதைப் பார்த்துத்தான், நாங்கள் இருக்கின்றவர்கள் ஆச்சரியப்பட்டு அமர்ந்து இருக்கின்றோம். ஏனென்றால், நாங்கள் இந்த மன்றத்திற்குப் புதியவர்கள் அல்லவா? எண்ணிப்பார்க்கிறேன், நடக்கின்ற இந்த முறையிலே இருந்து 1989 ஆம் ஆண்டு எப்படிப்பட்ட கொடுமை இந்த மன்றத்திலே நடந்திருக்கும் என்பதை நான் திரும்பிப் பார்க்கிறேன். எதைப்பற்றியும் கவலைப்படாமல் எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்கள் இந்த நாட்டு மக்களைப் பற்றியே சிந்தித்து, பல்வேறு திட்டங்களைத் தீட்டிக்கொண்டு வருகிறார்கள்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையைப் பொறுத்தவரையில், மானியக் கோரிக்கை எண் 31-ஐ எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்கள் மாணிக்கக் கோர்வைகளாக அமைத்து, பல புதிய திட்டங்களைத் தீட்டியுள்ளார்கள். அவற்றில் சிலவற்றை உங்களுக்குச் சுருக்கமாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே பல்வேறு உறுப்பினர்கள் 69 சதவிகித இட ஒதுக்கீடு என்னவானது, அதற்குப் பாதுகாப்பு இருக்கிறதா என்கின்ற அச்சத்தை இங்கே வெளிப்படுத்தினார்கள். இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் பல்வேறு கருத்துகளைச் சுட்டிக்காட்டினார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றி.

இந்த 68 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தவர் மறைந்தும் மறையாது, மக்கள் மனதெல்லாம் வாழ்ந்துகொண்டிருக்கிற எங்கள் புன்னகை மன்னன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் 68 சதவிகித இட ஒதுக்கீட்டை தமிழகத்திற்குக் கொண்டு வந்தார்கள். 1990 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பின் அடிப்படையில் பழங்குடியினருக்கு 1 சதவிகிதம் தனியாக இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று சொன்னதன் காரணமாக 68 சதவிகிதத்திலிருந்து 69 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டது. இந்த இட ஒதுக்கீட்டிற்கு சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பேராபத்து ஏற்பட்டது. மண்டல் குழு பரிந்துரைகள் தொடர்பான வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், இட ஒதுக்கீடு 50 சதவிகிதத்தைவிட அதிகமாக இருக்கக் கூடாது என்று தீர்ப்பளித்த நேரத்தில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பாதுகாப்பதற்காக 1993 ஆம் ஆண்டு எங்கள் அன்னை, புரட்சித் தலைவி அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து உரையாற்றியபோது என்ன சொன்னார் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் எங்கள் அம்மாவினுடைய பேச்சு "தினத்தந்தி" நாளிதழிலே வெளியானது. அதன் சுருக்கத்தை உங்கள் அனுமதியோடு இப்போது நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"நீதிமன்றங்கள் வழங்குகின்ற தீர்ப்புகளைப் புறக்கணிப்பதோ, அவமதிப்பிற்கு உள்ளாக்குவதோ இந்த அரசின் நோக்கமல்ல. நாட்டில் உள்ள எல்லா நீதிமன்றங்களின்மீதும், மாண்புமிகு நீதிபதிகளின்பாலும் இந்த அரசு எந்த நிலையிலும்" – மாண்புமிகு உறுப்பினர்களே இது அம்மா பேசிய பேச்சு– "மிகுந்த மரியாதையையும், கௌரவமான போக்கையும் கடைப்பிடித்து வருகிறது; தொடர்ந்து கடைப்பிடித்து வரும் என்பதையும் மிகத் தெளிவாக அறுதியிட்டுச் சொல்ல விரும்புகிறேன்."



*பிற்பகல் 7-20*

1993 ஆம் ஆண்டு அம்மா அவர்கள் பேசியபோது மீண்டும் சொன்னார். "அதேநேரத்தில் இன்றைக்குத் தமிழ்நாட்டில் மிகப் பெரும்பான்மையாக வாழும் பிற்படுத்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்கு ஏற்பட்டுள்ள சோதனை, பின்னடைவு, இவற்றிலிருந்து அவர்களை மீட்க என்னதான் வழி, 69 சதவிகித இட ஒதுக்கீடு இனி என்றென்றைக்கும் தொடர்ந்திட இந்திய அரசமைப்புச் சட்டத்திலே உரிய திருத்தத்தைக் கொண்டுவருவதைத் தவிர மாற்று வழி எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்று கூறிய அம்மா அவர்கள், 31-12-1993 அன்று ஒருமனதாக 69 சதவிகித இட ஒதுக்கீட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அத்துடன் நம்முடைய அம்மா அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய குழுவிற்கும் தலைமையேற்று புதுடெல்லி சென்று, தமிழ்நாடு இட ஒதுக்கீட்டுச் சட்ட முன்வடிவிற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலை விரைவில் பெற்றுத் தர வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, 25-6-1994 அன்று மாண்புமிகு இந்திய நாட்டினுடைய பிரதமரைச் சந்தித்து ஓர் அறிக்கையைக் கொடுத்தார்கள். இந்திய குடியரசுத் தலைவர் சட்டமுன்வடிவிற்கு 19-7-1994 அன்று ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து இந்தச் சட்டமுன்வடிவு சட்டம் ஆகியது.

பின்னர் அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 31-பி-யின்கீழ் பாதுகாப்புப் பெறும்பொருட்டு தமிழ்நாடு சட்டம் 45/1994-ல் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்று மைய அரசிடம் வலியுறுத்தப்பட்டது. நாடாளுமன்றம் நிறைவேற்றிய அரசமைப்பு 76-வது திருத்தச் சட்டத்தின்மூலம் தமிழ்நாடு சட்டம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டது. அரசமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு 31-8-1994 அன்று இந்திய குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தார். நீதிக் கட்சிக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட இடர்பாடுகளுக்கு, நீதிக் கட்சிக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட சமூக நீதிக்கு விடியலைக் கொடுத்தவரும், இட ஒதுக்கீட்டில் இருந்த இடர்பாடுகளைக் களைய திசைகாட்டிய கலங்கரை விளக்கமாக இருந்துவரும் எங்கள் அம்மா அவர்களின் விடாமுயற்சியால் நெடுநாளைய சமூக நீதி என்ற கனவு தமிழ்நாட்டில்

நனவானது என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழ்நாடு சட்டம் 45/1994-ன் செயல்திறனை எதிர்த்து பல்வேறு வழக்குகள் உச்ச நீதிமன்றம் முன்பாகத் தாக்கல் செய்யப்பட்டன. இவ்வழக்குகளை மொத்தமாக 1-8-1994-ல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உச்ச நீதிமன்றம் நீதிப் பேராணை மனுக்களை அனுமதித்து, அவற்றை அரசமைப்பு நீதியர் ஆயத்துக்கு Constitutional Bench-க்கு அனுப்பி வைத்தது. இருப்பினும் தமிழ்நாடு சட்டம் 45/1994-ன் செயல்பாட்டுக்குத் தடை ஏதும் விதிக்கவில்லை. அரசமைப்பு நீதியர் ஆயம் அமைக்கப்படாத சூழ்நிலையில் உச்ச நீதிமன்றத்தின் இரு நீதிபதிகளைக் கொண்ட ஆயம் ஒவ்வொரு கல்வியாண்டுக்கும் இடைக்கால ஆணைகளைப் பிறப்பித்து வருகிறது. இத்தகைய ஆணையை உச்ச நீதிமன்றம் முதலில் 1994 ஆம் ஆண்டில் பிறப்பித்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதைச் சட்டப்படி சந்திக்க வேண்டுமென்று முடிவு செய்த எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்ற ஆணையை ஏற்றுச் செயல்படுத்தினார்கள். உடனே அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார் தெரியுமா? அவருடைய குடும்பப் பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. அவருடைய பேச்சின் சுருக்கத்தை நான் சொல்கிறேன். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பேசியது: "சமூக நீதியில் 69 சதவிகித இட ஒதுக்கீடு இப்போது 50 சதவிகிதம் ஆகிவிட்டது. 30 சதவிகிதமாக இருந்த இட ஒதுக்கீடு 18.4 சதவிகிதம் என்று குறைந்துவிட்டது. மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதவிகிதமாக இருந்த ஒதுக்கீடு 12.6 சதவிகிதமாக மிகக் குறைந்துவிட்டது. இப்படி ஒரு வீழ்ச்சி சமூக நீதியில் ஏற்பட்டிருப்பதைக் கண்டு இந்த அம்மையார் துடிக்க வேண்டாமா, பதற வேண்டாமா? ஆனால் துடிக்க மாட்டார், பதற மாட்டார்; காரணம் ஆங்கிலத்தில் சொல்வார்களே—முத்தமிழ் வித்தகர் சொன்னது, அப்படித்தான் அவரை அழைப்பார்கள் அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள்—ஆங்கிலத்தில் சொல்வார்கள், involvement என்று, அதாவது உணர்ச்சிபூர்வம். அந்த உணர்ச்சிபூர்வம் இந்த அம்மாவுக்கு இட ஒதுக்கீட்டுக் கொள்கையிலே இல்லை. ஒன்றிக் கலந்திருக்கிறாரா என்று கேட்டால் கிடையாது. உச்ச நீதிமன்றம் மிரட்டினால் உடனே நாம் அதற்குக் கட்டுப்பட வேண்டுமா? நான் மட்டும் முதலமைச்சராக இருந்திருந்தால் இட ஒதுக்கீட்டிற்கு எதிரான தீர்ப்பை எதிர்த்து சிரித்த முகத்தோடு சிறை சென்றிருப்பேன் உடன்பிறப்பே." (மேசையைத் தட்டும் ஒலி) அவர் சொல்லிய 2 ஆண்டுகளில் முதலமைச்சர் அரியணையிலே வந்து அமர்ந்தார். சிரித்த முகத்தோடு சிறை செல்வேன், என் தமிழ்ச்



சமுதாயம்தான் எனக்கு முக்கியம் என்று சொன்னவர் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக சிரித்த முகத்தோடுகூட சிறை செல்லாமல்கூட இருந்துவிட்டுப் போகட்டும், ** (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 7-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இந்த வாசகம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** இது என்ன பொதுக் கூட்டமா இல்லை, மானியக் கோரிக்கையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வாசகம், அவர் பத்திரிகையிலே படித்தது. அவருடைய கருத்தைப் படித்தது, அது அவைக் குறிப்பிலே ஏறும். அதற்குப் பின்னாலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வாசகம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேடையிலே பேசுவது போல பேச எங்களுக்கும் தெரியும். (கூச்சல்)

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** உங்களைப் பற்றி எங்களுக்கும் தெரியும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சிரித்த முகத்தோடு சிறை செல்வேன் என்று சொன்ன கருணாநிதி அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த விளக்கத்திற்கு அமைச்சர் போகலாம். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் அடுத்த விளக்கத்திற்குப் போகலாம்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** சிரித்த முகத்தோடு சிறை செல்வேன் என்று சொன்ன மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களே, 5 ஆண்டு காலம் நீங்கள் என்ன செய்தீர்கள்? மத்தியிலும் நாங்கள், மாநிலத்திலும் நாங்கள், உள்ளாட்சியிலும் நாங்கள், கூட்டுறவுத் துறையிலும் நாங்கள் என்று கும்மாளம் இட்டீர்களே, மத்தியிலே இரண்டு பேரை அமைச்சர்களாக அமர வைத்திருக்கிறீர்களே, நீங்கள் உங்களுடைய சொந்த விஷயம் என்றால் மத்திய சர்க்காரிடத்திலே கெஞ்சுகிறீர்கள், கூத்தாடுகிறீர்கள், உங்களுடைய பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளுகிறீர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நீங்கள் மத்திய சர்க்காரிடத்திலே இந்த இந்திய அரசமைப்புச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று சொன்னால் உங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுகிற மத்திய சர்க்கார், நீங்கள் எந்த மத்திய சர்க்காரிடத்திலே கையைக் கட்டிக்கொண்டு நின்றுகொண்டு உங்களுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றிக்கொள்கிறீர்களோ அவற்றை இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டிற்காகப் பயன்படுத்தக் கூடாதா? (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான் நாங்கள் கேட்கிறோம். மத்திய சர்க்காரிடத்திலே உங்களுக்கு மிகப் பெரிய செல்வாக்கு இருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வதை எல்லாம் மத்திய சர்க்கார் நன்றாகக் கேட்கிறது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். (குறுக்கீடுகள்) இந்தத் தமிழ்நாட்டு மக்களும் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, அமைச்சர் அவர்கள் 69 சதவிகித இட ஒதுக்கீடு சம்பந்தமாகத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை.

**திரு. பரிதி இளம்வழுதி:** நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு பதில் சொல்ல வேண்டும் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்குத் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், எங்களைப் பேசவிடுங்கள்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மைக்கைக் கொடுங்கள் சார். மத்திய சர்க்கார் நீங்கள் சொல்வதை எல்லாம் கேட்கிறது. (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். திரு. பொன்முடி, என்ன சொல்கிறீர்கள்?

**டாக்டர் க. பொன்முடி:** முதலிலே அவர்கள் சொன்னார்கள். 68–ஐ 69 சதவிகிதமாக்கியது அவர்களுடைய ஆட்சியிலே என்று சொன்னார்கள். முதலில் இது தவறான செய்தி. 16 சதவிகிதமாகத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருந்ததை 18 சதவிகிதமாக மாற்றியது கலைஞர் ஆட்சியிலேதான். 1968–லே S.T.–களுக்கு 1 சதவிகிதம் கொடுத்து 1990–லே 69 சதவிகிதமாக்கியது கலைஞர்தான். (குறுக்கீடு) இது சுப்ரீம் கோர்ட் (குறுக்கீடு) ஆமாம், G.O.–வே இருக்கிறது. நான் எடுத்துக்காட்டுகிறேன். 69 ஆக ஆக்கியதும் கலைஞருடைய ஆட்சியிலேதான். அவர் சொல்வது தவறான செய்தி. (குறுக்கீடு) அது மட்டுமல்ல. இதைப் பொறுத்தவரைக்கும் சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கின்ற காரணத்தால், கலைஞருடைய ஆட்சியிலேயும் அவர் செய்ததைப் போலவே அதாவது எப்படி இருந்தாலும்கூட 50 சதவிகிதத்தை 69 சதவிகிதமாக எல்லாக் கல்லூரிகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற முறை கலைஞருடைய ஆட்சியிலேயும் பின்பற்றப்பட்டது என்பதுதான் உண்மை. இதுதான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்ன விளக்கம் அவைக் குறிப்பிலே ஏற்றப்படுகிறது. அது பற்றி ஒன்றும் இல்லை. அமைச்சர் அவர்கள் சொல்வது இந்த 69 விழுக்காட்டிற்கு இடர்பாடு வந்தால் சிறைக்குச் செல்வேன் என்று கழகத் தலைவர் சிரித்துக்கொண்டே சொன்னதை அவர் வாசித்துக் காட்டினார். அவ்வளவுதானே தவிர வேறு ஒன்றும் பிரச்சினை இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மத்திய சர்க்கார் இடத்திலே உங்களுக்கு மிகப் பெரிய செல்வாக்கு இருக்கிறது என்பது எல்லோருக்குமே தெரியும். நீங்கள் கவர்னரை மாற்றுங்கள் என்று சொன்னால் மத்திய சர்க்கார் மாற்றுகிறது. காவல் துறை அதிகாரிகளை மாற்ற வேண்டும் என்று சொன்னால் சரி என்று தலையை ஆட்டுகிறார்கள். அதிலே அதிக அக்கறை எடுத்துக்கொள்கிற நீங்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு பெற்றுத் தருவதிலே அக்கறை எடுத்துக்கொள்ளக் கூடாதா என்றுதான் நாங்கள் கேட்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்னை தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில் உச்ச நீதிமன்றத்திலுள்ள வழக்குகளைத் துரிதப்படுத்தி, விரைவில் தீர்ப்பைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல்வேறு பணிவோடு இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல்வேறு திட்டங்களைப் பற்றி இங்கே பேசினார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு.... (குறுக்கீடு)

*பிற்பகல் 7–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், என்ன சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய வழக்கு 1994–லிருந்து தொடர்ந்து நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. I would like to know the stage of the case. Actually what steps have been taken by this Government to clear that point. That's all I want to know, first of all.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும். பட்டாபிஷேகம் முடிவதற்கு முன்னாலே நீங்கள் கேட்டால் எப்படி? இன்னொரு அமைச்சர் வேறு பேச வேண்டும்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் வேலு அவர்கள் நாங்கள்தான் எல்லாமே செய்தோம், உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்றுமேயில்லை என்று சொன்னார்கள். நான் சொல்லப் போவதையெல்லாம் தயவுசெய்து அண்ணன் வேலு அவர்கள் கேட்க வேண்டும். என்னென்ன திட்டங்களையெல்லாம்.....(குறுக்கீடுகள்) யார் பேசினார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், வேலு பேசவில்லை. அவர்களுடைய இயக்கத்தின் சார்பாக மதியம் மைதீன்கான் பேசினார். மைதீன்கானுக்கும் வேலுவுக்கும் தலை ஒரே மாதிரியிருக்கும். (சிரிப்பு)

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** தலை ஒரே மாதிரியிருப்பதால் எனக்கு அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் கண்ணாடி போட்டிருக்கிறார். இவர் கண்ணாடி போடவில்லை.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மிக முக்கியமான பணிகளில் ஒன்று கல்வி. கல்வி பயில்கின்ற மாணவ மாணவியருக்கு இலவசமாகத் தங்கும் வசதியையும், உணவையும் கொடுப்பதோடு கல்வியறிவை வளர்க்கப் பாடுபட வேண்டும் என்பதுதான் நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை. எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையில் தமிழகத்திலுள்ள ஒவ்வொருவரும், குறிப்பாக பெண்கள் இந்தச் சமுதாயத்திலே முன்னேற வேண்டும் என்பதிலே மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். அதற்குப் பல்வேறு எடுத்துக்காட்டுகளை என்னால் சுட்டிக்காட்ட முடியும்.



1983 ஆம் ஆண்டு போயஸ் தோட்டத்திற்குச் சென்றபோது – என் தாய் புரட்சித் தலைவி அவர்களை இல்லத்திலே நான் வணங்கி ஆசிபெற்ற அந்த ஆண்டு அது–அப்போது எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்கள் என்னைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி, பொதுக் கூட்டங்களிலே பேசிக்கொண்டிருக்கிறாயே கல்விப் படிப்பை தொடருகின்றாயா, படித்துக்கொண்டிருக்கிறாயா என்று. நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். என்னைப் பார்ப்பவர்களெல்லாம் நன்றாகப் பேசு என்றுதான் சொல்வார்களே தவிர, நன்றாகப் படிக்க வேண்டும் என்று சொல்லியது கிடையாது. ஆனால் என் வாழ்க்கையில் என் அன்னை புரட்சித் தலைவி அவர்கள்தான் எனக்கு முதன் முதலாக அறிவுரை சொல்லி, "அரசியலில் எப்போது வேண்டுமானாலும் பங்கெடுத்துக்கொள்ளலாம், அதற்கு வயது இருக்கிறது. ஆனால், இப்போது நீ சிறுமியாக இருக்கிறாய், இது படிக்க வேண்டிய வயது, கல்வியறிவை மேம்படுத்திக்கொள்ள வேண்டிய வயது, எனவே உன்னுடைய முழுக் கவனத்தையும் கல்வியறிவிலே செலுத்த வேண்டும்" என்று சொன்னார்கள். அதே தாய்தான் 1983 ஆம் ஆண்டு இந்தத் தமிழகத்திலே உள்ள அத்தனை பேரும் படிக்க வேண்டுமென்கிற ஆர்வம் கொண்டு அந்தத் தாய்தான் அன்றைக்கு என்னிடத்திலே உனக்கு படிப்பதற்கு என்ன உதவி வேண்டுமானாலும் கேள் நான் தருகிறேன் என்று சொன்ன அந்தத் தங்கத் தாயை அமைச்சர் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு இப்போதும் நான் சந்தித்தேன். ஒவ்வொரு துறையாக ஆய்வு செய்த எங்கள் அம்மா அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையையும் ஆய்வு செய்தார்கள். அப்போது எங்கள் அம்மா அவர்கள் கேட்ட கேள்வி என்ன தெரியுமா? விடுதியில் தங்கிப் பயிலும் ஏழைக் குழந்தைகள், கிராமத்தில் உள்ளவர்கள் எப்படியாவது படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்ற அக்கறை உள்ளவர்கள், அவர்களுக்கு அடிப்படை வசதியைச் செய்து கொடுத்தால்தான் கல்வி பயிலுவதிலே இடையூறு இருக்காது என்று அறிவுரை கூறிய எங்கள் அம்மா அவர்கள், எல்லா விடுதிகளிலும்–அண்ணன் அவர்களே குறித்துக்கொள்ளுங்கள்–மின் இணைப்புப் பழுது பார்ப்பதற்கு எல்லா விடுதிகளுக்கும் ரூபாய் 35,77,500/– நிதியை உடனடியாகக் கொடுப்பதற்கு அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை நான் பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 7-35*

கல்வி நிலையிலும், எழுத்தறிவு நிலையிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள் சீர்மரபினர் சமுதாயத்தினர்; குறிப்பாக,

பிறமலைக் கள்ளர் இனத்தவர்கள். இதை யாரும் மறுக்க முடியாது. இவர்களுக்கென்று நடத்தப்படுகின்ற 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளிலே 72 பள்ளிகளில்தான் கழிவறை வசதிகள் உண்டு. இதைப்பற்றிக் கடந்த ஆட்சியாளர்கள் சிந்தித்தார்களா என்று கேட்டால் கிடையாது. அவர்களுக்கு அதற்கெல்லாம் நேரம் ஏது? போயஸ் தோட்டத்திற்குள்ளே சென்று எங்கள் அன்னையின் கழிவறை எப்படியிருக்கிறது என்று வீடியோ எடுப்பதற்குத்தான் அவர்களுக்கு நேரம் இருந்ததே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு, கழிவறை வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அவர்கள் சிந்திக்கவில்லை. ஆனால் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு கழிவறை வசதி வேண்டுமென்று சிந்தித்த எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்கள் 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளிலும், எல்லாப் பள்ளிகளிலும்–கழிவறை வசதியில்லாத பள்ளிகளே இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு எல்லாப் பள்ளிகளுக்கும்–கழிவறை வசதியைச் செய்து கொடுப்பதற்காக 137.35 இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளார்கள் என்பதை நான் இங்கே அன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு வருடத்திற்கு ஐந்து அல்லது பத்து பள்ளிகளுக்குத்தான் குடிநீர் வசதிகளைச் செய்து கொடுத்தார்கள். ஆனால் நிதிநிலைமை மோசமாக இருந்தும்கூட, எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்கள், ஐந்து பள்ளிகளுக்கு 36 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் வசதியைச் செய்து கொடுப்பதற்கு ஆணையிட்டுள்ளார்கள் என்பதை நான் பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. ஆய்வுக்கூடங்களில் உபகரணங்கள் வாங்குவதற்கு எங்கள் அன்னை ஐந்து இலட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளார்கள். கல்வியின் பெருமையைச் சுட்டிக்காட்டுகிற திருவள்ளுவர் சொல்கிறார்:

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

என்றும்

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை."

என்றும் சொல்கிறார்.

இப்படிப்பட்ட சிறப்புமிக்க கல்வி அறிவை, விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவிகளும் பெற வேண்டும் என்றால் அவர்களுக்கு நல்ல சுகாதாரம் மிக்க விடுதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று எங்கள் அம்மா அவர்கள் எண்ணினார்கள். மொத்தம் 972 மாணவர் இல்லங்களில் 202 மாணவர் இல்லங்கள்தான் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 770 மாணவர் இல்லங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எங்கள் அன்னை, என்னை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராக நியமித்ததற்குப் பிறகு எனக்குப் போட்ட முதல் உத்தரவு; "ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நீ சென்று அங்கேயுள்ள மாணவ மாணவிகளைச் சந்தித்து, அவர்களுடைய குறைகள் என்ன என்று கேட்டறிந்து எனக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று எங்கள் அன்னை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள். அந்த ஆணையினை ஏற்று நான் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று விடுதிகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்று பார்த்து வந்தேன்.



மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள், ஐந்து ஆண்டு காலம் நாங்கள் சாதனையைச் செய்தோம் என்று. நான் கேட்கிறேன், கடலூர் மாவட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இதே துறையினுடைய அமைச்சராக இருந்த, குறிஞ்சிப்பாடி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுடைய சொந்த மண். அந்த மண்ணுக்கு நான் சென்றிருந்தேன். குறிஞ்சிப்பாடி தொகுதியிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரம்தான் வண்டிப்பாளையம். அதிகாரிகள் சொன்னார்கள், இன்னும் நிறைய விடுதிகள் பக்கத்திலே இருக்கின்றன என்று. இல்லை, இல்லை, வண்டிப்பாளையம் பெயர் அழகாக இருக்கிறது, அங்கேயே போவோம் என்றேன். போனதற்குப் பிறகு நான் அதிர்ச்சியுற்றேன். அது விடுதியே அல்ல. ஐந்து ஆண்டு காலம் சாதனைகளைச் செய்தோம் என்று சொன்னீர்களே, நான் கேட்கிறேன், ஒரு மாட்டுக் கொட்டகையிலே நீங்கள் பள்ளி மாணவர்களை அனுமதித்து இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் அமைச்சர் ஐந்து ஆண்டு காலம் உங்கள் துறையினுடைய அமைச்சராக இருந்தவர் என்ன செய்தார்? அவருடைய மாவட்டத்திலேயுள்ள மாணவர்களுக்குக்கூட நல்ல இருப்பிடத்தை அவராலே தர முடியவில்லையே! நீங்கள் பிற்படுத்தப்பட்ட நலத் துறையைப் பற்றிப் பேசலாமா? நான் கேட்கிறேன். அங்கே உள்ளே சென்றேன். மாட்டுக் கொட்டகைபோல இருந்தது. மேலே பார்த்தேன். ஓடு. ஒரு இடத்திலே ஓடு இருக்கிறது. இன்னொரு இடத்திலே ஓடு இல்லை; உடைந்துபோய் இருந்தது. அங்கேயுள்ள ஒரு மாணவனை அழைத்தேன். "ஓடு உடைந்துபோய் இருக்கிறதே, மழை பெய்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்" என்று கேட்டேன். அதற்கு அந்த மாணவன் சொன்ன

பதில், இன்னமும்கூட நினைத்தால் என் கண்களிலேயிருந்து கண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. என்ன சொன்னான் தெரியுமா? 'மழை பெய்தால் நாங்கள் அனைவரும் எழுந்து அந்த ஓரமாக நின்று கொண்டிருப்போம். மழை முடியும் வரை காத்திருப்போம்' என்று சொன்னான். நான் அந்த அலுவலரிடத்திலே சொன்னேன், நீங்கள் ஐந்தாண்டு காலம் எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம், யாருடைய ஆதரவில் வேண்டுமானாலும் இருந்திருக்கலாம். ஆனால் எங்கள் அன்னை மாணவர்களுக்கு நல்ல இடத்திலேதான் விடுதியை நடத்த வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஒரு மாதத்திற்குள்ளேயே இடத்தை மாற்ற வேண்டும் என்று சொன்னதோடு, புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கு இடத்தையும் தேர்வு செய்ய வேண்டும் என்று நான் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் நாங்கள் அதையெல்லாம் செய்தோம் என்று சொன்னீர்கள். நான் கேட்கிறேன்...

*பிற்பகல் 7-40*

**டாக்டர் க. பொன்முடி:** நிதி...

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** நிதியைப் பற்றிச் சொல்கிறேன்...

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of clarification...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்தவுடனே உங்களைப் பேச அழைக்கிறேன்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** நிதியைப் பற்றிச் சொல்கிறேன். கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இருக்கிறது. 100 மாணவர் விடுதிகள். மாண்புமிகு பொன்முடி அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, 100 விடுதிகள் இந்த வருடம். எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்கள் 100 விடுதிகளைக் கட்டுவதற்கு 25 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிதி இல்லாமல் கட்டடம் கட்ட முடியாது என்பது எங்களுக்கும் தெரியும். எனவே, இதுவரையிலே ஒரே வருடத்தில் இத்தனை விடுதிகள் கட்டியதாக வரலாற்றில் உண்டா என்றால் கிடையாது. புரட்சி செய்து பழக்கப்பட்ட எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) விடுதி கட்டுவதிலேகூட புரட்சி செய்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



சொன்னார்கள் இங்கே, நாங்கள்தான் விடுதிகளிலே உணவிற்குப் பணத்தை எல்லாம் கட்டினோம் என்று. ஆனால் அது மாணவர்களுக்குப் போதியதாக இருந்ததா என்று கேட்டால் கிடையாது. அந்த மாணவர்கள் சாப்பாடு போதவில்லை என்று சொன்னார்கள். எங்கள் அன்னை மீண்டும் எனக்கு என்ன உத்தரவு போட்டிருந்தார்கள் என்றால், ஆய்வுக் கூட்டத்திலே, "ஒவ்வொரு மாவட்டத்திற்கும் செல்கின்றபோது நல்ல அரிசியிலே உணவு சமைக்கப்படுகிறதா என்பதை நீ ஆய்வு செய்ய வேண்டும்" என்று எனக்கு கட்டளையிட்டார்கள்.

தி.மு.க. ஆட்சியிலே உள்ள, அங்கே வழங்கப்பட்ட அரிசியைப் பார்த்தேன்; வண்டு நெளிந்தது. உடனே நான் சொன்னேன். இது அம்மாவின் உத்தரவு, உடனே அந்த அரிசியை எல்லாம் தூக்கியெறிந்துவிட்டு நல்ல அரிசியை குழந்தைகளுக்குச் சமைத்துப் போட வேண்டும் என்ற உத்தரவை, அம்மா அவர்களுடைய உத்தரவை நான் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அவர்கள் சாப்பாடு போதவில்லை என்று சொன்ன காரணத்தினால், அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வந்தபோது 225 ரூபாயாக இருந்த உணவுக் கட்டணத்தை 300 ரூபாயாக உயர்த்தி எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளிகளிலே சீருடை கொடுக்கிறோம் என்று சொன்னார் மாண்புமிகு உறுப்பினர். சீருடை மட்டும்தான் கொடுத்தீர்களே தவிர, மலைப் பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருந்த அந்தப் பள்ளி மாணவ மாணவிகளைப் பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்த்தீர்களா? அடிப்படைத் தேவைகள் என்ன என்று நீங்கள் சிந்தித்தீர்களா? பாலங்கள் கட்டுவதிலே அக்கறை காட்டினீர்களே தவிர, பள்ளி மாணவர்களிடத்திலே அக்கறை காட்டினீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) "கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்; தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்" என்று சொன்னார் ஏசுபிரான். ஆனால் போயஸ் தோட்டத்துக் கதவைத் தட்டாமலேயே, அம்மா, எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று வாய் திறந்து கேட்காமலேயே அள்ளிக் கொடுக்கும் கொடை வள்ளலாய் எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் மலைப் பகுதிகளில் இருக்கின்ற விடுதிகளில் உள்ள மாணவ மாணவியர்கள் அத்தனை பேருக்கும் எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்கள் குளிரைப் போக்குவதற்காக கம்பளி மேலாடைகள் கொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 7-45*

எண்ணெய். பெண்களுக்கு அழகு சேர்ப்பதிலே கூந்தல் மிக முக்கியமானது. மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு, பாண்டிய மன்னருடைய வரலாறு எல்லாம் நன்றாகத் தெரியும். அதற்காக திருவிளையாடலிலே ஒரு பெரிய கலகமே ஏற்பட்டது. அந்த வரலாறு அவர்களுக்குத் தெரியும். ஆனால் சில பகுதிகள்தான் எனக்குத் தெரியும். பாண்டிய மன்னனுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. பெண்களுடைய கூந்தலின் மணத்திற்கு இயற்கையான காரணமா, செயற்கையான காரணமா என்று ஒரு பெரிய கலகம் திருவிளையாடலிலே ஏற்பட்டது. அப்படி மிக பரபரப்பாகப் பேசப்படுகிறது பெண்களின் கூந்தல். அந்தக் கூந்தலுக்கு அழகு சேர்ப்பதற்கு எண்ணெய் மிக முக்கியம். அந்த மாணவிகள் எண்ணெய் வாங்குவதற்கு 20 வருட காலமாக ஒரே ஒரு ரூபாய்தான் கொடுத்துக்கொண்டு இருந்தார்கள். 20 வருடமாக மாதம் ஒன்றிற்கு 1 ரூபாய் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். 50 மாணவிகள் இருந்தால், 50 ரூபாய் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்கு. எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குச் சென்றவுடன் 20 வருடமாக எண்ணெய் கொடுப்பதற்கு 1 ரூபாய்தானா, ஏற்றக் கூடாதா என்று சொல்லி, அதை உயர்த்திக் கொடுப்பதற்கு உத்தரவிட்டார்கள். நாங்கள்கூட நினைத்தோம் 1 ரூபாய், 1–1/2 ரூபாய் கூட்டுவார்கள்; இல்லையென்றால் 2 ரூபாய் கூட்டுவார்கள் என்று. ஆனால் 5 மடங்கு கூட்டி, 5 ரூபாய் ஒரு பெண்ணுக்குக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கின்ற தலைவி எங்கள் தலைவி, எங்கள் அன்னை புரட்சித் தலைவி என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக இந்த வருடம் கூடுதல் செலவினமாக, மொத்தச் செலவினம் அல்ல, கூடுதல் செலவினம் 6.7 இலட்சம் ரூபாய் ஆகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. சமையல் எரிவாயு. விடுதியிலே சமையல் செய்வதற்கு விறகு பயன்படுத்துவதால் சமையலர்களுக்கு அதிக சிரமமும், அதிக நேரமும் ஏற்படுவதோடு, அடுப்பைப் பற்ற வைக்க ஊதி, ஊதி மிகவும் கஷ்டப்படுவதால் அவர்களது உடல்நிலையும் பாதிக்கப்படுகிறது, கண்களில் எரிச்சலும் ஏற்படுகிறது என்பதை உணர்ந்த எங்கள் அம்மா அவர்கள், 100 விடுதிகளுக்கு சமையல் எரிவாயு இணைப்பைக் கொடுக்க 55 இலட்சம் ரூபாயை அனுமதித்து உள்ளார்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இங்கே சொன்னார், மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சி உறுப்பினர், நாங்கள் பட்டா கொடுத்தோம், பட்டியல் பாருங்கள் என்று. பட்டா கொடுத்தீர்கள், இல்லை என்று மறுக்கவில்லை. எங்களுக்கு இப்பொழுது வந்திருக்கிற கோரிக்கை மனுக்கள் என்ன தெரியுமா? கடந்த தி.மு.க. ஆட்சியிலே ஒரு பேப்பரைக் கொடுத்துவிட்டு இதோ பட்டா என்று சான்றிதழ் கொடுத்துவிட்டார்கள். ஆனால் பட்டா எங்கே இருக்கிறது, இடம் எங்கே இருக்கிறது என்று காட்டவில்லை. இடத்தை நீங்களாவது காட்டுவீர்களா என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மீது நடவடிக்கை எடுப்பதற்கு எந்த இடத்திலே பட்டா அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமோ அதன்படிச் செயல்பட வேண்டும் என்பது அலுவலர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பட்டா கொடுத்தோம் என்று பந்தாவாகப் பேட்டி கொடுத்துவிட்டு நீங்கள் அமர்ந்துவிட்டீர்கள். கடந்த 5 வருட காலமாக அவர்கள் பட்டா எங்கே இருக்கிறது, இடம் எங்கே இருக்கிறது என்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். சில பேருக்கு நீங்கள் பட்டா கொடுத்தீர்கள். சில பேருக்கு இடத்தைக் காட்டினாலும் அவர்களும் வீடு கட்டுவதற்குப் பணம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் உணர்ந்த எங்கள் அம்மா அவர்கள், கருணை உள்ளம் கொண்ட எங்கள் அன்னை புரட்சித் தலைவி அவர்கள், என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? அந்தப் பட்டா பெற்றவர்களுக்கு வீடே கட்டிக் கொடுத்து விடுவோம்–நிதி இல்லாத நிலைமை, அப்படியும்கூட–ஏழை மக்களின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காக வீடு கட்டிக் கொடுப்பதற்கு எங்கள் அன்னை உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதல் பணியாக சாலை வசதி, தெரு விளக்குகள், குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதி போன்ற அடிப்படைத் தேவைகளை முதற் கட்டமாகவும், வீடுகள் கட்டும் திட்டத்தினை இரண்டாவது கட்டமாகவும் செயல்படுத்த எங்கள் அன்னை அவர்கள் முடிவு செய்து ஆயிரத்து 25 இலட்சம் ரூபாயை முதல் தவணையாக அனுமதித்துள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றையதினம் எங்கள் அக்கா மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், அம்மா அவர்களுடைய திட்டங்களை இங்கே சுட்டிக்காட்டினார்கள். பெண் சமுதாயத்திற்கு பல்வேறு திட்டங்களை

எங்கள் அக்கா அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். அப்பொழுது சில முணுமுணுப்பு. பெண்களுக்கு மட்டும்தான் திட்டங்களா, எங்களுக்குக் கிடையாதா என்று ஆண்களிடத்திலேயிருந்து முணுமுணுப்பு வந்தது. இந்த முணுமுணுப்பு எங்கள் அம்மாவின் காதிற்குக் கேட்ட காரணத்தினால் நேற்று ஓர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். 80 இலட்சம் ரூபாய்க்கு தையல் இயந்திரம் வாங்கிக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) 4,000 பேருக்கு இலவசமாகத் தையல் இயந்திரம் ஆண்களுக்கும், பெண்களுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், சமூக நலத் துறையிலே பெண்களுக்காகத்தானா எல்லாத் திட்டமும், எங்களுக்கில்லையா என்று கேட்கின்ற காரணத்தினால் இங்கே ஆண்களுக்கும் சேர்த்து நேற்றையதினம் எங்கள் அம்மா அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள், 80 இலட்சம் ரூபாய்க்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, தையல் இயந்திரம் என்றால்–தையல் என்றாலே பெண்தான். ஆகவே–பெண்களுக்குத்தான் அதிக பயனளிக்க வேண்டும்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** அவர் மிகப் பெரிய புலவர். மாண்புமிகு பேரவைத் தலைவர் மிகப் பெரிய புலவர் (சிரிப்பு) தமிழ் அறிஞர்.

*பிற்பகல் 7–50*

இங்கே சொன்னார்கள், நாங்கள்தான் இயக்ககம் ஏற்படுத்தினோம், நாங்கள்தான் நிருவாகத்தைச் சீர்படுத்தினோம் என்று. நீங்கள் என்ன செய்தீர்கள்? நாங்கள் தொழில் புரட்சியை ஏற்படுத்தினோம், தமிழகத்தை கம்ப்யூட்டர் மயமாக்கினோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலே தலைமை இயக்ககத்திற்குக்கூட கம்ப்யூட்டர் கிடையாது. தலைமை இயக்ககத்திற்கு கம்ப்யூட்டர் இல்லை. என்ன செய்தீர்கள்? கம்ப்யூட்டர் மயமாக்கினோம் என்று சொன்னீர்களே, தலைமை இயக்ககத்திற்குக்கூட கம்ப்யூட்டர் இல்லை. இதை உணர்ந்த எங்கள் அம்மா அவர்கள் உடனடியாக தலைமை இயக்ககத்திற்கு 2 கம்ப்யூட்டர் வாங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நேரம் அதிகமாகிவிட்டது. நான் நீண்ட நேரம் உரையாற்றாமல் ஒரே ஒரு கருத்தை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிற்படுத்தப்பட்டோர் துறையின் மிக முக்கியப் பணியான கல்வியறிவை வளர்க்க பாடப் புத்தகங்கள் மற்றும் எழுது பலகைகள் வழங்குதல், சீருடை



வழங்கல், பள்ளிப் படிப்பு உதவித் தொகை, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை, பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை, இலவசக் கல்வி, பரிசுகள் வழங்குதல், மாணவர் இல்லங்களின் பயன்கள், இவற்றைப் பற்றியும் சமையல் எரிவாயு, மாவரைக்கும் இயந்திரங்கள், விடுதிகள் பராமரிப்பு, வீட்டு வசதி இவற்றைப் பற்றியும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள், சுய தொழில் தொடங்க கடன் வசதிகள், தொழிற் பயிற்சித் திட்டங்கள், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் செயல்பாடுகள், சிறுபான்மையினர் நலத் திட்டங்கள் பற்றியும் கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் படித்து, அந்தத் திட்டங்களின் விவரங்களைத் தெரிந்துகொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர், மூத்த உறுப்பினர் ஐயா அப்துல் லத்தீப் அவர்கள், சீர்மரபினர் சமூகத்தைச் சார்ந்தவர்களை 'கிரிமினல்' என்று குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார்கள். இல்லை, அப்படிக் குறிப்பிடவில்லை. செயல்முறைத் திட்டத்தில் ஆங்கிலேயரால் குற்றப் பரம்பரைச் சட்டத்தின்கீழ் Criminal Tribes Act என்று அறிவிக்கப்பட்டதை, இந்திய அரசு சுதந்திரம் பெற்ற பின்னர் குற்றப் பரம்பரைச் சட்டத்தை நீக்கியது என்றும், இவ்வினத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் தற்போது சீர்மரபினர், அதாவது Denotified Communities என்றும் அழைக்கப்படுகிறார்கள் என்பதை நான் ஐயா அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல 'ஜோக்'கைச் சொன்னார்கள். நாங்களெல்லாம் நடுநிலை நாளேடான முரசொலியைப் போட்டோம் விடுதிக்கு, நீங்கள் போய் மக்கள் குரலையும், நமது எம்ஜிஆரையும் போடலாமா என்று கேட்டார். அது நடுநிலை நாளேடு என்றால் இதுவும் நடுநிலை நாளேடுதான் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அவற்றுள் மிக முக்கியமானவை, பல்வேறு வகுப்பினரை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதும், தனி இட ஒதுக்கீடு வேண்டும் என்பதும், மக்கள் தொகை அடிப்படையின்கீழ் இட ஒதுக்கீடு வேண்டுமென்பதும் ஆகும். வெட்டுத் தீர்மானங்களிலே, நான் அனைத்தையும் படித்துப் பார்த்தபோது, முக்கியமாக தனி இட ஒதுக்கீடு

கொள்கை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு என்பதைத்தான் வெட்டுத் தீர்மானங்களாகப் போட்டிருந்தீர்கள். இப்படிப்பட்ட பிரச்சினைக்கு தீர்வு காண அனைத்து வகுப்பினரையும் உள்ளடக்கிய ஒரு கணக்கெடுப்பு மாநிலத்திலே மேற்கொள்ளப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஒவ்வொரு சமுதாயத்தினரும் எவ்வளவு பேர் இருக்கின்றார்கள் என்ற கணக்கு தெரியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொண்டு, அந்தக் கணக்கெடுப்பை எடுக்கின்ற வரையில் இப்படி தனி இட ஒதுக்கீடு என்பது பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது என்பது முடியாத செயல் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல மாண்புமிகு உறுப்பினர்கள் மாணவ மாணவியர்களுக்கு உதவித் தொகை உயர்த்தப்பட வேண்டுமென்றும், விடுதி இல்லங்களுக்குக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்றும் கோரிக்கைகளை வைத்துள்ளீர்கள்; வெட்டுத் தீர்மானங்களிலே தெரிவித்துள்ளீர்கள். இவற்றையெல்லாம் அரசு கவனமாகப் பரிசீலனை செய்து முடிவெடுக்கும் என நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் சில மாண்புமிகு உறுப்பினர்கள்–அண்ணன் ஞானசேகரன் அவர்கள் என்று நினைக்கிறேன்–TABCEDCO–வின் மூலமாகக் கடன் பெறுகின்றபோது 3 மாதங்களுக்கு மேலாக ஆகிறது, அதை 3 மாதத்திற்குள்ளே கொடுக்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானங்களில் கேட்டிருக்கிறீர்கள். அது அதிகாரிகளினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, மனு கொடுத்த உடனே மிக விரைவில் TABCEDCO–வின் மூலமாகக் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றி, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற வேண்டுமாய் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 7–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தன்னுடைய பதிலுரையை நிகழ்த்தினார்கள். எனக்கு ஒரு சந்தேகத்தை அவர்கள் விளக்க வேண்டும். உச்ச நீதிமன்றத்திலே நடந்துகொண்டிருக்கின்ற அந்த வழக்கில், இடையில் 1995 ஆம் ஆண்டு வாக்கில் அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. அரசு affidavit



ஒன்றைப் போட்டது. 50 சதவிகிதம் இருக்கிறது என்பதையே ஏற்றுக்கொள்கிறோம் என்று affidavit போட்டதன் காரணமாகத்தான் இன்றைக்கு தமிழகத்தில் 69 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கக்கூடிய நிலையில் ஒரு மிகப் பெரிய தடை ஏற்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இப்போது நடந்துகொண்டிருக்கின்ற அந்த வழக்கையாவது, தொடர்ந்து நாங்கள் எப்படியும் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக நடத்திக் கொண்டிருந்ததைப்போல நடத்த வேண்டும் என்று கருதுகிறார்களா? நீதிமன்றத்தில் ஒரு நிலை, சட்டமன்றத்தில் ஒரு நிலை, மக்கள் மன்றத்தில் ஒரு நிலை என்று 3 நிலைகளை எடுத்திருப்பதையாவது அமைச்சர் புரிந்துகொள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு தவறான தகவலை இங்கே தருகிறார் என்று நான் கருதுகிறேன். நாங்கள்தான் இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தர வேண்டுமா? மத்தியிலே உங்களது இரண்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள் அல்லவா. மக்கள் மீது உண்மையிலேயே பாசம் உங்களுக்கு இருக்கும் என்றால்–நாங்கள் போராடுகிறோம், நாங்கள் வாதாடுகிறோம், மத்திய சர்க்காரிடத்தில் கேட்கிறோம்–நான் கேட்கிறேன் மத்தியிலே சென்று, இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த இந்திய அரசமைப்புச் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வரவில்லை என்றால், நாங்கள் மத்திய அமைச்சரவையிலே இருந்து விலகுவோம் என்று தைரியமாகச் சொல்வதற்குத் தயாரா? தவறான தகவலைச் சொல்லி மக்களைத் திசை திருப்ப வேண்டாம் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, விளக்கம் ஏதோ கேட்க வேண்டும் என்று சொன்னீர்களே, கேளுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** கேட்ட கேள்விக்குப் பதில் வரவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, அவருடைய கருத்தைச் சொன்னார். அமைச்சர் அவருடைய கருத்தைச் சொன்னார்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையின்போது ஒன்றைச் சொன்னார்கள். முரசொலி ஏட்டை மட்டும் நாங்கள் சொல்லவில்லை.

முரசொலி, இந்து, தினமணி ஆகிய பத்திரிகைகள் கொடுக்கப்பட்டன. இப்போது நீங்கள் நமது எம்.ஜி.ஆர்., மக்கள் குரல், நியூஸ் டுடே பேப்பர்களைப் போடுகிறீர்கள். நாங்கள் உலகச் செய்திகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமா, வேண்டாமா என்று மாணவர்கள் கேட்கிறார்கள். விடுதி மாணவர்கள் கேட்கின்ற கோரிக்கையைச் சொல்கிறேன். தயவுசெய்து 3 பத்திரிகைகளில் ஒரு பத்திரிகையை, ஒரு நடுநிலைப் பத்திரிகையைப் போடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். மனசாட்சியோடு யோசித்துப் பாருங்கள். ஒரு பத்திரிகை இருக்க வேண்டும். நமது எம்.ஜி.ஆர். சரி. மீதி இருக்கின்ற பேப்பர்களில் ஒரு நடுநிலை ஏடு போட வேண்டாமா? நாங்கள் இந்து, தினமணி, முரசொலி ஆகிய மூன்று பேப்பர்களைப் போட்டோம். அதுமாதிரியாவது போட வேண்டாமா? மூன்றையும் ஒரே மாதிரி போட்டால் மாணவர்கள் என்ன செய்வது?

அடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளர்களுக்காக ஏதோ இவர்கள்தான் கக்கூஸ் எல்லாம் கட்டிக் கொடுத்ததாகச் சொன்னார்கள். ** கள்ளர்கள் என்று சொல்லுகிறபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் குறிப்பிட்ட அந்த வாசகங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. பொன்முடி, விளக்கத்தை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். இதுபோன்ற விளக்கங்களை நீங்கள் பேசுகின்றபோது சொல்லலாம்.

**டாக்டர் க. பொன்முடி:** நாங்கள் பிரிவிலேஜ் கமிட்டிக்குதான் கொண்டுவர வேண்டும். ஏனென்றால், கடந்த கால ஆட்சியில் எதையுமே செய்யவில்லை என்று சொல்லும்போது, நாங்கள் பிரிவிலேஜ் கமிட்டிக்குத்தான் கொண்டுவர வேண்டும். (குறுக்கீடு) சொன்னதைச் சொல்ல வேண்டுமா, வேண்டாமா? நீங்கள் செய்ததைச் சொல்லுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், கடந்த கால ஆட்சியில் ஒன்றுமே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய உறுப்பினர் பேசும்போது கடந்த கால ஆட்சியில் நடைபெற்றதை எல்லாம், மைதீன்கான் விளக்கமாகச் சொன்னார். கடந்த கால ஆட்சியில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



என்னென்ன நடைபெற்றது என்பதையெல்லாம் அவர் பேசுகின்றபோது விளக்கமாக அந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் சொன்னார். அப்படித்தான் சொல்ல வேண்டுமே தவிர, நீங்கள் அமைச்சரிடத்திலே கடைசியாக ஏதாவது ஒரு கேள்வி வேண்டுமானால் கேட்கலாமே தவிர, கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற புள்ளிவிவரங்களை எல்லாம் சொல்வதற்கு நேரம் இல்லை. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர். (குறுக்கீடு) அனுமதிக்க முடியாது.

***மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோரின் இரட்சகராகவும், தம் வாழ்நாள் முழுவதும் சமூக நீதிக்காக அயராது பாடுபட்டவருமான அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய எண்ணங்களைச் செயல்படுத்தும்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொன்னதில் தவறான தகவல் இருந்தால் நீங்கள் பிரிவிலேஜ் கொண்டு வாருங்கள். அது என்ன என்று நான் பரிசீலிக்கிறேன்.

*பிற்பகல் 8-00*

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:** தனது வாழ்நாள் முழுவதும் சமூக நீதிக்காக அயராது பாடுபட்டவரும் அண்ணல் அம்பேத்கரின் எண்ணங்களைச் செயல்படுத்தும், சமூக நீதி காத்த வீராங்கனை, இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியால், கண்டமங்கலம் தொகுதியிலிருந்து மூன்றாவது முறையாக இம்மாமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எனக்கு, அமைச்சர் பொறுப்பையும் கொடுத்து, மக்களுக்குச் சேவை செய்யப் பணித்திருக்கின்ற, நான் வணங்குகின்ற தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி, அவருக்கு எனது கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல வாக்களித்து மூன்றாவது முறையாக என்னைச் சட்டமன்றத்திற்கு அனுப்பிய, கண்டமங்கலம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லாமை, இல்லாமை, இயலாமை என்ற ஆமைகளை அகற்றி, ஆதிதிராவிட மக்களுடைய ஒளிவிளக்காக விளங்குபவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஒரு ஆணின் படிப்பு தன் முன்னேற்றத்திற்கு மட்டுமே. ஆனால், ஒரு பெண்ணின் படிப்போ ஒரு

[திரு. வீ. சுப்பிரமணியன்] [2001 செப்டம்பர் 7

சமுதாயத்தையே உயர்த்தும் என்று சான்றோர்கள் கூறியிருப்பதற்கு ஏற்ப, இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறையில் பல்வேறு சீர்திருத்தங்களையும், திட்டங்களையும் வகுத்துள்ளார்கள். அவற்றில் முதன்மையானது, 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும், 8000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவிகளுக்கு ரூ.20.00 கோடி செலவில் அறிவித்துள்ள இலவச சைக்கிள் வழங்கும் திட்டமாகும். இளம் வயதிலேயே சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு தன்னம்பிக்கையையும், சுதந்திரமாகச் செயலாற்றும் திடத்தினையும் தர வல்லது என்ற அடிப்படையில், இந்தியாவிலேயே இளம் பள்ளி மாணவிகளுக்கு அதிக எண்ணிக்கையில் நிதி வழங்குகின்ற ஒரே மாநிலம் என்ற பெருமையையும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியுள்ளார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 5 ஆண்டுகளாகத் தொய்வுற்று இருந்த, ஆதிதிராவிடர் நலத் துறை, இனி புத்துயிர் பெற்று, என்றும் இல்லாத அளவிற்கு நல்ல திட்டங்களை மிகுந்த சீரும், சிறப்புமாகச் செயலாற்றும் என்பதற்கான அறிகுறிகளை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் ஆளுநர் உரையிலும், வரவு-செலவுத் திட்டத்திலும் வெளியிட்ட அறிவிப்புகளின் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

மேலும் முதுநிலைப் படிப்பு வரை, ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவசக் கல்வித் திட்டம், விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவிகளுக்கு அரசால் வழங்கப்படும் உணவுக் கட்டணமான ரூ. 225/-ஐ, ரூ.300/-ஆக உயர்த்தியும், அடிப்படை வசதிகள் இன்றி இருக்கும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு, இனி வரும் காலங்களில், முழுமையான அளவில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திட நிதி ஒதுக்கீடு செய்யவும் வகை செய்துள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் வழிகாட்டியாக விளங்குகின்ற இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகள் கடந்த கால ஆட்சியில் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்பதற்கு நான் உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பக் கல்வி, சட்டக்



2001 செப்டம்பர் 7] [திரு. வீ. சுப்பிரமணியன்]

கல்வி மற்றும் உயர் கல்வி பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு புத்தக வங்கியின் மூலமாக இரண்டு மாணவர்களுக்கு ஒரு செட் புத்தகங்களை இலவசமாக அரசு வழங்கி வருகிறது. அவர்கள் படிக்கின்ற புத்தகங்களின் விலை ரூ.500/- முதல் ரூ.1,000/-வரை இருக்கின்ற காரணத்தால், அரசே இந்தப் புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது. அவர்கள் வாங்கிப் படிக்கின்ற பொருளாதாரச் சிரமங்களை அரசு உணர்ந்திருக்கின்ற காரணத்தால், இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றது.

ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், இந்தத் திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய ரூ.64.00 இலட்சத்தைச் செலவு செய்வதற்காக ஒரு G.O. கூட போடாமல், அந்த தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு புத்தகமே வாங்கித் தராமல், அந்த 64.00 இலட்சம் ரூபாய் சரண்டர் செய்யப்பட்டுள்ளது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய அரசில் எடுத்த சில திட்டங்கள் சரிவர செயல்படுத்தப்படாமையால், ஒதுக்கப்பட்ட தொகை முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் கணிசமான அளவில் அரசுக் கணக்கிற்குத் திருப்பப்பட்டுள்ளது; அதாவது சரண்டர் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் சரண்டர் செய்த தொகை விவரங்கள் பின்வருமாறு:

*பிற்பகல் 8-05*

உழவு மாடுகள் வழங்க ஒதுக்கப்பட்ட நிதியான ரூ.2.32 இலட்சத்தில், ரூ.2.02 இலட்சம் சரண்டர் செய்யப்பட்டுள்ளது. அதைப்போலவே, சீருடை, தையல் கூலி போன்ற செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.727.46 இலட்சத்தில், ரூ.431.84 இலட்சம் சரண்டர் செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் நலப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்க ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.300 இலட்சத்தில், ரூ.172.70 இலட்சம் சரண்டர் செய்யப்பட்டுள்ளது. அதுபோல பொதுப் பள்ளியில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் வழங்க ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.940 இலட்சத்தில் ரூ.853.24 இலட்சம் சரண்டர் செய்யப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், ஓரங்கட்டப்பட்ட மக்களெல்லாம் மற்ற சமூகத்தினரோடு, பொருளாதாரத்தில் முன்னேற

வேண்டும்; வாழ்வில் வளம் பெற வேண்டும்; அவர்களெல்லாம் கோடீஸ்வரர்களாக வேண்டும்; அதன் மூலம் சமூக அந்தஸ்து பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடும், தொலைநோக்குப் பார்வையோடும் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த முறை ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில், கோவை மாவட்டத்தில் முதலிப்பாளையம் என்ற இடத்தில் 100 யூனிட்டுகளும், ஈரோடு மாவட்டத்தில் ஈங்கூர் என்ற இடத்தில் 200 யூனிட்டுகளும் கொண்ட பின்னலாடைத் தொழிற்பேட்டைகள் தொடங்க ஆணை பிறப்பித்து, முதலிப்பாளையத்தில் அப்போது தேர்வு செய்யப்பட்ட 100 நபர்களில், தொழில் தொடங்கிய 54 நபர்களைத் தவிர மற்ற 44 நபர்களுக்கு கடந்த ஆட்சியில் கடன் உதவி வழங்கப்படவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம் என்ற ஒரே காரணத்தினால், அந்தத் திட்டத்தைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டார்கள். ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்கள் கடந்த கால ஆட்சியில் வஞ்சிக்கப்பட்டார்கள் என்பதற்கு இது மேலும் ஒரு சான்றாகும். தமிழக மக்கள் அனைவரின் ஒருமித்த ஆதரவோடும், மீண்டும் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுள்ள இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தத் திட்டத்திற்கு தற்போது புத்துயிர் கொடுத்துள்ளார்கள் என்ற நல்ல செய்தியை இந்த மாமன்றத்தின் வாயிலாக மகிழ்ச்சியோடு கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தபட்ட பட்டுப் புழு வளர்ப்புத் திட்டம் மற்றும் இறால் வளர்ப்புத் திட்டம் தொய்வில் இருப்பதால் அதற்கும் புத்துயிர் ஊட்ட ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களின்மீது எந்த அளவிற்கு அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதற்கு மேலும் ஓர் உதாரணத்தை நான் கூற விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த திரு. தலித் எழில்மலை அவர்களை திருச்சி மக்களவை பொதுத் தொகுதியில் நிற்க வைத்து, இன்றைக்கு வெற்றி பெறச் செய்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கினார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து வீட்டுமனைப் பட்டாக்கள். இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ், அரசு தனியார் நிலங்களைக் கையகம் செய்யும்போது, நில உரிமையாளர்கள் நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்து, நிலக் கையக நடவடிக்கைகளுக்குத் தடையாணை பெற்று விடுகின்றனர். இதனால், இத்திட்டத்தினை சரிவரச் செய்ய முடிவதில்லை. இந்த நிலையைப் போக்கிட, மறைந்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரிசன நலத் திட்டத்திற்கான நில எடுப்புச் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 31/78) என்னும் தனிச் சட்டம், நீதிமன்றத் தடையாணைகளை நீக்கியதற்குப் பின்னர் 1994 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத்தின் சிறப்பு என்னவென்றால், இந்தச் சட்டத்தின்கீழ் நிலம் கையகப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளை எதிர்த்து எந்தவொரு உரிமையியல் நீதிமன்றத்திற்கும் செல்ல இயலாது. இச்சட்டத்தின்கீழ் நிலம் கையகப்படுத்த மாவட்ட ஆட்சியாளர்களுக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நிலம் கையகம் செய்வதிலுள்ள கால விரயத்தைப் போக்கிட மாவட்டந்தோறும் விவாதித்துத் தீர்வு காணும் Private Negotiation Committee ஒன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) காலதாமதமின்றி நிலத்தை எடுத்து பட்டாக்கள் வழங்க வகைசெய்யப்பட்டது என்று நான் மகிழ்ச்சியோடு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் 4,01,367 பட்டாக்கள் வழங்கப்பட்டன. ஆனால், கடந்த ஐந்தாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 3,38,368 பட்டாக்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, 62,999 பட்டாக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே அதிகமாக வழங்கியுள்ளார்கள் என்பதை நான் குறிப்பிட்டுக்கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள். 17–7–2001 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் திட்ட ஆய்வுக் கூட்டத்தில் வீட்டு மனைப் பட்டா வழங்கும் நிதியொதுக்கீட்டிலிருந்து ஒரு பகுதியினை ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிக்காகப் பிரித்து அளிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்ட ஆலோசனையின்மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*பிற்பகல் 8-10*

ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மனைப் பகுதிகளில் போதிய அடிப்படை வசதிகள் உள்ளாட்சியால் செய்து தரப்படாமையால் இந்தப் பயனாளிகளால் இலவச வீட்டுமனைகளைப் பயன்படுத்திக்கொள்ள இயலாமல் நீண்ட காலமாகக் காலியாகவுள்ளன. ஊரக வளர்ச்சித் துறை மூலம் கட்டப்படும் தொகுப்பு வீடுகள் அமையும் குடியிருப்புகளுக்கும், போதுமான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க இத்துறையில் தனி நிதி ஒதுக்கீடு இல்லை. இந்தக் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி போன்றவைகளை அந்தந்தத் துறைகளே செய்கின்றன. இந்த வசதிகள் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குச் சென்றடைய காலதாமதம் ஏற்படுகிறது. எனவே இலவச மனைப்பட்டா வழங்கி, பட்டா பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகமாக்குவதைவிட இலவச மனைப்பட்டா நிலம் கையகப்படுத்த, துறை ஒதுக்கும் தொகையில் 50 சதவிகிதத்திற்குக் குறையாத நிதியை, ஏற்கெனவே மனைப் பட்டா வழங்கப்பட்டு, அடிப்படை வசதிகள் முழுமையாகச் செய்யப்படாமலுள்ள இடங்கள் மற்றும் இனிமேல் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட உள்ள இடங்கள் ஆகியவற்றில் அடிப்படை வசதிகளைச் செய்து தர பயன்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளித்திட முடிவு செய்யப்பட்டு உள்ளது. அதற்கான உத்தரவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தற்போது ஒப்புதல் அளித்துள்ளார்கள். மீதமுள்ள 50 விழுக்காடு தொகை வீட்டுமனைப்பட்டா வழங்க தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவுப் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புதல். ஏற்கெனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் நிறையப் பேர் பேசினார்கள். ஆளுநர் உரையின் மீதான விவாதத்தின்போது அரசுத் துறைகளில் அனைத்து மட்டத்திலும், அரசு சார்புடைய பொது நிறுவனங்கள், அரசு உதவிபெறும் நிறுவனங்கள் போன்ற அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கான நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவுப் பணியிடங்களை, shortfall/backlog vacancies ஆகியவற்றை நேரடி நியமனம் மூலம் நியமிக்க வழிவகை செய்யும் அரசாணை 44, ஆதிதிராவிடர் நலத் துறை, நாள் 20–5–1998 மீண்டும் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏற்கெனவே உறுதியளித்துள்ளார்கள். இதுகுறித்த



நடைமுறை அரசின் ஆய்விலே உள்ளது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எதைச் சட்டமன்றத்தில் அறிவித்தார்களோ, அதைக் கட்டாயமாகச் செய்து முடிப்பார்கள் என்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து பள்ளிகள். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 1,017 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளும், 245 பழங்குடியினர் நலப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. மொத்தம் 2,23,457 மாணவ–மாணவியர்கள் ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகளிலும், 30,931 மாணவ–மாணவியர்கள் பழங்குடியினர் உண்டு–உறைவிடப் பள்ளிகளிலும் கல்வி பயின்று வருகின்றார்கள்.

அடுத்து விடுதிகளைப் பற்றி மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் பேசினார். தயவுசெய்து கவனிக்க வேண்டும். இந்தத் துறையிலே ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு, 1,075 விடுதிகளும், பழங்குடியினருக்கு 26 விடுதிகளும் உள்ளன. இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை முறையே, 76,300–ம் மற்றும் 1,285–ம் ஆகும்.

கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ–மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ.400–ம் அரசு பழங்குடியினர் உண்டு–உறைவிடப் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ–மாணவியர்களுக்கு மாதம் ஒன்றிற்கு மாணவர் ஒருவருக்கு ரூ.300–ம் உணவுக் கட்டணமாக அனுமதிக்கப்பட்டு உள்ளது.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் நல்ல முறையில் இயங்கி வந்த சிதம்பரம் அரசு நந்தனார் மாணவர் விடுதி மற்றும் மேல்நிலைப் பள்ளி கடந்த 5 ஆண்டு காலத்தில், சரிவர கவனிக்கப்படாமல் தற்போது மிகவும் பாழ்பட்டு இருக்கிறது. சுமார் 1,500 மாணவர்களுக்கு மேல் இவ்விடுதிகளில் தங்கிப் பயின்ற நிலைமை மாறி, தற்போது 500 மாணவர்களே தங்கக்கூடிய அளவிற்கு நிலைமை சீர்கெட்டு உள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றபின், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்பேரில், இவ்விடுதி மற்றும் பள்ளிகள் நேரடி ஆய்வு செய்யப்பட்டு இவ்விடுதி பள்ளி வளாகத்தில் இருந்த தனியார் ஆக்கிரமிப்புகள் முழுவதுமாக அகற்றப்பட்டுள்ளன. இதுகாறும் சுற்றுச் சுவர் இல்லாதிருந்த நிலையைப் போக்கிட மேல்நிலைப் பள்ளிக்கு, ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் உடனடியாகச் சுற்றுச் சுவர் எழுப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*பிற்பகல் 8-15*

அதேபோல் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் மாணவர் விடுதியை உடனடியாகச் சீர் செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் இத்துறையின்கீழ் இயங்கிவரும் 1,075 விடுதிகளில் 574 விடுதிகள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அடுத்த 2 ஆண்டுகளில் இந்த 574 விடுதிகளுக்கும் அரசு கட்டடங்கள் கட்ட திட்டமிட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென நடப்பு ஆண்டிற்கு ஆரம்பகட்ட நிதியாக ரூ.38.86 கோடியை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வீட்டு வசதி. வீடு இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தற்போது கான்கிரீட் வீடுகள், ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் கட்டித் தரப்படுகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் 85 விழுக்காடு வீடுகள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. கான்கிரீட் கூரைகளை அமைக்க, மாநில அரசு ரூ.12 ஆயிரம் மானியமாக அளிக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் ஒரு வீட்டிற்கு ஆகும் செலவு, ரூ.20 ஆயிரத்தை மத்திய, மாநில அரசுகள் முறையே, 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன. அதன்படி, இந்த வீட்டின் மதிப்பு சமவெளியில் ரூ.32 ஆயிரம். கரிசல் மண் மற்றும் மலைப் பகுதியில் ரூ.34 ஆயிரமும் ஆகிறது. இத்திட்டத்திற்காக நடப்பாண்டில் ரூ.31.8 கோடி வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குடிநீர் வசதி. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளுக்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது, அடிப்படை வசதிகளைச் செய்துகொடுப்பது ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. கிணறுகள் அமைத்துத்தர, உச்சவரம்பு ரூ.75 ஆயிரம் ஆகும். தரைமட்ட நீர்த் தொட்டிகளும் தேவைக்கேற்ப ரூ.15 ஆயிரம் மதிப்பீட்டில் அமைத்துத் தரப்படுகின்றன. பம்பு செட் தேவைப்பட்டால் ரூ.13 ஆயிரம் கூடுதலாகச் செலவிடப்படுகிறது. கூடிய வரையில், திறந்த கிணறுகளுக்குப் பதிலாக ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்துத் தரப்படுகின்றன. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அருகில் இருந்தால், இணைப்புகள் தரப்படுகின்றன.



பாதை மற்றும் மயான வசதி. ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு பாதை மற்றும் மயான வசதி ஏற்படுத்த தேவையான நிலத்தை வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களும், தமது நிதியிலிருந்து ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகின்றன.

குடிநீர் வசதிக்கு 15 விழுக்காடும், சாலை வசதிக்கு 10 விழுக்காடும், இதற்கு பங்குத் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் 23.52 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

சமுதாயக் கூடங்கள். நடப்பாண்டில் சமுதாயக் கூடங்கள் கட்ட ரூ.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஈமச் சடங்கு உதவித் தொகை. ஆதிதிராவிடர், மதம் மாறிய ஆதிதிராவிடர் குடும்பத்தில் ஒருவர் இறந்து விட்டால், ஈமச் சடங்கிற்காக ரூ.500 நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.4.36 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தீண்டாமை ஒழிப்பு. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், 1955 மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைச் சட்டம் 1989 ஆகியவற்றைச் செயல்படுத்த சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, காவல் துறை இயக்குநர் தலைமையில் ஒரு பிரிவு செயல்பட்டு வருகிறது. அவருக்கு உதவியாக ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர், ஒரு காவல் துறைத் தலைவர், மாவட்டங்களில் 7 காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் 34 காவல் துறை ஆய்வாளர்கள் ஆகியோர் பணிபுரிகின்றனர். தாழ்த்தப்பட்டோர்மீது இழைக்கப்படும் வன்கொடுமைகளைத் தடுத்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்திட, நடமாடும் காவல் குழுக்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. வன்கொடுமை வழக்குகளை விசாரிக்க, தனியாக தஞ்சாவூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

சிறப்பு உள்ளடக்க நிதியுதவித் திட்டம். சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ், மைய அரசு ஒவ்வோராண்டும் சிறப்பு நிதியுதவி வழங்குகிறது. இந்த நிதியுதவி, மாநில அரசு வழங்கும் நிதிகளுக்கு வலுவூட்டுவதற்காக வழங்கப்படும் தொகையாகும். இந்த நிதி, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக பல்வேறு அரசுத் துறைகள் மூலம் செயல்படுத்த தாட்கோ நிறுவனத்திற்கு அளிக்கப்படுகிறது. நடப்பாண்டில், இத்திட்டத்திற்காக ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

[திரு. வீ. சுப்பிரமணியன்] [2001 செப்டம்பர் 7

தாட்கோ பங்கு மூலதனம். இந்தப் பங்கு மூலதனம் ஒவ்வோராண்டும் 51:49 என்ற விகிதத்தில் முறையே மாநில மற்றும் மைய அரசுகளும் தாட்கோவிற்கு வழங்குகின்றன. இக்கழகத்தின் விளிம்புத் தொகை மற்றும் மானியத் தொகை வங்கியில் செலுத்தப்பட்டு, சுய வேலைவாய்ப்புத் தொழில் தொடங்க வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. அதற்காக இந்த நிதியாண்டில் ரூ.3.32 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

*பிற்பகல் 8-20*

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம். இத்திட்டம் நாமக்கல், சேலம், விழுப்புரம், திருவண்ணாமலை, தருமபுரி மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த கொல்லிமலை, ஏற்காடு மலை, கல்ராயன் மலை, அறுநூத்து மலை, பச்சை மலை, ஏலகிரி மலையை உள்ளடக்கிய ஜவ்வாது மலை, சித்தேரி மலை ஆகிய இடங்களில் செயல்படுத்தப்படுகிறது. பழங்குடியினர் குடும்பங்களை பொருளாதார நிலையில் மேம்படுத்தி அவர்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் இதர வசதிகளை அளிப்பது இத்திட்டத்தின் குறிக்கோள். பல்வேறு துறைகளின் நிதிகளிலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் நிதியை ஒதுக்கீடு செய்து திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இத்திட்டத்திற்காக, நடப்பாண்டில் ரூ.2.5 கோடி சிறப்பு மைய நிதியாக மைய அரசால் விடுவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய அரசமைப்புச் சட்டப்பிரிவுக் கூறு விதி, 275(1)—ன்கீழ், மைய அரசின் மானியம். பண்டைய பழங்குடியினரின் நலனுக்கான திட்டங்களை நிறைவேற்ற மேற்கண்ட சட்டப்பிரிவின்கீழ் மைய அரசு வழங்கும் மானியம், பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், அடிப்படை வசதிகள் வழங்குவதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. சாலைகள் மேம்படுத்தல், உண்டு—உறைவிடப் பள்ளிக் கட்டட விரிவாக்கம், குடிநீர் வசதி, வீடுகளுக்கு மின் வசதி, தெருவிளக்கு வசதி, தொகுப்பு வீடுகள் கட்டித் தருதல் போன்றவற்றிற்காக 4-1-2001—ல் ரூ.2.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், விழுப்புரம் மாவட்டம், கல்ராயன் மலைப் பகுதியில் வெள்ளிமலை என்ற இடத்தில் மாதிரி உண்டு—உறைவிடப்பள்ளி கட்டுவதற்கு மைய அரசு ரூ.1 கோடி மானியம் வழங்கியுள்ளது. மேற்படி மேல்நிலைப் பள்ளி அரசுக் கட்டடத்தில் தனியாக இயங்கி வருகிறது. இப்பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தருவதற்கான தொகை தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. தாட்கோ மூலம் இப்பள்ளிக் கட்டடம் கட்டித் தரப்படும். மேலும், 2000—2001-ம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்றிட ரூ.2.7 கோடிக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



2001 செப்டம்பர் 7] [திரு. வீ. சுப்பிரமணியன்]

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:** பழங்குடி இனத்தைச் சார்ந்த குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக 245 உண்டு—உறைவிடப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இப்பள்ளிகளில் 30,931 குழந்தைகள் தங்கி கல்வி பயிலுகின்றனர். பழங்குடியினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின்கீழ் நடப்பாண்டிற்கு ரூ.1.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு:** கொத்தடிமைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அதிக முக்கியத்துவம் செலுத்தி வருகிறது. கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவித்து மறுவாழ்வு அளிப்பதில் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இத்துறையின் திட்ட ஆய்வின்போது, கண்டறியப்பட்டு விடுவிக்கப்படாத கொத்தடிமைத் தொழிலாளர்களையும் விரைவில் விடுவித்து மறுவாழ்வு அளிக்க உத்தரவிட்டுள்ளார்கள். இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டு உள்ளன. இத்திட்டத்திற்கென 2000—2001 ஆம் ஆண்டில் ரூ.5.78 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல் மத்திய அரசின் மூலம் இத்திட்டத்திற்காக அகில உலக தொழிலாளர் நிறுவனம் நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது.

**துப்புரவு சாதனங்கள் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையத் திட்டம்:** தேசிய துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் மறுவாழ்விற்காக 'சானிடரி மார்ட்' என்ற ஒரு புதிய திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் 20 அல்லது 25 பேர்களைக் கொண்டு ஒரு குழுவாக அமைத்து இத்திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் குழுக்களில் உள்ள நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, திட்ட மதிப்பீடு மாறுபடும். ஒரு நபருக்கு ரூ.20,000 வீதம் கடனுதவி வழங்கப்படும். இத்தொகையில் மானியம் ரூ.10,000, விளிம்புத்தொகை ரூ.3,000, மீதி ரூ.7,000 பருவக் கடனாகும்.

ஒவ்வொரு குழுவுக்கும் தேவையான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. முதற்கட்டமாக தகவல் தொடர்பு மற்றும் கல்வி பற்றியும், இரண்டாம் கட்டப் பயிற்சியாக அவர்கள் தொடங்கவிருக்கின்ற தொழில்களுக்கு ஏற்ப தொழில் வல்லுநர்கள் மூலம் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதுவரை

[திரு. வீ. சுப்பிரமணியன்] [2001 செப்டம்பர் 7

151 குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், 2,954 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 8-25* .

ஏற்கெனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் முருகவேல் ராஜன் பேசும்போது, தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தேவதானப்பட்டி கிராமம், தீர்வை ஏற்பட்ட அரசு புஞ்சை நிலத்தை அங்கே யாரோ தனியார் எல்லாம் ஆக்கிரமிப்புச் செய்து விட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிய ஒரு குறிப்பை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் இருக்கிறார்களா, (குறுக்கீடு) பரவாயில்லை, இருந்தாலும் இல்லாவிட்டாலும் நான் இந்தக் குறிப்பைச் சொல்லிவிடுகிறேன். தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தேவதானப்பட்டி கிராமத்தில் தீர்வை ஏற்பட்ட அரசு தரிசு புஞ்சை நிலம் சர்வே எண் 64.1, 67/3, 80/3 போன்ற 28 சர்வே எண்களில் மொத்தம் 20.82 ஹெக்டேர் நிலம் ஜெயராஜ் நாடார் மற்றும் சிலரால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு இருந்தது. இந்த ஆக்கிரமிப்பை பெரியகுளம் ரெகுலர் தாசில்தார் அகற்றி பெரியகுளம் சார் ஆட்சியாளர், அதாவது சப்–கலெக்டரிடம் நில மதிப்பிற்கான ஒப்புதலைப் பெற்று மஞ்சலாறு தேவதானப்பட்டி மற்றும் ராசசிங்கநகர் ஆகிய பகுதிகளில் வாழும் பலியர் பழங்குடியினருக்கு 15.16 ஹெக்டேர் நிலத்தை ஒதுக்கி 9–12–1999 அன்று பட்டா வழங்கியுள்ளார். இதை எதிர்த்து, நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்து இருந்தவரில் பிரகாஷ் மற்றும் ஜெயபால் என்பவர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து 20–6–2000 அன்று தடையாணை பெற்றுள்ளனர். பெரியகுளம் தாசில்தார் 20–10–2000 அன்று இந்த வழக்கில் Counter affidavit தாக்கல் செய்துள்ளார். வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோலவே மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் பாரமலை அவர்கள் பேசுகின்றபொழுது, Non–governmental organisation–ஆல் நடத்தப்படுகின்ற பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு, அரசுத் துறைப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு அளிக்கப்படுவதுபோல நிதி ஒதுக்கிக் கட்டணம் கொடுக்க வேண்டுமென்று கூறினார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இதைப்



2001 செப்டம்பர் 7] [திரு. வீ. சுப்பிரமணியன்]

பரிசீலிக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோலவே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார். முந்தைய ஆட்சியினுடைய தலைவர், டாக்டர் அம்பேத்கருக்கு மணிமண்டபம் கட்டினார் என்று சொன்னார். அந்த வேலை இன்னும் முடியவில்லை. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்த நோக்கத்திற்காக இந்த 5 ஏக்கர் நிலத்தை ஒப்படை செய்தார்களோ அந்த நோக்கம் நிறைவேறுகின்ற வரையில் அந்தப் பணி கைவிடப்படாது நடைபெறும். ஏற்கெனவே, உயர் நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தீர்ப்பினைக் கொண்டு, இப்போது 1–1/2 ஏக்கர் நிலத்திலே டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு, அந்த உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்க பரிசீலிக்கப்படுகிறது என்ற ஒரு நல்ல செய்தியை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சில முக்கிய அறிவிப்புகளை இங்கே கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடப்பு நிதியாண்டில் ஆதிதிராவிட மாணவ–மாணவியர் கல்வி மேம்பாட்டிற்காகப் பின்வரும் திட்டங்களுக்குச் சிறப்பு அனுமதி அளித்துள்ளார்கள். சென்னையில் முதுகலைப் படிப்பு பயிலும் ஆதிதிராவிட மாணவியருக்கு என தனியாக அரசு விடுதி இல்லாமல் இருக்கிறது; ஏற்கெனவே ஒரே ஒரு விடுதிதான் இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது அம்மா sanction செய்திருக்கிறார்கள். இந்தக் குறையைப் போக்கிட ஆதிதிராவிட நலத் துறையின் மூலம் சென்னையில் ஆதிதிராவிட மாணவியருக்கெனத் தனியாக ரூபாய் 6.93 இலட்சம் செலவில் ஒரு விடுதி உடனடியாகத் திறக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

15 ஆதிதிராவிடர் ஆரம்பப் பள்ளிகள் ரூபாய் 14.06 இலட்சம் மதிப்பீட்டில் இடைநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல இரண்டு ஆதிதிராவிடர் இடைநிலைப் பள்ளிகள் ரூபாய் 47.04 இலட்சம் மதிப்பீட்டில் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல

இரண்டு ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளிகள் ரூபாய் 43.76 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் 500 மாணவர்களுக்கு ரூபாய் 17.50 இலட்சம் செலவில் விடுதிகளில் கட்டில், மேஜை, நாற்காலி போன்ற வசதிகள் செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 50 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு ரூபாய் 25 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்புகள் தரப்படும். மேலும், 19 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு ரூபாய் 74.90 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் கட்டப்படும். ரூபாய் 73.63 இலட்சம் செலவில் மாணவர் விடுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படும். ரூ.12.98 இலட்சம் செலவில் 4 ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டித் தரப்படும். ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதியல்லாத பிற இடங்களில் 2 அரசு உண்டு–உறைவிடத் தொடக்கப் பள்ளிகள் ரூ.6.33 இல்ட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

*பிற்பகல் 8-30*

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததைத் தொடர்ந்து இந்த நிதியாண்டில் 20 ஆயிரம் ஆதிதிராவிட மகளிருக்கு, ஒருவருக்கொருவர் உதவிக்கொள்கின்ற வகையில் மகளிர் கூட்டமைப்பு ஏற்படுத்தி வேலைவாய்ப்புக்கான சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல நிதிநிலை அறிக்கையில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு அவர்களுடைய பொருளாதார நிலை, பயிர்த் தொழில் மூலம் மேன்மையுறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த வேளாண் துறையில் சிறப்புக்கூறுகள் திட்டத்தின்கீழ் கம்பு, கேழ்வரகு, சோளம், வரகு, தினை, சாமை மற்றும் சிறு பயிர்களின் சாகுபடியை ஊக்குவிக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 25 பேர் 73 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த வெட்டுத் தீர்மானங்கள் மூலம் தங்கள் தொகுதியில் புதிதாக நலப் பள்ளிகள், உண்டு–உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டித் தரவும், வீட்டுமனைப் பட்டா வழங்கிடவும், கடன்



உதவி மற்றும் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தவும் கூறியுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உங்களுடைய கோரிக்கைகளைக் கனிவோடு பரிசீலிக்கும் என்று நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல இந்த மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் சொல்லிய அத்துணை அரிய கருத்துகளும் இந்த மாமன்றத்தினுடைய பதிவேட்டிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. உங்களுடைய மேலான கருத்துகளையும் ஆலோசனைகளையும் தெரிவித்து சில கோரிக்கைகளையும் வைத்திருக்கிறீர்கள். ஆகவே இந்த மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன ஆக்கபூர்வமான கருத்துகளையும் ஆலோசனைகளையும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்று நான் மீண்டும் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரிய வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த நான் வணங்குகின்ற தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, திரு. சாமிநாதன்?

**திரு. மு.பெ. சாமிநாதன்:** ஒரு சின்ன சந்தேகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே ஈங்கூர் மற்றும் முதலிப்பாளையம் பின்னலாடை தொழிற்பேட்டை பற்றிச் சொன்னார்கள். முதலிப்பாளையம் தொழிற்பேட்டை எந்த ஆண்டு தொடங்கப்பட்டது? அது எந்த ஆண்டு பயனுக்கு வந்தது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கெல்லாம் தனிக் கேள்வியாகப் போடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. தமிழரசன் என்ன கேட்கப் போகிறீர்கள்?

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாக, ஆதிதிராவிடர் நலத் துறையின் பெரும் பகுதி பணத்தை எடுத்து சமத்துவபுரம் என்ற பெயராலே உருவாக்கி (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோருக்கும் பொதுவாகக் கொடுத்திருந்தார்கள். ஆகவே, சமத்துவபுரம் திட்டத்தை மறுபரிசீலனை செய்து, ஆதிதிராவிட நலத் துறையே ஆதிதிராவிட மக்களுக்காக வீடுகளைக் கட்டுகிற திட்டத்தைக் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (ஆ) கோரிக்கை எண் 30 – பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 30– பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரனுக்கு சந்தேகமே கிடையாதுபோல் இருக்கிறது. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே.மணி.

**திரு. ஜி.கே.மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே.மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.



**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை. திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை. திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை. திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ. கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய *30* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.*382,13,32,000*–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



*பிற்பகல் 8-35*

## (ஆ) கோரிக்கை எண் 31 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31– பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை. திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம்.ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை. திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை. திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

'பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்



ரூ. 151,93,10,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8–9–2001) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 8–36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

–ஏதுமில்லை–

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

83. மாநிலப் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட வாரியங்களின் செயல்திறன் குறித்த 1998–99 ஆம் ஆண்டு ஆய்வு. (தமிழ், ஆங்கிலம்)

84. மானியக் கோரிக்கை எண் 30 – பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

85. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு–செலவு செயலாக்கத் திட்டம், 2001–2002 (தமிழ், ஆங்கிலம்)

86. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை குறித்த 'மக்கள் சாசனம்' 2001–2002 (தமிழ், ஆங்கிலம்)

[2001 செப்டம்பர் 7

87. மானியக் கோரிக்கை எண் 31 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002 (தமிழ், ஆங்கிலம்)

88. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2001–2002 (தமிழ், ஆங்கிலம்)

89. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை குறித்த 'மக்கள் சாசனம்' 2001–2002 (தமிழ், ஆங்கிலம்)

— —



# இணைப்பு – I

(44 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 30– பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார நிலையினை வளப்படுத்தும் பணிக்கு இவ்வரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. மிகவும் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு பொருளாதார வளர்ச்சியின் பயன்கள் அவர்களைச் சென்றடைய இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நல்வாழ்விற்கும் மற்றும் அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டியுள்ளது.

3. 1991 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இம்மாநிலத்தின் மொத்த மக்கட்தொகை 5.59 கோடியில் ஆதிதிராவிடர் மக்கள் 1.07 கோடி (19.18 விழுக்காடு) என்றும் பழங்குடியினரின் மக்கட்தொகை 0.06 கோடி (1.03 விழுக்காடு) என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

**I. கல்வி**

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இம்மாநிலத்தில் ஆதிதிராவிடர் மக்கள் தொகையில் 46.75 விழுக்காடும், பழங்குடியின மக்கள் தொகையில் 27.89 விழுக்காடும் கல்வி அறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு தொடர்ந்து முனைப்புடன் கல்வி அளிக்கும் திட்டம் அவசியமாக உள்ளது.

இத்துறைக்கென ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த நிதியில் 70 விழுக்காடு தொடக்கக் கல்வி மற்றும் உயர் கல்விக்கென செலவிடப்படுகிறது. தற்பொழுது இத்துறையின் மூலம் 1262 பள்ளிகளும், 1075 மாணவ மாணவியர் விடுதிகளும், 245 உண்டு உறைவிடப் பள்ளிகளும், 26 பழங்குடியினர் மாணவ, மாணவியர் விடுதிகளும் இயங்கி வருகின்றன.

பள்ளிகள் மற்றும் விடுதிகள் கட்டுதல், பராமரித்தல் ஆகிய திட்டங்கள் தவிர, கீழ்க்கண்ட திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. அதாவது, கல்வி உதவித் தொகையுடன் இலவச சீருடைகள், இலவச பாடநூல்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் ஆகியவை, பத்தாம் வகுப்புவரை பயிலும் மற்றும் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான கல்வி உதவித் தொகைகள், சிறப்பு மற்றும் கடன் உதவித் தொகைகள், பல்வேறுபட்ட ஊக்கத் தொகைகள், பரிசுத் தொகைகள் போன்றவை வழங்கப்படுகின்றன. மேலும், புத்தக வங்கித் திட்டம், உதவித் தொகை வழங்கும் திட்டம், தொழிற்கல்வி மற்றும் பல்வேறுபட்ட நுழைவுத் தேர்வுகளுக்கும் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் மற்றும் சிறந்த மாணவர்கள் வெளிநாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களில் சேர்ந்து உயர் கல்வி பயிலும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியர்களுக்கு கணினி கல்வி அளிப்பதும் கல்வித் திட்டத்தின் ஓர் அம்சமாக கொண்டு வரப்பட்டுள்ளது. அதன்படி,

❖ 85 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப்பாடம் அறிமுகப்படுத்தப்பட்டு, கணினிப் பாடம் இத்துறை மூலமாக நடத்தப்பட்டு வருகின்றது.

❖ இத்துறையின் கீழ் இயங்கும் 58 உயர்நிலைப் பள்ளிகளிலும், 65 மேல்நிலைப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

❖ 15 மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.78 இலட்சம் செலவில் ஆய்வுக்கூடங்கள் கட்டப்பட்டு, ரூ.26 இலட்சத்திற்கு உபகரணங்கள் வாங்கி ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ 49 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 2.06 கோடி செலவில் ஆய்வுக்கூடங்கள் கட்டிமுடிக்கப்பட்டு, ரூ.21.50 இலட்சம் செலவில் ஆய்வுக்கூட உபகரணங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.



❖ 12 ஆம் வகுப்புவரை பயிலும் அனைத்து ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் 2 செட் சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.6.87 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ ரூ.0.69 கோடி செலவில் 7 பள்ளிகளில் புதிய கட்டடங்கள் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக்கூடங்கள் கட்ட ரூ.1.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ இதுவரை, 100 ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 26 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 23 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் 19 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளும் நிறுவப்பட்டுள்ளன. பள்ளிகளுக்கு வராமல் இடையில் நின்றுவிடும் குழந்தைகளைத் தடுக்கும் நோக்கத்தோடு இப்பள்ளிகள் நிலை உயர்த்தப்படுகின்றன.

❖ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின அனைத்து மாணவர்களுக்கும் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்காக 2001–2002 ஆம் நிதி ஆண்டில் ரூ.11.39 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ பத்தாம் வகுப்பு படிப்பிற்கு முற்பட்ட படிப்பிற்கான கல்வி உதவித்தொகை வழங்கும் மாநில அரசுத் திட்டத்தின்கீழ் ரூ.2.89 கோடியும், மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் ரூ.3.40 கோடியும் இந்நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் ரூ.2.20 கோடியும், மைய அரசு திட்டத்தின்கீழ், ரூ.34.28 கோடியும் இந்நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1999–2000 ஆம் ஆண்டிலிருந்து சுயநிதிக் கல்லூரிகளில் அரசுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் பயிலும் ஆதிதிராவிடர்/பழ்ங்குடியினர்/கிருத்துவ ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களின் பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,920/–க்குள் உள்ளவர்களுக்கு அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் அப்படிப்பிற்கான கல்விக் கட்டண அளவிற்கு கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது.

[2001 செப்டம்பர் 7

விடுதிகளில் தங்கி பட்டம், பட்டமேற்படிப்பு மற்றும் தொழிற் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கல்வி உதவித் தொகைக்கு மேற்பட்ட கல்விச் செலவினங்களுக்கு கல்விக் கடனுதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. பட்டப்படிப்பு படிப்பவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.6500/-ம் தொழிற்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு படிப்பவர்களுக்கு ரூ.7000/-மும் கடனாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென நடப்பு ஆண்டில் ரூ.4.62 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற் கல்வியில் 60 சதவீத விழுக்காடு மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறும் மாணவ/ மாணவியர்களுக்கு பரிசுத் தொகையாக முறையே ரூ.2000/-, ரூ.4000/- மற்றும் ரூ.5000/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு நடப்பு நிதிஆண்டில் ரூ.18.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1999-2000 ஆம் ஆண்டு முதல் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற் கல்வியில் பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு பதிவுக் கட்டணம் மற்றும் சேர்க்கைக் கட்டணம் கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் கல்ராயன் மலையிலுள்ள வெள்ளிமலையில் பழங்குடியினருக்காக ஒரு உண்டுஉறைவிட மேல்நிலைப் பள்ளி, ரூபாய் ஒரு கோடி செலவில் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது.

புத்தக வங்கித் திட்டத்தின்கீழ் மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை, பல் தொழில்நுட்பம், சட்டம், முதுநிலை வணிக நிர்வாகம், பட்டயக்கணக்கு, உயிர் அறிவியல் படிப்பு மற்றும் தொழில் கல்வியில் முதுநிலை பட்டப்படிப்புகள் மற்றும் இதர தொழில் படிப்புகள் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு ரூ.2400/- முதல் ரூ.7500/- வரை மதிப்புள்ள புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சட்டப் படிப்பு பட்டதாரிகள் சுயமாக சட்டத்தொழில் செய்ய 180 சட்டப் பட்டதாரிகளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.5000/- வீதம் ஒரே ஒரு முறை வழங்கப்படும். மானியத்திற்காக ரூ.9.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 7]

கல்வியின் முக்கியத்துவத்தையும் அது சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் கருத்தில் கொண்டு இவ்வரசு பின்வரும் முக்கிய திட்டங்களை உருவாக்கியுள்ளது:

2001-2002 ஆம் நிதியாண்டிலிருந்து பதினொன்று மற்றும் பன்னிரெண்டாவது வகுப்புகளில் பயிலும் அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கும், மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவிகளுக்கும் இலவசமாக மிதிவண்டி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு பட்ட மேற்படிப்பு வரை இலவச கல்வி அளிக்கும் திட்டத்தை இவ்வரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

படிப்படியாக அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளைப் பொதுப் பள்ளிகளுடன் இணைத்து செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ஒவ்வொரு பள்ளியிலும் பெற்றோர்-ஆசிரியர்கள் கழகத்திலிருந்து உறுப்பினர்கள், மாவட்ட/உதவி கல்வி அலுவலர்கள் மற்றும் ஆதிதிராவிடர்/பழங்குடியின சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் ஆகியோரைக் கொண்டு, ஒரு குழு அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்குழு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகளை அதிலும் குறிப்பாக மாணவிகள் மீது சிறப்புக் கவனம் செலுத்தி, பொதுப் பள்ளிகளில் இவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதைக் கண்காணிக்கும்.

ஒவ்வோர் ஆண்டும் மாணவர்கள் விடுதி கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்படும் தொகையிலிருந்து 5 அல்லது 6 விடுதிகள் மட்டுமே கட்ட முடிகிறது. எனவே, அனைத்து விடுதிகளுக்கும் கட்டடங்கள் கட்டி முடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், படிப்படியாகக் கட்டடங்களைக் கட்டுவதற்கு இவ்வரசு கருதியுள்ளது. இதற்காக 2001-2002 ஆம் நிதியாண்டில் ரூ.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

விடுதிகளில் தங்கிப் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் உணவுக் கட்டணத்தை ரூ.225/- லிருந்து ரூ.300/- ஆக உயர்த்தி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறைந்த வருவாய் பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண்களுக்கான மகளிர் விடுதிகள் மற்றும் பணிக்குச் செல்லும் பெண்களுக்கான விடுதிகள் ஏற்படுத்த வேண்டுமென விடுக்கப்பட்ட

கோரிக்கையைக் கருத்தில்கொண்டு சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் போன்ற முக்கிய நகரங்களில் இவ்விடுதிகளை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

**II. ஒதுக்கீடு (RESERVATION)**

அரசு ஆணை நிலை எண் 44-ஐ சீரமைத்து பணியிடங்களில் ஏற்படும் பின்னடைவுகளை (Backlog) நிறைவு செய்ய இவ்வரசு கருதியுள்ளது.

**III. பொருளாதார வளர்ச்சி**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கென தனியாக தமிழ் நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) ஒன்று 1974-ல் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. இக்கழகம் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் வளர்ச்சிப் பிரிவு என இரு பெரும் பிரிவாகச் செயல்பட்டு வருகிறது.

**தொழில்நுட்பப் பிரிவு**

இப்பிரிவு கீழ்க்காணும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்கிறது:

விடுதி/பள்ளிக் கட்டடங்கள்

ஆசிரியர் குடியிருப்புகள்

சமுதாயக் கூடங்கள்

மழலையர் பள்ளிகள்

வகுப்பறைகள் (அனைவருக்கும் எழுத்தறிவு எனும் திட்டத்தில்)

அறிவியல் ஆய்வுக் கூடங்கள்

வணிக வளாகங்கள்

பயிற்சி நிலையங்கள்

தொழிற்பேட்டை





**திட்ட வளர்ச்சிப் பிரிவு**

இப்பிரிவு 1980-81 ஆம் ஆண்டிலிருந்து மாநிலத்திலுள்ள நலிந்த ஆதிதிராவிட மக்களின் பொருளாதார மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்தி தேவையின் அடிப்படையில் விரிவான தொகுப்பு நிதி உதவித் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.

மத்திய சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிதி உதவியைக் கொண்டு இந்நிறுவனம் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது :

வேளாண்/வேளாண்சார் தொழில்கள்

தனி நபர் தொழில் முனைவோர் திட்டங்கள்

ஏனைய துறைகள் மூலம் செயல்படுத்தும் திட்டங்கள்

துப்புரவுப் பணியாளர்களை அப்பணியிலிருந்து விடுவித்து மறுவாழ்வு வழங்கும் தேசிய திட்டம்

பெண் குழந்தைகள் கல்வி ஊக்கத் திட்டம்

மகளிருக்கான சிறப்புத் திட்டங்கள்

பயிற்சித் திட்டங்கள்

பழங்குடியினருக்கான திட்டங்கள்

தேசிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நிதி மேம்பாட்டுக் கழகத் திட்டங்கள்

துப்புரவுத் தொழிலாளர்கள் நிதி வளர்ச்சிக் கழகத் திட்டங்கள்

ஈங்கூர் மற்றும் முதலிபாளையத்தில் பின்னலாடைத் தொழில் வளாகத் திட்டங்கள்

இவ்வரசு மேற்படி அனைத்துத் திட்டங்களையும் தொடரக் கருதியுள்ளது. ஊரக வளர்ச்சிப் பிரிவு ஊராட்சி ஒன்றியம் அளவில் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து தாட்கோ கிராம திட்டத்தின்கீழ் இம்மாநிலம் முழுவதும் சுமார் 500 கிராமங்கள் தெரிவு

[2001 செப்டம்பர் 7

செய்யப்பட்டு அதில் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி வளர்ச்சித் திட்டங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வந்தபோதிலும், கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார நிலையைக் காண்பிக்கிறது:

(அ) ஆதிதிராவிடர் இனத்தவர்களில் 29.49 விழுக்காடும், பழங்குடி இனத்தவர்களில் 16.20 விழுக்காடும் நிலமில்லா தொழிலாளர்களாக உள்ளனர்.

(ஆ) ஆதிதிராவிடர் இனத்தவர்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழாக உள்ளவர்களின் எண்ணிக்கை 11,16,291–ம், பழங்குடி இனத்தவர்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழாக உள்ளவர்களின் எண்ணிக்கை 76,844–ம் ஆகும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார வளர்ச்சி திட்டங்கள் எதிர்பார்த்த அளவிற்கு அவர்களிடையே சென்றடையவில்லை என்பதை மேற்படி புள்ளிவிவரம் காண்பிக்கிறது.

எனவே, ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு உள்ளடக்கத் திட்டத்திற்கும் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தொகைக்கேற்ப இவ்வரசு நிதி ஒதுக்கீடு செய்ய முடிவு செய்துள்ளது. சிறப்பு உள்ளடக்கத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்களில் ஏற்படும் செயலாக்கம் மற்றும் முன்னேற்றத்தினைத் தொடர்ந்து ஆய்வு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருதியுள்ளார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்காக மத்திய அரசிடமிருந்து தேவையான நிதியை பெறுவதற்கேற்ப தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மாற்றியமைக்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடும்பத்தினரின் வருவாய் ஈட்டும் சக்தியினை பெருக்க வேளாண்மைத் துறையைச் சார்ந்த சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் ஊட்டச்சத்து நிறைந்த மானாவாரி பயிர்களான கம்பு, சோளம், ராகி, வரகு, சாமை, தினை மற்றும் சில பருப்பு வகைகளை பயிர் செய்ய ஊக்குவிக்கப்படும். இதன் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடும்பங்களுக்கு



2001 செப்டம்பர் 7]

வேலைவாய்ப்பு மற்றும் உணவு பாதுகாப்பு ஏற்படுத்தப்படுவதோடல்லாமல் அவர்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவைப் பெற்று அவர்கள் ஆரோக்கியமாக வாழவும் வகை செய்யப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு, ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் வகையில் மகளிர் கூட்டமைப்பு அமைத்து வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான சிறப்புப் பயிற்சிகள் தீவிரமாக அளிக்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் இந்த நிதியாண்டில் 20,000 மகளிருக்கு பயிற்சிகள் அளிக்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலமாக சிறப்பு உள்ளடக்கத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தவும், கண்காணிக்கவும், மேற்படி திட்டங்களுக்கு உரிய பங்கீட்டுத் தொகைகளைப் பெறுவதற்கும் இவ்வரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மேலும், சிறப்பு உள்ளடக்கத் திட்டம்/பழங்குடியினர் துணைத் திட்டத்தினை நன்கு திட்டவடிவமைத்து செயல்படுத்தி மாவட்ட மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் கண்காணிக்கவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பழங்குடியின மக்களுக்காகத் தீட்டப்படும் திட்டங்களின் பயன் அப்பழங்குடியின மக்களுக்கு விரைவில் சென்றடைவதை உறுதி செய்யும் நோக்குடனும், பழங்குடியின மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை நேர் செய்வதற்காகவும், இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஒருவர் தலைமையில் பழங்குடியினர் மேம்பாட்டு இயக்ககம் ஒன்று தனியே 1–4–2000 முதல் செயல்பட்டு வருகிறது.

## IV. துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களை அப்பணியிலிருந்து விடுவித்து மறுவாழ்வு அளிக்கும் திட்டம்

இத்திட்டம் தொன்றுதொட்டு இருந்து வந்த மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் இழிவான வழக்கத்தினை நீக்கி, துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு மாற்றுப் பணி அளிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் வேறு மாற்றுப் பணிகளில் அமர உரிய பயிற்சி அளிக்கப்படுகின்றது.

[2001 செப்டம்பர் 7

உலர்ந்த கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள துப்புரவுப் பணியாளர்களை விடுவிக்க அவர்களின் எண்ணிக்கை பற்றிய கணக்கெடுப்பு நடத்த கருதப்பட்டுள்ளது. கணக்கெடுப்பிற்கு பின் அவர்களை சுய உதவி குழுக்களாக பிரித்து அவர்களின் திறமை வளர்க்க வகை செய்யப்படும்.

தேசிய துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் மறுவாழ்வுத் திட்டமான "சானிடரி மார்ட்" என்ற புதிய திட்டம் ஒன்று மத்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் 20 அல்லது 25 நபர்களைக் கொண்ட குழுக்களாக ஏற்படுத்தி இத்திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும். இதில் ஒரு நபருக்கு மானியமாக ரூ.10,000/-மும் விளிம்புத் தொகையாக ரூ.3,000/-மும் மற்றும் கடனாக ரூ.7,000/-மும் ஆக மொத்தம் ரூ.20,000/- வீதம் வழங்கப்படும். இதுவரை இத்திட்டத்தின்கீழ் 2,530 பேர்கள் பயன்பெற்றுள்ளனர்.

துப்புரவுப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் கீழ்க்கண்ட தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- பிளீச்சிங் பவுடர்
- பினாயில் தயாரித்தல்
- இரயில்வே நிலையங்களில் கட்டண கழிப்பறைகள் பராமரித்தல்
- சிமிட்டி, செங்கல் தயாரித்தல்
- மெழுகுவர்த்தி தயாரித்தல்
- மளிகைப் பொருட்கள் விற்பனை மற்றும் பிற தொழில்கள்

## V. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியியல் உரிமைகள் சட்டம், வன்கொடுமைகள் பாதுகாப்புச் சட்டம், கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துதல்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நிகழும் வன்கொடுமைகளைத் தடுப்பதற்காக ஒரு காவல் துறை இயக்குநர் மற்றும் ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் மனித



2001 செப்டம்பர் 7]

உரிமைகள், சமூக நீதி, குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்டங்களில் இயங்கி வருகிறது. கூடுதல் காவல் துறை இயக்குநருக்கு உதவியாக தலைமை இடத்தில் ஒரு காவல் துறைத் தலைவரும், மாவட்டங்களில் 7 துணை கண்காணிப்பாளர்களும் மற்றும் 34 காவல் ஆய்வாளர்களும் பணியாற்றுகின்றனர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக நடத்தப்படும் வன்கொடுமை வழக்குகள் பெரும்பாலும் ஜாதிப் பெயரை தவறாகப் பயன்படுத்துவதாலேயே ஏற்படுகின்றது.

மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மாவட்ட அளவிலான விழிப்புக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், நடப்பிலுள்ள பணிகள், பாதிக்கப்பட்டோர் மற்றும் அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கு தீருதவி வழங்கல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகியவை ஆய்வு செய்யப்படுகின்றன.

மாவட்ட அளவிலான விழிப்புக் கண்காணிப்புக் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்படுகிறது. இக்குழு தீண்டாமைப் பழக்கத்தை அகற்றுவதன் அவசியத்தைக் குறித்து தீவிரமாகப் பரிசிலனை செய்கிறது. இம்மாநிலத்தில் நடக்கும் வன்கொடுமைகளைத் தீவிரமாக ஆய்வு செய்ததில் இவை பொருளாதார நிலையின் காரணமாக நடைபெறுவதாக உணரப்படுகிறது. தீண்டாமை அதிகமாகக் காணப்படும் இடங்களைக் கண்டறிந்து அவ்விடங்களில் இனக் கலவரம் ஏற்படாமல் தடை செய்யவும், இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தக்க தருணத்தில் நடவடிக்கை மேற்கொண்டு தீருதவிகளை வழங்குவதற்கும் மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு

கொத்தடிமைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதில் தமிழக அரசு ஆர்வத்துடன் அதிக முக்கியத்துவம் செலுத்தி வருகிறது. கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவித்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகிய பொறுப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. இது தொடர்பாக மாநில அளவில் ஆய்வுக் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறையின் பொருண்மைகளை ஆய்வு செய்தபோது, கொத்தடிமைத் தொழிலாளர்கள் என்று கண்டறியப்பட்டு விசாரணை செய்யப்படாத இனங்களிலும், கொத்தடிமையை விடுவித்து மறுவாழ்வு அளிக்க எந்தவிதமான முயற்சியும் எடுக்காத இனங்களிலும்,

[2001 செப்டம்பர் 7

உடனடியாக அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். 2000–2001 ஆம் நிதியாண்டில் கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவிக்கவும், மறுவாழ்வு அளிக்கவும் ரூ.5.78 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை ஒழிப்பதில் இம்மாநிலம் எடுத்துவரும் முயற்சிகளை ஏற்றுக்கொண்டு அகில உலக ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஓர் அங்கமான அகில உலக தொழிலாளர் நிறுவனம் இம்மாநிலத்திலுள்ள கொத்தடிமைகளை விடுவிக்கவும், மறுவாழ்வு அளிக்கவும் மைய அரசு வழியாக உதவி அளிக்க முன்வந்துள்ளது.

## VI. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வளர்ச்சித் திட்டங்கள்

### (அ) வீட்டுமனை வழங்கும் திட்டம்

இத்திட்டம் சொந்தமாக வீட்டு மனை இல்லாத ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டதாகும்.

நடப்பு ஆண்டான 2001–2002–ல் இதற்காக ரூ.18.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய 50,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இவை பெரும்பாலும் அடிப்படை வசதிகளின்றி உள்ளன. எனவே, ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள வீட்டுமனைப் பிரிவுகளுக்கும் தற்போது வழங்கப்பட்டுவரும் வீட்டுமனைப் பிரிவுகளுக்கும் அடிப்படை வசதிகளான தார்ச் சாலை, குடிநீர், மின் இணைப்பு போன்றவை ஏற்படுத்தினால் அது மிகப் பயனுள்ளதாக அமையும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், “வீட்டு மனைப் பட்டா” என்ற கணக்குத் தலைப்பின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகையில் 50 விழுக்காட்டை நடப்பு நிதியாண்டில் மேற்படி அடிப்படை வசதிகளை அமைப்பதற்குச் செலவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### (ஆ) ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுவசதி

வீடில்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. 2000–2001 ஆம் ஆண்டில் கான்கிரீட்



2001 செப்டம்பர் 7]

கூரை வீடுகள் கட்ட ரூ.34.23 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டிற்கு இதற்காக ரூ.31.87 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டித்தருதல்

பழங்குடியினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினர் மலைப்பகுதிகளில் வசிப்பதால் அவர்களுக்கு கட்டப்படும் வீடுகள் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட மதிப்பீட்டின்படி கட்டித் தரப்படுகின்றன. தற்போது சமவெளியில் கட்டப்படும் ஒரு வீட்டின் மதிப்பு ரூ.32,000/–, மலைப்பகுதியில் கட்டப்படும் ஒரு வீட்டின் மதிப்பு ரூ.34,000/– ஆகும். இத்திட்டத்தின் மொத்த செலவினத்தை பழங்குடியினர் நலத் துறையே ஏற்கிறது.

2001–2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.132.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## VII. பழங்குடிகள் மேம்பாடு

தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் தொகை 5.74 இலட்சம் ஆகும். இது தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.03 விழுக்காடு ஆகும். தமிழ்நாட்டில் 36 பழங்குடியின மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் 1) அதியன் 2) அரநாடன் 3) இரவலன் 4) இருளர் 5) காடர் 6) கம்மாரா (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) 7) காணிக்காரன், கணிக்கர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) 8) கணியன், கண்ணியன் 9) காட்டுநாயக்கன் 10) கொச்சுவேலன் 11) கொண்டகாப்பூஸ் 12) கொண்டாரெட்டி 13) கொரகா 14) கோட்டா (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) 15) குடியல், மேலகுடி 16) குறிச்சான் 17) குரும்பா (நீலகிரி மாவட்டத்தில்) 18) குரும்பன் 19) மகாமலசால் 20) மலை அரையன் 21) மலைப் பண்டாரம் 22) மலை வேடன் 23) மலைக் குறவன் 24) மலைசார் 25) மலையாளி (தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, சேலம், கடலூர், விழுப்புரம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில்) 26) மலையகண்டி 27) மன்னன் 28) முதுகர் 29) முதுவன் 30) பள்ளையன் 31) பள்ளியன் 32) பள்ளியர் 33) பனியன் 34) சோளகா 35) தோடா

[2001 செப்டம்பர் 7

(கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) 36) உரளி ஆவர். பழங்குடியினரின் சேர்மங்கள் (clusters) தமிழ்நாட்டில் 13 மாவட்டங்களில் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன. பல்வேறு துறைகளின் நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப பழங்குடிகள் துணைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. பழங்குடிகள் துணைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக கீழ்க் குறிப்பிட்டிருக்கிற பழங்குடிகள் பெரும்பான்மையாக/கூட்டமாக வாழ்கின்ற பகுதிகள் கண்டறியப்பட்டு திட்டங்கள் செயல்படுத்துவதன் மூலம் திட்டப் பயன்கள் பெரும்பாலும் அவர்களுக்குப் போய்ச் சேர்கின்றன:

| வ. எண் | மாவட்டம் | பழங்குடிகள் வசிக்கும் பகுதி |
|---|---|---|
| 1 | நாமக்கல் | கொல்லிமலை |
| 2 | சேலம் | ஏற்காடுமலை |
| 3 | சேலம் | கல்ராயன் மலை |
| 4 | சேலம் | அரநூற்றுமலை |
| 5 | சேலம் | பச்சைமலை |
| 6 | திருவண்ணாமலை | ஜவ்வாதுமலை |
| 7 | விழுப்புரம் | கல்ராயன் மலை |
| 8 | தருமபுரி | சித்தேரி மலை |
| 9 | திருச்சிராப்பள்ளி | பச்சை மலை |

மலைவாழ் மக்களின் வளர்ச்சிக்கென பொருளாதாரத் திட்டங்களைச் செயல்படுத்த அதாவது வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள பழங்குடியினர் அதனைக் கடந்து முன்னேற்றம் அடைய தகுதியான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதற்கென தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, ஸ்வர்ணஜெயந்தி கிராம ஸ்வரோஜிகர் யோஜனா போன்ற பல துறைத் திட்டங்களில் இம்மக்களின் மேம்பாட்டிற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்களை ஒருங்கிணைந்த மலைவாழ் பகுதிகளில் செயல்படுத்தி இதன் மூலம் பழங்குடியின விவசாயிகளுக்கு மரக்கன்றுகள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், உரங்கள், இரசாயன பொருட்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டங்கள் மூலம் பெறும் பலன்களைப் பயன்படுத்துவதற்குரிய செய்முறைகளை இம்மக்களுக்கு செய்து காட்டி அதன்மூலம் அவர்கள் இத்திட்டப் பயன்களை



2001 செப்டம்பர் 7]

முழுமையாகப் பெற வழிகாட்டப்படுகிறார்கள். மேலும், அவர்களுக்குத் தேவையான சிறு கடன்கள் வழங்கப்படுவதற்கும் மற்றும் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயவிலை கிடைக்கப் பெறுவதற்கும் பல் நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இம்மலைவாழ் மக்களின் நன்மையைக் கருதி அமைக்கப்பட்டுள்ளன. தற்போது இத்தகைய பெரும் பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் 18 செயல்பட்டு வருகின்றன. இவ்வாறாக பழங்குடியின விவசாயிகள் வறுமைக்கோட்டை தாண்டி முன்னேறி வாழ வழிவகை செய்யப்படுகிறது.

பழங்குடி மக்களுக்கு வேண்டிய இயற்கை உரம் மற்றும் இதர உரங்கள் தோட்டக்கலை மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன. விவசாயத்தை நம்பி வாழும் பழங்குடி. இன விவசாயிகளின் குடும்பத்திற்கு அவர்களுடைய வாழ்க்கை நிலை உயர கால்நடை வளர்ப்புத் துறை மூலமாக ஆடுகள், கறவை மாடுகள், கறிக்கோழிகள் ஆகியன வழங்கப்படுகின்றன. இந்த உதவிகள் சிறு விவசாயிகளுக்கும் வழங்கப்படுகின்றன. மேலும் கால்நடை வளர்ப்பு குடும்பத் திட்டங்கள் மூலம் அதிக பலன் தரக்கூடிய கால்நடைகள், கோழிகள் வழங்கப்படுகின்றன. இவற்றின் உடல் நலப் பாதுகாப்புக்குரிய தடுப்பு ஊசிகளும், செயற்கை முறை கருவூட்டல் மூலம் கால்நடைகள் பெருக்கத்திற்குமான உதவிகள் செய்யப்படுகின்றன.

பழங்குடியினருடைய பொருளாதார வளர்ச்சிக்காக விதைகள், விதைநாற்றுகள், உரங்கள், இரசாயனப் பொருட்கள் ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகின்றன. பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவியும் அளிக்கப்படுகிறது. பழங்குடியின குடும்பங்களுக்கு தேனீப் பெட்டிகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன. 245 அரசு உண்டு உறைவிட பள்ளிகள் பழங்குடியினர் வாழ்கின்ற பகுதிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. அதில் பயன்பெறும் பழங்குடியினர் மாணவருடைய எண்ணிக்கை 26,744 ஆகும். 26 பழங்குடியின மாணவர்களுக்கான விடுதிகள் நடத்தப்படுகின்றன. அடிப்படை வசதிகளான குடிநீர், தெரு விளக்கு, ஆரம்ப சுகாதார நிலையங்கள், சாலை ஆகியவை பழங்குடியினர் வாழ்கின்ற பகுதிகளுக்கு அளிக்கப்படுகின்றன.

வேலைவாய்ப்பை நாடுகின்ற மலைவாழ் ம்க்களுக்காக உதகமண்டலம், சங்கராபுரம், கொல்லிமலை மற்றும் ஜவ்வாது மலை ஆகிய நான்கு இடங்களில் வேலைவாய்ப்பு வழிகாட்டு மையங்கள் செயல்படுகின்றன. மேலும் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் சிறிய அளவிலான ஒரு தொழிற்கல்வி பயிற்சி நிலையம் 80 நபர்களுக்கு பயிற்சி

அளிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. பழங்குடி மக்களில் தொழில் முனைவோர்க்கு அவர்கள் விரும்புகின்ற தொழில் சார்ந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் மருத்துவர்கள், பொறியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், ஓட்டுநர்கள், மெக்கானிக்குகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் இது போன்ற தொழில்/வியாபாரம் செய்பவர்கள் ஆகியோர் அடங்குவர். ஒவ்வொரு ரூ.5,00,000 மதிப்புள்ள திட்டத்திற்கும் அரசு மானியமாக ரூ.25,000/–மும் மற்றும் விளிம்புத் தொகையாக ரூ.1,25,000/–மும் வழங்கப்படுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 275(1)ன்கீழ் வழங்கும் நிதியின் மூலம் தமிழ்நாட்டிற்கு இரண்டு முன்மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகள் கட்ட மைய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இவற்றில் ஒன்றை விழுப்புரம் மாவட்டம் வெள்ளிமலையில் ஏற்படுத்திடவும் அதற்கான கட்டுமானப் பணிக்காக மைய அரசு ரூ.10,00,000 ஒப்பளிப்பு வழங்கி தொகையை விடுவித்துள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகள் தாட்கோ மூலம் தொடங்கப்படும்.

மாநிலத் திட்டம் (STATE PLAN) மைய அரசு திட்டம் (CENTRALLY SPONSORED SCHEME) மற்றும் மைய சிறப்பு உதவி (SPECIAL CENTRAL ASSISTANCE) ஆகியவை பல்வேறு நிதி ஆதாரங்கள் ஆகும். இவற்றை ஒருங்கிணைத்து பழங்குடியினர் வளர்ச்சித் திட்டங்கள் தீட்டி அமல்படுத்தப்படுகின்றன. மைய அரசால் வழங்கப்படும் சிறப்பு மைய உதவி பழங்குடியினரின் பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின்கீழ் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் ஒன்று நீலகிரி மாவட்டத்தில் உதகை நகரில் பாலாடா என்ற இடத்தில் 1984–85 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

பழங்குடியினர் முன்னேற்றத்திற்கான பழங்குடியினர் குறித்த ஆராய்ச்சி, பழங்குடியினருக்கான பயிற்சியளித்தல், பழங்குடியினருக்கான திட்டத்தை ஆய்வு செய்தல் போன்ற செயல்பாடுகளை இந்த மையம் மேற்கொள்கிறது. இதற்கான செலவினத்தை மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் ஏற்றுக்கொள்கின்றன.

பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டு, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திலிருந்து, 1996 ஆம் ஆண்டு முதல், நேரடியாக அரசின்கீழ் கொண்டு வரப்பட்டது.



உதகமண்டலத்தில் செயல்படும் பழங்குடிகள் ஆராய்ச்சி மையம், பழங்குடிகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் பழங்குடிகளுக்கு பயிற்சிகளையும் அளித்து வருகிறது. தோடா, கோட்டா, குரும்பா, இருளர், பணியா, காட்டுநாயக்கன் ஆகிய பழங்குடியினர் பண்டைய பழங்குடிகள் ஆவர். அவர்களின் எண்ணிக்கை சுமார் 1.58 இலட்சம் ஆகும். அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காக ஆடுகளும், கறவை மாடுகளும் இலவசமாக அளிக்கப்படுவதுடன் இலவசமாக வீடுகளும் கட்டித்தரப்படுகின்றன. ஒருங்கிணைந்த பழங்குடிகள் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளுக்கு வெளியே வாழ்கின்ற பண்டைய பழங்குடிகளாக கருதப்படாத பரவி வாழ்கின்ற இதர பழங்குடி மக்களுக்கும் ஆடுகள், கறவை மாடுகள் மற்றும் வீடுகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

2001 செப்டம்பர் 7]

## இணைப்பு—II

(50 ஆம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 31 — பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

**அ. முகவுரை**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் நலனுக்குப் பாடுபடுவதிலும் அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் நல்வாழ்விற்கும் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. சமூக பின்னடைவிலிருந்தும், பொருளாதார நலிவிலிருந்தும் இவர்களை விடுவிக்கும் பொருட்டு, கல்வி, சமுதாய மற்றும் பொருளாதார நிலையில் இவர்களின் நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் இவர்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை வகுக்கவும் செயல்படுத்துவதற்கும் இவ்வரசு மிகவும் முக்கியத்துவம் அளிக்கிறது.

**ஆ. கொள்கை**

**(அ) இடஒதுக்கீடு**

2. தமிழ்நாட்டில் பல்லாண்டு காலமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென இடஒதுக்கீட்டுக் கொள்கை வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசுப் பணிகளில் நியமனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் அனுமதி ஆகியவற்றிற்கான இட ஒதுக்கீடு இவற்றைச் செயல்படுத்துவதில் முன்னோடியாக விளங்கி, 1921 ஆம் ஆண்டு முதல் இட ஒதுக்கீடு கொள்கை தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக இப்பிரிவினர் பெரும் பயனடைந்து சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலையில் கணிசமான அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலாக பிற்படுத்தப்பட்டோர்,

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்கள் உள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இட ஒதுக்கீட்டு அளவு, பெரும்பான்மை மக்களின் தேவைக்கு ஏற்ப, படிப்படியாக உயர்ந்து தற்போது 69 விழுக்காடு என்ற நிலையை அடைந்துள்ளது. ஆதிதிராவிடர்களுக்கு 18 விழுக்காடு, பழங்குடியினருக்கு 1 விழுக்காடு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 30 விழுக்காடு, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்குத் தற்போதைய கொள்கை வழிவகுக்கிறது. மண்டல் குழு வழக்கு என்று அழைக்கப்படும் இந்திரா சஉறானி வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் ஒட்டுமொத்த இடஒதுக்கீடு 50 விழுக்காட்டிற்கு மேல் இருக்கக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டது. இச்சிக்கலைச் சமாளிக்க, நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சீரிய தலைமையில் இவ்வரசுதான் சமூகத்தின் நலிவுற்ற பிரிவினருக்காக, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 69 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1994) ஒன்றை இயற்றி, அரசமைப்புச் சட்டத்தின் 9 ஆம் அட்டவணையில் இதனை இடம்பெறச் செய்ய மத்திய அரசினை வலியுறுத்தியது. இச்சட்டத்தினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள பல்வேறு வழக்குகள் உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்பு நீதியர் ஆயத்திற்கு அனுப்பப்பட்டு அவை நிலுவையில் இருந்து வருகின்றன. இவ்வழக்குகளை விரைந்து முடித்திட இவ்வரசு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் நலிவுற்ற இப்பிரிவினரின் தொகை எத்தனை விழுக்காடாக இருக்கின்றதோ அதற்கு ஏற்றபடி இடஒதுக்கீட்டின் அளவும் அமைய வேண்டும் என்பதே இவ்வரசின் உறுதியான முடிவாகும். வெவ்வேறு பிரிவினரை உள்ளடக்கிய நலிவுற்ற இம்மக்களுக்கு இடஒதுக்கீட்டின் அளவினை நிர்ணயம் செய்வதில் வேறு சில சமூக அளவுகோல்கள் மற்றும் வரலாற்று உண்மைகளும் அடிப்படையாக அமைகின்றன. இது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். எனவே இடஒதுக்கீட்டின் அளவினை நியாயமாக நிர்ணயிக்கும் பொறுப்பு அந்தந்த மாநில அரசின் முடிவிற்கு விடப்படவேண்டும். இதற்கு வழிவகை செய்திட அரசியலமைப்புச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டுவர மைய அரசு கோரப்பட்டுள்ளது.

மைய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை 27 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்துமாறும்,





அனைத்திந்திய பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணியிடங்களுக்கான தேர்வுகளில் இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையைச் செயல்படுத்துமாறும் மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும்.

## (ஆ) கல்வி

3. சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட இப்பிரிவினரின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு கல்வி வளர்ச்சி ஒரு சிறந்த கருவியாகும். இப்பிரிவினரின் கல்வி அறிவினை வளர்ப்பதிலும் அவர்களது கல்வித் தரத்தினை உயர்த்துவதிலும், இவ்வரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

## (இ) பொருளாதார நிலை உயர்த்துதலும், பயிற்சியும்

4. கல்வி மற்றும் சமூக நிலையில் இப்பிரிவினரின் பின்தங்கிய நிலைக்கு வறுமையே அடிப்படைக் காரணமாகும். எனவே முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள், போயர்கள் ஆகியோர்களுக்கு இலவசமாக கருவிகள் வழங்கியும், முடிதிருத்தகம், சலவையகம், நடமாடும் சலவையகம் ஆகியவற்றை அமைப்பதற்காக நிதி உதவி அளித்தும், கணினிப் பயிற்சி, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, தகவல் தொழில் நுட்பம் போன்ற 20-க்கும் மேற்பட்ட பிரிவுகளில் பல்வேறு வேலை வாய்ப்புப் பயிற்சிகளை வழங்கியும் இவ்வகுப்பினரைச் சேர்ந்த வேலையற்ற இளைஞர்களின் சுய வேலை வாய்ப்பினை ஊக்குவிப்பதன் மூலம் இப்பிரிவினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை வகுப்பதில் இவ்வரசு சிறப்புக் கவனம் செலுத்துகிறது.

## (ஈ) வீட்டுவசதி

5. நலிவுற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரில் பெரும்பாலானோருக்குச் சொந்தமாக குடியிருப்புகள் இல்லை. எனவே தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி இவர்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டத்தினை இத்துறை செயல்படுத்தி சுமார் 1.5 இலட்சத்திற்கு மேலாக வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியுள்ளது. இத்திட்டம் ஆரம்பகாலத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோரில், குறிப்பாக (1) முடிதிருத்துவோர் (2) சலவைத் தொழிலாளர் (3) போயர் (4) நரிக்குறவர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த ஏழை நிலமற்றவர்களுக்காகச் செயல்படுத்தப்பட்டது. பின்னர் இத்திட்டம் ஊரகப் பகுதிகளில், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் அனைத்து பிற்படுத்தப்பட்ட, மிகவும்

பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும் மற்றும் முற்பட்ட வகுப்பினருக்கும் கூட விரிவுபடுத்தப்பட்டது. ஆனால் போதிய நிதி வசதி இல்லாத நிலை போன்ற பல்வேறு காரணங்களினால் ஒரு சிறிய பகுதி பயனாளிகள் மட்டுமே இவற்றில் வீடுகள் கட்டியுள்ளனர். எனவே இவ்விடங்களில் வீடுகள் கட்டும் திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக ஏற்கனவே நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் சாலை வசதி, தெரு விளக்குகள், குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதி ஆகிய அடிப்படை வசதிகளை அமைப்பதற்கும், இரண்டாவது கட்டத்தில், இவ்விடங்களில் வீடுகள் கட்டித் தரவும் திட்டமிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் வீட்டு மனைகள் வழங்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த ரூ.1025.00 இலட்சமும், வீட்டு மனைகளுக்கு ரூ.261.50 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## சிறுபான்மையினர் நலன்

6. தமிழகத்தில் முகமதியர், கிறித்துவர், சீக்கியர், புத்த மதத்தினர், ஜெயினர்கள் மற்றும் பார்சி சமயத்தைச் சார்ந்தவர்கள் முக்கிய சிறுபான்மையின மக்கள் ஆவார்கள். சமுதாயத்தில் பல்வேறு பிரிவினரிடையே மத நல்லிணக்கத்தைப் பேணுவதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, சிறுபான்மையினர் இம்மாநிலத்தின் ஓர் அங்கமாக விளங்குவதை உணரும் வகையில் அவர்களின் நலனுக்காக திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**இ. திட்டங்கள்**

**1. கல்வி**

*கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்*

7. கல்வி நிலையிலும், எழுத்தறிவிலும் சீர்மரபின சமுதாயத்தினர் குறிப்பாக பிரமலைக் கள்ளர் இனத்தவர் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் நலனில் சிறப்புக் கவனம் செலுத்துவதுடன் அவர்களது கல்வித்தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, பிரமலைக்கள்ளர் அதிகமாக வாழும் மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில், இத்துறையின் மூலம் 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மொத்த



எண்ணிக்கை 51,494 ஆகும். இப்பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. பள்ளிகளின் நிலை உயர்த்துதல், கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தருதல், ஆய்வகங்கள் மற்றும் மாணவியர்களுக்கு கழிப்பறைகள் கட்டுதல், ஆய்வுக் கூட உபகரணங்களை வழங்குதல், மின் இணைப்புகள் அளித்தல் மற்றும் குடிநீர் வசதிகள் செய்தல் ஆகியவை இவ்வரசின் பல்வேறு முயற்சிகளாகும். மொத்தமுள்ள 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 62 பள்ளிகளில் குடிநீர் வசதிகளும், 72 பள்ளிகளில் மின் இணைப்புகளும் மற்றும் 72 பள்ளிகளில் கழிவறை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் குடிநீர் வசதி, மின் இணைப்பு மற்றும் கழிவறை வசதி போன்ற அடிப்படை வசதிகளை மிகு விரைவு திட்டமாகச் செயல்படுத்துமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். முதற் கட்டமாக மீதமுள்ள 193 கள்ளர் பள்ளிகளுக்கு கழிவறை வசதிகள் செய்து கொடுக்க 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.137.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து மேனிலைப் பள்ளிகளிலும் கணினிப் பாடத்திட்டம் செயல்படுத்தப்படும் என அரசால் அறிவிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் மொத்தமுள்ள 15 கள்ளர் சீரமைப்பு மேனிலைப் பள்ளிகளில் 8 பள்ளிகளில் கணினிப் பாடத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

8. அனைத்து நிலைகளிலும் பின்தங்கியுள்ள பிரமலைக்கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குச் சிறந்த கல்வி அறிவை அளிப்பதற்கு ஏதுவாக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒவ்வோராண்டும் கணிசமான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் செயல்பாட்டிற்கென நடப்பு ஆண்டில் ரூ.2123.61 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*பாடப்புத்தகங்கள் மற்றும் எழுதுபலகைகள் வழங்குதல்*

9. இத்திட்டத்தின் கீழ் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 3வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு எழுது பலகைகளும், 10–வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குக் குறிப்பேடுகளும், பாடப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 2001–2002 ஆம் ஆண்டிற்கு ரூ.36.49 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## சீருடை வழங்கல்

10. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவ/மாணவியருக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர் இல்லங்களில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கும் ஒவ்வோராண்டும் இரண்டு தொகுதி சீருடைகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லங்களைச் சேர்ந்த 21,120 மாணவ/மாணவியரும், மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவர் இல்லங்களைச் சேர்ந்த 20,050 மாணவ/மாணவியரும், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளைச் சேர்ந்த 44,950 மாணவ, மாணவியரும் இத்திட்டத்தினால் பயன்பெறுகின்றனர். 2001–2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.148.67 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## படிப்பு உதவித் தொகை.

11. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு மிகைப்படாத பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு பல்வேறு படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

## பள்ளிப் படிப்பு உதவித் தொகை

12. 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர்களுக்கு, அனைத்துப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்துறையின் விடுதிகளில் தங்கி நான்கு முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகைப்படாத 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு அனைத்துப் பாடப்புத்தகங்களும் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், மாணவர்கள் செலுத்த வேண்டிய தனிக் கட்டணமும் கல்வி நிலையங்களுக்கு ஈடு செய்யப்படுகிறது. 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக்குச் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணமும் மாணவர்கள் சார்பில் அரசு தேர்வுகள்





இயக்குநருக்கு ஈடு செய்யப்படுகின்றது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகைப்படாத பட்டதாரி அல்லாத குடும்பங்களைச் சார்ந்த, ஆங்கில மொழி வழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ/ மாணவியருக்குக் கல்விக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர்கள் இச்சலுகையைப் பெற எந்த நிபந்தனையும் இல்லை. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் இச்சலுகைகளுக்குத் தகுதியுடையவராவர். இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டிற்கு ரூ.737.51 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை

13. கிராமங்களில் நிலவும் வறுமையின் காரணமாக குறிப்பாக மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவர்களிடையே ஆரம்பப் பள்ளி அளவிலேயே படிப்பை நிறுத்தி விடும் சூழ்நிலை நிலவுகின்றது. வறுமையின் காரணமாக தொடர்ந்து கல்வி பயிலாமல் இடையில் நிறுத்திவிடும் இவ்வகுப்பைச் சார்ந்த மாணவியர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அவர்கள் நடுநிலைப்பள்ளி வரை தொடர்ந்து பயின்றிடுவதை ஊக்குவிப்பதற்கென 3 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 60,000 மாணவியருக்கு ஆண்டிற்கு ரூ.500/– ஊக்கத் தொகையும், 6 ஆம் வகுப்பு பயிலும் 30,000 மாணவியருக்கு மாதமொன்றிற்கு ரூ.100/– வீதம் பத்து மாதத்திற்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 2001–2002 ஆம் ஆண்டிற்கு ரூ.600.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை

14. பள்ளிகளில் +2 வகுப்பு முதல், கல்லூரிகள் / பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சியாளர் நிலை வரையில், பயிலும் மாணவ/மாணவியர்களுக்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகைப்படாத மாணவ/ மாணவியர்களுக்குப் படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் புத்தக விலை ஆகியவைகளில் ஒரு பகுதியும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையுமாகவும் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேனிலைப் பள்ளியில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி கற்கும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள்,

[2001 செப்டம்பர் 7

அவர்களது கல்விக் கட்டணத்தைத் திரும்பப் பெறுவதற்கு அவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு உட்பட்டிருக்க வேண்டும் மற்றும் அவர்களுடைய குடும்பத்தில் வேறு பட்டதாரிகள் இருக்கக் கூடாது என்ற நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. ஆனால் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர்களுக்கு இவ்வாறான நிபந்தனைகள் ஏதுமில்லை.

**உண்டி-உறையுள் கட்டணங்கள்**

15. கல்வி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி உணவு மற்றும் உறையுள் கட்டணம், படிப்புதவித் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. பள்ளி மேற்படிப்பு உதவித்தொகைகள் வழங்குவதற்காக, 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.1122.62 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**இலவசக் கல்வி**

16. பத்தாம் வகுப்பு முதல் பி.ஏ, பி.எஸ்.சி மற்றும் பி.காம். போன்ற பட்டப்படிப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியரைப் பொறுத்தமட்டில், (அ) அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 50,000/-க்கு மேல் இருக்கக் கூடாது மற்றும் (ஆ) அவருடைய குடும்பத்தில் பட்டதாரிகள் இருக்கக் கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, பத்தாம் வகுப்பிலிருந்து பட்டப்படிப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இனத்தவர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளோடு, அக்குடும்பத்தில் அம்மாணவர் தொழிற் கல்வி பயிலும் முதல் நபராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, தொழில் பட்டப்படிப்பு மற்றும் பல்தொழில் பயிற்சிப் பள்ளியில் பட்டயப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.



2001 செப்டம்பர் 7]

இலவசக் கல்வி திட்டங்களின் கீழ் பயின்று வரும் மாணவ/மாணவியருக்கு கல்வி கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் ஏனைய திரும்ப பெற இயலாத பல்வகை கட்டாயக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு நடப்பு ஆண்டிற்கு ரூ.1705.29 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**பரிசுகள் வழங்குதல்**

(1) மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள்

17. இத்திட்டத்தின் கீழ் மாநில அளவில், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கான அரசுத் தேர்வுகளில் உயர் மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு இரண்டு முதல் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. பன்னிரெண்டாம் வகுப்பில், முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.3000/-மும், மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.5000/-மும் வழங்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பில் முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.1500/-ம், மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ மாணவியராக இருந்தால் ரூ.3000/-மும் வழங்கப்படுகிறது.

இதுபோன்றே, பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு இரண்டு முதல் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) மாவட்ட அளவில் வழங்கப்படுகின்றன. பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியராக இருப்பின் ரூ.1500/- மும், மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ/மாணவியராக இருப்பின் ரூ.3000/-மும் வழங்கப்படுகின்றன. இதே போன்று பத்தாம் வகுப்பு மாணவ/மாணவியருக்கு இரண்டு முதல் பரிசுகள், இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் இரண்டு மூன்றாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு, முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுத் தொகை முறையே ரூ.500/- ரூ.250/- மற்றும் ரூ.150/- ஆகும். மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு, முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.1000/-, ரூ.500/- மற்றும் ரூ.300/- ஆகும்.

2001–2002 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 2.13 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**(2) பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு**

18. பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு என்பது பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம், இரண்டாம் இடம் பெற்று தொழிற்படிப்பில் சேருகின்ற மாணவர் இருவர், மாணவியர் இருவருக்கு, ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.3000/- வீதம் நான்கு/ ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கப்படுவதாகும்.

**(3) தந்தை பெரியார் நினைவுப் பரிசு**

19. இதேபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் /சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவ மாணவியரில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் உயரிய மதிப்பெண்கள் பெற்று பல்தொழில் பயிற்சி நிலையத்தில் பட்டயப் படிப்பில் சேரும் மாணவர் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும், ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.3000/– வீதம் மூன்றாண்டுகளுக்குத் தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

அண்ணா, பெரியார் நினைவுப் பரிசுகளுக்காக நடப்பு ஆண்டிற்கென ரூ.23.66 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**(4) உயரிய மதிப்பெண்கள் பெற்ற மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் மாணவ மாணவியர்களுக்கு ஊக்கப் பரிசுத் தொகைகள் வழங்குதல்:**

20. இத்திட்டத்தின்கீழ் +2 பொதுத்தேர்வில் மாநில அளவில் உயர்ந்த மதிப்பெண்கள் பெறும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இனங்களைச் சார்ந்த மொத்தம் 500 மாணவர்கள் மற்றும் 500 மாணவியர்களுக்கு தொடர்ந்து உயர் கல்வி பயில ஆண்டுதோறும் தலா ரூ.1500 வீதம் ஊக்கப் பரிசுத்தொகையாக வழங்கப்படுகிறது. இந்த ஊக்கப் பரிசுத் தொகைகள் ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ/ மாணவியர் பட்டப்படிப்பு முடிக்கும் வரையிலோ அல்லது அதிகபட்சம் ஐந்து ஆண்டு காலத்திற்கோ இதில் எது குறைவோ அந்த காலம்





வரையில் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்குப் பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு இல்லை. இத்திட்டத்திற்கென நடப்பு ஆண்டிற்கு ரூ.30.00 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

**மாணவர் இல்லங்கள்**

21. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளின் கீழ் 972 மாணவர் இல்லங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 537 மாணவர் இல்லங்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. எஞ்சியுள்ள 435 மாணவர் இல்லங்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. 2000–2001 ஆம் ஆண்டில் மொத்தம் 52505 மாணவ/மாணவியர்கள் மாணவர் இல்ல வசதிகளைப் பெற்றுள்ளனர். மாணவர் இல்லங்களில் சேர, விண்ணப்பதாரரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்குட்பட்டு இருத்தல் வேண்டும். 972 மாணவர் இல்லங்களில், 202 மாணவர் இல்லங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்படுகின்றன. எஞ்சியுள்ள 770 மாணவர் இல்லங்கள் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக ரூ19.63 கோடி செலவில் 43 மாணவர் விடுதிகளைக் கட்ட இவ்வரசு கருதியுள்ளது. இதற்காகும் செலவு, மத்திய மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படும். தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் எஞ்சியுள்ள மாணவர் விடுதிகளுக்கான கட்டடங்களைப் படிப்படியாகக் கட்டி முடிப்பதற்குத் தேவையான நிதியைப் பிற ஆதாரங்களிலிருந்து திரட்டவும் இவ்வரசு கருதியுள்ளது. நடப்பாண்டில் விடுதிகள் கட்ட ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குடிநீர் வசதி, கழிவறை வசதி மற்றும் மின் இணைப்பு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை படிப்படியாக விடுதிகளில் ஏற்படுத்திக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

22. இந்த மாணவர் இல்லங்களுக்கு மாவு அரவை இயந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் (கல்லூரி மாணவர் இல்லங்களுக்கு மட்டும்), விளையாட்டு சாதனங்கள், நூலகங்கள் ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. மாணவர் இல்லங்களில் தங்கிப் படிப்பவர்களின் பொது அறிவை மேம்படுத்தும் வகையில், இந்த மாணவர் இல்லங்களுக்கு ஆங்கில நாளிதழ் ஒன்றும், தமிழ் நாளிதழ்கள் இரண்டும்

வழங்கப்படுகின்றன. அரசு இல்லங்களில் தங்கியுள்ள மாணவ/மாணவியர்களுக்கு 10 ஆம் வகுப்பு வரை இலவச பாடப்புத்தகங்கள் பல்வேறு திட்டங்களின்கீழ் வழங்கப்படுகின்றன. 10 ஆம் வகுப்பு மற்றும் +2 அரசு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவ/மாணவியர்களின் திறனை உயர்த்த அவர்களுக்கு இலவசமாக எல்லா பாடங்களுக்கும் வழிகாட்டி நூல்களும் (கைடுகள்) வழங்கப்படுகின்றன. மலைப்பகுதி மாணவரில்லங்களில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு கம்பளி ஆடைகள் வழங்கும் புதிய திட்டம் நடப்பாண்டில் செயல்டுபத்தப்படும். இந்த மாணவர் இல்லங்கள் முறையாகச் செயல்படுவதை உறுதிப்படுத்த ஒவ்வொரு மாணவர் இல்லத்திற்கும் மாணவர் இல்ல கண்காணிப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**உணவுக் கட்டணங்கள் மற்றும் உணவு மானியங்கள்**

23. மாணவர் இல்லங்களில் தங்கிப் பயில்பவர்களுக்கு அரசு அனுமதிக்கும் வீதங்களில் உணவுக் கட்டணங்கள் அனுமதிக்கப்படுகின்றன. கல்லூரி இல்ல மாணவ மற்றும் மாணவியர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத் தொகை நபர் ஒருவருக்கு ரூ.400/– ஆகவும், பள்ளி இல்ல மாணவ/மாணவியர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத் தொகை நபர் ஒருவருக்கு ரூ.225/– ஆகவும் வழங்கப்பட்டு வருகின்றது. பள்ளி மாணவரில்ல உணவுக் கட்டணம் போதுமானதாக இல்லாததினால் இக்கட்டணத்தை ரூ. 225/– லிருந்து ரூ.300/– ஆக உயர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பளித்துள்ளார்கள். 2001–2002 ஆம் ஆண்டிற்கு விடுதிகளைப் பராமரிக்க மொத்தம் ரூ.4210.30இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்காகப் பராமரிக்கப்பட்டுவரும், அரசு அங்கீகாரம் பெற்ற 39 தனியார் விடுதிகள், இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகாமலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களின் உணவு மற்றும் உறையுள் கட்டணம் தொடர்பான செலவுகளை ஏற்பதற்கு உணவு மானியம் என்ற வகையில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு, உணவு, உறையுள் கட்டணமாக மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.150/– வழங்கப்படுகிறது. 2000–2001ம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1856 மாணவ, மாணவியர்கள் பயனடைந்தனர். இந்த மானியத்திற்கு 2001–2002 ஆம் ஆண்டிற்கு ரூ.21.18 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.





## 2. பொருளாதார மேம்பாடு

**கருவிகளை இலவசமாக வழங்குதல்**

24. ஆண்டு வருமானம் ஊரகப் பகுதிகளில் ரூ.16,000/–க்குட்பட்ட மற்றும் நகர்ப்புறங்களில் ரூ.24,000/–க்குட்பட்ட சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், போயர்கள் ஆகியோரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு ஆண்டுதோறும் 4000 பித்தளை தேய்ப்புப் பெட்டிகளும், 500 முடிதிருத்தும் கருவிகளும், 500 கல்லுடைக்கும் கருவிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 2001–2002 ஆம் ஆண்டில் ரூ. 58.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முடிதிருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் ஏற்படுத்துதல்**

25. பூர்வீகத் தொழிலை மேற்கொண்டு வரும் மிகப்பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு முடிதிருத்தகங்கள், சலவை நிலையங்கள், நடமாடும் சலவை நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு அரசு கீழ்க்கண்டவாறு நிதியுதவி அளிக்கிறது:-

| திட்டத்தின் பெயர் | பயனடைவோரின் எண்ணிக்கை | அரசு உதவித் தொகை | வங்கிக் கடன் உதவி | ஒவ்வொரு பயனீட்டாளருக்கான மொத்தச் செலவு |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| முடி திருத்தகம் | 160 | 1500 | 3500 | 5000 |
| சலவை நிலையம் | 120 | 1500 | 3500 | 5000 |
| நடமாடும் சலவை நிலையம் | 40 | 600 | 1400 | 2000 |

நடப்பு ஆண்டில் 320 பேருக்கு நிதி உதவி அளிப்பதற்காக ரூ.400 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர் மரபினர் குடும்பங்களில் இறுதிச் சடங்குகளுக்கு நிதியுதவி வழங்குதல்:**

*26.* ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்குட்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் குடும்பத்தில் இறப்பு நிகழ்ந்தால், இறுதிச் சடங்குகளுக்காக நிதி உதவித் தொகையாக ரூ.500/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டிற்கு ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3. பயிற்சியும் வேலைவாய்ப்பும்

### அனைத்திந்தியப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம்

*27.* பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த திறமையான மாணவர்களும் மாணவியர்களும் அனைத்திந்திய சிவில் பணிகள் தேர்வுகளில் வெற்றி பெற இயலும் வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க சென்னையில் சிறப்பு பயிற்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வந்தது. ஆண்டுதோறும் நூறு பேருக்கு இந்நிலையத்தின் மூலம் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. வட்டாரப் பயிற்சி மையம் ஒன்றும் மதுரை காமராசர் பல்கலைக் கழக வளாகத்தில், 75 மாணவ, மாணவியருக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் இயங்கி வருகிறது. இலவச இடவசதி, தனிப்பயிற்சி, நூல் நிலைய வசதி ஆகியவற்றுடன் மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ.500 வீதம் உணவுக் கட்டணமும் அளிக்கப்படுகிறது. வருமான வரம்பு நிபந்தனை இன்றி பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ/ மாணவியர் இப்பயிற்சி நிலையத்தில் சேரத் தகுதியுள்ளவர்கள். ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பயிற்சியாளர்களிடையே சமுதாய நல்லிணக்கத்தை ஊக்குவிக்க இப்பயிற்சி நிலையமும் ஆதிதிராவிடருக்கான பயிற்சி நிலையமும் தற்போது ஒன்றாக இணைக்கப்பட்டு இந்த ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சி நிலையம் சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை நிலையத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டிற்கு இப்பயிற்சி திட்டத்திற்கு ரூ. 80.74 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம்

*28.* பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவ, மாணவியர் வேலை வாய்ப்பு பெறுவதற்கு அவர்களின் திறமையை மேம்படுத்த வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள்



வகுக்கப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள் பெரும்பாலும் அரசு நிறுவனங்களாலும், அத்தகைய வசதி இல்லாத இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களாலும் அளிக்கப்படுகிறது.

பயிற்சிகள் பின்வரும் தொழில்களில் அளிக்கப்படுகின்றன:

| வ. எண் | பயிற்சி | பயிற்சியாளர் எண்ணிக்கை | பயிற்சியின் காலம் (மாதங்கள்) |
|---|---|---|---|
| 1 | கணினிப் பயிற்சி | 1000 | 6 |
| 2 | கணினிப் பயிற்சி (உயர்நிலை) | 500 | 6 |
| 3 | கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி | 2000 | 3 |
| 4 | தானியங்கி பொறியியல் | 50 | 12 |
| 5 | குளிர்சாதன/குளிர்பதனப் பெட்டி பழுது பார்த்தல் | 100 | 6 |
| 6 | அலங்கார ஆடை வடிவமைப்பு | 30 | 2 |
| 7 | ஆடை தயாரிப்பு | 30 | 10 |
| 8 | கணினியில் அலங்கார ஆடை வடிவமைத்தல் | 30 | 10 |
| 9 | துணைச் செவிலியர் | 250 | 12 |
| 10 | பிளாஸ்டிக் செய்முறை இயந்திரம் இயக்குதல் | 25 | 6 |
| 11 | தோல் பொருட்கள் தயாரித்தல் (குறுகிய காலப் பயிற்சி) | 130 | 6 |
| 12 | தோல் பொருட்கள் தயாரித்தல் (நீண்ட காலப் பயிற்சி) | 92 | 15 |
| 13 | தையல் இயந்திரம் இயக்குதல் | 90 | 2 |
| 14 | அலுவலகச் செயலர் பயிற்சி | 200 | 6 |

[2001 செப்டம்பர் 7

| | | | |
|---|---|---|---|
| 15 | தட்டச்சுப் பயிற்சி | | |
| 16 | சுருக்கெழுத்துப் பயிற்சி | 900 | 6 |
| 17 | தொலைபேசி இயக்குதல் | 300 | 12 |
| 18 | தகவல் தொழில்நுட்பம் | 200 | 1 |
| 19 | மருத்துவ ஆய்வுக்கூடப் பயிற்சி | 5000 | 12 |
| 20 | பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பு சிறப்புப் பயிற்சி | 20 | 12 |
| | | 60 | 6 |
| 21 | உணவுப்பொருட்கள் மற்றும் பேக்கரி/ கன்பெக்ஷனரி பயிற்சி மற்றும் உணவு விடுதி நிர்வாகம் | 250 | 6/12 |

இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ.1588.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5. ஏனைய நடவடிக்கைகள்:

### தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

29. மண்டல் குழு வழக்கில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையொட்டி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பதற்கு மற்றும் பட்டியலில் இருந்து நீக்குவதற்காக பெறப்படும் கோரிக்கைகளைப் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரை செய்வதற்கு "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்" என்னும் நிரந்தர ஆணையத்தை அரசு ஏற்படுத்தியது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை திருத்தி அமைக்கும் பணியும் இந்த ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தங்கள் வகுப்புகளைச் சேர்க்குமாறு பல்வேறு வகுப்பினரிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகள் குறித்து ஆணையம் தற்போது விசாரணை நடத்தி வருகிறது. இதுவரை 148 வகுப்புகளிடமிருந்து பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க முறையீடுகள் ஆணையத்திற்கு வரப்பெற்றுள்ளன. இவற்றில் 73 வகுப்புகள் குறித்த விசாரணைகள் முடிவு பெற்றுள்ளன. மீதமுள்ள வகுப்பினர் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.



2001 செப்டம்பர் 7]

### தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

30. தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 22-5-1982-லிருந்து செயல்படத் தொடங்கியது. இக்கழகத்தின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட மூலதனத் தொகை ரூ.1200.00 இலட்சமாகவும், செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.1119.01 இலட்சமாகவும் உள்ளது. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதார முன்னேற்றத்திற்கென, இப்பிரிவைச் சார்ந்த தனிநபர், குழுக்கள் மற்றும் சங்கங்களிலிருந்து பெறப்படும் பொருளாதார மற்றும் நிதிநிலை அடிப்படையில் சாத்தியக்கூறு உள்ள திட்டம், வியாபாரம் அல்லது செயல் திட்டங்களுக்கு கடனுதவி அளிப்பதே இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் புதுதில்லியில் அமைந்துள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில வழிமுகமையாக செயல்பட்டு வருகிறது. கீழ்க்கண்ட நிறுவனங்கள் கடன்கள் வழங்கவும், கடன்களை வசூலிக்கவும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முகவர்களாகச் செயல்படுகின்றன:-

1) தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி
2) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்
3) கூட்டுறவு வங்கிகள்
4) தனியார் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள்
5) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் (ஆவின்)

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இதுவரையில், புதுதில்லியிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ.3103.51 இலட்சமும், தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூ.464.00 இலட்சமும் நிதியுதவி பெற்றுள்ளது. இதுவரையில், 36306 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பயனாளிகளுக்கு நிதியுதவியாக ரூ.3090.69 இலட்சம்

வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆரம்பிக்குமுன்னர், இக்கழகத்தால் சிறுபான்மையினர்களைப் பொறுத்தவரையில் 276 நபர்களுக்கு இத்தொகைய தவணைக் கடன் ரூ.143.30 இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது. மீதமுள்ள ரூ.320.00 இலட்சம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

## சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

31. சமூக நீதிக்காகப் போராடியவர்களைக் கௌரவிக்கும்பொருட்டு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை அரசு வழங்கி வருகின்றது. ஒரு சவரன் எடையுள்ள தங்கப் பதக்கமும், ரூ.1/- இலட்சம் ரொக்கமும் விருதாக வழங்கப்படுகிறது.

## சிறுபான்மையினர் நலன்

32. மாண்புமிகு பிரதமரின் 15 அம்சத் திட்டத்தின்கீழ், சிறுபான்மையினரின் நலனுக்காகக் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

(அ) காவல் துறை பணியாளர்கள் நியமனத்தில் சிறுபான்மையினருக்குத் தனிச் சலுகை அளித்தல்.

(ஆ) வளர்ச்சித் திட்டங்களில் சிறுபான்மையினருக்கு நியாயமான வாய்ப்புகள் அளித்தல்.

(இ) சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் அவர்களுடைய தாய்மொழியில் கல்வி பயில வசதிகள் செய்து கொடுத்தல்.

(ஈ) மொழிவழிச் சிறுபான்மையினருக்குத் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் பாடநூல்கள் வழங்குதல்.

(உ) சென்னை, கிருஷ்ணகிரி மற்றும் தேசூர் ஆகிய இடங்களில் முறையே உருது, தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை நடத்துதல்.

## மாநில சிறுபான்மையினர் நல ஆணையம்

33. இம்மாநிலத்தின் மத வழி மற்றும் மொழி வழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும்பொருட்டு, மாநிலத்தில் சிறுபான்மையினர் நல ஆணையம்



ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆணையம் சிறுபான்மையின மக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெறுகிறது. மனுதாரர்களை அழைத்து நேரடி விசாரணை செய்து, அம்மனுக்களில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சனைகள்மீது தொடர்புடைய அரசுத் துறைகளிடமிருந்து அறிக்கைகளைப் பெறுகிறது. சிறுபான்மையினரின் பிரச்சனைகளைக் கண்டறியும்பொருட்டு மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளைப் பார்வையிட்டு இவர்களுக்கான நலத் திட்டங்களைத் திறம்பட செயலாக்கிட அரசுக்குத் தக்க பரிந்துரைகளைச் செய்கின்றது.

## தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

34. தமிழ்நாட்டில் சிறுபான்மையினரின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கென 'தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்' 27-12-1999 முதல் செயல்பட்டு வருகின்றது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5.00 கோடி ஆகும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இயங்குகின்ற முறைப்படியே இந்த கழகமும் செயல்படுகிறது.

தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு மற்றும் நிதிக் கழகத்தால் 1994 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக வழங்கப்பட்ட ரூ.330.79 இலட்சத்தில் 15-6-2001 வரையில் 499 பயனாளிகளுக்கு நிதி உதவியாக ரூ.169.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. வைப்புத் தொகைக்கு வட்டி போன்றவற்றுடன் சேர்த்து ரூ.188.79 இலட்சம் மீதம் இருப்பில் உள்ளது.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், புது தில்லியில் உள்ள தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு மற்றும் நிதிக் கழகத்தின் முகவராகப் பணியாற்றுகிறது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் துணை முகவர்களாக உள்ள நிறுவனங்களே தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் துணை முகவர்களாகவும் செயல்படுகின்றன.

## வக்ஃபு வாரியம்

35. 1995 ஆம் ஆண்டு வக்ஃபு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 43/1995) கீழ் வக்ஃபு வாரியம் அமைக்கப்படுகிறது. வக்ஃபு அல்லது வக்ஃபு சொத்து தொடர்பான எந்தவொரு பூசலையும் முடிவு செய்வதற்கு 30 மாவட்டங்களில் அதிகார வரம்பைப் பெற்றுள்ள 23 வக்ஃபு நடுவர்

மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு அரசு நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. 2001–2002 ஆம் ஆண்டில் இதற்கென இவ்வாரியத்திற்கு ரூ.45.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. முஸ்லீம் சகோதரர்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்துக்கு புதிய அலுவலகக் கட்டடம் ஒன்று கட்டித்தர ரூ.40.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.16.00 இலட்சம் வழங்கப்படும். வக்ஃபு வாரியம் மற்றும் அதன்கீழ் இயங்கும் 10 வட்டார அலுவலகங்களுக்கு 2001–2002 ஆம் ஆண்டில் ரூ. 15.00 இலட்சம் செலவில் கணினிகள் வழங்கப்படும்.

### பழுதுபார்ப்பு/சீரமைப்பு மானியம்

36. மசூதிகள் மற்றும் தர்காக்கள் புதுப்பித்தல், இஸ்லாமியர் இடுகாட்டிற்குச் சுற்றுச் சுவர் கட்டுதல் அல்லது முட்கம்பி வேலி அமைத்தல் ஆகியவற்றிற்கு ஒவ்வோராண்டும், அரசு மானியம் வழங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மசூதிகள் மற்றும் தர்காக்களைப் புதுப்பித்தலுக்காக வழங்கப்படும் மானியத்துடன், சிறப்பு பழுது பார்ப்பு மற்றும் புனரமைப்பு பணிகளுக்காக ரூ.80.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்தொகையில் 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.32.00 இலட்சம் வழங்கப்படுகிறது.

### உலமா ஓய்வூதியத் திட்டம்

37. முவாஜின் (மோதினார்), பேஷ் இமாம் அல்லது அரபு மொழி ஆசிரியர்கள் 20 ஆண்டுகள் பணியாற்றி, 60 வயதை அடைந்துள்ள வறிய நிலையில் உள்ள உலமாக்களுக்கு உலமா ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500/– வீதம் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. உலமா ஓய்வூதியப் பயனாளிகளின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையான 2200–ல், 1850 நபர்கள் தற்பொழுது பயன் பெறுகின்றனர். இதற்கு நடப்பு ஆண்டில் ரூ1.32 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.





### தமிழ்நாடு மாநில ஹஜ் புனித யாத்திரைக் குழு

38. தமிழக ஹஜ் குழு, வக்ஃபு சம்பந்தப்பட்ட பணிகளுக்குப் பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு அமைச்சரைத் தலைவராகவும், 15 பேரை உறுப்பினர்களாகவும் கொண்டது. மேலும் 7 பேரை மற்ற அங்கத்தினர்களின் சம்மதத்தின்பேரில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளவும் அரசு அனுமதித்துள்ளது. நிர்வாகச் செலவுகளுக்காக தமிழ்நாடு மாநில ஹஜ் புனித யாத்திரைக் குழுவிற்கு, ஆண்டுதோறும் ரூ. 7.00 இலட்சம் வழங்கப்படுகிறது. ஹஜ் புனிதப் பயணத்தின்போது, வெளியூர்களிலிருந்து வரும் ஹஜ் பயணிகளுக்குச் சென்னையில் தங்குவதற்கான இடவசதிகள் செய்து கொடுத்தல், தங்கியிருக்கும் இடத்திலிருந்து சென்னை விமான நிலையத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் செய்தல், சென்னையிலிருந்து ஜெட்டாவிற்கு விமானத்தில் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுத்தல் போன்ற வசதிகளை பயணிகளுக்கு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செய்து கொடுக்கிறது.

ஒவ்வோர் ஆண்டும், நிர்வாகச் செலவிற்கான மானியம் நீங்கலாக அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், உறஜ் பயணிகள் தங்குவதற்கான கட்டடங்களைத் தேர்வு செய்யும் குழுவில் உள்ள, இரண்டு பிரதிநிதிகளை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கு ஆகும் செலவினத்திற்காகவும், மானியம் அளித்து வருகிறது.

### முஸ்லீம் மகளிருக்கு உதவும் சங்கம்

39. முஸ்லீம் மகளிருக்கு உதவும் சங்கம், சங்கங்கள் பதிவிற்கான சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு சென்னையில் 1–10–1892 அன்று தொடங்கப்பட்டது. ஆதரவற்ற முஸ்லீம் விதவைகளுக்கு மாதாந்திரப்படி வழங்குதல், தகுதியுடைய முஸ்லீம் மகளிர் மற்றும் பெண்களுக்கு உதவிகள் செய்தல், ஆதரவற்ற முஸ்லீம் மகளிருக்கு, கதர், கைவினைப் பொருள்கள் மற்றும் சிறு தொழில்கள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்கான நிலையம் அமைத்தல் போன்றவை இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும். இச்சங்கம் தொண்டர்களிடமிருந்து நன்கொடைகளைப் பெறுவதன்மூலம் தேவையான நிதியைத் திரட்டுகிறது. இச்சங்கம், திரட்டும் நிதியில், பாதித் தொகையை அரசு மானியமாக வழங்குகிறது.

[2001 செப்டம்பர் 7

## புதிய திட்டங்கள்

*40.* பின்வரும் திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் பகுதி இரண்டு திட்டங்களாகச் செயல்படுத்தப்படும்:-

| | திட்டத்தின் பெயர் | மொத்தச் செலவு | 2001—2002ல் செலவு |
|---|---|---|---|
| | | ரூ. இலட்சத்தில் | |
| | பிற்படுத்தப்பட்டோர் | | |
| 1 | 50 விடுதிகளுக்குச் சமையல் எரிவாயு இணைப்பு வழங்குதல் (ஒரு விடுதிக்கு ரூ.55000/— வீதம்) | 27.50 | 27.50 |
| 2 | 100 விடுதிகளுக்கு அரவை இயந்திரம் வாங்க தலா ரூ.7000/— வீதம் வழங்குதல் | 7.00 | 7.00 |
| 3 | இயக்குநரகத்திற்குக் கணினி வாங்குதல் | 1.00 | 1.00 |
| 4 | இயக்குநரகத்திற்குத் தொலைபேசி இணைப்பு வழங்குதல் | 1.00 | 1.00 |
| 5 | 10 விடுதிகளுக்குக் குடிநீர் வசதி செய்தல் (ரூ.72000 வீதம்) | 7.20 | 7.20 |
| 6 | பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்குச் சிறப்பு பழுதுபார்ப்பு | 30.00 | 30.00 |
| 7 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல மாணவரில்லங்கள் 56 கட்டுதல் | 1400.00 | 1400.00 |
| 8 | மலைப்பகுதி மாணவரில்லங்களில் தங்கிப்பயிலும் மாணவர்களுக்கு கம்பளி ஆடை வழங்குதல் | 1.00 | 1.00 |
| 9 | பள்ளி மாணவரில்லங்களில் ஒரு மாணவனுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத்தை ரூ.225/—லிருந்து ரூ.300/— ஆக உயர்த்துதல் | 220.86 | 154.66 |
| 10 | வீட்டு மனைகள் வழங்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 375.00 | 375.00 |



2001 செப்டம்பர் 7]

| | மிகப் பிற்படுத்தப்பட்டோர் | | |
|---|---|---|---|
| 11 | 50 விடுதிகளுக்குச் சமையல் எரிவாயு இணைப்பு வழங்குதல் (ரூ.55,000/— வீதம்) | 27.50 | 27.50 |
| 12 | 10 விடுதிகளுக்குக் குடிநீர் வசதி அளித்தல் (ரூ.72000 வீதம்) | 7.20 | 7.20 |
| 13 | 50 கள்ளர் பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி அளித்தல் (ரூ.72,000 வீதம்) | 36.00 | 36.00 |
| 14 | 40 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு மின் இணைப்பு வசதி அளித்தல் (ரூ.27,500/— வீதம்) | 11.00 | 11.00 |
| 15 | 30 கள்ளர் பள்ளிகளுக்குக் கழிவறை வசதி செய்தல் (ரூ.64,500/— வீதம்) | 19.35 | 19.35 |
| 16 | கள்ளர் பள்ளிகளுக்குக் கூடுதலாக 10 வகுப்பறைகள் கட்டுதல் (ரூ.64500/— வீதம் | 40.00 | 16.00 |
| 17 | 10 கள்ளர் மேல்நிலை/உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட உபகரணங்கள் வழங்குதல் (ரூ.50000/— வீதம்) | 5.00 | 5.00 |
| 18 | 20 கள்ளர் பள்ளிகளுக்கு அறைகலன்கள் வழங்குதல் (ரூ.25000/— வீதம்) | 5.00 | 5.00 |
| 19 | இயக்குநரகத்திற்குக் கணினி வாங்குதல் | 1.00 | 1.00 |
| 20 | இயக்குநரகத்திற்குத் தொலைபேசி இணைப்பு வழங்குதல் | 1.00 | 1.00 |
| 21 | இயக்குநரகத்திற்கு பேக்ஸ் இயந்திரம் வழங்குதல் | 0.25 | 0.25 |
| 22 | மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்குச் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகள் | 20.00 | 20.00 |
| 23 | மிகவும் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் நல மாணவரில்லங்கள் 44 கட்டுதல் | 1100.00 | 1100.00 |

| | | | |
|---|---|---|---|
| 24 | கள்ளர் பள்ளிகளுக்குக் கழிப்பிடங்கள் கட்டுதல் | 118.00 | 118.00 |
| 25 | மலைப்பகுதி மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு கம்பளி ஆடை வழங்குதல் | 0.50 | 0.50 |
| 26 | பள்ளி மாணவரில்லங்களில் ஒரு மாணவனுக்கான மாதாந்திர உணவுக் கட்டணத்தை ரூ.225/—லிருந்து ரூ.300/— ஆக உயர்த்துதல் | 88.45 | 61.94 |
| 27 | வீட்டுமனைகள் வழங்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் | 650.00 | 650.00 |
| | வக்ஃபு வாரியம் | | |
| 28 | மசூதிகள்/தர்காக்களுக்குப் பழுதுபார்ப்பு மானியம் | 80.00 | 32.00 |
| 29 | வக்ஃபு வாரியம் மற்றும் வட்ட அலுவலகங்களுக்கு 15 கணினிகள் வாங்குதல் | 15.00 | 15.00 |
| 30 | வக்ஃபு வாரியத்திற்குச் சென்னையில் சொந்தக் கட்டடம் கட்டுதல் | 40.00 | 16.00 |
| | மொத்தம் | 4335.81 | 4147.10 |

**ஈ. முடிவுரை**

41. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோர் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் அரசுப் பணிகளில் வேலைவாய்ப்பு அளிப்பதிலும், கல்வி நிலையங்களில் சேர்க்கையிலும் இடஒதுக்கீட்டுக் கொள்கையை இவ்வரசு செவ்வனே செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சரின் விருப்பத்தின்படி தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக மாற்றிடும் நோக்குடன் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கென மேலும் பல நலவாழ்வு திட்டங்களையும், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களையும் அரசு செய்து வருகின்றது.





## இணைப்பு

### 2001–2002 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| நிர்வாகம் | | | மொத்த ஒதுக்கீடு | |
|---|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | | 60340 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 619458 |
| மாநில சிறுபான்மையினர் நல ஆணையம் | | 1522 | மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 794412 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | | 2730 | வக்ஃபு வாரியம் | 25000 |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன் | | 9228 | ஹஜ் குழு | 1450 |
| திருப்பி வசூலிக்கப்பட்டவை | | | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 2117 | | | |
| மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 3032 | | | |
| மாநில சிறுபான்மை யினர் நல ஆணையம் | 9 | | | |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல ஆணையம் | 12 | 5170 | | |
| மொத்தம் | | 78990 | | |
| பெரு மொத்தம் | | | | 1519310 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22497
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.